502

# யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ்

சாந்தசீலன் கதிர்காமர்

குமரன் புத்தக இல்லம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ்

**சாந்தசீலன் கதிர்காமர்**

முன்னாள் வரலாற்றுத்துறை விரிவுரையாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**குமரன் புத்தக இல்லம்**

**கொழும்பு - சென்னை**

2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ்
சாந்தசீலன் கதிர்காமர் எழுதியது

பதிப்புரிமை © 2012, சாந்தசீலன் கதிர்காமர்

இந்நூலின் முதலாம் பதிப்பு 1980ஆம் ஆண்டு 'ஹன்டி பேரின்பநாயகம்: ஒரு ஞாபகார்த்தத் தொகுதி' (Handy Perinbanayagam: A Memorial Volume) என்ற தலைப்பில் வெளியானது. அந்நூலின் முதலாம் பாகத்தில் இடம்பெற்ற 'யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ்' எனும் பகுதியே தற்போது தனிநூலாக தமிழிலே வெளியிடப்படுகின்றது.

குமரன் புத்தக இல்லத்தினால் வெளியிடப்பட்டது
39, 36வது ஒழுங்கை, கொழும்பு-6, தொ.பே. 011 2364550, மி.அஞ்சல்: kumbhlk@gmail.com
3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, வடபழனி சென்னை - 600 026

குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
39, 36வது ஒழுங்கை, கொழும்பு-6

Yālppāṇa Iḷaiñr Kāṅkiras
(The Jaffna Youth Congress)
by Santasilan Kadirgamar

© 2012, Santhasilan Kadirgamar

Published by *Kumaran Book House*
39, 36th Lane, Colombo -6, Tel. - 011 2364550, E.mail : kumbhlk@gmail.com
3 Meigai vinayagar Street, Kumaran Colony, Vadapalani, Chennai - 600 026

Printed by *Kumaran Press (Pvt) Ltd*
39, 36th Lane, Colombo -6

வெளியீட்டு எண்: 502

ISBN 978-955-659-316-7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். ஹண்டி பேரின்பநாயகம்

(1899-1977)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | |
|---|---|
| வாசகர்களுக்கு ஒரு வேண்டுகோள் | viii |
| நன்றி நவிலல் | ix |
| அணிந்துரை - இந்திய உயர்ஸ்தானிகர் | x |
| அணிந்துரை *(1980)* | xiii |
| முன்னுரை | xviii |
| 1. ஆரம்பம் | 3 |
| 2. அங்குரார்ப்பண அமர்வுகள் | 15 |
| 3. 1925ஆம் - 1926ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த அமர்வுகள் | 29 |
| 4. காந்திஜீயின் விஜயம் | 40 |
| 5. இன ஒற்றுமை | 60 |
| 6. காங்கேசன்துறை அமர்வுகள் | 77 |
| 7. சாதியும் சரியாசனமும் | 89 |
| 8. பகிஷ்கரிப்பு | 104 |
| 9. சர்ச்சை | 120 |
| 10. இறுதி ஆண்டுகள் | 129 |
| 11. பின்னோக்கிய பார்வை | 140 |
| குறிப்புகள் | 153 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர்களுக்கு ஒரு வேண்டுகோள்

இந்நூலில் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசுடன் தொடர்புகளைக் கொண்டிருந்த பலரின் பெயர்கள் உள்ளடங்கியுள்ளன. இவர்களில் பெரும்பாலனவர்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். மற்றையோர் இலங்கையின் ஏனைய பகுதியையும் இந்தியாவையும் சேர்ந்தவர்கள்.

இந்நூலின் முதற்பதிப்பின் வெளியீட்டு விழாவின் போது கலந்து கொண்டு பேசிய பேராசிரியர் க. கைலாசபதி அவர்கள் நூலிலுள்ள பெயர்கள் சுட்டியிடப்படவேண்டும் என்றும் அவர்கள் யார் எவர் என்ற விபரங்கள் தொகுக்கப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இக்கருத்தினை மனங்கொண்டு இந்நூலின் ஆசிரியரும் இந்நூலின் வெளியீட்டாளரும் பின்வரும் வேண்டுகோளினை வாசகர்களுக்கு விடுக்கின்றோம். தயவுசெய்து இந்நூலிலுள்ளவர்கள் தொடர்பாக, ஏதாவது தகவல்கள் (புகைப்படம் உட்பட) உங்களிடம் இருப்பின் பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது தபால் முகவரிக்கோ அனுப்பி உதவவும்.


மின்னஞ்சல் : Kumbhlk @gmail.Com

தொலைபேசி : (+94) 11 2364550

முகவரி : 39, 36வது ஒழுங்கை, கொழும்பு - 6.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

இந்நூலின் மொழிபெயர்ப்பு எஸ்.ஏ.தர்மரத்தினம், வி.திருநாவுக்கரசு, மற்றும் எஸ். சிவகுருநாதன் ஆகியோரால் நிறைவேற்றப்பட்டது. அவர்கள் எல்லோருக்கும் அனேக நன்றிகள். குமரன் வெளியீடுகளுக்கு பொறுப்பாய் உள்ள கணேசலிங்கன் குமரனுக்கு நான் பெரிதும் நன்றியுடையவனாய் உள்ளேன். அவர் இம்மும்மொழி பிரசுரத்தினை பொறுப்பேற்றது மட்டும் அன்றி, தகுந்த ஆலோசனைகளையும் வழங்கினார். அவருடைய நிறுவன ஊழியர்களுக்கும் விசேடமாக ஆங்கில, தமிழ் கணினி ஒழுங்கமைப்புக்கு உதவிய எச்.டி. பிரதீப் நந்தன மற்றும் செல்வி. ரி. ரதி ஆகியோருக்கும் எனது நன்றி உரியது. ஆங்கிலப் பிரதிக்கான இறுதிச் செவ்விதாக்கம், சரி பிழை பார்த்தல், பெயர்ச் சுட்டியாக்கல் ஆகியவற்றை மேற்கொண்ட செல்வி ஜூடித் டபிள்யூ. பாஸ்குலாக்குக்கு எனது நன்றி உரியது.

இதன் மீள்பதிப்பின் முகவுரையில் குறிக்கப்பட்டுள்ளது போல், இந்தியா சிறிலங்கா மன்றத்தின் நிதியுதவியினாலேயே இம் மீள்பதிப்பு, குறிப்பாக நூலின் முதற்பாகத்தின் சிங்கள மற்றும் தமிழ் பகுதிகள் வெளிவருதல் சாத்தியமாகிற்று. இந்த மீள்பதிப்புக்கு முன்னுரை வழங்கிய இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் மேதகு அஷோக் கே. காந்தா அவர்களுக்கு நான் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

மஹாதேவ் தேசாயின் 'இலங்கையில் காந்திஜியுடன்' *(With Gandhiji in Ceylon - 1928)* நூல் *யாழ்ப்பாணத்தில் காந்தி இருப்பதை வெளிக்கொணரும்* எந்தப் படத்தையும் கொண்டிருக்கவில்லை. படங்களைத் தேடும் பல முயற்சிகளின் பின்னர், நெருங்கிய குடும்ப வட்டத்திடமிருந்து ஒரு படம் கிடைக்கப்பெற்றது. இப்படத்தை மானிப்பாயைச் சேர்ந்த வணக்கத்துக்குரிய கே. ஜெயம் மில்ஸின் சேகரிப்பிலிருந்து பெற்று தந்ததற்காக குலம் மற்றும் சொர்ணா மில்ஸ் ஆகியோருக்கு எனது நன்றிகள். யாழ்ப்பாணத்திற்கு வந்த நேரு குடும்பத்தின் (நேரு மற்றும் இந்திரா காந்தி இருவரும் ஒரு முறையே யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தனர்.) அரிதான படத்தை தந்துதவிய ஜயந்த சோமசுந்தரத்திற்கும் படத்தில் உள்ள அனேகரை இனங் காண்பதற்கு உதவிய டொக்டர். எஸ். ஞானலிங்கம் அவர்களுக்கும் எனது நன்றிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை★

'ஹன்டி பேரின்பநாயகம் - ஒரு ஞாபகார்த்தத் தொகுதி' என்ற வெளியீட்டுடன் இணைந்திருப்பதையிட்டு இந்திய-இலங்கை மன்றம் மகிழ்ச்சியடைகின்றது. தொகுதியின் முதலாவது பதிப்பு 1980இல் யாழ்ப்பாணம் ஹன்டி பேரின்பநாயகம் ஞாபகார்த்த சங்கத்தினால் வெளியிடப்பட்டது. இலங்கையின் கீர்த்திமிக்க புதல்வர்களில் ஒருவரான ஹன்டி பேரின்பநாயகத்தின் போதனைகளையும், தத்துவங் களையும் இம்மீளவாயப்பட்ட பதிப்பும் தொடர்ந்து தாங்கியிருக்கும் என நான் நம்புகின்றேன்.

இலங்கையின் சுதந்திரப் போராட்டத்தின் முன்னோடிகளில் ஒருவராக எஸ்.ஹன்டி பேரின்பநாயகம் விளங்குகின்றார். மஹாத்மா காந்தியினால் ஆழமாக உணர்ச்சியூட்டப்பட்டு அவரை நேரிலேயே சந்தித்ததுடன், 1927இல் இலங்கைக்கு காந்தியின் கருத்துவளமான விஜயத்திற்குக் காரணகர்த்தாவாகவும் விளங்கினார். அஹிம்சை யினதும், சகல மனிதப் பிறவிகளின் சமத்துவத்தினதும் மீதான காந்திஜி யின் கருத்துக்களை ஹன்டி பேரின்பநாயகம் அகமனப்படுத்தியதுடன், தனது எழுத்துக்களினுள் அவற்றை ஆழமாகப் பதித்து, இலங்கையின் இளவயதிலான சந்தியொன்றுக்கு உயிர்ப்பூட்டினார்.

1927இல் இலங்கைக்கான மஹாத்மா காந்தியின் விஜயம் ஹன்டி பேரின்பநாயகத்தின் தலைமைத்துவத்தின் கீழ் மாணவர் காங்கிரஸினால் ஒழுங்குபடுத்தப்பட்டது. கொழும்பு, கண்டி, நுவரெலியா, காலி, யாழ்ப்பாணம் மற்றும் வேறு இடங்களுக்கும் காந்திஜி விஜயம் செய்து, ஞாபகார்த்த உரைகளை ஆற்றினார். இந்தியாவில் கதர் துணியை மேம்படுத்துவதற்காக, தேவையான வளங்களைச் சேர்த்துக்கொள்வதே அவரது விஜயத்தின் அடிப்படை நோக்கமாக இருந்தபோதிலும் (இதற்கு இலங்கையர்கள் தாராளமாகப் பங்களித்தனர்), சமகால மற்றும் நிலையான பொருத்தமுடைய பிரச்சனைகளைப் பற்றியும் அவர் விரிவாக உரையாற்றினார். அவர் சென்ற இடமெல்லாம் மாபெரும் மக்கள் கூட்டத்தை ஒன்று சேர்த்ததானது இலங்கையர்

★ இவ்வணிந்துரை ஆங்கிலத்தில் மீள வெளியிடப்பட்ட 'ஹன்டி பேரின்பநாயகம் நினைவுமல'ருக்கு (2012) எழுதப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிடமிருந்து அவர் பெற்ற மிக அதிகமான மரியாதைக்கான எடுத்துக் காட்டாகும். காந்தியின் விஜயம் பற்றி தனது அறிக்கையில் மஹாதேவ் தேசாய், "தன்னார்வத்துடனும் உற்சாகத்துடனும் அமைந்த மக்களின் வரவேற்பானது சற்றேனும் சமாளிக்க முடியாததாயிருந்தது" எனக் குறிப்பிடுகின்றார். "சுய- ஆட்சியானது முற்று முழுதாக எமது உள்ளக வலிமையின் மீது அழுத்துகின்ற சமமின்மைகளுக்கு எதிராகச் சண்டையிடுவதற்கான எமது தகுதியின் மீது தங்கியுள்ளது" என்ற மஹாத்மா காந்தியின் செய்திக்கு தெளிவான அதிர்வுத்தன்மை இருந்தது. இலங்கைக்கு அவரை வரவழைத்ததன் மூலம், சுதந்திரத்திற்கான அழைப்புக்கு சேர்க்கப்பட்ட மேலதிக இயங்கு விசையை ஏற்படுத்தியதாக ஹன்டி பேரின்பநாயகத்தின் பங்களிப்பு அமைந்தது.

ஹன்டி பேரின்பநாயகம் ஒரு கல்விமான் என்பதுடன், உயர் மதிப்பினைக் கொண்ட ஆசிரியருமாவார். அவர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் கற்பித்ததுடன், கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபராகவும் நியமிக்கப்பட்டிருந்தார். அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவராக அவர் தெரிவுசெய்யப்பட்டதுடன், 1961இலிருந்து தேசிய கல்விச் சபையின் உறுப்பினர்களில் ஒருவராகவும் திகழ்ந்தார். பின்னர் யாழ்ப்பாணம் இளைஞர் காங்கிரஸாக விளங்கிய யாழ்ப்பாணம் மாணவர் காங்கிரஸின் தாபகர்களில் ஒருவராக நாட்டின் சுதந்திரப் போராட்டத்திற்கு உருக்கொடுத்து; புதிய கருத்துக்களைக் கொண்டு வருவதற்கு உதவிசெய்தார். தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய தாய் மொழிகளில் கல்வி போதிக்கப்பட வேண்டும் என முதன்முதலில் ஆலோசனை கூறியிருந்தவர்களில் அவரும் ஒருவராவார். ஐக்கிய இலங்கையொன்றில் சகல சனசமூகங்களும் ஜனநாயகக் கருத்தாடலில் ஈடுபடுகின்ற சமமான பங்காளிகள் என்றவாறு அமைந்த அவரது தொலைநோக்கு இன்றும் பொருத்தமுடையதாகவே இருக்கின்றது.

யாழ்ப்பாண இளைஞர்களின் விருப்பார்வங்கள் வெளிப்படுத் தப்படுகின்ற நாட்டின் வரலாற்றில் முக்கியமான காலமொன்றை யாழ்ப்பாணம் இளைஞர் காங்கிரஸின் வரலாறு கையாள்கின்றது. கலாசார மரபுரிமையையும், யாழ்ப்பாணத்தின் பெருமையையும், தமிழ் மொழியின் வளமிக்க இலக்கியத்தையும் ஆங்கிலப் புலமை யிலான இளைஞர் மத்தியில் பதியவைப்பதை இளைஞர் காங்கிரஸ் நாடிநின்றது. காங்கிரஸுக்கான ஹன்டி பேரின்பநாயகத்தின் அர்ப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிப்பும், சில சமமின்மைகள் இருந்த போதிலும், எல்லா நிலையிலும் அதை தக்கவைப்பதில் அவரது விடாமுயற்சியும் மதிக்கத்தக்க தாகும்.

பாகம் 1இல் யாழ்ப்பாணம் இளைஞர் காங்கிரஸின் வரலாற்றை தற்போதைய தொகுதி உள்ளடக்குவதுடன், பாகம் 2இல் ஹன்டி பேரின்பநாயகத்தின் உரைகளும், எழுத்துக்களும் தொகுக்கப்பட்டுள்ளன. 1930இல் யாழ்ப்பாணம் இளைஞர் காங்கிரஸின் தீர்மானங்கள் மீது இந்திய சுதந்திரப் போராட்டத்தின் செல்வாக்கையும், முழுமையான சுதந்திரத்திற்கான (பூரண சுயராஜியத்திற்கான) அதன் பிரகடனத்தையும் முதலாவது பாகம் முனைவுபடுத்துகின்றது. இதுவே இலங்கையில் இவ்வாறான முயற்சியில் ஈடுபட்ட முதலாவது தாபனமாகும். நாட்டின் கரிசனைக்குரிய அக்காலப் பிரச்சனைகளை இரண்டாவது பாகம் கீழ்க்கோடிடுகின்றது.

பொதுவான நாகரீக மரபுரிமையினதும், பன்மைத்தன்மைக்கான ஜனநாயகத்தையும், மதச் சார்ப்பின்மையையும், மரியாதையையும் கொண்ட சமகாலத் தத்துவங்களினதும் மீது தாபிக்கப்பட்ட இந்தியா வுக்கும், இலங்கைக்கும் இடையிலான பழமையான உறவுகளைத் தொகுதியின் இரண்டாவது பதிப்பு மீள்வலியுறுத்தும் என நான் நம்புகின்றேன். அதன் வரலாற்றில் சமாதானத்தையும், சுபீட்சத்தையும் கொண்ட புதிய அத்தியாயம் ஒன்றில் இலங்கை பிரவேசிக்கையில், எமது இரு தேசங்களும் தாபிக்கப்பட உதவிய முக்கியமான விழுமியங் களை நினைவுபடுத்துவதற்கு இந்த மீளவாயப்பட்ட பதிப்பு எமக்கு உதவும்.

ஹன்டி பேரின்பநாயகத்தின் போதனைகளை உணர்ச்சித் துடிப் புடன் வைத்திருப்பதில் ஹன்டி பேரின்பநாயகம் ஞாபகார்த்த சங்கத் தினதும், சீலன் கதிர்காமரினதும் முயற்சிகளை நான் பாராட்டுகின்றேன். ஹன்டி பேரின்பநாயகத்தின் எழுத்துக்களும், உரைகளும் பிரகாசமான எதிர்காலமொன்றை நோக்கிப் பணியாற்றுவதற்கு அடுத்தடுத்து வரும் இளைஞர் சந்ததியினரை தொடர்ந்து உயிர்ப்பூட்டும் என்பதில் எனக்கு சந்தேகமில்லை.

அசோக் கே.காந்த்
இந்திய உயர் ஸ்தானிகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை★

இந்நூல் 'ஒறேற்றர்' என பிரபல்யமடைந்தவராகிய சி.சுப்பிரமணியம் தலைமையில் பெருந்திரளான முக்கியஸ்தர்கள் முன்னிலையில் 1980.06.28ஆம் திகதி யாழ் வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் வெளியிடப்பட்டது. இளைஞர் காங்கிரஸில் முன்னர் துடிப்பாகச் செயற்பட்டவரும், ஹண்டி பேரின்பநாயகத்தின் நீண்டகால நண்பருமாகிய எஸ். நடேசன் (முன்னாள் 'செனற்சபை' உறுப்பினர்) பிரதம விருந்தினர் உரையினை நிகழ்த்தினார். அவர் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸின் (JYC) 1928ஆம் ஆண்டு அமர்வுகளின் போது வரவேற்புரை நிகழ்த்தியவர். ஒரு டசினுக்கு மேற்பட்ட முன்னைய காலத்து JYC உறுப்பினர்கள் முன் வரிசையில் அமர்ந்திருக்கையில், பல அனுபவங்களை நினைவு கூரும் மனோநிலையினால் நடேசன் அச் சந்தர்ப்பத்தில் ஆட்கொள்ளப்படிருந்தார். எனவேதான் அவருக்கு 20 நிமிடங்கள் மட்டுமே ஒதுக்கப்பட்டிருந்த போதும் அவர் 1 1/2 மணித்தியாலமாக தனது உரையினை நிகழ்த்தினார். அதன் காரணமாக ஏனைய பேச்சாளர்கள் தமது உரைகளை தலா 5 நிமிடங்களுக்கு மட்டுப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அவர்களில் பேராசிரியர் க. கைலாசபதி, என். சபாரத்தினம் மற்றும் இக்கட்டுரையாளர் ஆகியோரும் அடங்குவர்.

JYC யின் எஞ்சியுள்ள ஆர்வலர்கள் ஒரு மண்டபத்தில் கூடிய இறுதிச் சந்தர்ப்பங்களில் ஒன்றாக இது இருக்கக் கூடும். மேலும், அது மிக நெருக்கமான தமிழ் உணர்வு கொண்ட ஆங்கிலம் படித்த யாழ்ப்பாணத்து மேட்டுக்குடியினர் தமது பொது வரலாற்றினைக் கொண்டாடுவதற்கு கூடியிருந்த அரிய சந்தர்ப்பங்களில் ஒன்றாகும். சிலவேளைகளில் முற்றிலும் எதிரும் புதிருமான அரசியல் முகாம்களைச் சார்ந்தவர்களாயிருந்தபடியால் வெவ்வேறு பாதைகளில் பயணித்த போதும், அத்தலைமுறையினர் தமது இளமைக்கால சிநேகத்தையும் தோழமையையும் கைவிட்டிருக்கவில்லை. காலங்கள் பல சென்றாலும் இவை மறைந்து போவதில்லை என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்

★ இவ்வணிந்துரை ஆங்கிலத்தில் மீள வெளியிடப்பட்ட 'ஹண்டி பேரின்பநாயகம் நினைவுமலர்'ருக்கு (2012) எழுதப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாகும். யாழ்ப்பாணத்தில் அரசியல் சூழல் வேகமாக மாற்றமடைந்து சென்ற நிலையில் அவர்களில் சிலர் போர்ச் சூழலைச் துச்சமென மதித்து தொடர்ந்து யாழ்ப்பாணத்திலேயே தங்கிவிட்டனர். ஆனால் சிலர் புலம்பெயர்ந்து சென்றுவிட்டனர்.

அவர்கள் எல்லோரும் விவிலிய வயதெல்லை எழுபதையும் வெகுவாக தாண்டியே, ஒருவர் பின் ஒருவராக மறைந்தனர். அவர்களில் ஒருவராகிய 'ஒறேற்றர்' சுப்பிரமணியம் 1994இல் தனது 94வது வயதில் காலமானார். இறுதியாக, ஸ்தாபக அங்கத்தவர்களில் ஒருவராகிய துரைசிங்கம் (இவர் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் நீண்டகால உறுப்பினராயிருந்தார்) இற்றைக்கு சில ஆண்டுகளுக்கு முன் உயிர் நீத்தார். (அதற்கு முன்னதாகவே தனது நீண்ட, புகழ் பூத்த வாழ்நாளில் கண்ட நிகழ்வுகளையும் பிரமுகர்களையும் சித்திரிக்கும் கட்டுரைகள் மற்றும் செய்திப் பத்திரிகை நறுக்குகளையும் உள்ளடக்கிய பிரமாண்டமான இரு நூல்களை வெளியிட்டிருந்தார்.)

1980 இல் ஹண்டி பேரின்பநாயகம் ஞாபகார்த்த நூலினை திருமகள் அச்சகம் வெளியிட்டது. அவ் அச்சகம் JYC யின் வரலாற்றின் ஆரம்பத்திலிருந்து நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தபடியால் அவ் அச்சகத்திலேயே மேற்படி நூல் அச்சிடப்பட வேண்டுமெனத் தீர்மானிக் கப்பட்டது.

JYC தான் யாழ்ப்பாணத்தில் தோற்றம் பெற்ற முதலாவது தீவிரம் நிறைந்த இளைஞர் இயக்கமாகும். இளைஞர் காங்கிரஸ் பாரம் பரியமானது பிந்திய தசாப்தங்களிலும் நிலைபெற்றிருந்தது. தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக நடந்தேறிவரும் விவாதங்களில் JYC யின் வரலாறும், அது என்ன குறிக்கோளுடன் உழைத்தது என்பதும் அடிக்கடி குறிப்பிடப்படுவதுண்டு.

1980களில் வடக்கின் தலைவிதியை புதியதொரு இளைஞர் தலைமுறையினர் தமது கையில் எடுத்துக் கொண்டனர். இவ்வாறான நிலைமையில் JYC யின் வரலாற்றின் மீது ஒரு புதிய ஆர்வம் கிளம்பி யுள்ளது. இவ் ஆர்வமானது நீண்டு நிலைத்துள்ளது. எனவே, ஹன்டி பேரின்பநாயகம் நூலினை வெளியிடுவதற்கான அனுசரணையை நல்குவதற்கு இந்தியா- இலங்கை நிறுவனம் முன்வந்ததற்காக நாம் நன்றியாயிருக்கிறோம். JYC யின் வரலாற்றினை மீள் பிரசுரம் செய்ய வேண்டுமென பல கோரிக்கைகள் கிடைத்தன. ஆனால், இதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கியோன் அதற்கு ஒரு நிபந்தனையை விதித்தார். அதாவது, அது என்றாவது மீள் பிரசுரம் செய்யப்பட வேண்டுமானால் அது தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளியிடப்பட வேண்டும் என்பதாகும். குறிப்பாக தேசிய இனப்பிரச்சினையானது பரந்துபட்ட மக்களின் நலன் சார்ந்த அதி முக்கியமான விடயங்கள் மீதான அறியாமை காரணமாக நாடு எதிர்நோக்கும் இன்றைய நெருக்கடிக்கு இட்டுச் சென்ற அடிப்படைச் சிக்கல்களில் ஒன்று ஆகும். இதன் பொருட்டு நாம் பாரிய விலையைக் கொடுத்துள்ளோம். 1960கள் அளவில் இரு மொழிகளிலும் உயர்ந்த கல்வி அறிவு இருந்துள்ள போதும் மேற்படி குறைபாடு இருக்கவே செய்துள்ளது. வெறுப்புணர்வு என்பதைக் காட்டிலும் அறியாமையே நாம் சந்தித்து வந்துள்ளதும், தொடர்ந்தும் சந்தித்துக் கொண்டிருப்பதுமான முறுகல்/ மோதல் நிலைமைக்கு இட்டுச் சென்றுள்ளதென முன்னொரு சந்தர்ப்பத்தில் சிங்கள/ தமிழ் உறவுகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்ட போது றெஜி சிறிவர்த்தன அடித்துக் கூறியிருந்தார். பெருவாரியான ஆய்வுகள், விவாதங்கள் மற்றும் தரமான வெளியீடுகள் ஆங்கில மொழியில் மட்டுமே இடம்பெற்று வருகின்றன. இதன் காரணமாக எல்லா சமூகங்களையும் சேர்ந்த ஒரு மிக சிறிய எண்ணிக்கையினரே இவை பற்றி தமக்கிடையில் பகிர்ந்து கொள்கின்றனர். அவர்களில் பெரும் பாலானோர் வயது முதிர்ந்தவர்களாகையால் பரந்துபட்ட மக்கள் மத்தியில் எதுவித தாக்கத்தையும் ஏற்படுத்துபவர்களாய் காணப்பட வில்லை. இதன் பொருள் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் ஆய்வுகள், விவாதங்கள் நடத்தப்படவில்லை என்பதல்ல. ஆனால் அது நடத்தப்படும் போதெல்லாம் ஒரு மொழியிலேயே இடம் பெறுகின்றது. மொழிப் பிரச்சினையைப் பொறுத்த வரை நாம் எம்மிடையே மட்டும் பேசிக்கொள்கிறோமே ஒழிய, பல்மொழி, பல்மத சமுதாயத்திலுள்ள எமது பிரஜைகளோடு பேசுவதில்லை. இதனால் ஒரு விடயத்தின் உண்மையை நன்கு புரிந்து கொண்ட ஒருவர் தன்போன்ற இன்னொருவரோடு பேசிக் கொண்டிருப்பது போலவே அதிகம் காணப்படுகிறது.

எனவே, JYC வரலாற்றினை, ஞாபகார்த்த நூலினை தமிழிலும் சிங்களத்திலும் மொழிபெயர்த்து ஒரே நேரத்தில் வெளியிடுவதற்காக நாம் விடுத்த வேண்டுகோளுக்கு இந்திய- இலங்கை நிறுவனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனமுவந்து கைகொடுத்தமைக்கு நாம் நன்றி தெரிவிக்கின்றோம். உண்மையில், நூல் முழுவதையுமே காலக்கிரமத்தில் மொழிபெயர்த்து விட வேண்டுமென ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அத்தகையதொரு பணியினை மேற்கொள்வதற்கு மனிதவளம் மிக மிகப் பற்றாக்குறை யாயிருப்பதால் அதனைப் பிறிதொரு சந்தர்ப்பத்திலேயே மேற்கொள்ள முடியும். அண்மையில் தான் 61வது சுதந்திர தினத்தைக் கொண்டாடிய இந்நாட்டில் இது ஒரு மிகவும் வருத்தமளிக்கும் விடயமாகவே கொள்ளப்பட வேண்டியுள்ளது.

பெரும்பாலும் 1980இல் வெளியிட்ட அதே நூற்தொகுதியே இப்போது வெளியிடப்படுகிறது. இரண்டாவது பகுதியின் வடிவ மைப்பில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. அப்போது யாழ்ப் பாணத்திலிருந்த குறைந்தபட்ச வளங்கள் கொண்டே ஆரம்பத்தில் இப்பணி நிறைவேற்றப்பட்டது. நிதி மற்றும் பிரயாண வசதிகள் பற்றாக்குறை காரணமாக குறிப்பாக இந்தியாவிலுள்ள நூலகங்கள் மற்றும் சுவடியகங்களை பயன்படுத்துவதற்கு வாய்ப்பு இருக்கவில்லை. அத்தகைய பெரிதும் மேம்பாடான சாதனங்கள் அடங்கலான வாய்ப் புகளும் வளங்களும் சமகாலங்களில் நிறைந்து காணப்படுகின்றன. சிலமாற்றங்கள் தேவையாயிருந்த போதும், ஹன்டி பேரின்பநாயகம் ஞாபகார்த்த சங்க உறுப்பினர்களைக் கௌரவிக்குமுகமாக இந்நூலை முற்றாக திருத்தப்பட்ட பதிப்பாக வெளியிடக் கூடாதென தீர்மானிக்கப் பட்டது. இந்நூல் வெளியீட்டுக்கு குறிப்பாக மூன்று பிரமுகர்கள் பொறுப்பாயிருந்தனர். அவர்கள் (ஒறேற்றர்) சி. சுப்பிரமணியம், ஏ.எஸ். கனகரத்தினம், மற்றும் என். சபாரத்தினம் ஆகியோர் ஆவர். ஒறேற்றர் நீண்ட காலமாக ஹன்டியின் சகபாடியாகவும் சமகாலத்தவ ராகவும் விளங்கியதோடு JYCயின் பிரதித் தலைவராகவும் கருதப் பட்டவர். மற்றைய இருவரும் ஆரம்பத்தில் ஹன்டியின் மாணவர் களாயிருந்தவர்களாயினும் காலப்போக்கில் அவருடைய நெருங்கிய நண்பர்களாகவும் சகாக்களாகவும் விளங்கியவர்கள். இவர்கள் மூவரும் தான் ஹன்டியின் பெறுமதிமிக்க எழுத்தாக்கங்களையும் உரைகளையும் தொகுத்தனர். அப்போது செயற்பட்ட குழுவில் மிக இளையவராகிய இந்நூலாசிரியருக்கு JYC யின் வரலாற்றினை எழுதும் பணி ஒப்படைக் கப்பட்டது. ஆனால், இம்மூன்று தலைசிறந்த கல்விமான்களின் உதவியோ ஆலோசனையோ இன்றி அப்பணியினை நிறைவேற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருக்க முடியாது. அவர்களோடு சேர்ந்து உழைத்தது மறக்க முடியாத அறிவூட்டும் அனுபவமாகும்.

அவர்கள் தன்னடக்கமுள்ளவர்களாகவும் தம்முயற்சிக்குப் புகழ் பெருமை தேடாதவர்களாகவும் விளங்கினர். இக்கட்டுரையாளர் நூலின் ஒரு பகுதியினையே எழுதியுள்ளாராயினும் அதன் ஆசிரியராகவே அவர் அழைக்கப்பட்டார். எவ்வாறாயினும் பல காலமாக நூலின் சில பகுதிகள் கட்டுரைகளில் குறிப்பாக தமிழ் கட்டுரைகளில் தாராளமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதை அவதானித்துள்ளோம். ஆனால், இந்நூல் தான் அதற்கான தோற்றுவாய் என்பது அவற்றில் குறிப்பிடப்படுவ தில்லை. இது எமது சமுதாயத்தில் மேன்மேலும் வேரூன்றி வரும் குறைபாடாகும்.

JYCயின் காரணகர்த்தாக்கள் குறிப்பாக கலாசாரம் மற்றும் அறிவியல் துறைகளில் ஜாம்பவான்களாக விளங்கியவர்கள். அவர்கள் எளிமையாக வாழ்ந்தவர்கள். காந்திய பாரம்பரியத்தின் ஊடாக வளர்ந்து தெளிந்து தன்னலம் எதுவுமின்றி பொன்னான தமது நேரத்தையும் ஆற்றல்களையும் சமூகத்திற்கு உவந்து வழங்கியவர்கள். புகழ்பூத்த தனது வாழ்க்கை தொடர்பாக எதுவித ஆவணங்களையும் ஏன் பேணிவைக்கவில்லை யென ஹன்டி பேரின்பநாயகத்திடம் கேட்கப்பட்டபோது, தன் வாழ் நாளின் பெரும் பகுதியில் வீடு விட்டு வீடு மாறி ஏறத்தாழ ஒரு முகாம் வாழ்க்கை நடத்தியதாக பதிலளித்தார். ஆனால், அவர்கள் எழுதுவதில் ஈடுபட்டபோதெல்லாம் உண்மைகள் தூய்மையானவை எனும் கூற்றுக்கு இலக்கணமாகச் செயலாற்றினர். அதன்பொருள் வரலாற்று விடயங்கள் தொடர்பில் விசுவாசமாயிருத்தல் என்பதாகும்.

இந்நூலினை மீள் பிரசுரம் செய்வதானது ஹன்டி பேரின்பநாய கத்தின் ஞாபகார்த்தமாகவும், அதே போல JYC யில் அவரது தோழர் களாகவும் சகபாடிகளாகவும் விளங்கியவர்கட்கு அஞ்சலி செலுத்துவ தாகவும் அமையும் கைங்கரியம் ஆகும். அவர்கள் இந்த நாட்டினதும், குறிப்பாக யாழ்ப்பாணத்தினதும் வரலாற்றில் பெறுமதியான போற்றத் தக்க யுகம் ஒன்றினை மலரச் செய்வதற்குப் பாத்திரமாயிருந்தவர்கள் என்பது நினைவு கூறப்பட வேண்டியதாகும்.

சீலன் கதிர்காமர்
4.3.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை★

இலங்கையில் பூரண தேசிய சுதந்திர இயக்கத்தின் முன்னோடியாக விளங்கியவர் எஸ். ஹன்டி பேரின்பநாயகம் (1899 - 1977) ஆவார். பாக்கு நீரிணைக்கு அப்பால் இருந்து வந்த காந்தீய இலட்சியங்களே அவரை அவ்வாறாக ஊக்குவித்திருந்தன. ஓர் ஐக்கிய சுதந்திர இலங்கை எனும் தமது இலட்சியத்தில் இருந்து ஒரு தடவையேனும் அவர் விலக வில்லை. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி அவரை வரவேற்று உள்வாங்கி இருக்கும். ஆயினும், இரு உத்தியோக மொழிகளுடன் கூடிய ஒரே அரசின் அலகாகவே இலங்கை திகழ்தல் வேண்டும் எனும் தமது நம்பிக்கையைக் கைவிடுவதற்கு அவர் தயாராக இருக்கவில்லை. "சிங்கள மக்களுக்கு சிங்கள மொழி எவ்வாறோ தமிழ் மக்களுக்கும் தமிழ் மொழி அவ்வாறாகவே இருத்தல் வேண்டும். ஒரு சுதந்திர நாட்டில் ஒரு சிறுபான்மை மக்கள் பெரும்பான்மை மக்களுக்கு இரண்டாம் தரமாக இருக்கவேண்டியதில்லை" என அவர் கூறுவது வழமை.

ஆரம்ப காலமான 1920ஆம் ஆண்டுகளிலேயே, தீண்டப்படாத வர்களை தானே தமது இல்லத்தில் கௌரவ விருந்தினராக வெளிப் படையாகவே ஏற்றுக்கொண்டு, சமூக தகவொழுக்கத்துக்கான இயக் கத்திற்குத் தலைமை தாங்கியிருந்தார். நாற்பது ஆண்டுகள் கடந்த பிற்பாடே சிறுபான்மைத் தமிழ் மக்கள் போராடி, கோயில்கள் மற்றும் தேநீர் கடைகளின் உள்ளே சமத்துவமாக பிரவேசிப்பதற்கான உரி மையைப் பெற்றனர்.

கிறிஸ்தவ பெற்றோருக்குப் பிறந்தவரான ஹன்டி பேரின்பநாயகம் மாணவ மற்றும் இளைய பருவத்திலேயே மாணவ கிறிஸ்தவ இயக்கத்தில் பெரும் அக்கறை கொண்டவராக இருந்து வந்தார். ஒரு சிந்தனையாளராகையால் அவர் வைதீக கிறிஸ்தவ சபைகளுடன் ஒத்துப்போகவில்லை என்பதுடன் காலப்போக்கில் அவர்களிடம் இருந்து முற்றிலும் வேறுபட்டவராகித் தமது மூதாதையரின் சமயத்தை

★ இவ்வணிந்துரை ஆங்கிலத்தில் வெளியிடப்பட்ட 'ஹன்டி பேரின்பநாயகம் நினைவுமல'ருக்கு (1980) எழுதப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கி நிதானமாக விலகிச் சென்றிருந்தார். கிறிஸ்தவ மற்றும் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் ஒன்றெனக் கொள்வதற்குப் போதுமான நெருக்கம் கொண்டவை எனும் கொள்கையை அவர் இறுதிவரை கொண்டிருந்தார்.

ஹன்டி பேரின்பநாயகம் பெரும் கல்விமானாகவும் ஆசிரிய ராகவும் திகழ்ந்தவர். வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆசிரியராகவும், பின்னர் கொக்குவில் இந்துக்கல்லூரியில் அதிபராகவும் அவர் பணிபுரிந்தார். அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவராக அவர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். ஆசிரியர்களையும் பாடசாலைச் சமூகத்தையும் உள்ளடக்கிய ஓர் உள்ளூர் குழுவிற்கு முகாமை அதிகாரத்தைப் பரவலாக்குவதற்குப் பரிந்துரை செய்திருந்த தேசியக் கல்வி ஆணைக்குழுவிற்கு 1961இல் அவர் நியமனம் பெற்றார். துரதிர்ஷ்டவசமாக அப்பரிந்துரையை நடைமுறைப்படுத்தாது அரசு தள்ளி வைத்திருந்தது.

அரசாங்க மொழியாகவும் செல்வாக்குப் பெற்ற மொழியாகவும் ஆங்கில மொழி விளங்கி வந்த ஒரு காலகட்டத்தில், தாய் மொழியில் கல்வி கற்பதற்கான மாணவர் உரிமைக்காகவும், தமது சொந்த மொழியில் ஆளப்படுவதற்கான மக்கள் உரிமைக்காகவும் ஹன்டி பேரின்பநாயகமும் அவரது நண்பர் நேசையாவும் துணிச்சலுடன் குரல்கொடுத்தனர். அவர்கள் இருவரினதும் விடாப்பிடியான போராட்டம் காரணமாக இன்று இரு தேசிய மொழிகளுமே பாட சாலைகளில் போதனா மொழிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. ஆயினும் கூட, சுதேசிய மொழிகள் போதனா மொழிகளாக ஆக்கப்படு வதற்கு அப்பொழுது ஆசிரியர்கள் மத்தியிலேயே வெறுப்பு இருந்த காரணத்தினால் அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவராக இரண்டாவது முறையாகத் தெரிவாகும் வாய்ப்பினை ஹன்டி இழக்க நேரிட்டது.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றி ஹன்டி பேரின்பநாயகம் ஓய்வு பெற்ற சமயம் ஓய்வூதியத்துக்கு அவர் உரித்துடையவராவதற்கு அவரது மொத்த சேவைக்காலம் ஒரு வருடத் தால் குறைந்ததாகவிருந்தது. அவர் ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு தடையாகவிருந்த ஓய்வூதியப் பிரமாணங்களை இரத்து செய்வதற்கு அன்றைய பாராளுமன்றம் ஒரு விசேட மசோதா மூலம் தீர்மானித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருந்தது. கல்விக்கு அவர் ஆற்றியிருந்த சேவைகளுக்காக சிங்களப் பிரதிநிதிகளை அதிகப் பெரும்பான்மை உறுப்பினர்களாகக் கொண்டிருந்த ஒரு பாராளுமன்றம் அவருக்கு அளித்த பாராட்டுதலாக அது அமைந்திருந்தது. அதற்கு முன்னரோ பின்னரோ ஏனைய எந்தப் பிரமுகருக்கும் அத்தகையதோர் பாராட்டு வழங்கப்பட்டது அரிது.

ஹன்டி பேரின்பநாயகம் தமது குடும்பத்தை நேசித்தார் என்பதுடன் அவரது மனைவியும் பிள்ளைகளும் அவருக்கு மிகவும் பிரியமானவர்களாக இருந்தனர். ஆயினும், பொதுவாழ்விலான அவரது கடமைகள், ஈடுபாடுகள் காரணமாக அவர்களோடு கூடிக்குலாவுவதற்கு சொற்ப அவகாசமே அவருக்கு எஞ்சியது. விதியின் விசித்திரமான தொரு பாக்கியமாக அவரது குரு மகாத்மா காந்தி படுகொலை செய்யப்பட்ட அதே தினத்தில் அவரது துணைவியாரும் உயிர் நீத்திருந்தார்.

தமது பிறந்த தினம் குறித்து, இருபதாம் நூற்றாண்டைத்தாம் ஒரு வருடத்தால் தவறவிட்டிருந்ததாக அவர் துடுக்காகக் கூறுவார். பத்தொன்பதாம் நூற்றாண்டில் அவர் பிறந்தவராயினும் ஹன்டி பேரின்பநாயகம் கண்டிப்பாக இருபத்தியோராம் நூற்றாண்டிற்கு உரியவரே. அவர் சளையாது போராடி வந்த அநேக காரியங்கள் இருபதாம் நூற்றாண்டின் பின் அரைவாசிப் பகுதியிலேயே வென்றெடுக்கப்பட்டன என்பதுடன், மீதி இருபத்தோராம் நூற்றாண்டில் எய்தப் பெறும் என நாம் நம்புகின்றோம்.

இந்நாட்டு மக்களுக்கு அவர் ஆற்றியிருந்த நீண்டதும் தன்னல மற்றதுமான சேவைக்கு அவரது நண்பர்கள், அபிமானிகள் மற்றும் பழைய மாணவர்களின் ஒரு புகழ்மாலையே இந்நூலாகும். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவராகிய சாந்தசீலன் கதிர்காமரினால் எழுதப்பட்ட யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசின் வரலாற்றையும் அது உள்ளடக்கியுள்ளது. இதனை எழுதியிருப்பதால் ஹன்டி பேரின்ப நாயகத்தின் நீண்டநாள் ஆசையை சீலன் நிறைவு செய்கின்றார். நூலின் இரண்டாம் பாகம் பரந்த விரிந்த விடயங்களையும் பல்வேறு கரிசனைகளையும் உட்படுத்துகின்றது.[1] அது தெரிவு செய்யப்பட்ட அவரது எழுத்தோவியங்களையும் உரைகளையும் உள்ளடக்குகின்றது. தனது துல்லியமான பார்வை மூலம் வாழ்க்கையின் எந்தவொரு அம்சத்

1. இம்மொழிபெயர்ப்பு நூல் இவ்விரண்டாம் பகுதியை உள்ளடக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினையுமே அவர் குறிப்பிடத் தவறவில்லை. அவரையும் அவர் விடுத்துள்ள செய்தியையும் குறிப்பிடத்தக்களவு நிறைவாக இந்த முதற்தொகுதி அளிப்பதாக நாம் நம்புகின்றோம்.

உண்மையானதொரு பெரு மனிதரைக் கௌரவிக்கும் எமது முயற்சியில் நிதிக்கும் விடயதானத்திற்கும் விடுக்கப்பட்ட எமது அழைப்புக்கு கைகொடுத்த அனைவருக்கும் எமது நன்றி உரித்த தாகுக.

யாழ்ப்பாணம்
1980 யூன் 28

ஹன்டி பேரின்பநாயகம்
ஞாபகார்த்தச் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹன்டி பேரின்பநாயகம் ஞாபகார்த்த சங்கம் [1980]

| | | |
|---|---|---|
| தலைவர் | : | சி. சுப்பிரமணியம் |
| துணைத் தலைவர்கள் | : | கே. ஏ. செல்லையா<br>டாக்டர். டபிள்யூ. எல். ஜெயசிங்கம் |
| செயலாளர்கள் | : | என். சபாரத்தினம்<br>வீ. சிவசுப்பிரமணியம் |
| பொருளாளர் | : | ஏ. எஸ். கனகரத்தினம் |
| இதழாசிரியர்கள் | : | ஏ. ஏஸ். கனகரத்தினம்<br>என். சபாரத்தினம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மகாத்மாவின் சிறு அகக்குரல் உலகினதும், இந்தியாவினதும் மக்களின் மனச்சாட்சியைத் தொட்டது; அதனைத் கிளர்ந்தெழச் செய்து தம்மோடு உடலுறையும் மக்களிற்கான கடப்பாடுகளை உணரும்படி செய்தது. மனித இலட்சியங்களை அவர்களின் சக்திக்கு அப்பாற்பட்ட எட்ட முடியாத உயரத்திற்கு மகாத்மாவின் சிந்தனைகள் உயர்த்தின - தளராத உறுதி, இலட்சியப் பற்று, தூய எண்ணம், மன ஆழத்தில் இருந்து எழும் தீய எண்ணங்களில் தம்மை விடுவித்துக் கொள்ளக்கூடிய ஆற்றல் ஆகிய பண்புகளைக் கொண்ட ஆளுமை மிக்க மனிதர்களால் மட்டுமே இந்த உயரிய இலக்குகளை எட்ட முடியும்".

- ஹன்டி பேரின்பநாயகம், 1948

"ஐக்கியப்பட்ட சுதந்திர இலங்கை என்ற எமது இலட்சியப் பாதை யில் அண்மைக் காலத்தில் பல பின்னடைவுகளை எதிர்நோக்கி னோம். இருப்பினும் நாம் எமது இலட்சியத்தில் கொண்டிருக்கும் நம்பிக்கையை இழக்கவில்லை. சுதந்திர இலங்கையின் அரசியல் பற்றிய எமது கருத்துப் படிவம் இனம், சாதி என்ற பேதங்களைத் தாண்டியதாக, அவை பற்றிய எண்ணங்களில் இருந்து விடுபட்டதாக உள்ளது. இந்த இலக்குகளை எய்துவதற்கு எமக்குத் துணிவும், கற்பனை வளமும், அரசியல் மேதகைமையும் வேண்டும். மேற்குறித்த உயர் இலக்குகளிற்கு குறைந்த எதனையும் நாம் ஏற்கப் போவதில்லை. ஏனெனில் அவ்வாறு ஏற்றால் எமக்கு மீட்சி இல்லை."

- ஹன்டி பேரின்பநாயகம், 1947

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

## ஆரம்பம்

ஆரம்பத்தில் 'மாணவர் காங்கிரஸ், யாழ்ப்பாணம்' எனப் பெயரிடப்பட்ட 'யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ்' 1920களின் மத்தியில் உதய மாகியதுடன் 1930களின் முற்பகுதியில் யாழ்ப்பாணத்து அரசியல் மீது மிகப் பெரும் தாக்கத்தையும் ஏற்படுத்தியது. இந்திய அரசியலில் தெளிவாகக் கண்டுகொள்ளக்கூடிய போக்குகளுடன் இவ்வாண்டுகள் அச்சொட்டாக ஒத்திருந்தன. 1920 அளவில் காந்திஜீ இந்திய சுதந்திரப் போராட்டத்தின் தலைவராகத் தோன்றியிருந்தார். 1919ஆம் ஆண்டின் இந்திய அதிகாரச்சட்டத்தில் 'மொன்ரேகு செம்ஸ்போட்' சீர்திருத்தங்கள் (Montagu-Chelmsford) சுயாட்சி நோக்கிய ஒரு படிப்படியான முன்னேற்றத்தை உள்ளடக்குவதாக வாக்குறுதி அளித்திருக்கையில் 'ஜாலியன்வாலாபாக்' வதையைத் தொடர்ந்து வந்த 'றோவால்ட் அதிகாரச் சட்டம்' (Rowlatt Act) இந்தியத் தேசியவாதிகளை அதிர்ச்சி யடையும் படி செய்ய, பிரித்தானிய ஆட்சியாளரின் உள்ளக்கிடக்கை குறித்து அவர்கள் கேள்வி எழுப்ப ஆரம்பித்து இருந்தார்கள். காந்திஜீயின் தலைமையின் கீழ் வெகுஜனங்கள் அரசியலில் பிரவேசித் ததுடன், சுதந்திரத்துக்கான இந்தியப் போராட்டம் தீவிரவாதக் கட்டத்தை எட்டியிருந்தது. இந்திய மாணவர்கள் போராட்டத்தில் முக்கிய பங்கினை வகிப்பதற்கு ஆரம்பித்திருந்தனர். இந்தியாவில் பொங்கிப் பிரவாகித்த அரசியல் கிளர்ச்சியானது ஏற்ற இறக்கங்களைக் கண்டிருந்தது. போராட்டத்தின் வேகவிரைவு, ஒரு தசாப்த காலத்திற்கு நிலைநாட்டப்பட்டிருந்தது. அதன் உச்சக்கட்டமாக 1930இல் பொது மக்கள் ஒத்துழையாமை இயக்கம் முடுக்கி விடப்பட்டதுடன், இந்திய தேசிய காங்கிரஸ் பூரண சுதந்திரப் பிரகடனத்தையும் செய்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவில் காணப்பட்ட அரசியல் உணர்வலைகள் அவற்றின் தாக்கத்தை யாழ்ப்பாணத்திலும் ஏற்படுத்தியிருந்தன. இலங்கைத் தீவின் ஏனைய பாகங்களைவிட இந்தியச் செல்வாக்கினைப் பல்வேறு காரணங்களின் நிமித்தம் அதிகளவில் ஏற்றுக்கொள்ளும் இயல்பை யாழ்ப்பாணம் கொண்டிருந்தது. புவியியல் அண்மையும், மொழி, சமயம் மற்றும் பண்பாடு தொடர்பான உறவுகளும் யாழ்ப்பாணத்து மக்களுக்கும் இந்தியாவுக்கும், சிறப்பாகத் தமிழகத்துக்கும் இடைப் பட்ட பிணைப்புக்களை பெரிதும் பலப்படுத்தி இருந்தன. கல்வி, தொழில் மற்றும் யாத்திரை நோக்கங்களுக்காக தென்னிந்தியாவுக்கும், அதே போல வட இந்தியாவிற்கும் பயணிக்கும் நீண்டதொரு மரபினை யாழ்ப்பாண மக்கள் கொண்டிருந்தனர். ஆகவே, இந்தியாவில் ஏற்பட்டிருந்த அரசியல் வளர்ச்சிகள் விரைவாக அவற்றின் தாக்கத்தை யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்தியிருந்தன. இந்தியாவில் ஏற்பட்டு இருந்த காந்தீய இயக்கம் யாழ்ப்பாண இளைஞர்களது கற்பனா சக்தியை கவர்ந் "அந்த விடியலின் போது வாழ்ந்திருந்தமை, பேரானந்தமாக அமைந்திருந்தது."

யாழ்ப்பாணத்தின் இளைஞர் மீது மேலை நாட்டுக் கருத்துக்கள் ஏற்படுத்தியிருந்த தாக்கம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய மற்றும் ஒரு காரணியாகும். அமெரிக்க மற்றும் ஏனைய கிறிஸ்தவ மத மிச னாரிகளால் நிறுவப்பட்ட பாடசாலைகளும், கல்லூரிகளும், அவற்றைத் தொடர்ந்து இந்து மத பக்தர்களால் நிறுவப்பட்ட பாடசாலைகளும் மேற்கத்தைய தாராளப் பெறுமானங்கள் மற்றும் ஜனநாயக தேசியவாத கருத்துக்களை முன்னெடுத்துச் செல்வதில் பெரும் செல்வாக்கைச் செலுத்தின. அமெரிக்க கிறிஸ்தவ மிசனாரிகளால் நிறுவப்பட்டிருந்த வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியே இம்மலர்ச்சிக்கான பிரதான மையமாக இருந்து வந்தது. யாழ்ப்பாணக் கல்லூரியும் (1872) அதன் முன்னோடியான 'பற்றிக்கோற்ற செமினரி'யும் (Batticotta Seminary) (1823), ஏனைய அநேக கிறிஸ்தவ மிசனரிகளையும் இலங்கையில் இருந்த அரசு பாடசாலைகளையும் போலன்றி, தமிழ் இலக்கியக் கல்விக்கு அழுத்தம் தந்திருந்தன. இக் கல்லூரியில் கல்வி பயின்றவர்கள் மிசனரிமாரின் அதிகளவு செல்வாக்கிற்கு உட்பட்டிருந்தாராயினும், பின்பு கிறிஸ்தவ மதத்தினைத் தழுவியிருந்தனராயினும் பண்பாட்டு ரீதியாக குடாநாட்டு இதர மக்களிலிருந்து வேறுபட்டிருக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(மறுபுறத்தில் மேல் மாகாணத்தில் குறிப்பாக கொழும்பில், ஆங்கிலக் கல்வி மூலம் உயர்குடி மட்டத்தினை அடைந்திருந்தவர்கள் நிலை அதற்கு எதிர்மாறாகவே இருந்தது.) காந்திய இயக்கத்தின் 'இந்தியத் தன்மை'யானது யாழ்ப்பாணத்தில் ஆங்கிலக் கல்வி கற்ற இளைஞர் மற்றும் முதியோர் மத்தியில் ஒரு ஒத்திசைவான உளப்பாங்கினை உருவாக்கியது.

இக்கால கட்டமாகிய 1920களில் யாழ்ப்பாணக் கல்லூயின் அதிபராக விளங்கிய அமெரிக்க கிறிஸ்தவ மிசனாரியாகிய வண. யோன் பிக்நெல் (Rev. John Bicknell) சிந்தனைச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், நடவடிக்கைச் சுதந்திரம் குறித்த அவரது தாராள நோக்கு களுக்கு பிரபல்யம் பெற்றவராக விளங்கினார். "இந்தியாவில் நிகழ்ந்து வந்த விடுதலைப் போராட்ட இயக்கம் யாழ்ப்பாண இளைஞர்கள் மீது 1920 களில் மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. பெரும் பாலும் யாழ்ப்பாணக் கல்லூரியில் நிலவிய ஒப்பீட்டளவிலான சுதந்திரம் காரணமாக இத்தாக்கம் யாழ்ப்பாணக் கல்லூரியில் அதிக கூர்மையடைந்திருக்கலாம்.[1]"

உண்மையில், யாழ்ப்பாணக் கல்லூரியில் இடம் பெற்று வந்த இலக்கிய, விவாத சபைகள்தான் மாணவர் காங்கிரஸின் ஆரம்ப விதைகளென ஹன்டி பேரின்பநாயகம் குறிப்பாக விளக்கியுள்ளார். இந்த வகையில் ஹன்டி மாணவராயிருந்த 1918 - 1919 காலப் பகுதியிலிருந்து 'பிரதர்ஹுட்' (Brotherhood) என்னும் சிரேஷ்ட இலக் கியச் சங்கம் பிரதானமானதாயிருந்தது.

இலக்கியச் சங்கங்களில் விவாதிக்கப்பட்ட விடயங்கள் யாழ்ப் பாணக் கல்லூரியில் சிந்திப்பதற்கும், உரையாடலுக்கும் நிலவிய சுதந் திரத்திற்குச் சான்று பகர்கின்றன எனலாம். "அயர்லாந்துக்கு சுயாட்சி வழங்கப்படுதல் வேண்டும்", "தொழிலாளர் வர்க்கத்தினருக்கு வேலை நிறுத்தம் செய்வதற்கு உரிமை உண்டு" போன்ற விடயங்கள் ஆரம்பத்தில் விவாதிக்கப்பட்டன. அடுத்து, யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்கள் மத்தியில் 1920களின் ஆரம்பத்திலேயே "இனப் பிரதிநிதித்துவத்திலும் பார்க்க பிரதேசப் பிரதிநிதித்துவமே சிறந்தது", "விதானைமார் முறைமை ஒழிக்கப்படுதல் வேண்டும்", "புதிய சீர்த்திருத்தத் திட்டத்தின் படி சட்ட வாக்க சபைக்கு இலங்கை மக்கள் தமது பிரதிநிதிகளை அனுப்பலாகாது" போன்ற தேசத்துரோகம் எனக் கருதப்படக்கூடிய விடயங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவாதிக்கப்பட்டன. 1921 - 1922 காலப்பகுதிவரையில் "காந்தி வெளிநாட்டுப் புடவைகளைத் தீக்கிரையாக்கியது காந்திக்கு நியாயமானதே", "இலங்கைக்குச் சுயாட்சி வழங்கப்படுதல் வேண்டும்", "கல்லூரி அதிபர் ஒரு உள்நாட்டவராய் இருத்தல் வேண்டும்", "மாணவர் தேசிய உடைதரித்தல் வேண்டும்" போன்ற சில விடயங்கள் விவாதிக் கப்பட்டன. 1923 இல் "சிறைக்கு வெளியே உள்ள மகாத்மா காந்தியிலும் பார்க்க சிறையிடப்பட்ட மகாத்மாகாந்தி மிகவும் ஆபத்தானவர்"[2] என விவாதிக்கப்பட்டது. பின்னர் ஹன்டி பேரின்பநாயகம் எடுத்துரைத்தது போல், இவ்வாறான பாடசாலை மாணவருக்கான விவாதங்களில் கடவுள் மறுப்பும், பாலியல் மீதான விடயங்களும் தவிர்ந்த வேறு ஒரு விடயமுமே விலக்கப்பட்டிருக்க வில்லை. இளங்கன்று பயமறியாது என்பது போல் மட்டுமல்லாமல், தமது விவாதங்களின் பலனாக அதிமுக்கியமான மாற்றங்கள் நிகழும் எனும் ஆழமான நம்பிக்கை கொண்ட தத்துவஞானிகள் போன்று உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் தண்டனைகள் நீக்கப்படல் வேண்டும். ஆண் பெண் இருபாலாருக்கும் கூட்டுக் கல்வி, தேசியச் சுதந்திரம், சீதன முறைமை, சாதி முறைமை என யாவும் விவாதிக்கப்பட்டிருந்தன. செல்வாக்கினையும், அந்தஸ் தையும் கொண்டிருந்த ஆசிரியர்கள் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கு உரித்துடையவர்களாக இருந்தனர். சிரேஸ்ட சங்கமான பிரதர்ஹுட் (Brotherhood) சங்கத்துக்கு கல்லூரி அதிபரே போசகராகவிருந்தார். ஆயினும், மாணவ தலைவருக்கே அதிபரைக் கட்டுப்படுத்தி, ஆசனத்தில் அமரும்படி உத்தரவிடும் உரிமை இருந்தது. ஒரு சந்தர்ப்பத்தில் உண்மையாகவே அதிபர் யோன் பிக்னெல் உட்காருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார். அவரும் முகம் சிவந்த நாணத்துடன் அவ்வாறாகவே பணிந்திருந்தார்.[3] சுதந்திரம்தான் யாழ்ப்பாணக் கல்லூரியின் சிறப்பியல்பாக அந்நாட்களில் நிலவி இருந்தது. பாக்கு நீரிணைக்கு அப்பால் நிலவிய தேசிய எழுச்சிகளுக்கு ஒத்துணர்வைப் பிரதிபலிப்பவர்களாக கல்லூரி நிர்வாகிகள் விளங்கிய காலம் அது. 1919இல் 'தற்காலத்துக்கான தமிழ் இலக்கியம்' எனும் தலைப்பில் ஓர் உரையாடல் நடத்தப்பட்டது. கௌரவ கே. பாலசிங்கம், வண. எஸ். ஞானப்பிரகாச அடிகளார், வண. ஜீ.ஜீ. பிறவுண் அடிகளார் உள்ளடங்கலாக பலரும் கலந்து கொண்டனர். முன்னேற்றம் அடைந்த ஒரு மொழியாகத் தமிழ் வரவேண்டுமாயின் அது ஆட்சி மொழியாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறவேண்டும் எனும் கருத்தை பாலசிங்கம் வெளியிட்டார். தமது சொந்த மொழியை நயந்து போற்றுவதற்கு எமது மக்களுக்குப் போதிக்கப்பட வேண்டுமென சுவாமி ஞானப்பிரகாச அடிகளார் வலியுறுத்தியிருந்தார். ஆயினும், மிகவும் தீவிரமான யோசனையை வண. பிறவுண் அடிகளாரே முன் வைத்தார். அவர் கூறியதாவது: "தமிழ் வாசிப்பு, தமிழ் இலக்கணம், தமிழ் கட்டுரையாக்கம் பரீட்சையில் சித்தியடையத் தவறிய மாணவர் எவரையும் வகுப்பு உயர்த்த அனுமதியாதீர். தமிழ் மொழியில் சமதையான திறமையுடன் பேசுவதற்கும் எழுதுவதற்கும் இயலாதிருக்கையில், ஆங்கில மொழியில் நன்கு பேசவும், எழுதவும் ஆற்றலுள்ள ஒரு மாணவன் அதையிட்டு வெட்கமடையச் செய்யும் ஓர் உணர்வினை நாட்டில் உருவாக்குங்கள்" என்பதாகும்.[4]

பாடசாலைப் பாடவிதானத்தில் வரலாற்றைப் புகட்டுவதில் ஐரோப்பிய மற்றும் பிரித்தானிய வரலாறே ஓர் ஏகபோகத்தினை அனுபவித்து வந்திருந்தவிடத்து, 1920 களின் தொடக்கத்தில் இலங்கை வரலாற்றையும் இந்திய வரலாற்றையும் அறிமுகப்படுத்துவதற்கான மாற்றங்கள் நிகழ்த்தப்பட்டன.

ஆயினும், நாட்டின் ஏனைய இடங்களைப் போலவே யாழ்ப்பாணக் கல்லூரியின் மாணவர்களும் பிந்திய சந்ததியினருடன் ஒப்பிடுகையில் காலனித்துவ சூழலில் மெருகு ஊட்டப்படாத சந்ததியினராகவே வளர்ந்தனர். கார்ல்மாக்ஸ் அல்லது வரலாற்று பொருள்முதல்வாதம் அல்லது பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் குறித்து அவர்கள் கேள்விப் பட்டிருந்ததில்லை. உண்மையில், அவர்கள் உணர்ச்சியால் உந்தப்பட்ட இலட்சியவாதிகளாகவும் சமத்துவமானதும் நீதியுடையதுமான சமுதாயத்தினை மலரச் செய்வதில் அதிகளவு ஆர்வமும் கொண்டிருந்தனர். தமது மூத்தோர் தோற்றுப்போய் விட்டதாகவும் எதிர்காலத்திற்கான திறவுகோல் தம் கைவசம் இருப்பதாகவும் அவர்கள் நம்பினர். தங்களை ஒழுங்கமைத்துக் கொள்வதன் மூலம் பிரித்தானிய ஆட்சியினால் அடிமைப்படுத்தப்பட்டிருந்த, சாதிமுறைமையினால் கட்டுண்டிருந்த நிலப்பிரபுத்துவ சமுதாயத்தை மீட்டு, மீளக்கட்டமைத்துக் கொள்வதற்குத் தம்மால் இயலும் எனும் நம்பிக்கை அவர்களிடம் நிரம்பியிருந்தது. எவ்வாறாயினும், அவர்கள் ஒரு தத்துவார்த்த அல்லது கருத்தியல் ஆதாரத்திலான தெளிந்த சிந்தனைத் திறன்கொண்டு நடந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளவில்லை. ஆயினும், அவர்கள் தேசிய விடுதலை, சாதியொழிப்பு, மற்றும் சமூகக் குறைபாடுகளைக் களைதல் போன்ற குறிப்பிட்ட சில இலக்குகளுக்குத் தங்களை அர்ப்பணித்து இருந்தார்கள்.

சுதந்திரத்துக்கும் சமூக சீர்திருத்தத்துக்கும் மீதான ஓர் உணர்ச்சிப் பிரவாகத்துடன் கூடிய இலட்சிய ஆர்வத்தினால் இந்த இளைஞர்கள், ஆசிரியர்கள் மற்றும் யாழ்ப்பாணக்கல்லூரி 'மெட்றிகுலேஷன்' வகுப்பு மாணவர்கள் சிலர் 1922 இல் இலங்கைச் சமூகத்தின் சேவகர்களாகத் தங்களை நிறுவனப்படுத்திக் கொண்டனர். ஹன்டி பேரின்பநாயகம், சபாபதி குலேந்திரன், எஸ். ஆர். கனகநாயகம், ஒறேற்றர் சி. சுப்பிர மணியம், ஏ.எம். புறூடி, சீ. ஈ. மதியாபரணம், எஸ். துரைராஜசிங்கம், பொனி கனகதுங்கம், மற்றும் ஏனையோரும் அதன் ஸ்தாபக உறுப்பினர்களாக விளங்கினர். நாட்டின் பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகள் குறித்து உறுப்பினர்கள் கட்டுரைகள் சமர்ப்பித்து அவற்றின் மீது கூடுதலாக உரையாடல்கள் நிகழ்த்தும் ஓர் ஆய்வு வட்டமாகவே அது திகழ்ந்தது. இலங்கை இளைஞர்கள் மத்தியில் தெளிவாக விவாதிக்கப்பட்டு வந்த பிரச்சினைகள் மற்றும் அபிலாசை களுக்கு சிந்தனை வடிவம் வழங்கும் முயற்சியாகவே அது இருந்தது. இதனையிட்டு கல்லூரி அதிபர் பிக்னெல் (Bicknell) எப்போதாயினும் ஏதும் தெரிந்து கொண்டிருந்தாரா என்பது தெரியவில்லை. "எங்கள் அபிலாஷைகளில் அனுதாபங் கொண்ட ஒருவராக அவர் இருந்து, அது குறித்து ஏதும் அறியாதவராக இருத்தலே விவேகமானது என அவர் கருதியிருக்கக் கூடும்" என்று பின்னர் ஹன்டி மாஸ்ரர் ஒப்புக் கொண்டுள்ளார்.[5]

யாழ்ப்பாணக் கல்லூரியில் இருந்தும், அதன் விவாத சபைகளி லிருந்தும் இலங்கைச் சமூகத்தின் சேவகர்கள் சங்கத்தில் இருந்தும் கொழும்பில் இருந்த பல்கலைக் கல்லூரிக்குச் சென்று யூனியன் ஹொஸ்டலில் மாஸ்ரர் ஹன்டி வதிவிடம் பெற்றுக்கொண்டார். "நாம் 'யூனியன் ஹொஸ்டலில்' தங்கியிருக்கையில், அதன் நான்கு சுவர் களுக்குள் தண்டனைப் பயமின்றி மிகவும் கண்மூடித்தனமாக நாட்டுத் துரோகத்தைப் பற்றி பேசலாம். ஆயினும், வெளியே அவ்வாறு செய்தால் சட்டத்தின்படி தண்டனை அனுபவிக்க நேரிடும்" என்பதே எமது காப்பாளராகிய பேராசிரியர் சீ. சுந்தரலிங்கம் வெளியிட்ட கருத்தாக இருந்தது. பிக்னெல் காலத்தில் யாழ்ப்பாணக் கல்லூரியிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட ஓரளவிற்கு அதனை ஒத்த சூழ்நிலையே நிலவியிருந்தது. "எமது விவாத அவைகளிலும், வகுப்பறைகளிலும் எங்கள் திடநம்பிக்கை களைக் கடிவாளமிடாது கருத்து தெரிவிக்கும் சுதந்திரம் எமக்கு இருந்தது. பின்னாட்களில் பேராசிரியர் சுந்தரலிங்கம் வழிகாட்டியா கவும், நண்பனாகவும், திரைமறைவில் தத்துவ ஞானியாகவும் இருந்து வந்தார். பின்னர் ஒருவருடம் அவர் காங்கிரஸ் தலைவராகவும் விளங் கினார்" என ஹன்டி பேரின்பநாயகம் பின்னர் நினைவு கூர்ந் துள்ளார்.[6]

வட்டுக்கோட்டையில் பரவிய தீவிரத்தன்மையானது 'கில்போட்கிற சென்ற்' (Guilford Crescent) நிலையத்தில் பேராசிரியர் சுந்தரலிங்கத்தின் ஆதரவின் கீழ் பலம் பெற்று வளர்ச்சியடைந்தது. இரவு உணவின் பின் அநேகமான மாலைவேளைகளில் பட்டதாரி மாணவர்களின் பொது அறையில் கம்பீரமாகப் பிரவேசித்து பிரித்தானிய சாம் ராச்சியத்தின் அநீதிகள் மற்றும் இலங்கையர் போன்று அடிமைப் படுத்தப்பட்ட மக்கள் அனுபவிக்க நேர்ந்த அவமானங்கள் குறித்தும் சுந்தரலிங்கம் இடித்துரைப்பார். ஆங்கிலேயரால் இழைக்கப்பட்ட துன்புறுத்தல்களைக் கதை கதையாக எடுத்துரைப்பார். சுதந்திரம் பெற்றதொரு ஐக்கிய இலங்கையை கட்டியெழுப்புவதற்கான ஒரு முன்பள்ளியாகவே 'யூனியன் விடுதியை' பேராசிரியர் சுந்தரலிங்கம் கருதிவந்தார்.

தனது மனக்கண்ணில் கண்ட இலங்கையின் சிறிய அளவிலான ஒரு பிரதியாக, மலரப்போகும் சுதந்திர இலங்கையின் முன் தோற்றமாக 'யூனியன் ஹொஸ்டலை' உருவகப்படுத்துவதில் பேராசிரியர் சுந்தர லிங்கம் விசேட சிரமமெடுத்துக் கொண்டார். அனைத்து இனமத இளவயதினரும் 'யூனியன் ஹொஸ்டலுக்கு' வருகை தர ஊக்குவிக்கப் பட்டனர். அந்நாட்களில் பேராசிரியர் சுந்தரலிங்கத்தின் பெயர் பெரிதும் புகழ்பூத்ததாயிருந்தது. அவரின் கல்விச் சாதனைகள், அரச சேவையை துச்சமென மதித்தமை, மக்களுடனான தொடர்பாடல்களில் மனித சமூக சமத்துவத்தை நிஜமாகவே வற்புறுத்தும் போக்கு என்பவை 'யூனியன் ஹொஸ்டலின்' காப்பாளராக அவர் வந்தபோது ஏற்கனவே அறியப்பட்டிருந்தது.

'யூனியன் ஹொஸ்டலில்' தேசிய சுதந்திரம் தொடர்பாகச் சற்று கலங்கலான அல்லது தெளிவற்ற சிந்தனை வளர்ந்து வந்தது. "நாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞராகவும், முதிர்ச்சியடையாதவர்களாகவும் இருந்து வந்தோம் என்பதுடன் அனேகமாக எமது சிந்தனை சிறந்ததாகவோ, தெளிவான தாகவோ இல்லாதிருக்கலாம். சுதந்திரத்தின் ஊடாக எழக்கூடிய இன முரண்பாடுகள், கடும் சாதிப்பூசல்கள், பொருளியல் குறைபாடுகள் போன்ற பிரச்சினைகள் எமது சிந்தனையில் ஒருபோதும் இடம் பிடித்திருக்கவில்லை. இப்பிரச்சினைகள் தாமாகத் தீர்வுகண்டுவிடும் என நாம் ஊகித்திருந்தோம். எமது காலத்தில் இன உணர்வுகளோ, சமய முரண்பாடுகளோ தலைதூக்கி இருந்திருக்கவில்லை". இவ்வாறு ஹன்டி பேரின்பநாயகம் கூறிவைத்தார்.[7]

'யூனியன் ஹொஸ்டலில்' (1923 - 1924) ஹன்டி பேரின்பநாயகம் இலங்கை மாணவர் கிறிஸ்தவ இயக்கத்தின் செயலாளராக விளங்கினார். அந்நாட்களில் ஈ. டபிள்யூ. டீவிக் அவர்கள் புறூடி இல்லத்தின் காப்பாளராக இருந்தார். அவர் ஒரு தலைசிறந்த கிறிஸ்தவ சிந்தனை யாளராகவும் அலஹபாத்தில் ஒரு கிறிஸ்தவ கல்லூரியின் அதிபராகவும் இருந்தவர். அவரது இந்திய ஆதரவு அனுதாபங்கள், உரைகள் காரண மாகத் தமது பதவியைப் பறிகொடுத்திருந்தவர். டீவிக்கைத் தமது தலைவராகக் கொண்ட ஒரு கிறிஸ்தவ ஆய்வு வட்டத்தினை 'யூனியன் ஹொஸ்டலில்' உள்ள கிறிஸ்தவ மாணவர்கள் அமைத்திருந்தனர். ஹன்டி பேரின்பநாயகத்தின் சில சைவ நண்பர்களும் அந்த ஆய்வு வட்டத்தில் சேர்ந்து கொண்டனர். இந்நிலையில், ஒரு கிறிஸ்தவ பிரசங்கியரால் 'யூனியன் ஹொஸ்டல்' ஆக்கிரமிக்கப்பட்டு விட்டதாக சில வட்டாரங்களில் குற்றசாட்டு சுமத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் பின்னர் 'யூனியன் ஹொஸ்டலில்' நிகழ்ந்த ஒரு கூட்டத்தில் வைத்து சில பௌத்தர்கள் இத்தவறானதும் விசமத்தனமுமான குற்றச்சாட்டினை எதிர்த்து பேராசிரியர் சுந்தரலிங்கம் சார்பிலும், 'யூனியன் ஹொஸ்டல்' சார்பிலும் வாதாடியிருந்தனர்.

1924 யூன் திங்களிலே ஹன்டி பேரின்பநாயகம் கலைமாணிப் பரீட்சைக்குத் தோற்றிய பின்னர் ஆசிரியராகப் பணி புரிவதற்கு யாழ்ப்பாணக் கல்லூரிக்கே திரும்பியிருந்தார். "எனது லண்டன் பல் கலைக்கழகப் பட்டம் எனக்கு ஓர் அளவு தன்னம்பிக்கையினையும் அந்தஸ்தையும் தந்திருந்தது. ஆயினும் ஒரு பல்கலைக்கழகப் பட்டம் பெறும்வரை நான் காத்திருக்காது, தேசிய சுதந்திரத்தின் பொருட்டு ஓர் அமைப்பினை நிறுவுவதற்கான ஆரம்ப பணிகளில் ஈடுபட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்தேன்"[8] எனத் தெரிவித்துள்ளார். ஹன்டி பேரின்பநாயகம் விடுமுறைகளின் போதும், வார இறுதி நாட்களிலும் ஒத்த கருத்துடைய நண்பர்களைச் சந்திப்பார். சபாபதி குலேந்திரன், ஒறேற்றர் சுப்பிரமணியம், எஸ். நடேசன், எஸ்.யூ. சோமசேகரம், சுவாமி விபுலானந்தர், மு. பாலசுந்தரம், எஸ். துரைராஜசிங்கம், பொன். நாகலிங்கம், ஏ.ஈ. தாம்பர், எஸ். சுப்பிரமணியம், வி. தில்லைநாதன், எஸ். இராசநாயகம், கே. நவரத்தினம், வி. முத்துக்குமாரு, ஜே.சி. அமரசிங்கம், எஸ்.எஸ். சிவப்பிரகாசம், ஜே. டபிள்யு. ஏ. கதிர்காமர், ஏ.எம்.கே. குமாரசாமி, வி.கே. நாதன், எஸ். ஜே. குணசேகரம், கு. நேசையா, சாம் ஏ. சபாபதி, எஸ். சி. சிதம்பரநாதன் மற்றும் ஏனைய பலர் இவர்களுள் உள்ளடங்குவர்.[9] அவர்களுள் சிலர் யாழ்ப்பாணத்தில் உள்ள கல்லூரிகளின் சிரேஷ்ட மாணவர்களாவர்.

இளவயதினரை பிரதானமாகக் கொண்ட ஓர் இயக்கத்தை ஆரம்பிப்பதற்கு சூழ்நிலை வாய்ப்பானதாகக் காணப்பட்டது. 1924ஆம் ஆண்டு நவம்பர் முதல் நாள் சனிக்கிழமை பிற்பகலில் தற்போதுள்ள கிறிஸ்து ராசா தேவாலயத்தின் (Chrisht Church) எதிராகவிருந்த, யாழ்ப்பாணத்தின் அப்போதய Y.M.C.A கட்டிடத்தில் ஒரு பூர்வாங்கக் கூட்டம் நடைபெற்றது. ஏறத்தாழ முப்பது இளவயதினர் சமுகம் தந்திருந்தனர். ஆசிரியர், சட்டவாதிகள், யாழ்ப்பாணத்தில் இருந்த கல்லூரிகளின் உயர் வகுப்பு மாணவர்கள் மற்றும் சுயேட்சையான அரசியல் சிந்தனையாளர்கள் அவர்கள் மத்தியில் இருந்தனர். ஏற்கனவே மேல் குறிப்பிடப்பட்டுள்ள பல பெயர்கள் இவற்றுள் சேர்க்கப்பட்டிருந்தன. விரைவில் கேம்பிறிஜ் பல்கலைக்கழகத்திற்குப் புறப்படுவதற்கிருந்தவரும் கணிதத்தில் புலமைப்பரிசில் பெற்றிருந்தவருமாகிய மு.பாலசுந்தரமும் மற்றும் எஸ். துரைராஜசிங்கமும் இணைச் செயலாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். ஓர் ஆரம்பக் கருத்துப் பரிமாற்றத்தின் பின்னர் யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் என அழைக்கப்படும் ஓர் அமைப்பை ஆரம்பிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது.[10] ஒரு குறுகிய பார்வையை அளிப்பதற்கு அவர்கள் விரும்பியிராத காரணத்தினாலேயே யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் எனும் பெயருக்குப் பதிலாக 'மாணவர் காங்கிரஸ், யாழ்ப்பாணம்' என அதனை அழைப்பதற்கு அவர்கள் தீர்மானித்திருந்ததாக பின்னர் ஹன்டி பேரின்பநாயகம் வலியுறுத்திக் கூறியிருந்தார்.[11]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவின் ஏனைய பகுதிகளிலும் இதற்கு ஒத்த அமைப்புக்கள் தோன்றக் கூடும் எனவும், இறுதியில் அதே இலட்சியங்களுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படவல்ல இலங்கைத் தீவு முழுவதையும் உள்ளடக்குவதான ஓர் அமைப்பு உதயமாகும் என்பதே இந்த இள வயதினரது நம்பிக்கையாக இருந்தது. டொனமூர் அரசியல் அமைப்பின் கீழான முதல் தேர்தலை யாழ்ப்பாணம் பகிஷ்கரித்ததன் பிற்பாடு அத்தகையதொரு அமைப்புத் தோற்றம் பெற்று சிறிது காலம் தொடர்ந் திருக்கவும் செய்தது. ஏறத்தாழ இக்காலகட்டத்தில் கோர்டன் பியேஸ் (Gordon Pearce) பரமேஸ்வராக் கல்லூரியின் அதிபராக இருந்தார். அவருடன் தெற்கே இருந்து சில சிங்கள மாணவர்களும் யாழ்ப்பாணம் வந்திருந்தார்கள். பின்னர் பிரபல பத்திரிகையாளராக விளங்கிய தனபாலவும் பிறிதொரு சிங்கள மாணவரும் இப்பூர்வாங்கக் கூட் டத்தில் சமூகமாகவிருந்தனர்.

இவ்விதமாக அதன் ஆரம்ப காலத்தில் இருந்தே மாணவர் காங்கிரஸானது இலங்கைத் தீவு முழுவதற்குமான ஒரு கண்ணோட் டத்தினைக் கொண்டிருந்ததுடன், தேசிய ஒற்றுமைக்கும் இலங்கையின் சுதந்திரத்துக்காவும் பற்றுறுதி கொண்ட ஓர் அமைப்பாகத் திகழ்ந்தது. பத்திரிகைகளுக்கான தமது கடிதத்தில் (வெறுமனே யாழ்ப்பாணத்தின் மாணவர்கள் எனக் குறிப்பிடாது) "இலங்கையின் மாணவர்கள் இந்த நாட்டின் அழிந்து சிதைவுறுகின்ற இலக்கியத்துக்குப் புத்துயிர் அளிக்க வேண்டிய தேவை இருப்பதாக" செயலாளர் பாலசுந்தரம் எழுதி யிருந்தார். 1924 நவம்பர் முதல் நாள் Y.M.C.A. மண்டபத்தில் நடைபெற்ற பூர்வாங்கக் கூட்டத்தில் மாணவர் காங்கிரஸின் முதல் அமர்வுகளை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு ஓர் அமைப்புக் குழு தெரிவு செய்யப் பட்டது. ஒவ்வொரு கல்லூரியிலும் இருந்து மாணவப் பிரதிநிதிகள் இருவரையும், ஆசிரியர்கள் மற்றும் நலன்விரும்பிகள் அடங்கலாக ஏனையோர் ஏழுபேரையும் கொண்டு அக்குழு அமைந்திருந்தது. இம் மாநாட்டை ஒழுங்கு செய்வதில், தீவிர பிரசாரத்தை வெற்றி பெறச் செய்வதில் அமைப்புக் குழு முனைப்பாக உழைக்க வேண்டியிருந்தது. "அதற்கு இலட்சியவாதிகளும் இலங்கையின் நலனை ஆவலுடன் எதிர்பார்ப்பவர்களும் உதவுவார்கள்" என பாலசுந்தரம் நம்பிக்கை வெளியிட்டிருந்தார்.[12]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1924 டிசம்பர் இறுதி வாரத்தில் காங்கிரஸின் அங்குரார்ப்பண அமர்வுகளை நடத்துவதற்கு முன்னேற்பாடுகள் செய்யப்பட்டு வந்தன. இதனிடையில் 'டெயிலி நியூஸ்' பத்திரிகைக்கு எழுதப்பட்டிருந்த ஒரு நீண்ட கடிதத்தில் உத்தேச காங்கிரஸ் அமைப்பின் நோக்கங்களை ஹன்டி பேரின்பநாயகம் விரிவாக விவரித்திருந்தார். இன்று எங்களை எதிர்நோக்கும் சில பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் நோக்குடன், இந்நாட்டின் மாணவ சக்தியை அணிதிரட்டுவதற்கான முயற்சியை இந்நாட்டில் ஆரம்பிப்பதற்கு எம்மில் சிலரால் உத்தேசித்திருக்கும் புதிய துணிச்சலான காரியம் குறித்து பொது மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என அவர் அதில் எழுதியிருந்தார். "இந்நாட்டின் சமூக, அரசியல், பண்பாட்டு, பொருளியல், முன்னேற்றத்துக்கான ஒரு கடப்பாடு தமக்கு இருப்பதாகவும், தமக்கு உரித்தான இத்துறையிலான நடவடிக்கைகளிலிருந்து அவர்களது தலைவர்களின் பழைமைவாதத் தினாலும் குறுகிய பார்வையினாலும் அவற்றில் இருந்து நீண்டகால மாகத் தாம் விலக்கி வைக்கப்பட்டு இருப்பதாகவும் மாணவர்கள் உணர்கின்றனர்". இலங்கையின் பல்வேறு பகுதிகளில் உள்ள அநேக இளவயதினரால் பகிர்ந்து கொள்ளப்பட்ட ஒரு புதிய இலங்கைக் கானதொரு கண்ணோட்டத்தினை அவர் வெளிப்படுத்தியிருந்தார். அக்கால கட்டத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இருந்த இளைஞர்கள் தமது மூத்தோரின் நடவடிக்கைகள் குறித்து கேள்வி எழுப்பாது பணிந்து உடன்பாடாக நடந்து வந்திருந்தமை தெரிந்தவிடயமாயிருந்தது. தவிர்க்கமுடியாதவாறு, இது புலனாய்வு செய்யும் ஓர் ஆர்வத்தினை அடக்குவதை மட்டுமல்லாமல், முனைப்புடன் தைரியமாக ஒரு காரியத்தை ஆரம்பிக்கும் திறமையையும் முன்முயற்சியையும் தம் மீதான தன்னம்பிக்கையையும் மழுங்கடித்துக் கொண்டிருந்தது. ஒத்த சிந்தனை கொண்ட இளைஞர் ஒன்று சேர்ந்து கருத்துக்களைப் பகிர்ந்து தேசிய சேவைக்கான தமது ஆர்வத்தின் மூலம் காத்திரமான நட வடிக்கைகளை மேற்கொள்ளுமுகமாக அமைப்பொன்றினை உருவாக்கி, அந்தச் சேவையை மேலும் ஆக்கபூர்வமானதாக்குவதற்கு விடுத்திருந்த அழைப்பானது யாழ்ப்பாணத்தில் 1920கள் காலப்பகுதியில் துடிப்பான கைங்கரியமாக விளங்கியது. அவ்வாறாக ஒழுங்கமைக்கப்பட்ட இயக்கமானது எல்லா இனங்களையும், மதங்களையும், சாதிகளையும் அரவணைக்க விருந்தது. பிளவு சக்திகள் இனமத ரீதியான பிளவுகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்குவதில் ஈடுபட்டிருந்த காலகட்டமாக அது இருந்தது. இனங்கள், மதங்கள், மற்றும் தனிப்பட்டவர்கள் இடையே நிலவிய சந்தேகங்கள் மற்றும் தப்பபிப்பிராயங்களுக்கு தனது கடிதத்தில் ஹன்டி பேரின்பநாயகம் கவனத்தை ஈர்த்திருந்தார். இயக்கங்களில் மாணவர்கள் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தனராயினும் இவை சமயப் பிரிவினைகளை அடிப்படையாகக் கொண்டிருந்தன. "தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள புதிய வேலைத்திட்டமானது அனைத்து மதங்களினதும் இளவயதினரை ஒருங்கிணைக்கும் முதல் முயற்சியாகும்"[13].

தற்போதைய நிலவரங்கள் குறித்து அதிருப்தியடைந்தவர்களாக இருப்பவர்களினதும், அதே 'புனிதமான அதிருப்தியை' ஏனையோரது மனங்களிலும் உருவாக்கும் எண்ணத்தைக் கொண்டிருந்த இளவயதினரினதும் நடவடிக்கைகளுக்கானதொரு தளத்தினை உத்தேச காங்கிரஸ் ஏற்படுத்தித் தரும் என நம்பப்பட்டது. ஏனென்றால், சமூக, அரசியல், அறிவியல் மற்றும் ஆத்மீக துறைகளைப் பொறுத்தவரை, தாம் முதலில் பிரவேசித்த காலத்தில் இருந்ததை விட நாட்டு நிலைமையினை சற்று மேம்படுத்தியத் திருப்தி அவர்கட்கு கிட்டுவதாயிருக்கும். "இந்த நாட்டைப் புத்துயிர்பெறச்செய்வதில் அக்கறையுடையவர்களும், அதனை ஈடேற்றுவதில் எமக்குள்ள ஆற்றலில் நம்பிக்கை கொண்டவர்களும்', இளைஞர்களது ஆற்றலில் நம்பிக்கையுடையவர்களும் யாழ்ப்பாணம் 'நம்பிக்கை இல்லத்தில்' ஒழுங்கமைப்புச் செயலாளர் மு. பாலசுந்தரம் B.Sc யுடன் தொடர்பு கொண்டு, நிதி மற்றும் தார்மீக ஆதரவு வழங்கி இயக்கத்துக்கு உதவும்படி"யான ஓர் அழைப்புடன் அக்கடிதம் முற்றுப் பெற்றிருந்தது.[14]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2

## அங்குரார்ப்பண அமர்வுகள்

1924 டிசெம்பர் 29, 30, 31 ஆம் திகதிகளில் (தற்போதைய நகர மண்டபம் உள்ள இடத்தில்) யாழ்ப்பாணம் 'றிஜ்வே' மண்டபத்தில் மாணவர் காங்கிரஸின் முதல் அமர்வுகள் நடைபெற்றன. அதில் நன்கு பிரபல்யம் வாய்ந்த கல்விமான்கள் பலர் பங்குபற்றியிருந்தனர். ஹன்டி பேரின்பநாயகமே பிரதான அமைப்பாளராகத் திகழ்ந்தார். மு. பாலசுந்தரம், மற்றும் எஸ். துரைராஜசிங்கம் அடங்கலாக எத்தனையோ இளைஞர்கள் அவருக்கு ஒத்தாசையாகச் செயற்பட்டனர். இந்த அங்குரார்ப்பண அமர்வுகளில் சமீபத்திய பட்டதாரிகள் மற்றும் பட்டதாரி மாணவர்கள் உள்ளடங்க ஏறத்தாழ முன்னூறு என மதிப் பிடப்பட்ட பெரும் எண்ணிக்கையிலான மாணவர்கள் கலந்து கொண்டி ருந்தனர்.

சமுகம் தந்திருந்தோர் அனைவருமே 'தேசிய' பாங்கில் தரையில் அமர்ந்திருந்ததுடன் 'தேசிய உடையில்' வந்திருந்ததாகவும் 'உதய தாரகை' பத்திரிகை குறிப்பிட்டிருந்தது.[15]

யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த ஜே.வி. செல்லையா மாநாட்டின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். சற்று பிரபல்யமான வயது முதிர்ந்த ஒருவர் காங்கிரஸின் தலைவராகத் தெரிவு செய்யப்படுவதே அதன் பின்னர் நடைமுறையாயிற்று. வருடாந்த அமர்வுகளில் தொடக்க வுரை ஆற்றுவதே தலைவரின் பிரதான செயற்பாடாக இருந்துவந்தது. வரவேற்புரையை நிகழ்த்திய மாணவர் காங்கிரஸின் வாலிப உறுப் பினரே நடைமுறையில் நிறைவேற்றுக் குழுவின் தலைவராகவும் தெரிவுசெய்யப்படுவார். தலைவரின் அந்தஸ்து பெரும்பாலும், ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவ பதவியாகவே அமையும். அவர் செயற்பாட்டுரீதியின் ஒரு ஆலோசகராக மட்டுமே பணியாற்றி வந்தார்.

'இந்து சாதன' பத்திரிகையில் அறிவிக்கப்பட்டது போல 'தித்திப் பான தமிழில்' மிகவும் கனிவானதொரு வரவேற்புரையை எஸ். சி. சிதம்பரநாதன் நிகழ்த்தியிருந்தார்.[16] மாணவர் காங்கிரஸானது தனது ஆரம்பத்திலிருந்தே யாழ்ப்பாணத்தின் அரசியல் மற்றும் பொது வாழ்வில், அதே போல் இலங்கை முழுவதிலும் தேசிய மொழிக்கு கௌரவமளிப்பதன் வாயிலாக புதுமை படைத்து வந்தது. யாழ்ப் பாணத்திலும், ஒருவேளை முழு இலங்கையிலும் கூட, ஆங்கிலம் கற்ற வகுப்பினர் அந்த அமைப்பின் விவகாரங்களைக் கொண்டு நடத்துவதற்கு ஆங்கில மொழியுடன் தேசிய மொழிகளில் ஒன்றையும் உபயோகத்தமைக்கு காங்கிரஸே முதலாவது அமைப்பாக விளங்கியது. மாணவர் காங்கிரஸைத் தோற்றுவிக்கும் தீர்மானம் மு. பாலசுந்தரத் தினால் முன்மொழியப்பட்டு, பல்கலைக்கல்லூரியின் பட்டதாரி மாணவர் எஸ். நடேசனால் வழிமொழியப்பட்டு, ஏகமனதாக நிறை வேற்றப்பட்டது. தீர்மான வாசகம் வருமாறு:

> "தேசிய உத்வேகத்தை விரைவுபடுத்தும் நோக்கத்துக்காவும், உண் மையான, தன்னலமற்ற தேசிய சேவைக்கான பாதையில் இந் நாட்டினது இளைஞர்களது ஆற்றலை நெறிப்படுத்துவதற்காகவும் ஒரு காங்கிரஸ் தோற்றுவிக்கப்படுதல் வேண்டும் என்றும் அதற்கு 'மாணவர் காங்கிரஸ்' எனப் பெயரிடப்படுதல் வேண்டும் என்றும் இம் மண்டபத்தில் கூடியிருக்கும் மாணவர்கள் இத்தால் தீர்மானிக் கின்றனர்."

ஏற்பட்டு வரும் பெரும் தேசிய விழிப்புணர்வினை குறிப்பிட்டு, எழுச்சியூட்டும் உரையொன்றினை அங்கு சமூகமாகியிருந்த இளை ஞர்களில் ஒருவரான நடராஜா நிகழ்த்தினார். பட்டினியால் வாடும் மக்கள், வேலையற்றோர், மற்றும் ஒடுக்கப்பட்ட பெண்களின் துன்பங்களைத் துடைப்பதற்கு அங்கு சமுகமாகி இருந்தோருக்கு அவர் அறைகூவல் விடுத்திருந்தார். அவர்களது தற்போதய துர்ப்பாக்கிய நிலைக்கான தீர்வு, சீர்திருத்தங்களுக்குப் பரிந்து வாதிடுவதற்காக, தூதுக் குழுக்களை இங்கிலாந்துக்கு அனுப்புவதிலோ, அன்றேல் சட்ட நிர்ணய சபையில் ஒதுக்கப்பட்ட ஆசனங்களுக்காகப் போராடுவதிலோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமையாது எனவும், அவர்கள் தாய்நாட்டிற்குச் சேவைபுரியும் மெய்யான வாஞ்சையிலேயே தங்கியிருப்பதாகவும் அவர் அழுத்தி உரைத்திருந்தார்.[17]

யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்தவரான ஜே.வி. செல்லையா தமது தலைமை உரையில், "சமூகத்தில் நிறைவேற்றப்பட்ட மிகப் பெரும் சீர்த்திருத்தங்கள் அனைத்துமே இளவயதினரால் செய்யப்பட்ட பணிகளே. இயேசு கிறிஸ்துநாதர் தமது ஊழியத்தை ஆரம்பித்த போது தமது அகவையில் இருபதுகளை மட்டும் நிறைவு செய்திருந்தார். புத்தர் துறவு பூண்டதும் ஓர் இளவயதினராக அவர் இருந்த பொழுதே". தீவின் வேறுபட்ட சமூகங்களுக்கு இடையே நிலவும் இனவாதப் பொறாமைகளையிட்டு விசனம் தெரிவித்த இவர், தேசிய ஒற்றுமையை அவர்களது நடவடிக்கைகளில் முக்கிய கொள்கையாக எடுத்துக் கொள்ளும்படி வேண்டுகோள் விடுத்தார். தீண்டாமையின் சாபக்கேடு, சீதன முறைமையின் பொல்லாப்பான தாக்கங்களைக் குறிப்பிட்ட அவர் இலட்சியங்களை நடைமுறைச் சாத்தியமான நடவடிக்கைகளாக மாற்றும்படி இளவயதினரிடம் வேண்டுகோள் விடுத்தார். நாட்டில் நிலவும் சமூகத் தீமைகளை இல்லாதொழிப்பதில் இளவயதினரின் வகிபாகத்தினை அவர் வற்புறுத்தியிருந்தார். "இந்த நாட்டின் எதிர்கால பிரஜைகளாகிய உங்களிடமே இந்த அழகிய தீவின், வாழ்வோ தாழ்வோ தங்கியுள்ளது. தர்மம், நீதி, மற்றும் நியாயத்தின் பொருட்டு ஒன்றுபட்டுப் போராடுவதற்கும், உங்கள் தாய் நாட்டிற்கு உயிருள்ள வரை சேவை ஆற்றுவதற்கும் எல்லாம் வல்ல இறைவன் உங்களுக்கு உதவுவாராக."[18]

ஜே.வி. செல்லையாவினது உரையினை ஞாபகப்படுத்திய ஹன்டி பின்னர் தெரிவித்ததாவது, "தேசிய ஒற்றுமைக்கு நம்பிக்கையூட்டும் ஒரு வேண்டுகோளை அவர் விடுத்திருந்தார். தனது மனதில் அவர் கொண்டிருந்த ஒற்றுமையை விவரிப்பதற்கு அவர் எடுத்தாண்டிருந்த உவமை இன்னமும் எனது நினைவில் உள்ளது. அது மழைக் காலமாக இருந்தது. வட்டுக்கோட்டையில் இருந்து யாழ்ப்பாணம் வரையான நிலத்தோற்றத்தின் ஒரே நீளத்திற்கு நெல் வயல்கள் நிறைந்து காணப்பட்டன. மோட்டார் வண்டியில் செல்லும் ஒரு பயணிக்கு அந்த வயற் காணிகள் மரகதப் பச்சையான ஒரு பரந்த கடல் போலவே தோன்றும். ஆயினும் எல்லைகளைக் குறிக்கும் வரம்புகளும் அங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்பட்டன. தேசிய ஒற்றுமை தெளிவானது. வேறுபாடுகள் எவ்வளவுதான் மெய்யானவையாக இருப்பினும் கூட, அவை புறந் தள்ளப்பட வேண்டும்" என்றார்.[19]

அமர்வுகளின் இரண்டாவது தினத்தில் 'தமிழ் இலக்கியத்தில் மறுமலர்ச்சிக்கான தேவை' எனும் தொனிப்பொருளில் உரையாடல் தமிழில் இடம்பெற்றது. ரி.என். சுப்பையா, நவநீதகிருஷ்ண பாரதி, ஆர்.சி. சற்குணசிங்கம், வி. எஸ். இராசஜயனார், சு. நடேசபிள்ளை ஆகியோர் உரையாடலில் கலந்து கொண்டிருந்தனர். மூன்றாம் நாளில் வி. முத்துக்குமாருவும் எஸ். ஜே. குணசேகரமும் 'பரந்து பட்ட மக்க ளுக்கான கல்வி' எனும் விடயத்தின் மீது ஓர் உரையாடலை வழிநடத்தி யிருந்தனர். பொது மக்களுடனான நேரடித் தொடர்பினைத் தமது உரையில் வலியுறுத்திய வி. முத்துக்குமாரு "மக்கள் மத்தியில் சென்று சமூக மற்றும் தேசிய நலன்கள் தொடர்பான விடயங்களில் அவர் களுடன் சரளமாக உரையாடும்படி" இள வயதினருக்கு அழைப்பு விடுத்திருந்தார். தங்களில் ஒருவராக உங்களை அவர்கள் அடையாளப் படுத்தாமல் விட்டுவிடக் கூடும் என்பதால், பாமர மக்கள் உடுத்திக் கொள்ளும் உடையையே அணிந்து செல்லுங்கள். அவர்களின் சொந்தப் பேச்சு வழக்கில் அவர்களோடு பேசுங்கள். அல்லாவிடில், அவர்கள் உங்களுக்குச் செவிமடுக்கமாட்டார்கள், அவர்களது தாழ்வுமனப்பாங்கு, அனாதரவான நிலையாகிய உணர்வுகளில் இருந்து விடுபடுவதற்கு மக்களுக்கு அறிவு புகட்டுவதே இளவயதினர் முன்பாகவுள்ள முதற் பணியாக அவர் விவரித்திருந்தார். "தனது பணியில் மகாத்மாகாந்தி அவ்வளவு வெற்றி பெறுவதற்கு என்ன காரணம்? பிரதானமான காரணம், அவர்களைப் போல அவர் வாழ்வதும், அவர்களது சொந்தப் பேச்சு வழக்கிலே அவர்களது சொந்த மொழியில் அவர் அவர்களோடு பேசுவதுமாகும்" என்றும் 'மக்கள் மீது கற்றவர்களுக்கு ஏதாவது செல்வாக்கு இருக்குமாகவிருந்தால், அந்நிய பண்பாடு, மற்றும் அந்நிய உடை, நடை, பாவனைகளைப்போற்றி போக்குகளை சிலாகிக்க வைக்கும் நாசகாரமானதொன்றாகவே அது இருந்துள்ளது." அந்நிய பொருட்களையும் மருந்துகளையும் அவை விளம்பரப்படுத்தி வந்த பாங்கின் விரும்பத்தகாத ஒரு விளைவை எவ்வாறாகப் பத்திரிகைகள் ஏற்படுத்தி வருகின்றன என்பது தொடர்பாக அவர் கவனம் ஈர்த்தார். "வெளிநாட்டுப் பொருட்களை நீங்கள் உபயோகிக்கும் காலம் வரை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றில் நாம் சொந்தக்காலில் நிற்க முடியாது, அதேபோல் அவர்களை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் உளைச்சல் நிறைந்த தாழ்வு உணர்ச்சியை மக்களால் மறக்கச் செய்யவும் இயலாது" எனக் கூறிய அவர் "தமது முழுக் காற்சட்டைகளை அணியாது ஒருபோதும் வெளியே புறப்படாத எமது மூத்தோர் சிலருக்காக நான் அவமானத்தினால் நாணுவதன்றி என்னால் ஒன்றும் செய்யவியலாது" என மேலும் கூறினார்.[20] மாணவர் காங்கிரஸை அங்குரார்ப்பணம் செய்வதற்குப் பொறுப்பாக விருந்த இளவயதினரின் மனோநிலையை உணர்ந்து கொண்டிருந்தவரான முத்துக்குமாரு, தற்சார்பு மற்றும் அந்நிய உற்பத்திகளை நிராகரித்தல் ஆகிய காந்திய பெறுமானங்களை ஆதரித்திருந்த ஒரு உயிர்த்துடிப்பான உரையாகவும் அவரது பேச்சு அமைந்திருந்தது. அவர்களுள் அநேகர் ஏற்கனவே தேசிய உடையையே அணிந்திருந்தனர். அவர்களுள்ளும் சிலர் முழுக் காற்சட்டைகளை முற்றாக விலக்கியிருந்தனர் என்பதுடன், அவர்களது ஜீவிய காலத்தில் ஒருபோதுமே மேலை நாட்டு உடைக்கு அவர்கள் கவரப்பட்டிருந்ததில்லை.

அந்த இயக்கத்தின் காரண கர்த்தாவாக விளங்கியவராகிய ஹன்டி பேரின்பநாயகம் ஒரு தடவை தமது வாழ்வில் மறக்க முடியாத முக்கிய நிகழ்வு ஒன்றை எடுத்துரைத்தார். யாழ்ப்பாணக் கல்லூரியில் 'லண்டன் இன்டர் ஆட்ஸ்' பரீட்சையில் தேறிய முதல் இரு மாணவர்களாக அவரும், லைமன் குலத்துங்கமும் விளங்கினர். 'பற்றிக்கோட்டா செமினறி' (Batticotta Seminar) ஸ்தாபிக்கப்பட்ட நூற்றாண்டு விழாவினை யாழ்ப்பாணக் கல்லூரி கொண்டாடிக் கொண்டிருந்த (1922ஆம்) ஆண்டாக அது இருந்தது. சித்தி பெற்ற அவ்விரு மாணவர்களும் பரிசளிப்பு வைபவத்தின்போது உரை நிகழ்த்தல் வேண்டும். எந்த மாணவனும் கைவிடமாட்டாத ஒரு கௌரவமாக அது இருந்தது ஆயினும், அந்த வைபவத்துக்குத் தாம் தேசிய உடை அணிந்தே செல்லவிருப்பதாக ஹன்டி பேரின்பநாயகம் தெரியப்படுத்தியிருந்தார். அதனைக் கேள்விப்பட்ட அதிபர் பிக்நெல் (Bicknell) இளம் ஹன்டியை அழைத்து அந்த வைபவத்துக்கு அவர் நீண்டகாற்சட்டை மற்றும் 'கோட்' அணிய வேண்டும் என வற்புறுத்தியிருந்தார். அந்த இளம் இலட்சியவாதியோ அடக்கத்துடன் அவ்வாறு செய்வதற்கு மறுத்து விட்டார். அதன்பின் பரிசளிப்பு நாள் உரையை நிகழ்த்தும் கௌரவம் அவருக்கு வழங்கப்படமாட்டாது என பிக்னெல் தீர்ப்பு அளித்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் ஓர் அமெரிக்க மிஷனரி ஊழியரான திருமதி ஹரிசன் ஹன்டியை அழைத்து அவரிடம் பரிந்து கேட்டுக் கொண்டார். தேசிய உடையையே நாம் அணியப்போவதாக விடாப்பிடியாக உரைத்த ஹன்டி தாம் விரும்பினாலும் கூட அதற்கு வேண்டிய உடைகள் தம்மிடம் இல்லாதிருப்பதாகவும் தெரிவித்திருந்தார். ஆகவே, அந்தக் கௌரவம் லைமன் குலத்துங்கத்துக்கே கிட்டிற்று. அது தமக்கு வருத்தம் தரும் ஒரு நிகழ்வாகவே இருந்ததாக ஹன்டி பின்னர் நினைவு கூர்ந்திருந்தார். பிக்னெல் தமக்கு ஒரு வளர்ப்புத் தந்தை போன்றவர் எனவும், அவரைச் சந்தோசப்படுத்தாமை தனக்குப் பெரும் வேதனையளித்ததாகவும் சொன்னார். எவ்வாறாயினும், அது தனிப்பட்ட விடயமன்றி, இலட்சியம் சம்பந்தப்பட்டதாக இருந்தது. தமது நிலைமையைத் தெளிவுபடுத்தி அதிபர் பிக்னெலுக்கு ஹன்டி ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதற்கு, பிக்னெலும் 'நடந்ததை மறப்போம்' என கனிவுடன் பதில் எழுதி யிருந்தார்.[21] அத்துடன் அது விடயம் முற்றுப் பெற்றது. லைமன் குலத்துங்கம் அதன் பின் எப்போதும் தேசிய உடையையே அணிந்து வந்துள்ளார் என்பது போற்றிப் புகழக் கூடியதாகும்.

ஆகவே, சமூகமளித்திருந்த இளவயதினர் மத்தியில் முத்துக் குமாருவின் உரை நுணுக்கமாக அவர்களது உணர்வுகளைப் பிரதி பலிப்பதாக விருந்தது. அவற்றை விரிவுபடுத்தாது, தமது உரையில் முதலாளித்துவ சக்திகள் தொழிலாளி வர்க்கத்தினரை அடிமைப்படுத்தி சுரண்டுகின்ற போக்கையும் சமூக சம்பிரதாயங்களின் இடர்பாடுகள் மற்றும் அரசியல் அதிகாரத்தின் அடக்கி ஒடுக்கும் தன்மையையும் குறிப்பிட்டிருந்தார். முதியோர் ஓய்வூதியம், வீடில்லாப் பிரச்சினை, தேசியகாப்புறுதி, மற்றும் வேலையில்லாத் திண்டாட்டம், போன்ற வற்றையிட்டு மக்களின் மேம்பாடு தொடர்பாக மக்களுக்கு அறிவூட்ட வேண்டிய தேவையை வலியுறுத்தினார். உடல் உழைப்பு வடிவங் களிலும் காணப்படும் தவறான சாதி குறித்த தப்பெண்ணங்கள் இல்லாதொழிக்கப்படவேண்டிய தேவையை அவர் வலியுறுத்தினார். "மக்களுக்கு அறிவூட்டும் பெரும் பணி இளவயதினராகிய உங்கள் மீதே சுமத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு வாசலுக்கும் அறிவுத் தீபத்தை எடுத்துச் செல்லுங்கள். உங்களுக்கும் பரந்துபட்ட மக்களுக்கும் இடை யிலான வேறுபாடு, உடையிலோ, அல்லது பேச்சுமொழி வழக்கிலோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழக்கவழக்கங்களிலோ அமையாது, ஒழுக்க சீலத்திலும், பண்பாட்டிலுமாக இருக்கட்டும்" எனும் வார்த்தைகளால் இளவயதினருக்கு அவர் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

காங்கிரஸின் இறுதி அமர்வின்போது, ஹன்டி பேரின்பநாயகத்தினால் முன்மொழியப்பட்டிருந்த எத்தனையோ தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவையாவன:

1. சமமான உண்மை விசுவாசத்துடனும் மிகுந்த ஆவலுடனும் தாய் நாட்டின் நலவிருத்திக்கு உழைத்தலும், அதன் நலன்களை முன்னேற்றுவதும் அனைத்து மதங்களையும் சார்ந்த மக்களுக்கும் இயலுமானதாகும் என்பதையும் காங்கிரஸைப் பொறுத்தமட்டில், நாட்டின் பல்வேறு மத அமைப்புக்களையும் சார்ந்த எவர் ஒருவருக்கும் இடையில் வேறுபாட்டை அல்லது முன்னுரிமையைக் காண்பிக்க மாட்டாது. காங்கிரஸினால் நடத்தப்படும் பொது அல்லது குழுக் கூட்டங்களிலாயினும், அல்லது அதனால் நிகழ்த்தப்படும் எந்தப் பிரசாரங்களிலாயினும், பக்கச் சார்பான பிரச்சினை ஒன்றும் ஒரு போதுமே எழுப்பப்படலாகாது என்றொரு வாசகம் அதன் யாப்பில் இடப்படுதல் வேண்டும் என்பதையும் இக்காங்கிரஸ் ஏற்றுக் கொள்கிறது.

2. துணை அமைப்புக்களாகத் தங்களை அமைத்துக்கொள்ளும் மாணவர்களை காங்கிரஸுடன் இணைக்கும் முகமாக துணை அமைப்புக்களை ஒழுங்குபடுத்துவதற்கு ஒரு குழு நியமிக்கப் படல் வேண்டும்.

3. தற்போது நாட்டில் நிலவிவரும் சாதி வேறுபாடுகள், நாட்டின் முன்னேற்றத்துக்கே ஒரு தடையென இக்காங்கிரஸ் கருதுகின்றது. எமது மத்தியில் இருந்து தீண்டாமையெனும் சாபக்கேட்டை அகற்றுவதற்கு இயன்றவரை காங்கிரஸ் உறுப்பினர்கள் பாடுபட்டு உழைத்தல் வேண்டும்

4. தேசிய இலக்கியங்களைப் படிப்பதற்கும், விருத்தி செய்வதற்கும் குறைந்த பட்சம் வாரத்தில் மூன்று மணித்தியாலங்களையேனும் அர்ப்பணிப்பது என காங்கரஸ் உறுப்பினர்கள் உறுதி கொள் கின்றார்கள்.

5. தேசிய இலக்கியம், தேசிய கலை அல்லது தேசிய இசையின் மறுமலர்ச்சிக்கு கை கொடுத்துள்ள எவர் ஒருவருக்கும் காங்கிரஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பரிசு அல்லது பதக்கத்தை அல்லது வேறொரு வடிவத்திலான ஊக்குவிப்பினை அளித்தல் வேண்டும்.

6. பின்வரும் துறைகளான (a) விஞ்ஞானம், (b) கற்பனைக் கதைகள், (c) சமூக வரலாறு, மற்றும் வாழ்க்கை வரலாறு போன்ற தேசிய இலக்கியங்களை மேம்படுத்தும் வழிவகைகள் வகுக்கும் பொருட்டாக உறுப்பினர் ஐவரைக் கொண்ட ஒரு குழு நியமிக்கப்படல் வேண்டும்.

7. தென் இலங்கை பாடசாலைகளில் தமிழ் மொழியும், வட இலங்கை பாடசாலைகளில் சிங்கள மொழியும் கற்பித்தலை அறிமுகப்படுத்துவதற்குரிய முறையில் விரைவான நடவடிக்கைகளைக் காங்கிரஸ் எடுத்தல் வேண்டும்.

8. அனைத்து (முக்கியமாக சிங்கள மற்றும் தமிழ்) இனங்கள், மதங்கள் மற்றும் துறைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 1925 ஏப்பிரல் திங்களில் காங்கிரஸின் அமர்வுகள் இடம்பெறத்தக்கதான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி இக்காங்கிரஸின் நிறைவேற்றுக் குழு கேட்டுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

9. காங்கிரஸ் இயக்கத்தின் குறிக்கோள்களைப் பரந்துபட்ட மக்களுக்கு தெளிவுபடுத்துவதற்காகவும், மதுவிலக்கு மற்றும் கூட்டுறவுப் பழக்கங்களில் அவர்களுக்கு அறிவூட்டுவதற்காகவும், பிரசுரங்கள் அச்சிட்டு வெளியிடும் பொருட்டாக மூவரைக் கொண்ட ஒரு வெளியீட்டுக் குழு உருவாக்கப்படல் வேண்டும்.

10. இயன்றவரை உறுப்பினர் உள்ளூர் பண்டங்களையும், உள்ளூர் கைத்தொழில்களையுமே ஆதரித்தல் வேண்டும். குறிப்பாக, அவர்கள் வெளிநாட்டுச் சவர்க்காரங்கள், வாசனைப் பொருட்கள், பவுடர், மதுபானங்கள், சிகரட்டுக்களைத் தவிர்த்தல் வேண்டும்.[22]

மாணவர் காங்கிரஸ் அதன் தொடக்கத்தில் இருந்தே சமூக சீர்த்திருத்தங்கள் மீது ஒரு தீவிரமான நடைமுறையினை சிரமேற் கொண்டிருந்ததுடன், தேசிய மறுமலர்ச்சிக்கான ஒரு நிகழ்ச்சித் திட்டத்தை அதன் உறுப்பினர்கள் மத்தியில் முன்வைத்தது என்பதை மேற்படி தீர்மானங்கள் தெளிவாக வெளிப்படுத்துகின்றன. வெறுமனே தமிழ் மறுமலர்ச்சியில் மட்டும் அவர்கள் கரிசனை கொண்டிருந்தனர் என்பதற்கான எந்த அறிகுறியுமே இத் தீர்மானங்களில் காணப்படாமை போற்றுதற்குரியது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது கவனத்திற்குரியதாகும். மாறாக, இலங்கை முழுவதையும் உட்படுத்துவதானதொரு கண்ணோட்டத்தில் 'தேசியம்' எனும் வார்த்தையே மீண்டும் மீண்டும் உபயோகிக்கப்பட்டுள்ளது. ஓர் அனைத்து இலங்கை மாணவர் காங்கிரஸாக மாணவர் காங்கிரஸ் வளர்ச்சியடையும் என்ற நம்பிக்கை இருந்தது. யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்கள் மத்தியில் மாணவர் காங்கிரஸ் துடிப்பாகச் செயல்பட்டதன் காரணமாக, தீர்மானங்கள் நடைமுறைச் செயலாக்கம் பெற்ற போது, தமிழ் மொழி மற்றும் தமிழ் இலக்கியத்தின் ஒரு மறுமலர்ச்சியாக அமைந்தது. மூன்று தினங்கள் இடம்பெறும் வருடாந்த அமர்வுகளில் ஒரு தினம் முழுவவதும் தமிழ் நிகழ்ச்சிகளுக்கெனப் புறம்பாக ஒதுக் கப்பட்டிருந்தது.

தமிழ் மாணவர்களுக்குச் சிங்கள மொழியும், சிங்கள மாணவர் களுக்குத் தமிழ் மொழியும், போதிக்கப்படுதல் வேண்டும் எனும் தீர்மானம் தேசிய ஒற்றுமைக்கான அவர்களது பற்றுறுதியையே நன்கு சுட்டுகின்றது. இனவாதம், பரஸ்பர சந்தேகப் பார்வை மற்றும் பகைமை உணர்வுகள் அதிகளவு விரிசலை உருவாக்கி இருந்தது. அக்காலத்து சிங்கள, தமிழ் அரசியல் தலைவர்களை படிப்படியாக பிளவுபடுத்தி வந்த அச்சந்தர்ப்பத்தில், அனைத்து இனங்கள் மற்றும் மதங்களினதும் ஒற்றுமையையே தனது இலட்சியமாக மாணவர் காங்கிரஸ் வரித்துக் கொண்டிருந்தது.

முதலாவது தீர்மானம் மதப் பிரிவினைகளை தவிர்த்து விலக்கு கின்றது. யாழ்ப்பாணத்தில் 1920களில் தோன்றியதான இந்து - கிறிஸ்தவ போட்டா போட்டி நிறைந்த காலகட்டம் ஏறத்தாழ 2 தசாப்த காலமாக நீடித்தது. விசேடமாக புதிய பாடசாலைகளை ஆரம்பித்தல், மற்றும் தற்போதைய பாடசாலைகளை ஆதரித்தல் மீது வளர்ந்து வந்த போட்டி பூசல் நிறைந்த உணர்வுகளுக்கு 'இந்து சாதனம்' மற்றும் 'உதய தாரகையின்' பத்திகள் சான்று பகருகின்றன. இந்துக்களின் அல்லது கிறிஸ்தவர்களின் குறுகிய நிலைப்பாடுகளுக்குப் பணிவதில்லை என யாழ்ப்பாணத்தின் இளவயதினர் உறுதிபூண்டனர். பிளவு சக்தி களின் நடவடிக்கைகளை மாணவர் காங்கிரஸ் துல்லியமாக உணர்ந்து கொண்டிருந்தது என்பதுடன், இப்பிரச்சினைமீது பாரிய அக்கறையும் கொண்டிருந்தது. ஒரு பிரபல கிறிஸ்தவ நிறுவனமாகிய யாழ்ப்பாணக் கல்லூரியின் சூழலில் இருந்து ஆக்கமும், ஊக்கமும் பெற்று உதயமாகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருந்த மாணவர் காங்கிரஸ் கிறிஸ்தவ செல்வாக்குக்கு உட்பட்டிருந்ததாக சில காலகட்டங்களில் முத்திரை குத்தப்பட்டிருந்ததுண்டு. யாழ்ப்பாணக் கல்லூரியின் துணை அதிபரும், தென் இந்திய ஐக்கிய திருச்சபையின் யாழ்ப்பாணக்கழகத்தின் தலைசிறந்த பொது மகனுமாகிய ஜே.வி. செல்லையா காங்கிரஸின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். ஆகவே, அந்த அமைப்பினது மதச்சார்பின்மை குறித்து எந்த வித ஐயப்பாடுகளையும் போக்குவதற்குத் தலைவர்கள் ஆவல் கொண்டிருந்தனர். காங்கிரஸின் நிகழ்ச்சித் திட்டங்களில் நன்கு பிரபல்யம் வாய்ந்த இந்து மதத் தலைவர்கள் காங்கிரஸின் செயற்பாட்டில் பங்குபற்றி வந்தனர். இவற்றை எல்லாம் இந்துத் தீவிரவாதிகளுக்கு நிதர்சனமாகக் காண்பிக்கும் பொருட்டு 1930ஆம் ஆண்டுக்கான அமர்வுகளுக்குத் தலைமையேற்று உரை நிகழ்த்துவதற்கு நன்கு பிரசித்தி பெற்றிருந்த சைவப்புலவர் சு.சிவபாதசுந்தரம் அழைக்கப்பட்டிருந்தார்.

முதலாவது காங்கிரஸில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் அரசியல் பின்தள்ளப்பட்டுள்ளது என்னும் உணர்வுக்கு ஏதுவாக இருந்தன. தன்னாட்சி குறித்து ஒரு தீர்மானமும் அவற்றில் இருக்கவில்லை. அது எதிர்பார்க்கப்பட்டிருக்க வேண்டியதே. இந்தியாவில் பூரண சுயாட்சிக்கான போராட்டம் 1920களில் தான் உருவாக ஆரம்பித்திருந்தது. இலங்கையிலோ சுயாட்சிக்கான குரல்கள் எதுவும் ஒலிக்கவில்லை. அக்காலகட்டத்தில் அரசியல் சிந்தனையானது, இலங்கையருக்கு பொதுச் சேவையின் உயர்தர ஸ்தானங்கள் திறந்துவிடப்படல், ஒரு பல்கலைக்கழகம் நிறுவுதல், சட்டவாக்கச் சபையில் அதிகரித்த பிரதிநிதித்துவம் போன்று அப்போது நிலவிய அரசியல் கட்டமைப்புக்கு ஒத்துப்போகும் மாற்றங்களுக்கு அப்பால் சென்றிருக்கவில்லை. வாக்குரிமையும் கூட ஆங்கிலம் கற்ற நடுத்தர வர்க்கத்தினருக்கு வரையறுக்கப்பட்டதாகவே இருந்துவந்தது. இளைஞரின் அபிலாசைகளும், குறிக்கோள்களும் பெரிதும் இந்திய நிலைவரத்தின் செல்வாக்குக்கு உட்பட்டிருந்தது. ஆயின், இந்தியாவிலும் கூட, 1930 இல் தான் பூரண சுதந்திரத்தை ஆதரித்து இந்திய தேசிய காங்கிரஸ் தீர்மானம் நிறைவேற்றியிருந்தது.

நன்கு புலப்படாததாகக் காணப்பட்ட சுயாட்சிக்கான அபிலாசை தொடர்பாக தெளிவான பார்வையும், தட்டிக் கேட்கும் தன்மையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது இருந்திருக்கவில்லையாயினும், மாணவர் காங்கிரஸின் 1931ஆம் ஆண்டிற்கான அமர்வுகளின் போது, பூரண சுதந்திரத்திற்கான கோரிக்கையாக அது வளர்ச்சியடைந்திருந்தது. அங்குரார்ப்பண அமர்வுகளில் சமூக சீர்திருத்தம் மற்றும் தேசிய மொழிகளின் மறுமலர்ச்சி போன்ற, உடனடியாக அடையப்பெறத்தக்க நடைமுறை சார்ந்த பணிகளில் கவனம் செலுத்தப்பட்டது. இச்சந்தர்ப்பத்தில் மாணவர் காங்கிரஸின் வேகம் சாதி குறித்த அதன் மனப்பாங்கில் தங்கியிருந்தது. தீண்டாமையை அகற்றும் தீர்மானம் முன்மொழியப்பட்டதும், தாழ்த்தப் பட்ட சாதியினர் என அழைக்கப்படுவோர் இல்லங்களில் உணவு அருந்தும்படி சமூகமாகயிருந்த ஒவ்வொருவருக்கும் வி. முத்துக்குமாரு சவால் விடுத்திருந்தார். சாதித்தடைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், அங்கு சமூகமாகயிருந்த இளவயதினர் சிலர் வட்டுக் கோட்டையில் சம்பந்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்தவர்களான பாடசாலை ஊழியர்களது வீடுகளுக்குச் சென்று அவர்களுடன் சிற்றுண்டி மற்றும் தேநீர் அருந்திய சமிக்ஞைகளை கூட்டத்துக்குத் தலைமை வகித்த தலைவர் நன்கு அறிந்திருந்தார். எனவே, அங்கு எழுப்பப்பட்ட வினாக்களுக்கு பதிலுரைக்கும்படி அவைத் தலைவர் ஜே.வி. செ ல்லையா ஹன்டி பேரின்பநாயகத்திடம் கேட்டுக் கொண்டார். தாமும் தமது நண்பர்களும் அவ்வீடுகளில் தேநீர் அருந்தியிருந்தமையை ஹன்டி 'ஆம்' என ஊர்ஜிதப்படுத்தியபோது அதிசயித்த முத்துக்குமாரு, அக்கணம்வரை யாழ்ப்பாணத்தில் அத்தகைய தீவிரம் கொண்டவர்கள் இருப்பதைத் தான் அறிந்திருக்கவில்லை என ஒத்துக்கொண்டார். அந்நாட்களில் பிரபல நகைச்சுவையாளராகப் பெயர் போனவராகிய எஸ். சிவப்பிரகாசம் உரையாடலில் குறுக்கிட்டு, ஹன்டியும் அவரது நண்பர்களும் அருந்தியது தேநீரா? அன்றேல் யாழ்ப்பாணத்தின் பிரசித்தி பெற்ற பனங்கள்ளா? என்பதை அறிந்து கொள்ள விரும்பு வதாகக் கூறினார்.[23]

யாழ்ப்பாணத்து மாணவர்களும், இளவயதினரும் தங்களை ஒரு காங்கிரஸாக ஒழுங்கமைத்துக்கொண்டதே அந்நாட்களில் துணிகரமான செயலாக இருந்தது. பழமை பேணும் யாழ்ப்பாணத்தில் முதியோரைப் பணிதலும், மரியாதை செலுத்துவதும் எழுதப்படாத சட்டங்களுள் ஒன்றாக கண்டிப்பாக அனுசரிக்கப்பட்டு வந்தது. சாதி அடிப்படையிலான நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் 'தீண்டாமையின் சாபக்கேட்டை'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9

## சர்ச்சை

யாழ்ப்பாணத்தில் இளைஞர் காங்கிரஸின் வருடாந்த அமர்வுகளின் போது ஜவர்லால் நேருவை வரவேற்பதற்காக டபிள்யூ. துரைசுவாமி தலைவராகவும், என். குமாரசாமி மற்றும் ஈ.ரி. ஹிச்கொக் செயலாளர் களாகவும் ஆர்.ஆர். நல்லையா மற்றும் எஸ். மச்சாடோ பொருளாளர் களாகவும் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டது. நேரு 'இந்தியாவின் முடிசூடா மன்னன்' என அழைக்கப்பட்டவர். அவருக்கு மே மாதம் மூன்றாம் வாரத்தில் ஒரு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. பகிஷ்கரிப்பிற்கு சற்று பின்னரே அவருடைய விஜயம் இடம்பெற்றிருந் ததால் அந்த நடவடிக்கை தொடர்பாக நேரு என்ன எண்ணியிருப்பார் என்பதை அறிவதற்கு ஓர் உணர்வலையும் ஆவலும் காணப்பட்டது. நேரு நிகழ்த்திய நீண்டதொரு உரையில் தாம் இளைஞர் காங்கிரஸினால் சற்று கவரப்பட்டிருப்பதாக உணர்வதைத் தெரிவித்தார். யாழ்ப்பாணம் தான் தன்னை அழைத்துள்ளதால், யாழ்ப்பாணம் தான் எல்லாவற்றிலும் திருப்தியானதும் கவர்ச்சி கொண்ட பகுதி என எண்ணியே யாழ்ப் பாணத்துக்கு இறுதியாக விஜயத்தை மேற்கொண்டுள்ளதாகக் குறிப் பிட்டார்.

இளைஞர்கள் செயல் வீரர்களாய் இருந்தால் ஒழிய அவர்கள் வெறுமனே பேசிக் கொண்டிருப்பது பிரயோசனம் அற்றதாகிவிடும் என்று எச்சரித்திருந்தார். யாழ்ப்பாணத்தில் சில தலைவர்கள் தொழிலாளர் களுக்கு எதிராகவும் சர்வஜன வாக்குரிமைக்கு எதிராகவும், உள்ளனர் என நேருவிடம் கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்திருந்தன. எனவே, அவர் யாழ்ப்பாணத்தில் தொழிலாளர்கள் மீது குறிப்பாக இந்தியத் தொழிலாளர்களிடம் போதிய கவனம் செலுத்தப்படவில்லை என்பதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகற்றுவதற்கு தனது உறுப்பினர்களை அர்ப்பணிப்பதற்கு மாணவர் காங்கிஸுசுக்கு இயலுமாயிருந்தது. காங்கிரஸ் தனக்கென தெரிவு செய்திருந்த தீவிரம் நிறைந்த திசைவழியையே அது குறிகாட்டியது. யாழ்ப்பாணத்து இளைஞரின் மனங்களை காந்தீயம் எந்த அளவிற்கு ஆட்கொண்டிருந்தது என்பதற்கும் அது சான்று பகர்ந்தது.

யாழ்ப்பாணத்திலும், தலைநகர் கொழும்பிலும் மாணவர் காங்கிரஸுசுக்கு சாதகமான பத்திரிகை அறிக்கைகள் கிடைத்திருந்தன. வடபகுதி மாணவர்கள் காங்கிரஸாக ஒன்று கூடியபொழுது, "மாணவர் வாழ்வில் ஒரு நம்பிக்கை நிறைந்த வளர்ச்சியோடு, உலகத்தை நல் வழிப்படுத்துவற்கான அவர்களது திடசங்கற்பத்தினை வெளிப்படுத்தி யுள்ளார்கள்" என அதனை ஒரு பொருட்டாக எடுத்துக் கூறியிருந்தது. 'த சிலோன் டெயிலி நியூஸ்' பத்திரிகை அரசியல் சிலுசிலுப்பில் மிதமிஞ்சி இன்பம் அனுபவிப்பதற்கு எதிராக எச்சரிக்கை விடுத் திருந்தது. விமர்சனங்களுக்கு அப்பத்திரிகை, 'ஒக்ஸ்பர்ட்' (Oxford), மற்றும் 'கேம்பிறிஜ்' (Cambridge) ஒன்றிய சங்கங்கள் வழங்கிய முன் உதாரணத்தையும் இங்கிலாந்தின் எதிர்கால பிரதமர்களை உருவாக்கு வதில் அவை ஆற்றியுள்ள வகிபாகத்தையும் ஞாபகப்படுத்தியது, "அவ்வாறாயின், அவர்களது மாணவப்பருவத்தில் விளையாடுவதற்கு மிகவும் பொல்லாப்பான ஒரு விடயமாக அரசியல் இருந்திருக்காவிட்டால், இந்த நாட்டில் அரசுப் பொறுப்புக்களுக்குத் தோள் கொடுப்பதற்குப் பயிற்றப்பட்டு வருபவர்களாக நம்பப்படுபவர்களுக்கும் அதிகத் தீங்கை அது இழைக்கமுடியாது" எனவும் 'டெயிலிநியூஸ்' தெரி வித்திருந்தது. ஜே.வி. செல்லையாவின் தலைமை உரையையும் குறிப்பாக அவர்களது முதியோர் அவர்களுக்கு வகுத்துத்தந்துள்ள பாதையில் அடிமைத்தனமாகப் பின்தொடராது, தாமாகவே தைரி யத்துடன் தமது பாதையை வகுத்துக்கொண்டு முன்னேறும்படி இள வயதினருக்கு அவர் விடுத்திருந்த அறைகூவலையும் 'டெயிலி நியுஸ்'பாராட்டியிருந்தது.[24]

யாழ்ப்பாணத்தின் வார இதழ்களான 'உதயதாரகை' (The Morning Star), 'இந்து சாதனம்' (Hindu Organ) பத்திரிகைகளும், 'சிலோன் பேற்றியற்' (The Ceylon Patriot) பத்திரிகையும் அவற்றின் பத்திகளில் காங்கிஸின் அமர்வுகள் குறித்து விரிவாக செய்தி வெளியிட்டிருந்ததுடன் இளைஞர்களது முயற்சிகளுக்கு வரவேற்பும் தெரிவித்திருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும், 'மோனிங்ஸ்ரார்' மற்றும் 'ஹிந்து சாதனம்' (The Hindu Organ) இதழ்கள் இரண்டும் எச்சரிக்கை ஒன்றினை வெளியிட்டிருந்தன. அளவுக்கு அதிகமாக இளைஞர்கள் எத்தனிக்கப்படாது என்று அந்த அமர்வுகள் ஆரம்பமாவதற்கு முன்னரே 'Hindu Organ' எச்சரித்திருந்தது.

> "ஆர்வத்துக்கோ அன்றேல் நேர்மைக்கோ அவர்கள் குறைபாடுடையவர்கள் அல்ல என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். ஆயின், தொடக்கத்தில் மிகவும் பேராசையான நிகழ்ச்சித் திட்டம் அவர்களது சக்திகளைச் சிதறடித்து விரயமாக்கிவிடக்கூடும் என்பதையே நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.' 'அவர்களது பணியில் முதியவர்கள் சிலரைத் தம்முடன் அவர்கள் இணைத்துக் கொள்ளுவது அவர்களது சேவை மனப்பான்மைக்கு சிறந்த சான்றாக அமையும்' ஓட்டப் போட்டி இளைஞர்களுக்கே உரியது என்பது உண்மையாயினும் எப்பொழுதும் முதியவர்களே பரிசில்களை அளிப்பவர்கள்"

என 'Hindu Organ' மேலும் குறிப்பிட்டிருந்தது.[25]

வெறுமனே அவை வெளிநாடுகளில் இருந்து வருபவை என்பதன் காரணத்தினால் வெளிநாட்டுப் பொருட்கள் அனைத்தையும் நிராகரிப்பதன் ஆபத்தையிட்டு 'Morning Star' (உதய தாரகை) விமர்சித்திருந்தது. ஒரு மெய்யான தேசியவாதி, நமது மூதாதையரின் சாதனைகளுடன் திருப்தியடைந்தவராக பழம் பெருமைகளையே பேசிப்பேசிக் கொண்டிரார் என்று 'Morning Star' ஆசிரியர் தலையங்கம் தெரிவித்திருந்தது. பண்டைய எழுத்தாளரது புகழை எல்லைமீறிப் புகழ்ந்தும், தனது பங்களிப்பைச் செய்தவர்க்குத் தற்போதைய தலைமுறை என்ன செய்தல்வேண்டும் என ஒன்றுமே சொல்லாதும் அந்த அமர்வுகளின் போது தமிழ் அறிஞர்களால் நிகழ்த்தப்பட்டிருந்த உரைகளை அது கண்டனம் செய்திருந்தது.[26]

யாழ்ப்பாணத்தில் மாணவர் காங்கிரஸ் உருவாக்கப்பட்டமை குறித்து இந்தியப் பத்திரிகை 'The Swarajya' ('சுயராஜ்ஜியம்') ஒரு கருத்து வெளியிட்டு இருந்தமை நன்றாக கவனத்தில் கொள்ள வேண்டியதாகும். இங்கு ஏற்கனவே குறிப்பிடப்பட்டிருப்பதை நோக்கின், காங்கிரஸின் குறிக்கோள்கள் - அபிலாசைகள் குறித்து, ஒரு திரிபுபடுத்தப்பட்ட வாசகமே அப்பத்திரிகைக்குக் கிடைத்திருத்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் போல் தோன்றுகின்றது. அதில் குறிப்பிட்டிருந்ததாவது - பிரதானமாக தமிழர்களே மாணவர்களாயுள்ளனர். மாணவர்களதும் அன்றைய பேச்சாளர்களதும் உரைகள் முறையானவையாக இருப்பினும் கூட, தமிழ் கலாசாரம் மீது கொடுக்கப்பட்டுள்ள முக்கியத்துவமானது எங்களைச் சற்று அச்சம் கொள்ள வைக்கின்றது. எந்த ஒரு தேசிய இனமும் அதன் வேர்களில் இருந்து விலகி நிச்சயமாக தழைக்க வியாலாது. ஆயின், இலங்கை அரசியலில் காணப்படும் யதார்த்தமான பிரச்சினை - இரு இனங்கள் மத்தியிலும் விரிவடைந்துவரும் வேறு பாடுகள் என்பதாகும். மேலும், தனி ஒரு இனத்தின் கலாசாரத்தை மட்டுமே ஆழ்ந்து கற்பது நம்பிக்கையீனம் மற்றும் ஒற்றுமையின்மை யின் போக்குகளை ஆழமாக்குதல் கூடும்.[27] சமகாலத்திய கொழும்பு பத்திரிகையிலிருந்து பெறப்பட்ட ஒரு செய்தியை ‘சுவராஜ்ஜியம்’ ஆதாரமாகக் கொண்டதே ‘சுவராஜ்ஜியத்தின்’ விமர்சனமாகும். தமிழ் மக்களின் குறிக்கோள்களை முன்னெடுக்கும் ஓர் இயக்கமாகவே மாணவர் காங்கிரஸ் அதன் தொடக்க காலத்தில் இருந்து தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டு வந்துள்ளது. ஆனால், அது உண்மைக்குப் புறம்பானது என்பது நன்றாக கவனத்திற் கொள்ள வேண்டியதாகும். ‘யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ்’ என பின்னர் பெயர் மாற்றம் செய்யப்பட்ட மாணவர் காங்கிரஸ் குறித்து திரிபுபடுத்தப்பட்ட வியாக் கியானங்கள், குறிப்பாக 1931ஆம் ஆண்டின் தேர்தல் பகிஷ்கரிப்பின் பின், சர்வசாதாரணமாகி விட்டன. இரு இனங்களின் மத்தியில் வளர்ந்து வந்த வேறுபாடுகளே இலங்கையின் அரசியல் பரப்பினை பீடித்த பிணியென ‘சுயராஜ்ஜியம்’ சரியாக இனங்கண்டிருந்தது. ஆயினும், அந்த வேறுபாடுகளுக்குச் சவால் விடுவதற்காக வடக்கில் தழைத்து வரும் இயக்கமே மாணவர் காங்கிரஸ் என்பதையும், அதன் தலைவர்கள் அநேகர் இறுதிவரை பற்றுறுதியாகவும் விசுவாசமாகவும் இருந்தனர் என்பதனையும் கவனத்தில் கொள்ளத் தவறியிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3

# 1925ஆம் - 1926ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த அமர்வுகள்

மாணவர் காங்கிரஸின் வளர்ச்சியில் 1925இல் இருந்து 1931 வரையான காலகட்டம் குறிப்பிடத்தக்கதாகும். அரசியல் ரீதியில் மாணவர்களுக்கு அறிவூட்டுவதிலும், பொது அபிப்பிராயத்தை யாழ்ப்பாணத்தில் உருவாக்குவதிலும் ஓர் அதிமுக்கியமான பணியினை காங்கிரஸ் ஆற்றியிருந்தது. இந்திய தேசிய இயக்கத்தில் இருந்தே அதனது ஊக்குவிப்பைப் பெற்றுக் கொண்டிருந்த காங்கிரஸின் அபிலாசைகள் உணர்ச்சி பூர்வமான தேசியவாதமாகவே இருந்துவந்தது. 1931ஆம் வருடத்திய தேர்தல் பகிஷ்கரிப்பானது எடுத்துக் காட்டியது போல, ஆறுவருட குறுகிய காலத்துக்குள்ளேயே குறிப்பிடத்தக்களவு பலமான சக்தியாக மாணவர் காங்கிரஸ் மிளிர்ந்து விட்டது. பிரசித்திவாய்ந்த பிரமுகர்கள் பலர் இக்கால கட்டத்தில் காங்கிரஸின் வருடாந்த அமர்வு களுக்கு வருகை புரிந்து கௌரவித்துள்ளனர் அல்லது இளைஞர் களுக்கு உரை நிகழ்த்தி இருந்தனர். மகாத்மா காந்திஜி, ஜவர்ஹலால் நேரு போன்ற அக்காலகட்டத்தின் இந்திய முன்னணித் தலைவர்கள் இவர்களுள் அடங்குவர். இந்தியாவில் இருந்து சத்தியமூர்த்தி, கலியாணசுந்தரர், கமலாதேவி சட்டோபாத்தியாயா ஆகியோர் அடங் கலாக வேறு பிரமுகர்களும் காங்கிரஸின் வருடாந்த அமர்வுகளில் உரை நிகழ்த்தியுள்ளனர். சிங்களவர்களுள், நாட்டின் எதிர்கால சிங்கள அரசியல் தலைவர்கள் அடங்கலாக பலரும் உரையாற்றினர். தனது மேடைகளில் அத்தகைய பிரசித்தி பெற்றவர்கள் தோன்றுவதற்கு ஆவன செய்ய வல்ல இளைஞர் அமைப்பு வெகு இலகுவாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரியாதையைச் சம்பாதித்திருந்தது; சில சந்தர்ப்பங்களில் முதியோரிடம் பொறாமையையும் வருவித்திருந்தது.

அதன் அங்குரார்ப்பண அமர்வுகளின்போது ஏறத்தாழ முன்னூறு பேர் வருகை தந்திருந்தனராயினும், 1931இல் அதன் உச்சக்கட்ட நடவடிக்கைகளைக் காங்கிரஸ் எட்டியபோது பங்கு பற்றியவர்களது எண்ணிக்கை ஏறத்தாழ ஆயிரமாக அதிகரித்தது. ஆக, வருடாந்த அமர்வுகள் மேன்மேலும் பிரபல்யம் அடைந்து வந்தன. யாழ்ப்பாணத்தில் பிரபல பாடசாலைகளின் அநேக இளைஞர்கள் காங்கிரஸினது செல்வாக்கு வரம்பிற்குள் வந்திருந்தனர். மூன்று தினங்கள் இடம் பெற்ற வருடாந்த அமர்வுகள், காங்கிரஸின் வரலாற்றில் அதன் மைய நிகழ்வாக விளங்கியதுடன், யாழ்ப்பாணத்தில் மிகவும் பிடித்தமானதொரு நிகழ்வாகவும் திகழ்ந்தது.

மாணவர் காங்கிரஸின் இரண்டாவது அமர்வுகள் கீரிமலை, வைத்திலிங்கம் மடத்தில் 1925 ஏப்பிரல் 27 முதல் 29 வரை இடம் பெற்றிருந்தன. யாழ்ப்பாணத்தில் விடுமுறைகளிக்கும் இடமாகப் பிரசித்தி பெற்றிருந்த கீரிமலையிலேயே அடுத்து வந்த பல அமர்வுகள் நடத்தப்பட்டன. அங்கு கூடிய இளைஞர் 3 நாட்கள் தங்கி நாட்டின் அக்காலகட்டத்திற்கான அதி முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளை விவாதிக்கலாயினர். ஓரளவுக்கு விடுமுறை சூழ்நிலையும் ஆரவாரம் மிகுந்த உல்லாசமும் அங்கு நிலவிற்று. ஆயினும், வெளிப்படைக்கு வெறுமனே உல்லாசமாகக் காணப்பட்டதாயினும் அதன் அடியில் பாரதூரம்கொண்ட குறிக்கோள் இருந்தது. அமர்வுகளுக்கான மூன்று நாட்களும் ஐந்து அல்லது ஆறு தொடர் கூட்டங்களாக வகுக்கப் பட்டிருந்தன. முதல் தொடர் கூட்டமானது காங்கிரஸின் முக்கிய உறுப்பினர் ஒருவரின் வரவேற்புரையை உள்ளடக்குவதாக இருந்தது. தமது வாழ்நாளில் ஒருபோதுமே மறவாத ஒரு முக்கிய சம்பவமாக அந்த உரையை நிகழ்த்துவதற்குத் தெரிவு செய்யப்பட்டவர் யாராக இருந்த போதும் அவருக்கு வழங்கப்பட்ட ஒரு தனித்துவமான கௌவரமாகவே அது கருதப்பட்டது. வரவேற்புரையானது வெறுமனே ஒரு சம்பிரதாயமாக மட்டும் இருக்கவில்லை. பத்தோ பன்னிரு பக்கங்கள் நீண்டதாகவும் அநேகமாக அச்சிடப்பட்டதாகவும் அமைந்த அந்த உரை எதிர்வரும் ஆண்டில் காங்கிரஸ் எதிர்கொள்ளும் பணிகளை விவரிப்பதாகவும் இருந்தது. அதன் பின்னர் செயலாளரது அறிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்வைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அக் காலத்தில் பிரபல்யம் வாய்ந்த ஒருவரினால் தலைமை உரை நிகழ்த்தப்பட்டது. மரபுப்படி யாகத் தலைவருக்கான நன்றியுரையுடன் முதல் கூட்டத் தொடர் முற்றுப்பெற்றது. இரண்டு தொடக்கம் ஐந்து வரையான கூட்டத் தொடர்கள் பொருளாதாரம் மற்றும் சமூக விடயங்கள், தேசிய இலக்கிய மறுமலர்ச்சி, தேசிய கலையும் இசையும், கல்வி மற்றும் அரசியல் மீதான விரிவுரைகளுக்கும் உரையாடல்களுக்கும் அர்ப்பணிக்கப் பட்டிருந்தன. அநேகமாக அரசியலுக்கான கூட்டத் தொடர் இறுதிக் கூட்டத் தொடருக்கு முன் நிகழ, தீர்மானங்கள் முன்மொழியப்படும் இறுதிக் கூட்டத்தொடர் அதனை அடுத்தே நிகழ்ந்திருந்தது. உத்தி யோகத்தர் தெரிவு, முதல் நாள் நிகழ்வாக இடம்பெற்றது. இரண்டாம் நாள் பெரும்பாலும் தேசிய இலக்கியத்திற்கும், கலாசாரத்திற்கும் அர்ப்பணிக்கப்பட்டிருந்ததுடன், புகழ் பூத்த தமிழ் அறிஞர்கள் பங்கு கொண்டு நடவடிக்கைகள் முழுவதுமே தமிழ் மொழியிலேயே நிகழ்ந் திருந்தன. கூட்டத் தொடர்களுக்கு இடையேயும், பிந்திய மாலை வேளைகளிலும் இசை விருந்துகள் நிகழ்ந்தன. இடைவேளைகளின் போது, உரையாடப் பெற்ற விடயங்கள் மீது விதிமுறைகளுக்கு அப்பாலான உரையாடல்கள் நிச்சயமாக இடம்பெறத்தான் செய்தன.

யாழ்ப்பாண இளைஞர்களை அறிவூட்டி அரசியல் உணர்வுடைய வர்களாக ஆக்குவதே வருடாந்த அமர்வுகளின் ஒட்டுமொத்தமான குறிக்கோளாயிருந்தது. நாட்டின் பொருளாதார, சமூக, பண்பாடு, கல்வி மற்றும் அரசியல் வாழ்வின் தேசிய மறுமலர்ச்சிகளே பிரதான விவாத விடயமாயிருந்தது. ஐக்கிய இலங்கை இலட்சியம் திரும்பத் திரும்ப வற்புறுத்தப்பட்டது. தமிழ் மொழி மற்றும் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

எஸ்.ஜே. குணசேகரம் நிகழ்த்திய வரவேற்புரையுடன் இரண்டாம் வருட அமர்வுகள் ஆரம்பமாகின. அதன் பின்னர் தலைமையேற்கும் படி பீ.டி.எஸ். குலரத்தினாவின் பெயரை வைபவ ரீதியாக (ஓறேற்றர்) சீ. சுப்பிரமணியம் முன்மொழிந்தார். ஒரு மணி நேரத்துக்கு மேற்பட நீடித்த தமது உரையினால் நோக்குநிறைந்த, உணர்வுமிக்க இளைஞர் களை குலரத்ன அமைதியில் ஆழ்த்தி பெரிதும் கவர்ந்து கொண்டார் என அறிவிக்கப்பட்டிருந்தது. (1) தேசிய கலை, தேசிய இலக்கியம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய இசை, (2) இலங்கையை பொருளாதாரத்தில் தற்சார்புடையதாக விடுதலை பெறச்செய்தல், (3) குறிப்பாக தேசிய சேவைக்கு இள வயதினரைப் பயிற்றுவித்தலுடன்,[28] ஒற்றுமைப்பட்ட இலங்கைத் தேசத்தை அடையப்பெறுவதற்கு உழைத்தல், எனும் காங்கிரஸின் குறிக்கோள்களை அழுத்தி வலியுறுத்தியிருந்தார் குலரத்தின. இம் மூன்று குறிக்கோள்களும் காரியாம்சத்தில் காங்கிரஸின் கோட்பாடாகவே பரிணமித்திருந்தமையால், இந்த அமர்வுகளில் பங்குபற்றும் எவரும் இவற்றினை சிரமேற்கொள்ள வேண்டும். தீவு அடங்கலுக்குமான ஒரு தேசியத்துக்கு குலரத்தின பற்றுக் கொண்டிருந்த காரணத்தினால் அக்கால கட்டத்தில் அவர் யாழ்ப்பாண மக்களால் மிகவும் மதித்துப் போற்றப்பட்டு வந்தார். 'Hindu Organ' பின்வருமாறு விவரித்திருந் தவாறு,

> பொது அபிப்பிராயத்தைப் பொருட்படுத்தாமல் மனிதன் உடை களைத் தயாரிப்பதில்லை. மாறாக, மனிதனே உடைகளைத் தயாரிப்பவன் என்பதைப் பலத்த எதிர்ப்புகளின் மத்தியில் அவர் எண்பித்திருந்தவர். இங்கிலாந்தில் இருந்து திரும்பி அவ்வாறு துணிச்சலை வெளிப்படுத்திய முதல் இலங்கையராக யாழ்ப்பாணம் அவரை வரவேற்றிருந்தது.[29]

யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கை முறையால் பெரிதும் கவரப் பட்டவராக குலரத்தின காணப்பட்டார். எமது தென் இலங்கைச் சகோதரர்களுக்கு யாழ்ப்பாணம் அளிக்கக்கூடிய ஒரு பெரும் கொடை யாழ்ப்பாணத் தமிழர்களின் மிகவும் எளிமையான வாழ்க்கை முறைதான் என்ற கருத்தை அவர் வெளிப்படுத்தியிருந்தார். ஒரு காலத்தில் இந்தியாவின் கிறிஸ்தவ மதப் பிரசார ஊழியராக இருந்தவரான ஈ.சீ.டீவிக் சிறிது காலத்துக்கு முன்பாக 'யாழ்ப்பாணத்தில் மனதில் பதிந்த சில நினைவுகள்' குறித்து எழுதுகையில்

> நீண்ட காற்சட்டைகள் அணியாத சில மக்கள் உணவு உட்கொள்வதற்கு கண்ணியமான கீழைத்தேய பாங்கில் மனமுவந்து தரையில் அமர் வதற்குத் தயாராக இருக்கக் காண்பது உவகையளிக்கும் ஒரு விடய மாகும். சில விடயங்களைப் பொறுத்து, இலங்கையில் ஏனைய எந்த இடங்களை விட யாழ்ப்பாணத்தில் கூடுதலான மனநிறைவை நான் அனுபவித்தேன். இந்தியாவில் பழைய நாட்களில் நிலவிய தற்கு ஒத்தாகவே அது இருந்தது......... உலகப் பிரச்சினைகளிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> தமது நாட்டினது எதிர்காலம் குறித்தும் உணர்வுமிகுந்த அக்கறை செலுத்திவரும் ஒரு மிகப்பெரிய இளைஞர் குழுவும் ஈடுபட்டிருப்பதே மனதில் பதிந்துள்ள எனது நினைவுகளாகும்[30]

என அவர் தொடர்ந்தும் எழுதியுள்ளார். வாழ்க்கை முறையின் இந்த எளிமையும், யாழ்ப்பாணத்தின் சொந்த மரபுகளுக்கும் பொருந்த ஒத்துப்போகும் பாங்கும், நாட்டை நேசிப்பதும் இளைஞர் காங்கிரஸ் தலைமுறையினரின் குணாம்சங்களாகத் தொடர்ந்தும் இருந்து வந்தது. மேட்டுக் குடியினரின் ஆங்கிலக் கல்வியாலும் நடுத்தரவர்க்கத்து உத்தியோகங்களாலும் அதனை ஒருபோதுமே மங்கவைக்க இயலவில்லை.

நிகழ்த்தப்பட்டிருந்த விரிவுரைகளது விவாதவிடயங்கள், உரை நிகழ்த்த அழைக்கப்பட்டிருந்த ஆட்கள் மற்றும் பொதுப்படையான நிகழ்ச்சித்திட்டம் ஆகியவையே எதிர்வரும் ஆண்டுகளுக்கான மாணவர் காங்கிரஸின் நடவடிக்கைகளின் தொனியையும் போக்கையும் நிர்ணயித்திருந்தன. உரையாடலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட விடயங்கள் அக்காலத்து இளைஞர்களை உந்திய இலட்சியங்கள் குறித்த ஓர் ஆழ்ந்த நுண்ணறிவைத் தருகின்றது. ஏற்கனவே குறிப்பிடப்பட்டிருந்தது போல முழுமையான அல்லது தர்க்கரீதியிலான எண்ணக் கருக்கள் அங்கு இருந்திருக்கவில்லை. ஆயினும், நாட்டினது பொருளாதார, சமூக, பண்பாட்டு வாழ்வில் வெளிநாட்டு ஆதிக்கத்தில் இருந்து விடுதலைக்கும், அவர்களது தேசிய வாழ்வில் புத்தெழுச்சிக்கும் இட்டுச்செல்லும் ஒரு நிகழ்ச்சித்திட்டத்தை அறிவுபூர்வமாகத் தீட்டுவதற்கு இளைஞர்கள் தேடியிருந்தார்கள் என்பதில் அங்கு ஓர் ஐயப்பாடும் இருக்கவில்லை.

அமர்வுகளின் போது பொருளாதாரப் பிரச்சினைகள் தொடர்பான 'உணவு உற்பத்தி மற்றும் வேலையின்மை' விடயம் குறித்து வி. முத்துக்குமாரு உரையாற்றினார். வன்னியில் குடியேற்றங்கள் செய்யப்படுதலையும் இளைஞர்கள் கமத்தொழிலில் ஈடுபடவேண்டும் என்பதையும் அவர் விதந்துரைத்தார். 'எமது கைத்தொழில் தேவைகள்' குறித்த ஓர் உரையை வி. தில்லைநாதன் நிகழ்த்தியிருந்தார். இரண்டாம் நாளின் இரண்டாம் கூட்டத் தொடரில் 'தேசிய இலக்கியத்தின் மறுமலர்ச்சி' குறித்த ஓர் உரையாடல் இடம் பெற்றது. தமிழில் நடைபெற்றிருந்த அந்த உரையாடலுக்கு சுவாமி விபுலானந்த அடிகளார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமை ஏற்று இருந்தார். 'தமிழ் மொழியில் ஊடகத் துறை' எனும் தலைப்பில் ரி.பீ. மாசிலாமணியும் 'தமிழ் மொழிக்கு அரசு என்ன செய்தல் கூடும்' எனும் தலைப்பில் கே. ஐயாத்துரையும் பேசினர். அடுத்து, கலந்துரையாடலில் பங்குபற்றியிருந்த நவநீத கிருஷ்ண பாரதியும், வி. முத்துக்குமாருவும் உரையாற்றினர். பாடசாலைகளில் போதனாமொழியாக தேசிய மொழியை வைத்திருக்க வேண்டிய தேவையைத் தமது உரையின் போது சுவாமி விபுலானந்த அடிகளார் வலியுறுத்தியிருந்தார். சாதிப் பிரச்சினையையும் தமது உரையில் தொட்டிருந்த அடிகளார், "இந்து சமயம் தீண்டாமைக்கு ஒருபோதுமே உடந்தையாக இருந்ததில்லை என்றும் வேதங்கள், சாத்திரங்களின் ஆதாரத்துடன் உறுதியாகப் பேசமுடியும்" எனவும் கூறியிருந்தார்.[31]

மூன்றாம் நாள் இடம் பெற்ற காங்கிரஸின் இறுதிக் கூட்டத்தொடர் அரசியல் மற்றும் கல்வி குறித்த விடயங்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. 'உயர்கல்வி' மீதான ஒரு விரிவுரையை ஏ. குமாரசாமி நிகழ்த்தியதோடு, 'சிங்களவர் - தமிழர் ஒற்றுமை' மீது ஏ. எம். கே. குமாரசாமி உரையாற்றியிருந்தார். தீண்டாமை ஒழிப்பு, சிங்களவர்களும் தமிழர்களும் ஒருவரின் மொழி மற்றும் பண்பாட்டை மற்றவர் படிப்பது விரும்பத்தக்கது, தேசிய உடை அணிதலைக் கைக்கொள்ளுமாறு தேச மக்களுக்கு ஓர் அழைப்பு ஆகிய இம் மூன்றும் உள்ளடக்கும் தீர்மானங்கள் இக் கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட்டன. இரண்டாவது வருடாந்த அமர்வுகளின் போது தெரிவாகிய உத்தியோகத்தர்கள்: இணைச் செயலாளர்கள் எம். சிதம்பரநாதன் மற்றும் (ஒறேற்றர்) சி. சுப்பிரமணியம், பொருளாளர் வி. தில்லைநாதன், அத்தோடு 15 பேர் கொண்ட நிறைவேற்றுக்குழுவு. மாணவர் காங்கிரஸின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட முதல் சிங்களவராக பீ.டி.எஸ். குலரத்தினா விளங்கினார். இதன் மூலம், வெறுமனே யாழ்ப்பாண இளைஞர்களது இயக்கமாக நீடித்திராது ஓர் அகில இலங்கை இயக்கமாக மாணவர் காங்கிரஸ் வளர்ச்சி பெற வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டிருந்தமை நிலைநாட்டப்பட்டது. பொது மக்களின் மரியாதைக்குரியவர்களாகப் போற்றப்பட்டு வந்த பெரியார்கள் பங்குபற்றியமை மாணவர் காங்கிரஸ் பெற்ற வெற்றியாகும். பொருளாதார விடயங்களில் அபிப்பிராயங்கள் சொல்வதற்குத் தராதரம் உடையவர்களாக மேன்மையான எதிர்காலத்தைத் தோற்றுவிக்கக்கூடிய தேசிய, சமூகப் பணியாளர்களைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சாளர்களாகத் தெரிந்தெடுத்ததற்காக 'Hindu Organ' வானளாவப் புகழ்ந்தது. ஓரளவு தரிசனமும் உறுதியும் கொண்ட ஓர் இளைஞனாக வி. முத்துக்குமாரு கருதப்பட்டிருந்தார். அதேவேளை உலக இளைஞர் இயக்கங்களுடன் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட ஒருவராக ஏ.எம்.கே. குமாரசாமி விளங்கினார். அந்த ஆசிரியர் தலையங்கம் சுவாமி விபுலானந்த அடிகள் பற்றிக் கூறியதாவது: "எம் முன்பாக உள்ள இலட்சியபுருஷராக அவர் விளங்குகின்றார். எளிய வாழ்வு மற்றும் உயர்ந்த சிந்தனையின் இருப்பிடமாகவே அவர் உள்ளார். அவர் பழமையில் புதியதை நிர்மாணிக்கும் கிழக்கின் தூதுவர் ஆவர். அடிகளாரிடம் இருந்து எமது இளைஞர்கள் அறிவுறுத்தலை மட்டு மல்லாது ஆத்மீக ஊக்குவிப்பினையும் பெறுவர்."

காங்கிரஸின் வருடாந்த அமர்வுகளில் காணப்பட்ட பொதுப் படையான தொனிப்பொருளையிட்டு 'Hindu Organ' குறிப்பிட்ட தாவது:

> எமது நாட்டின் இளைஞர் மத்தியில் ஒரு பெரும் விழிப்புணர்வினை அது ஏற்படுத்தப்போவதாக நாம் நிச்சயமாக நம்ப இடமுண்டு. நடவடிக்கைகளுக்கான துறைகளை இளைஞர்கள் வேண்டி நிற் கின்றனர். எங்கு திரும்பினாலும் தாம் தங்குதடைகள் உள்ள தாகவே இளைஞர்கள் உணர்கின்றனர். இருப்பினும், அவர்கள் செயலில் இறங்கவேண்டும்.[32] இளைஞரை அடக்க முடியாது, அவர்கள் தமது உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தவே செய்வர். எனவே, எமது இளைஞர் தமது சுயத்தை வெளிப்படுத்தும் வேட் கையின் வாயிலாக உதித்ததே மாணவர் காங்கிரஸ் ஆகும். தமது இதயக் குமுறல்களை வெளியேற்றுவதற்கானதொரு சுதந்திரமான சூழலில் தாம் இருப்பதாக இளைஞர்கள் உணரும்வகையில், இயக் கத்திற்கு தமது ஆக்கத்தையும் ஊக்கத்தையும் அளிப்பதே எமது தலைவர்களின் கடமையாக இருத்தல் வேண்டும்.

என 'Hindu Organ' தெரிவித்திருந்தது. அதன் வரலாற்றின் ஆரம்ப வருடங்களான இக் காலகட்டத்தில் மாணவர் காங்கிரஸ் சிறப்பாக முதியவர்களிடம் இருந்து வந்த பாராட்டுதல் மற்றும் ஊக்குவிப்புக் களின் மகிழ்ச்சியுடன் தழைத்தோங்கியது என்பதில் ஐயம் இல்லை. தாம் நிலைப்பாடு எடுத்துக்கொண்டிருந்த உன்னத இலட்சியங்கள் சிலவற்றை உறுப்பினர்கள் நடைமுறைப்படுத்த ஆரம்பித்தபோதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்றுப் பின்னதாக கடும் கண்டனங்களும் கசப்பான எதிர்ப்புக்களும் தொடர்ந்து வந்திருந்தன.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாந்தி பேதி நோய் தீவிரமாகப் பரவியிருந்த காரணத்தினால் 1926 ஏப்ரலில் நடைபெற்றிருக்க வேண்டிய மூன்றாவது வருடாந்த அமர்வுகள் தாமதப்பட நேர்ந்தது. அந்த அமர்வுகள் பின்னர் 1926 டிசம்பரில் டாக்டர் ஐசாக் தம்பையா தலைமையில் கீரிமலையில் வைத்திலிங்கம் மடத்தில் நடைபெற்றன.[33] வரவேற்புரையை சபாபதி குலேந்திரன் நிகழ்த்தியிருந்தார். முன்னே வந்து தேசத்தின் நலன் கருதி இளைஞர்கள் அவர்களது பங்கை வகிக்க வேண்டும் என ஆணித்தரமானதொரு அறைகூவலை இளைஞர்களுக்கு விடுத்திருந்தார் டாக்டர் ஐசாக் தம்பையா. அரசியல் குறித்து யாழ்ப்பாண மக்களின் மனோபாவத்தின்மீது தமது வரவேற்புரையில் குலேந்திரன் கவனம் ஈர்த்திருந்தார். இராமன் ஆண்டால் என்ன, இராவணன் ஆண்டால் என்ன, எமக்கென்ன கவலை என மக்கள் மத்தியில் நகைச்சுவையாகக் கூறப்பட்டு வருவதை ஆதாரப்படுத்தி இதுவரை யாழ்ப்பாண மக்கள் அலட்சியமாகவே இருந்து வந்திருப்பதாக அவர் தெரிவித்தார். 'பந்திக்கு முந்து படைக்கு பிந்து'[34] எனப் பழங் காலத்தில் இருந்து காலாகாலமாக வரும் கோழைத்தமான கூற்றினால் வழி நடத்தப்பட்டவர்களாக அபாயம் நிறைந்த அரசியல் துறையில் தமது தலையை நுழைப்பதால் ஏற்படும் எந்த ஆபத்தையும் எதிர்கொள்வதற்கு அவர்கள் பின்னடித்து வந்துள்ளனர்.

அரசியல் கூட்டத் தொடரின் போது பிரதான சொற்பொழிவுகளாக 'இன்றைய இளைஞர்களும் அவர்களின் அரசியல் பொறுப்பும்' எனும் தலைப்பில் ஜே.வி. செல்லையாவும், 'இலங்கை ஒரு ஐக்கியமான நாடு' எனும் தலைப்பில் எம்.எஸ். இளையதம்பியும் பேருரையாற்றி இருந்தனர். பண்டிதர் கே. சி. நாதன் தலைமையில் இரண்டாம் நாள் தமிழ் மாநாடு இடம்பெற்றது. 'இலக்கியத்துக்குப் புதிய வழிகள்' எனும் தலைப்பில் சு. நடேசபிள்ளை சொற்பொழிவு நிகழ்த்தினார். 'மாணவ வாழ்க்கையின் சில இலட்சியங்கள்' எனும் தலைப்பில் ஓர் உரையை தம்பையா நிகழ்த்தியிருந்தார். 'இலங்கையின் சுதேச உற்பத்தி' எனும் பொருளில் எம். எஸ். இளையதம்பி உரை நிகழ்த்தினார். மூன்றாம் நாள் கூட்டத் தொடர்கள் ஒரு பொருளாதார மற்றும் சமூக மாநாடாக அமைந்தது. 'இலங்கையின் பொருளாதாரத்தின் எதிர்காலம்',

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இந்திய தேசியக் கொள்கையில் கதரின் அந்தஸ்து', 'இன்றைய இலங்கைக்கான சில சமூக இலட்சியங்கள்' போன்ற பல தொனிப் பொருட்கள் உரையாடப்பட்டன. இறுதிக் கூட்டத் தொடரில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்களில் சிங்களவர் - தமிழர் ஒற்றுமை முதன்மை பெற்றிருந்தது. அது அப்பொழுது மாணவர் காங்கிரஸின் அத்திவாரமான அடிப்படைக் கொள்கையாகவே வந்திருந்தது. குறிப்பாக சட்டவாக்க சபையின் சிக்கலான பிரதிநிதித்துவப் பிரச்சினைமீது பழைய தமிழ் மற்றும் சிங்கள அரசியல் தலைவர்களுக்கிடையில் விரிசல் வளர்ந்து கொண்டிருந்த நிலையில், இந்த விடயமானது முக்கியத்துவம் பெற்றதாக இருந்தது.

இத் தடவை வருடாந்த அமர்வுகள் பத்திரிகை விமர்சனங்களை வருவித்திருந்தனவாயினும், அவை முற்றிலும் சாதக மற்றதாகவே இருந்தன. 'The Ceylon Patriot' காங்கிஸுசுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்திருந்தபோதும் இடைப்பட்ட காலங்களில் உருப்படியான எந்தப் பணிகளையும் செய்யாது வருடாந்த அமர்வுகளை மட்டும் வெறுமனே நடத்தி வருதல் அதிக உபயோகமானதாக இருக்கமாட்டாது எனக் குறிப்பிட்டது. நன்கு அலசி ஆராயப்பட்டதொரு நிகழ்ச்சித் திட்டத்தை உருவாக்க வேண்டும் எனவும், அதனை நடைமுறைப்படுத்துவதற்கு அடுத்த அமர்வுகள் வரை செயற்படக்கூடியதொரு பிரதிநிதித்துவ குழு அமைக்கப்பட வேண்டுமெனவும், இளைஞர்களுக்கு அறை கூவலும் விடுத்திருந்தது.[35] வருடாந்த அமர்வுகளின்போது நிகழ்த்தப் படும் உரைகள் மேன்மேலும் தீவிரமானவையாக இருப்பினும், வருடாந்த அமர்வுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் நடைமுறையிலான பணிகள் அதிகம் ஆற்றப்பட்டிராமை வெளிப்படையானது. யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் அமர்வுகளைப் போல், இந்தியாவில் டிசம்பரில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் குறித்தும் 'The Hindu Organ' விமர்சனம் செய்கையில், "முந்திய சில வருடங்களில் இடம்பெற்ற அரசியல் ஆர்ப்பாட்ட வரலாறு தெரிவிப்பது யாதெனில் இன ஒற்றுமை பேசுவதற்கு ஓர் இலகுவான விடயம், ஆயின் எய்துவதற்கோ அது மிகவும் சிரமமானது" எனச் சுட்டிக்காட்டியிருந்தது. மாணவர் காங்கிரஸ் அமர்வுகளின் செயல்பாடுகளை ஓரளவு வெளிப்படையாகக் குறிப் பிடுகையில் மேடைப் பேச்சுக்களோ, வாலிப உற்சாகத்தின் வாயிலான அதிரடி அபிப்பிராயங்களோ, மதிப்பிற்குரிய தலைவர்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுடன் இணைந்தவர்களையும் வேண்டுமென்றே அவதூறு செய்தலோ தமது இலட்சியத்தை அடைவதற்கு ஒற்றுமையை வற்புறுத்து பவர்கட்கு உதவமாட்டாது என 'Hindu Organ' தெரிவித்திருந்தது.[36]

அடுத்து வெளிவந்திருந்த ஓர் இதழின் ஒரு நீண்டதொரு ஆசிரியர் தலையங்கத்தில் 'Hindu Organ' காங்கிரஸின் வருடாந்த அமர்வுகளில் ஜே.வி. செல்லையா நிகழ்த்திய உரையினை கடுமையாக விமர் சித்திருந்தது. தனது சொந்த உணர்வுகளையும், தம்முடன் இணைந்த மதத்தவர்களது உணர்வுகளையும் சற்று ஆவேசமாக வெளியிட்டிருந்த தாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது. அரசியலில் பங்கு கொள்ளும்படி மாணவர்களுக்கு அவர் விடுத்திருந்த அறிவுரை பொறுப்பற்ற தொன்றாக வர்ணிக்கப்பட்டிருந்தது. "மாணவர்களது பெற்றோர் மற்றும் தலைவர்களின் கருத்துக்களை விமர்சனம் செய்யும்படியும், அவர்களது நடவடிக்கைகளை எடைபோடும்படியும் மாணவர்களைத் தூண்டுவது வயதுக்கும் மூப்புக்கும் வேண்டிய மதிப்பு மரியாதையைப் பல வீனப்படுத்தும். மேலும் குடும்பம் மற்றும் சமூக உறவுகளில் குழப்பத்தை உண்டுபண்ணும்." ஜே.வி. செல்லையா நிகழ்த்திய உரையில் ஒரு குறுகிய மதரீதியான உள்நோக்கம் இருப்பதாகக் குற்றஞ் சாட்டப்பட்டது. அது கல்விக்கான இந்து மகாசபையினர் தமக்கென பாடசாலைகளை நிறுவியதோடு, இருந்துவந்த இந்து பாடசாலைகளையும் ஒரே முகாமையின் கீழ் கொண்டுவந்த காலகட்டமாகும். சமயத்தில் இருந்து சைவ இளைஞர்களின் கவனத்தை அரசியலுக்குத் திசை திருப்புவதற்கு ஜே.வி. செல்லையாவை கிறிஸ்தவ மிசனரிமார் உபயோகித்து வருவதாக அன்று எண்ணப்பட்டது. சைவ கிறிஸ்தவ பிளவு எதுவும் இல்லவே இல்லை எனவும், அது செல்லையாவின் கற்பனைவாதம் எனவும் வர்ணித்திருந்தது. இந்து பாடசாலைகளில் கல்வியை அவர்கள் பெறும் பொருட்டாகவே கிறிஸ்தவ பாடசாலைகளில் இருந்து தமது பிள்ளை களை இந்துக்கள் அப்புறப்படுத்தி வருவதாக அது எடுத்துக் கூறியது. சைவக் கல்வியின் முன்னேற்றத்திற்கு, கிறிஸ்தவ மிசனரிமாரினால் உண்டாக்கப்பட்டதாக நம்பப்பட்ட தடைகளை நீக்குவதற்கு அவர்கள் உதவினர் என்ற காரணத்திலேயே அவர்கள் மீதான தாக்குதலாகவே, வட மாகாணத்தின் சட்டவாக்கச்சபை உறுப்பினர்களைச் செல்லையா விமர்ச்சித்தமை கொள்ளப்பட்டது. "மத மாற்ற நோக்கங்களுக்காக அமைக்கப்பட்டிருந்த நிறுவனங்களுக்கு அரசிடமிருந்து நிதியுதவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுத் தருவதற்கு சட்டவாக்கச் சபை உறுப்பினர்கள் மறுத்திருந்தனர்" என 'Hindu Organ' வலியுறுத்தியிருந்தது.[37]

"அரசியல் ரீதியாக மாணவர் மீது ஆசிரியர்கள் செல்வாக்குச் செலுத்தக் கூடாது என்றும், அவர்கள் கல்வி புகட்டும் பணியோடு நின்றுகொள்ளவேண்டும்" எனவும் குறிப்பிட்டு கோலாலம்பூரில் இருந்து ஆசிரியருக்குக் கிடைத்திருந்த ஓர் அனாமதேயக் கடிதம் ஜே.வி. செல்லையாவின் உரையை மேலும் விமர்சனம் செய்திருந்தது. 'தமது முதிய தலைவர்களையும், பொது விடயங்கள் மீதான அவர்களது கொள்கைகளையும், புறந்தள்ளி அவதூறு செய்வதற்கு விடுக்கப் பட்டிருந்த ஆலோசனையாகவே அது கருதப்பட்டது. அத்தகைய அறிவுறுத்தல் தான் ருசியாவில் 'போல்செவிசிம்' தத்துவத்தை அறிமுகப் படுத்தியது. உலகில் இன்று அது ஏற்படுத்திவரும் பிரளயத்தினை நாம் அறிவோம். காங்கிரஸின் அமர்வுகளில் நிகழ்த்தப்பட்டிருந்த உரைகள் மீது வெளிப்படுத்தப்பட்ட பிரதிபலிப்புக்களின்படி மாணவர் காங்கிரஸ் நகரும் திசை குறித்து முதியோர் மற்றும் பழமைவாதிகள் அச்சம் கொண்டுள்ளதாகத் தோன்றியது. ஜே.வி. செல்லையாவும், டாக்டர் ஐசாக்கும் ஏற்கனவே காங்கிரஸின் தலைவர் பதவியை வகித்த வர்களாகையால் காங்கிரஸ் பெரும்பாலும் கிறிஸ்தவ செல்வாக்குக்கு உட்பட்டிருப்பதாக ஒரு கருத்து வளர்ந்து வந்தது. ஆயினும், காங்கிரஸ் அமைப்பின் பின்னணியில் அதனை நகர்த்தும் சக்தியாக விளங்கி வந்தவரான ஹன்டி பேரின்பநாயகமோ, காங்கிரஸ் பரிபூரண மான தேசியரீதியான போக்குடையதெனவும் குறுகிய வட்டத்திற்கு அப் பாலான தகைமை கொண்டதெனவும் விரைவில் நிரூபித்திருந்தார். காங்கிரஸ் வரலாற்றின் இக்காலகட்டத்தில் அவர் மேடைகளில் தோன்றி அதிகம் உரைகளை நிகழ்த்தியிருக்கவில்லை. காங்கிரஸின் அமைப்பு மற்றும் அதன் நிகழ்ச்சித் திட்டத்தை ஒழுங்குபடுத்துவதிலேயே அவர் பிரதானமாக கரிசனை கொண்டிருந்தார். குறிப்பாக பாடசாலை முகாமை யாளர் மற்றும் கல்வியில் அக்கறை கொண்டோர் மத்தியில் எழுந்திருந்த இந்து - கிறிஸ்தவ வேறுபாடுகளில் அமிழ்ந்து போவதற்கு ஹன்டி நாட்டம் கொண்டிருக்கவில்லை. மாணவர் காங்கிரஸின் தீவிரமான தேசிய நிலைப்பாட்டினை முழுமையாக ஏற்காத முதியவர்களை உள்ளடக்குவதாக, அனைத்து வட்டாரங்களில் இருந்தும் ஆதரவை ஈர்ப்பதே அவர் கையாண்டிருந்த மூலோபாயமாயிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

## காந்திஜீயின் விஜயம்

யாழ்ப்பாணத்துக்கு வருகை புரியுமாறு மகாத்மா காந்திஜீக்கு அழைப்பு விடுக்கும் மகத்தான எண்ணம் யாழ்ப்பாணத்தின் பொதுவாழ்க்கையில் மாணவர் காங்கிரஸுக்கு ஒரு பிரதான இடத்தைப் பெற்றுத்தந்த ஒரு நகர்வாக இருந்தது. 1927ஆம் ஆண்டில் அதன் செல்வாக்கு ஓரளவுக்கு நாடுபூராகவும் உணரப்பட்டது. மகாத்மா வருகை புரிந்த ஆண்டாக யாழ்ப்பாணத்தில் அந்த ஆண்டு நினைவு கூரும் விடயமாகி விட்டது. இந்நாட்டிற்கு வருகை தரும்படி காந்திஜீயை அழைத்திருந்த முதல் அமைப்பு எனும் தனித்துவமான கௌரவம் மாணவர் காங்கிரஸைச் சேர்ந்ததாகும். அந்த நிகழ்வை அத்தலைமுறையைச் சேர்ந்தவர்கள் ஆவலோடு நினைவு கூருகின்றனர். இளவயதினர் வழிகாட்டிவிட்டார்கள் என்பதுடன் ஆசியாவின் மிகத் தலைசிறந்த தேசியத் தலைவரை வரவேற்பதில் முதியவர்கள் அவர்களைப் பின்பற்ற வேண்டியவர்களாக இருந்தார்கள். யாழ்ப்பாணத்தில் முன்னொருபோதும் இல்லாதளவு மாபெரும் ஜனத்திரள், அதிகளவு வரவேற்புகளும் உற்சாகமூட்டும் உரைகளும், காந்திஜீ குறித்துத் தெரியாதிருந்த குட்டிக் கதைகள், அவரது நகைச்சுவை மற்றும் நிஜமான சைகைகள் யாவும் வெளிக் கொணரப்பட்டன. பிரித்தானிய ஏகாதிபத்தியம் கோலோச்சிய காலத்தில் இந்த நாட்டுக்கு காந்திஜீயை அழைத்து வந்திருந்தமைக்காக உண்மை யாகவே பெருமைப்பட்டிருந்தவர்களான அக்காலத்து இளைஞர்களால் பின்பு பல தசாப்பதங்களாக அவை நினைவு கூரப்பட்டன.

டொனமூர் ஆணைக்குழுவும் இலங்கைக்கு 1927ஆம் ஆண்டி லேயே வந்தது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். உண்மையாக காந்திஜீயும், டொனமூர் ஆணைக்குழுவினரும் ஓரே தினத்திலேயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது நவம்பர் 13ஆம் திகதியே இலங்கைக்கு வந்தனர். பரந்து பட்ட மக்களால் காந்திஜீ யாழ்ப்பாணத்தில் உற்சாகத்துடனும் பெரும் ஆர்வத்துடனும் வரவேற்கப்பட்டிருந்தார். மறுபுறத்தில், டொனமூர் ஆணைக்குழுவின் வருகையை மாணவர் காங்கிரஸ் அசட்டை செய்திருந்தது. யாழ்ப்பாணத்தின் இளைஞர் மீது காந்திஜீ செலுத்தியிருந்த செல்வாக்கு, மற்றும் பின்பு வெளியிடப்பட்ட டொனமூர் ஆணைக் குழுவின் பரிந்துரைகள் யாழ்ப்பாண அரசியலில் மிக முக்கிய தாக்கங்களை ஏற்படுத்தியிருந்தன.

மாணவர் காங்கிரஸ் சார்பில் இலங்கை வருமாறு மகாத்மா காந்தியை அழைக்கும் முன் முயற்சி ஹன்டி பேரின்பநாயகத் தினாலேயே மேற்கொள்ளப்பட்டது. அவரது பற்பல சிறை வாசங்களில் ஒன்றின் பின்னர் பெங்களூரில் அவர் தேறிக்கொண்டிருந்த சமயம் காந்திஜீயை நேரில் அணுகும் வாய்ப்புக் கிட்டியிருந்தது. அக்கால கட்டத்தில் ஹன்டி பேரின்பநாயகம் இந்தியா, பர்மா மற்றும் இலங் கையின் மாணவர் கிறிஸ்தவ இயக்கத்தின் தேசியக் குழு உறுப்பின ராகவும், ஏ.எம்.கே குமாரசுவாமி அதன் தலைவராகவும் இருந்தனர். அக் குழுவின் வருடாந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக இருவரும் சென்னைக்குப் புறப்பட்ட பொழுது, காந்திஜீயை நேரில் அணுகி யாழ்ப்பாணம் வருமாறு அழைக்கப்படல் வேண்டும் எனும் எண்ணம் ஆர்வம் மிகுந்த யாழ்ப்பாண இளைஞர்களிடம் ஏற்பட்டது. சந்திப்பிற்கான பிரதான நோக்கத்தை வெளியிடாது சந்திப்பதற்குச் சந்தர்ப்பம் கோரி மகாத்மாவுக்கு ஹன்டி சென்னையில் இருந்து கடிதம் எழுதியிருந்தார். அச்சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. ஏ. எம். கே. குமாரசுவாமி மற்றும் ஹன்டி இருவரும் அக்காலத்தில் சென்னையில் இருந்த ஈ. ஜே. இராசையாவுடன் கூடி யாத்திரை போன்றதொரு பாணியில் பெங்களூர் சென்றனர். அச்சமயம் காந்திஜீயோடு உடன் இருந்தோர் மத்தியில் பின்னர் காந்திஜீயின் தென் இந்திய மற்றும் இலங்கைச் சுற்றுப் பயணத்துக்குப் பொறுப்பாயிருந்தவரான இராஜகோபாலாச்சாரியாரும் (ராஜாஜி) இருந்தார் என்பதை ஹன்டி பின்னர் நினைவு கூர்ந்தார். காந்திஜீயுடன் பின்னர் இலங்கைக்கு வந்திருந்தவரும், 'இலங்கையில் காந்திஜியுடன்' எனும் நூலை எழுதியிருந்தவருமாகிய மகாதேவ் தேசாயும் அங்கு சமூகமாயிருந்தார். கதர் இயக்கத்தைக் கட்டி எழுப்புவதிலும், அவர் வழமையாகக் கூறிக்கொள்வது போல,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவில் பசியால் வாடும் கோடிக் கணக்கானவர்களுக்கு உணவு உடை, வழங்க நிதி சேகரிப்பதிலும் காந்திஜீ அக்காலத்தில் தமது கவனத்தைப் பெரிதும் செலுத்தியிருந்தார்.

கதர் நிதிக்கு ஒரு இலட்சம் ரூபாவை கண்டிப்பாக இலங்கை தரவேண்டும் என்ற ஒரே ஒரு நிபந்தனையின் பேரில் அந்த அழைப்பை காந்தி ஏற்றுக் கொண்டிருந்தார். அத்தகைய ஒரு பொறுப்பை ஏற்பதற்கு இலங்கையில் ஹன்டிக்கு எந்தவொரு வட்டாரத்திலிருந்தாவது ஆணை வழங்கப்பட்டிருக்கவில்லை. குமாரசுவாமியுடன் தனிப்பட அவசரமான ஆலோசனையில் கலந்து கொண்ட பின் அவர் காந்திஜீயின் கோரிக்கைக்கு இணங்கியிருந்தார். இறுதியில் அந்த வாக்குறுதி நிறைவு செய்யப்பட்டது. காந்திஜீயின் விஜயத்தின் இறுதியில் இலங் கையில் மொத்தமாக ஒரு நூறாயிரம் ரூபாவும் இரண்டு அணாவும் திரட்டப்பட்டிருந்தது. காந்திஜீ கடைசியாக வருகை தந்திருந்த யாழ்ப்பாணத்தில் மட்டும் பதினெண்ணாயிரத்துக்கும் மேலான தொகை கிட்டியது. இலங்கை வந்த காந்திஜீயின் குழுவிற்குப் பொரு ளாளராயிருந்த ராஜாஜி கதருக்கான நிதி இயக்கத்தின் வெற்றியை அறிவித்ததுடன், அதற்காக ஹன்டி பேரின்பநாயகத்துக்குப் பாராட்டுத் தெரிவிக்கும்படி காந்திஜீயிடம் கேட்டுக்கொண்டார். "கீர்த்தி வாய்ந்த அப் பொக்குவாய்ப் புன்னகை தனக்கு அருளப்பட்டு இருந்தமையை" பின்னர் ஹன்டி சுவாரஸ்யமாக விவரித்துள்ளார்.[39]

இலங்கைக்கு வருகை தருவதாக தற்காலிகமாக காந்திஜீ உடன் பட்டிருந்தாராயினும், இறுதியாக அவர் வந்து சேரும்வரை உண்மை யாகவே அது நிகழுமா என்பது புரியாமலேயே இருந்தது. பெங்களூரில் காந்திஜீயுடன் நடாத்தியிருந்த சந்திப்பைத் தொடர்ந்து மாணவர் காங்கிரஸ் அவருக்கு எழுத்திலானதொரு அழைப்பை அனுப்பியது. 3.2.1927 திகதியிடப்பட்ட ஒரு கடிதத்தில் மாணவர் காங்கிரஸ் இணைச் செயலாலாருள் ஒருவரான ஐ. பீ. துரைரத்தினத்திற்கு காந்திஜீ பின்வருமாறு பதில் அனுப்பியிருந்தார்:[40]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆச்சிரமம்
சுபர்மா
3.2.1927

அன்பார்ந்த நண்பா

உமது கடிதம் கிடைத்தது. தென் இந்தியாவுக்கான எமது வருகையின் போது உங்கள் அழைப்புக்கு இணங்க அவாவுறுகின்றேன். ஆயினும் இடையே பல சிரமங்கள் உள்ளன. நான் யாழ்ப்பாணம் வருவதாயின், கண்டிப்பாக இலங்கையின் ஏனைய இடங்களுக்கும் செல்லவேண்டும் என்பதால் சில நாட்களாயினும் அங்கு நான் தங்க நேரிடும். கதர் இயக்கப் பணிகளுக்கும், கதர் நிதி திரட்டுவதற்குமே இந்த வருடத்தில் நான் முழுமையாக ஈடுபட விரும்புகிறேன். ஆகவே, இலங்கைக்கு நான் போவதாகவிருந்தால், கதர் இயக்கத்திற்கு நிதி சேர்ப்பதற்கு நான் விரும்புவேன். ஆகவே, தென் இந்திய சுற்றுப் பயணத்தை ஒழுங்குபடுத்தி வரும் உயர்திரு சீ. இராஜகோபாச்சாரியாரிடம் உங்கள் கடிதத்தை நான் ஒப்படைப்பதே சிறந்த காரியமாகும். அவர் முடிவு செய்வார். தயவு கூர்ந்து அவருடன் தொடர்பு கொள்ளவும். அவரது முகவரி காந்தி ஆச்சிரமம், திருச்செங்கோடு (தென் இந்தியா).

உங்கள் உண்மையுள்ள
ஒப்பம். எம். கே. காந்தி

இந்த நாட்டிற்கு வருகை தருவதற்கு மகாத்மா இணக்கம் தெரிவித் துள்ளார் என்று மாணவர் காங்கிரஸின் இணைச் செயலாளர்கள் 1927 செப்ரெம்பர் முற்பகுதியில் விடுத்திருந்த அறிவித்தல் பல செய்திப் பத்திரிக்கைகளிலும் வெளியிடப்பட்டிருந்தது. இந்நாட்டின் பிரச் சினைகளை நேரடியாக அறிந்து கொள்வதும், கதர் இயக்கத்திற்கு நிதி திரட்டும் முயற்சியுமே அவரது வருகைக்கான நோக்கமாக அறிவிக்கப் பட்டது. அவரது வருகை குறித்த அவர்களது வரவேற்பை ஆக்க பூர்வமாக தெரியப்படுத்தும் வெளிப்பாடாக அந்த நிதிக்கு அன்பளிப்பு களைத் தாராளமாக நல்கும்படி பொதுமக்கள் மத்தியில் வேண்டு கோள் விடுக்கப்பட்டிருந்தது. சாதி, மத, குல அடிப்படையில் எவரும் விலகிக் கொள்ள வேண்டியதில்லை என விசேடமாக எடுத்துக் கூறப் பட்டிருந்தது. மகாத்மா காந்தி ஒரு சிறு வட்டத்தினுள் இயங்குபவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்ல என்பதே உலகின் ஏகோபித்த கருத்து என்பதும் குறிப்பிடப் பட்டிருந்தது.[41]

ஹன்டி பேரின்பநாயகம் மற்றும் மாணவர் காங்கிரஸின் முன் முயற்சியினால் யாழ்ப்பாணத்தில் ஒரு வரவேற்புக்குழு உருவாக்கப் பட்டது. அக்குழுவில் நூற்றுக்கணக்கானோர் அங்கம் வகித்தனர். யாழ்ப்பாணச் சமுதாயத்தில் இருந்த ஒவ்வொரு பிரிவினருக்கும் பிரதிநிதித்துவம் வழங்கப்படுவதில் கவனம் செலுத்தப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்தில் மகாத்மா காந்தி வரவேற்புக் குழுவின் இணைச் செயலாளர்களாக ஹன்டி பேரின்பநாயகமும், எம். எஸ். இராச ரத்தினமும் செயற்பட்டனர். பொருளாளராக குமாரசூரியர் பதவி வகித்தார். (பின்னர் சேர் பட்டம் பெற்றவரான) வைத்திலிங்கம் துரைச்சாமி வரவேற்புக் குழுவின் தலைவராகப் பணியாற்ற அழைக்கப் பட்டிருந்தார். காந்திஜீயின் வருகைக்குரிய முன்னேற்பாடான பணிகளில் அவர் காட்டிய ஈடுபாட்டுடன் ஓர் அமைப்பாளரும் தலைவருமாக ஹன்டி பேரின்பநாயகத்தின் அந்தஸ்து வளர்ச்சியடைந்திருந்தது என்பதில் ஐயம் எதுவும் இல்லை. அதற்கான நன்மதிப்பு பெரும்பாலும் மாணவர் காங்கிரஸையே சென்றடைந்தது. 1927 ஆகஸ்ட் வரை இலங்கைக்கு விஜயம் செய்வாரா, இல்லையா என்பது குறித்து திடமாக அறியாதவராகவே காந்திஜீ இருந்தார். ஒரு சில நிமிடங்கள் பெங்களூரில் காந்திஜீயை ஜே.வி. செல்லையா சந்திக்க நேர்ந்தபோது, அவரது யாழ்ப்பாண விஜயம் குறித்து தாம் பேசியதாகவும் தாம் அங்கு செலவிடவேண்டிய காலம் பிரயோசனமாயிருக்குமா என்பது குறித்து இன்னமும் காந்திஜீ நம்பிக்கை கொள்ளவில்லை எனவும் அறிவித் திருந்தார். யாழ்ப்பாணத்தில் ஒவ்வொரு வீட்டிலுமே காந்திஜீன் பெயர் நன்கு பிரபல்யப்பட்டிருப்பதாகவும், முற்றிலும் படிப்பறிவு இல்லாத வர்களும் கூட அவர் குறித்து ஓரளவேனும் தெரிந்து கொண்டிருக் கிறார்கள் என்றும், இலங்கை அதிகளவு மேலைத்தேய மயப்படுத்தப் பட்டிருப்பதாகப் பொதுப்படையாகக் கருதப்பட்டு வந்துள்ள பொழு திலும் கூட, யாழ்ப்பாணம் (இந்திய) தேசிய விடுதலை இயக்கத்தில் இருந்து துண்டிக்கப்பட்டிருக்கவில்லை என்றும் ஜே.வி. செல்லையா காந்திஜீக்கு உறுதியளித்திருந்தார்.[42]

நவம்பர் முற்பகுதியில் காந்திஜீ இலங்கை வந்தடைவார் என எதிர்பார்க்கப்பட்டிருந்ததாயினும், நவம்பர் முதல் வாரத்தில் தம்மைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுடில்லியில் சந்திக்கும்படி பிரித்தானிய ராஜ பிரதிநிதி காந்திஜீயை அழைத்திருந்தபடியால், ஒரு சில நாட்களால் அவரது வருகை பின் போடப்பட்டிருந்தது. யாழ்ப்பாணம், மகாத்மாகாந்தி வரவேற்புக் குழுவின் இணைச் செயலாளர்களுள் ஒருவர் எனும் கோதாவில் நவம்பர் திங்கள் 3ஆம் திகதி அகமதபாத்தில் இருந்து பின்வரும் தந்தி இறுதியில் ஹன்டி பேரின்பநாயத்துக்குக் கிடைத்தது: "ஏறத்தாழ 10ஆம் திகதி கொழும்பை வந்தடையும் பிரித்தானிய இந்திய சரக்குக் கப்பலில் நாளை அதிகாலை புறப்படுகிறேன்".[43]

இறுதியாக, நவம்பர் 13ஆம் திகதி வந்தடைந்த மகாத்மாவுக்கு கொழும்பில் மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. இலங்கைக்கு வருமாறு தனக்கு விடுக்கப்பட்ட ஆரம்ப அழைப்பு யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸிடம் இருந்தே சென்றிருந்ததென யாழ்ப்பாணத்தில் காந்திஜி நிகழ்த்திய உரைகளில் ஒன்றுக்கு மேற்பட்டதடவைகள் குறிப்பிட்டிருந்தார்.[44] இவ்வாறு யாழ்ப்பாண மாணவ காங்கிரஸினால் அழைக்கப்பட்ட போதும் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் மற்றும் இந்திய வம்சாவளி மக்கள் போன்ற நாட்டின் அனைத்துச் சமூகங்களை சார்ந்தவர்களும், பௌத்தர்கள், இந்துக்கள், இஸ்லாமியர் மற்றும் கிறிஸ்தவர்கள் போன்ற அனைத்து மதங்களையும் சேர்ந்தவர்களும் மற்றும் அவர்களது பிரதிநிதித்துவ தலைவர்களும் நாட்டில் காந்திஜீ எங்கெல்லாம் சென்றிருந்தாரோ அங்கெல்லாம் அவரை வரவேற்பதற்கு ஒன்றுதிரண்டிருந்தனர். கொழும்பு, கண்டி, காலி மற்றும் ஏனைய இடங்களில் பல உரைகளை அவர் நிகழ்த்தியிருந்தார். அவருக்கு அளிக்கப்பட்ட பல வரவேற்பு வைபவங்களின் போதும் அவர் உரை நிகழ்த்தியிருந்தார். இலங்கை தேசிய காங்கிரஸ், பௌத்த சங்கங்களின் அகில இலங்கை காங்கிரஸ், பௌத்த வாலிபர் சங்க, தலைநகர் கொழும்பில் கிறிஸ்தவ வாலிபர் சங்க, மற்றும் தொழிற் சங்க ஆதரவிலான மாபெரும் பொதுக்கூட்டத்தில், நிகழ்த்தப்பட்ட உரைகளும், பதுளை, நுவரெலியா, மாத்தளை, காலி மற்றும் கொழும்பு சாகிராக்கல்லூரியில் நிகழ்ந்த பொதுகூட்டங்களில் அவர் ஆற்றிய உரைகளும் விசேடமாகக் குறிப்பிடத்தக்கன.[45] அன்றைய முக்கியஸ்தர்களான டி. பி. ஜயதிலக்கா, டபிள்யூ. ஏ. டி சில்வா மற்றும் சேர். பொன். இராமநாதனையும் காந்திஜீ சந்தித்தார். உண்மையில் தமிழ்ச் சங்கம் அளித்திருந்த வரவேற்பு வைபவத்துக்கு சேர். பொன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமநாதனே தலைமை வகித்திருந்தார். தமது இலங்கை வருகைக்கு சற்று முன்னதாக தமது இலங்கை விஜயத்தின் பிரதான நோக்கத்தை காந்திஜீ தெரியப்படுத்தியிருந்தார். இங்கு வந்து சேர்வதற்கு முன்பாக அவர் அனுப்பியிருந்த ஒரு செய்தியில், "சுய தெரிவினால் தரித்திர நாராயணனின் பிரதிநிதியாக, ஆதலால் பிச்சா பாத்திரத்தை நிரப்பும் உச்ச எதிர்பார்ப்புடனேயே யான் இலங்கைக்குப் போவதாக இருப் பினும், வரலாற்றுப் புகழ் மிக்க அத்தீவுக்கு வருகை புரிவதை நீண்ட காலமாகவே எதிர்பார்த்து இருந்துள்ளேன். அநேகமாக, 1901 இல் யான் அங்கு சென்றிருத்தல் வேண்டும். ஆயினும் இறைவன் திருவுள்ளம் வேறு விதமாகிவிட்டது. நான் ஒரு தொழிலாளி என்பதால் அதன் இன்றைய நிலைமைக்கு காரணகர்த்தாக்களாக இருக்கும் இலங்கைத் தொழிலாளர்களுடன் அறிமுகம் ஏற்படுத்திக் கொள்வதை விரும்பு கின்றேன்."[46]

'காந்திஜீயுடன் இலங்கையில்' எனும் தலைப்பிலான நூலில் மகாதேவ தேசாய் கூறியுள்ளதைப் பார்ப்போம்.

காந்திஜீ தனது கடந்த 10 வருடகால பயணங்களின்போது இலங்கைக்கு விஜயம் செய்வதற்கு பெரிதும் ஆவல் கொண்டிருந்தார். அதற்கான காரணம் வருமாறு: 'உலகின் தீவுகளில் முத்து' எனப்படு மளவுக்கு கவர்ச்சியான, அழகான அந்த பூமியைக் கண்ணுற்றுக் கொள்வதற்கே ஒழிய, உயிரோட்டமாயுள்ள பௌத்த மதத்தை நேரடியாக ஆராய்ந்து அறிவதற்காக அல்ல. ஆயர் ஹெபர் தனது அறியாமை காரணமாக நிந்தித்திருந்த மக்களின் வாழ்க்கை முறையைப் படிப்பதற்கே ஒழிய, இயற்கை வளங்கள் நிறைந்த மகத்தான அத் தீவினை அவர் மெச்சிய அதே வேளை, அதன் மீது அனுதாபம் கொள்வதற்காக அல்ல. தனது நாட்டு மக்களைப்போலவே தேசிய உணர்விழந்தும், மேற்கத்திய நாகரிகம் எனப்படுவதால் சிதைக்கப் பட்டு, துன்பியல் நிறைந்த சீரழிவுக்கு ஆளாக்கப்பட்டிருக்கும் இத் தீவின் மக்களுக்கு முடியுமானால் சற்று வழிகாட்டுவது காந்திஜியின் நோக்கமாயிருந்தது. மேற்குறித்த 'மேற்கத்திய நாகரிகம்' என்பதை 'வயின்' (மது), பாண் மற்றும் உப்புத் தூளுடன் கூடியது' என ஆங்கில வரலாற்றாசிரியர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இவை தான் தேசாய் விபரித்துள்ள விடயங்களாகும்.[47] ஆனால் தனது விஜயமானது ஒரு பணம் பண்ணும் பயணமாக அமைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டதாக கொழும்பில் நகரபிதாக்கள் மத்தியில் மிக ஒழிவு மறைவின்றி காந்திஜீ கூறியிருந்தார்.

இருந்தபோதும், 13ஆம் திகதி மாலை அவர் கொழும்பு வந்தடைந்த நாள் முதல் அவருக்களிக்கப்பட்ட உபசரிப்புக்கள் மற்றும் வரவேற்புக்கள் இந்தியாவில் எங்கேயும் அளிக்கப்பட்ட மிகச் சிறந்ததும் உற்சாகம் நிறைந்ததுமான வரவேற்றுப்புக்கு ஒத்ததாக இருந்தன. ஏறத்தாழ ஒரு அரசாங்க நிறுவனமாக விளங்கும் கொழும்பு மாநகர சபையினால் பாராட்டு மடலொன்று வழங்கப்பட்டது. ஒரு சிவில் சேவை அதிகாரி யாகிய மாநகரசபைத் தலைவரினால் அது வாசிக்கப்பட்டது. மாட்சிமை தங்கிய ஆளுனர் காந்திஜீக்கு இதயங்கனிந்த வரவேற்பினை அளிக்கு முகமாக சிநேகபூர்வமான சந்திப்பொன்றினை நடத்துவததற்கு குடியேற்றத்துறைச் செயலாளர் மூலம் அழைப்பு விடுத்திருந்தார். இவ்விரண்டுக்குமே காந்திஜீ தயாராக இருக்கவில்லை. உற்சாகம் நிறைந்த மகத்தான வரவேற்பினை மக்கள் அவருக்கு அளித்ததானது ஆச்சரியத்திற்குரியதல்ல. அவர் செல்லவிருந்த வழி நெடுகிலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்தனர். பல இடங்களில் ஜனத்திரளைக் கட்டுப்படுத்துவதற்கு அனுமதிச்சீட்டு வழங்கப் பட்டது.

காந்திஜீ தனது பேச்சுக்கள் பலவற்றில் இலங்கையில் உள்ள பெருந்தோட்டங்களில் தமிழ்த் தொழிலாளர் படும் இன்னல்களுக்கே தமது கவனத்தை நெறிப்படுத்தி இருந்தார். 'ஏதேன் தோட்டம்' போன்ற நுவரேலியாவில் தானும் அசுத்தமான, இழிந்த அவர்களது வீடுகளில் அவர்களைச் சந்தித்தார். அவர்களது துன்ப துயரங்களைப் பகிர்ந்து கொண்டார். நோய்களை விலக்குவது எங்ஙனம் என அவர்களுக்குக் செய்துகாட்டினார். ஆயினும் அச்சாமானிய மக்களிடம் தமது நேரத்தை அதிகம் செலவிடுவதற்கு தன்னால் இயலவில்லை எனும் எண்ணம் அவரைப் பெரிதும் வருத்தியது.[48] காந்திஜீயை வரவேற்பதற்காக இத்தொழிலாளர்கள் ஆயிரக்கணக்கில் பதுளை, நுவரெலியா, ஹற்றன் போன்ற இடங்களுக்கு வந்திருந்தனர். தேசாய் கூறினார்: "எவ்வளவு விசுவாசமும் எவ்வளவு அறியாமையும்! கடல் போல் திரண்டிருந்த மக்கள் கூட்டத்தின் மத்தியில் காந்திஜீயை ஒரு நொடிப் பொழுதிலாவது தரிசிக்க முடியாமல் ஏமாற்றமடைந்த மக்கள் கூட்டங்களை நான் சந்தித்தேன்". அவர்கள் காந்திஜீயின் பேச்சைக் கேட்பதற்காக அன்றி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரைக் காண்பதற்காகவே வந்திருந்தனர். அவர்களைப் பிரிந்து நாம் சென்றபோது மது போதை இன்னமும் நீக்கப் பெறாதவர்களாக அலைந்து கொண்டிருந்த ஒரு சிலர் மத்தியில் நாம் வந்திருந்தோம். "காந்திஜீக்கு ஜே" என உதட்டால் உரைத்தபடி பெரும் மகிழ்ச்சியுடன் ஒருவர் நர்த்தனம் புரிந்துகொண்டிருந்தார்.[49]

தனது இலங்கை வருகையின் இறுதிக் கட்டமாக நெருக்கமாகத் திணிக்கப்பட்டிருந்த ஒரு நிகழ்ச்சி நிரலுக்காக நவம்பர் 26ஆம் திகதி காந்திஜீ யாழ்ப்பாணம் வந்தடைந்தார். ஒழுங்குகள் அனைத்தும் வரவேற்புக் குழுவினால் செய்யப்பட்டிருந்தன. குடாநாட்டின் பலபகுதிகளில் சிறு சிறு குழுக்கள் உருவாக்கப்பட்டிருந்தன. முன்னேற்பாட்டுக் கூட்டங்களில் சில பிணக்குகள் இருக்கவே செய்தன. துன்னாலையில் ஒக்டோபரில் நடந்த கூட்டத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவம் குறிப்பிடத் தக்கதாகும். உயர் சாதியினர் என அழைக்கப்படுவோர் ஒரு பாடசாலை மண்டபத்தினுள்ளே அமர்ந்திருந்தபோது, காந்திஜீயினால் 'ஹரிஜனங்கள்' என அழைக்கப்பட்டவர்கள் காந்திஜீயிக்கு பிடித்தமான சில பாடல்களைப் பாடியவாறு மண்டபத்துக்கு வெளியே நின்றிருந்தனர். காந்திஜீயின் வருகைக்கான ஒழுங்குகளை ஆராய்வதற்காக கூட்டப்பட்டிருந்த அக்கூட்டத்தில் மண்டபத்தினுள்ளே தாழ்த்தப்பட்ட சாதியினர் என அழைக்கப்பட்டவர்கள் அனுமதிக்கப்படாதிருந்த போதும், அவர்கள் வெளியே சமூகமளித்திருந்ததைக் கூட அங்கேயிருந்த ஒருவர் விசமத்தனமாக ஆட்சேபித்திருந்தார். வெளியே இருந்தவாறு கூட்டத்திற்குச் சமூகம் கொடுப்பதற்கும், விரிவுரைகளைக் கேட்பதற்கும் அவர்களுக்குக் குறைந்த பட்சம் அம்மட்டுக் கரிசனையாவது தராவிடில் மகாத்மா காந்தியைக் கௌரவிப்பதிலோ, அன்றேல் அவருக்கு நிதியளிப்பதிலோ ஒரு உபயோகமும் கிடையாது என்று செயலாளர் தெளிவுபடுத்தியிருந்தார்.[50] அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் சாதி பேதம் அத்துணை ஆழமாக வேரூன்றியிருந்தது. யாழ்ப்பாண முற்ற வெளியில் யாழ்ப்பாணப் பொதுமக்களால் காந்திஜீக்கு அளிக்கப்பட்டிருந்த பிரதான வரவேற்புக் கூட்டத்தின் போது சிறுபான்மைத் தமிழர் பிரதிநிதிகளுக்கும் மேடையில் சரியாசனம் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கைப் பணம் இந்தியாவுக்கு போகக்கூடாது எனும் வெளிப்படையான காரணத்தினால் சிலர் கதர் நிதிக்கு ஆட்சேபனை தெரிவித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருந்தனர். 1914-1918 இல் இறந்த போர் வீரர்களுக்கு மலர் அஞ்சலி செலுத்துவதற்காக இலங்கையில் சேர்க்கப்படும் பணம் நாட்டுக்கு வெளியே அனுப்பப்படக் கூடுமாக இருந்தால் இந்திய மக்களுக்கு எதற்காக இலங்கை உதவக்கூடாது என வாதிட்டுப் பத்திரிகையில் ஒருவர் பதிலளித்திருந்தார்.[51]

மாணவர் காங்கிரஸின் உள் விவகாரங்களிலும் கூட சிற்சில வேறுபாடுகள் எழுந்திருந்தன. டாக்டர் ஐசாக் தம்பையா தமது தலைவர் பதவியைத் துறந்துவிட்டதாகவும், அவரது இடத்துக்கு சுவாமி விபுலானந்த அடிகளார் நிறைவேற்றுக் குழுவினால் நியமனம் செய்யப் பட்டதாகவும் காந்திஜீயின் வருகைக்கு சற்று முன்னதாக அறிவிக்கப் பட்டது.[52] அவரது பதவி துறப்புக்கான காரணம் பதியப்பட்டிரா விடிலும், காந்தீஜீக்கு ஒரு பொதுவரவேற்பளிக்கும் பொருட்டு ஒரு வரவேற்புக் குழுவை உருவாக்கும் போது தம்மைக் கலந்து கொள்ளாது மாணவர் காங்கிரஸ் தலைமை நடவடிக்கை எடுத்திருந்தமையாலேயே அவர் அவ்வாறு பதவி துறந்ததாக நம்பப்பட்டது. தலைவர் என்ற வகையில் ஒவ்வொரு கட்டத்திலும் தமது ஆலோசனையும் கலந்து கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும் என டாக்டர் ஐசாக் தம்பையா பெரும்பாலும் கருதியிருந்திருக்கலாம்.

இத்தகைய சிறு சிறு வேறுபாடுகள் இருந்திருப்பினும், யாழ்ப் பாணம் தபால் வண்டியில் தேசாதிபதிக்காக விசேடமாக நிர்மாணிக்கப் பட்ட புகையிரதப் பெட்டியில் அவர் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். புகையிரத நிலையத்திற்கு வெளியே அமைதியற்றுத் தவித்துக் கொண்டிருந்த மாபெரும் மக்கள் திரளினால் அவர் வரவேற்கப்பட்டார். அன்று மாலை யாழ்ப்பாண முற்றவெளியில் யாழ்ப்பாணத்தின் வரலாறு காணாதளவு மக்கள் அத்தனை திரளாகக் கூடியிருந்தனர்.[53] கதர் உடையை அணிந்து வருமாறும், விசேடமாக எந்த அவை முன்பாகவும் காந்திஜீ உரை நிகழ்த்தும் பொழுது கரகோஷம் செய்யாதும், "காந்திஜீக்கு ஜே" என்று கோஷம் எழுப்பாது இருக்கு மாறும் ஒரு சில தினங்கள் முன்னதாக காந்தி வரவேற்புக்குழு பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தது. காந்திஜீ வருகை புரியும் அனைத்து இடங்களிலும் ஒரு பணமுடிச்சு அன்பளிப்புச் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. டபிள்யூ. இரத்தின கோபாலினால் 'ஆம்ஸ்றோங் சிட்லி' மோட்டார் வண்டியில் யாழ்ப்பாணக் குடாநாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடங்கலும் அவர் அழைத்துச் செல்லப்பட்டார். வேகத்தையும் பாது காப்பையும் ஒன்றிணைக்கும் அவரது திறனுக்காக இரத்தினகோபால் காந்திஜீயினால் பாராட்டப்பட்டிருந்தார்.

"எவ்வாறோ, யாழ்ப்பாணம் போவதில் ஒரு வேறுபட்ட இடத் திற்கும் போவதாவே யான் உணருகின்றேன்" எனத் தலைநகர் கொழும்பில் விடைபெற்ற பிரியாவிடை உரையில் காந்திஜீ தெரிவித் திருந்தார்.[54] "யாழ்ப்பாணம் வந்தடைந்தும் இலங்கையில் இருப்பதாக யான் உணரவில்லை. மாறாக, இந்தியாவின் ஒரு சிறு பகுதியில் இருப்பாதாகவே உணருகின்றேன். உங்கள் முகங்களோ அல்லது உங்கள் மொழியோ எனக்கு அன்னியமானவையல்ல. உங்கள் முகத் தோற்றங்களைக் கொண்டு உங்கள் ஒவ்வொருவரையுமே என்னால் அடையாளங்காண முடியாவிட்டாலும் கூட, இந்தியாவில் உங்களில் அநேகரை யான் சந்தித்துள்ளேன் என்பதை அறிவேன்" என்று யாழ்ப் பாணத்தில் தமது முதல் கூட்டத்தில் காந்திஜீ திரும்பவும் உரைத் திருந்தார்.[55] தேசாயின் வார்த்தைகளில் யாழ்ப்பாண நிகழ்ச்சியானது, "மிக மிக கடினமானதாகவே இருந்தது. இறைவனுக்கே நன்றி, பிரவாகித்த பணியாளர்களது ஆர்வம் காரணமாகவோ என்னவோ காந்திஜீ தாங்கிக் கொண்டு அவற்றுக்கெல்லாம் நின்று பிடித்திருந்தார்"[56] மருத்துவ ஆலோசனையின் பேரில் அமர்ந்திருந்தவாறே காந்திஜீ உரையாற்றினார். முன்வரிசையில் இருந்த பத்துப்பேர்தானும் அவரது பேச்சைக் செவிமடுக்கக்கூடியதாயிருக்கவில்லை. ஒலிபெருக்கி சாதனங் கள் பற்றி கேள்விப்பட்டிராத அக்காலத்தில் காந்திஜீ ஆங்கிலத்தில் பேசிய அதே வார்த்தைகளைச் சொல்லுக்குச் சொல்லாக அப்படியே தமது உறுப்பினர் ஒருவர் திரும்ப உரத்து உரைக்கும் ஒரு புதுமையான வழியை மாணவர் காங்கிரஸ் கையாண்டிருந்தது. மாணவர் காங்கிரஸ் அளித்த வரவேற்பு வைபவம் (தற்போதய வின்சர் படமாளிகை இருக்கும்) அதே இடத்தில் அப்போது இருந்த றோயல் படமாளி கையில் நிகழ்ந்தது. அந்த வரவேற்பினை மகத்தானதொன்றாகவும் யாழ்ப்பாணத்தின் எண்ணற்ற கல்வி நிறுவனங்களின் சிறப்பியல்புக்கு சான்று பகர்வதாகவும் மகாதேவ்தேசாய் வர்ணித்திருந்தார்.[57] சொல் லுக்குச் சொல் காந்திஜீயின் உரையை உரத்த குரலில் மீண்டும் கூறு வதற்கு முன்வந்தவராகிய எம்.எஸ். இளையதம்பி பத்து நிமிடங்களின் பின் அதனைக் கைவிட வேண்டியதாயிற்று. தொடர்ந்து இக் கடினமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியில் கை தேர்ந்தவரும் காந்திஜீயின் தமிழ்உரைபெயர்ப்பாளரு மாகிய ராஜாஜி நிறைவேற்றினார்.[58] யாழ்ப்பாணத்தில் திரட்டிய நிதி காந்திஜீயின் தூதுக்குழுவின் எதிர்பார்ப்புக்களை மிஞ்சிவிட்டதாக அறியப்பட்டது. அதற்கான பெருமையை தேசாய் ஹன்டி பேரின்ப நாயகத்துக்கு அளித்தார். கிராமம் கிராமமாகச் சென்று காந்திஜீயின் பணிகள் குறித்து கேள்விப்பட்டிருந்த நூற்றுக்கணக்கான கிராமவாசி களிடமிருந்து ஒவ்வொரு சதம் சதமாகவே அவர் சேகரித் திருந்தார்.[59]

தனது பயணங்களின்போது கையெழுத்துப் பெறுவதற்கு பின் தொடர்வோரால் காந்திஜீ பெரிதும் தொல்லைப்படுத்தப்பட்டார். ஆனால் ஒரு கண்டிப்பான நிபந்தனையை விதித்திருந்தார். அதாவது, கதர் அணிவதை வழக்கப்படுத்திக் கொள்வதற்கு சம்பந்தப்பட்டவர் வாக்குத் தரல்வேண்டும் என வற்புறுத்தியிருந்தார். யாழ்ப்பாணத்து மாணவர்களுக்கு அந்த வாக்கைக் கொடுப்பது சிரமமானதாக காணப் படவில்லை, என்று தேசாய் பின்னர் பாராட்டியிருந்தார்.[60] உண்மை யாகவே அவர்களில் பலர் காந்திஜீயின் வருகைக்கு வெகு நாட்களுக்கு முன்னதாகவே தேசிய உடையையும் கதரையும் அணியத் தொடங்கி விட்டார்கள். அங்கிலிக்கன் மிசனரி பிரமுகரும் பரியோவான் கல்லூரி அதிபருமாகிய வணபிதா ஹென்றி பீட்டோ தமது பாடசாலைக்கு காந்திஜீ வருகை புரிந்த அவ்வைபவத்தில் அணியும் பொருட்டாக கதர் துணியில் மேற் சட்டையைத் தைப்பித்திருந்தார்.[61]

நவம்பர் 26ஆம்திகதி முதல் காந்திஜீ பல வரவேற்பு வைபவங் களிலும் பொதுக் கூட்டங்களிலும் உரை நிகழ்த்தியிருந்தார். 28ஆம் திகதி திங்கட்கிழமை அவர் அனுஷ்டிக்கும் மௌன தினமாதலால் அன்று அவருக்குப் பொது நிகழ்வுகள் எதுவும் இருந்திருக்கவில்லை. காந்திஜீ எங்கெங்கு சென்றபோதிலும் அவரது மௌன தினங்கள் கண்டிப்புடன் கடைப்பிடிக்கப்பட்டன. மாணவர் காங்கிரஸின் சில இளைய இரசிகர்களும் ஆர்வம் மிகுந்த பள்ளிச்சிறார் சிலரும் எவ் வாறாயினும் இத்தினத்தில் மகாத்மாவை அருகில் பார்க்கலாம் என நாட்டங்கொண்டு அவரிடம் சென்றிருந்தனர். ஆர். நமசிவாயம், என். சபாரத்தினம் இருவரினதும் தலைமையில் ஒரு சில இளம் வாலி பர்களுடன் எஸ். பாலசுப்பிரமணியமும் பொன். நாகலிங்கமும் வாய்ப்பை பயன்படுத்த முயன்றனர். தலைசிறந்த தந்திரசாலியாகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜாஜியோ காந்திஜீயை அவர்கள் பார்க்க முடியாது எனக் கண்டிப்பாக தெரிவித்தாராயினும், அவர்களால் காந்திஜீக்கு சற்று உதவிபுரியலாம் என எடுத்துரைத்தார். கிணற்றில் இருந்து நீர் எடுத்து காந்திஜீ குளிப் பதற்காக அதனைச் சூடாக்கும்படியாக அவர்கள் கேட்டுக் கொள்ளப் பட்டார்கள். யோகர் சுவாமிகள் மகாத்மாவை பெரிதும் பாராட்டும் ஒருவர். அன்பளிப்பாக ஒரு சில அப்பிள் பழங்களை ஏந்திக்கொண்டு நவரத்தினம் அடங்கலான தனது சீடர்கள் சிலருடன் யோகர் சுவாமி மௌன தினத்தில் காந்திஜீடம் சென்றிருந்தார். எழுதப்பட்ட துண்டு கள் மூலமே மகாத்மாவுடனான தொடர்பு நிகழ்ந்தது. சுவாமிகள் வருகையை நயந்து பாராட்டியும் அன்றையதினம் தாம் பேச இய லாமைக்கு வருத்தம் தெரிவித்தும் அந்நிய நாட்டு பழங்களைப் புசிப்பதில்லை எனத் தாம் சபதம் எடுத்திருந்ததால், அப்பிள் பழங்களை ஏற்பதை மரியாதையாக நிராகரித்தும் காந்திஜீ பதில் எழுதி யிருந்தார்.

ஆரம்பத்தில் யாழ் முற்றவெளியில் நிகழ்ந்த பொது வரவேற்பு வைபவம் மற்றும் மாணவர் காங்கிரஸ் கூட்டம், தவிர அவரது ஏனைய பிரதான சொற்பொழிவுகள் யாழ்ப்பாணத்து இந்திய சமூகத்தினருக்கும், யாழ்ப்பாணத்து இந்துக்களுக்கும், மிசனரிமாருக்கும் இராமநாதன் சீமாட்டி தலைமையின் கீழ் இருந்த இராமநாதன் கல்லூரியின் பழைய மாணவிகளை அதிகமாகக் கொண்டிருந்த சைவ மங்கையர் கழகத் திற்குமே நிகழ்த்தப்பட்டிருந்தன. இவ் வைபவங்களுக்கு இடையே யாழ்ப்பாணத்தில் ஏறத்தாழ பன்னிரு பிரதான பாடசாலைகளுக்கு காந்திஜீ அழைத்துச் செல்லப்பட்டார். யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல்யம் பெற்ற இந்து மற்றும் கிறிஸ்தவ கல்லூரிகளுக்கு காந்திஜீ வருகை தந்திருந்தார். அந்தத் தலைசிறந்த விருந்தினரை முறைப்படி வரவேற்பதற்கு மறுத்து றோமன் கத்தோலிக்க பாடசாலைகள் மட்டும் ஒதுங்கிக்கொண்டன. யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரி, இந்துக் *கல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி, விக்டோரியாக் கல்லூரி,* இராம நாதன் கல்லூரி, பரியோவான் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி மற்றும் யாழ்ப்பாணக் கல்லூரி அடங்கலாக பல பாடசாலைகளுக்கு அவர் வருகை தந்திருந்தார். மேலும் புத்தூர், அச்சுவேலி, வல்வெட்டித் துறை, பருத்தித்துறை, சாவகச்சேரி, சுன்னாகம், தெல்லிப்பளை, மூளாய், மற்றும் காரைநகர் போன்ற இடங்களுக்கும் அவர் விஜயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தார். இந்த அனைத்து இடங்களிலும் கதர் நிதிக்கான சேகரிப்புக்கள் நிகழ்ந்திருந்தன. யாழ்ப்பாணத்தின் பல பாகங்களில் இருந்தும் வந் திருந்த மக்களுக்கு மகாத்மாவைப் பார்ப்பதற்கும் மரியாதை செலுத்து வதற்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டிருந்தது.

தென் இலங்கையைப் போலன்றி யாழ்ப்பாணத்தில் தாம் கால் வைப்பதற்கு முன்பதாகவே இங்குள்ள மக்கள் ஆர்வம் கொண்டிருந்த தீவிர பிரச்சினைகள், புரியாத புதிராகத் தமக்கு இருந்து வந்ததாக காந்திஜீ தாமே குறிப்பிட்டிருந்தார். ஆகவே, மது விலக்கு, பண்டைய பண்பாட்டுக்கு புத்துயிர் அளித்தல், இந்து - கிறிஸ்தவ உறவுகள், உலகிற்கு ஞானத்தைப் போதித்த பெரியார்கள் மத்தியில் இயேசு கிறீஸ்துவுக்கு உரிய இடம், இனவாதம், மேலைத் தேயத்தவர் பின் செல்லல், தேசியம் போன்ற பாரிய பிரச்சினைகள் குறித்து அவர் சுருக்கமாகப் பேசியிருந்தார். எவ்வாறாயினும், இந்தியாவில் பட்டினி யால் வாடும் கோடிக்கணக்கானோரின் தலை விதியே அவரது பேச்சின் அதி பிரதான விடயமாகவிருந்தது. மாணவர்கள் மத்தியில் சுருக்கமாக அவர் பேசியபோது இந்தச் செய்தியையே விசேடமாக அழுத்தி உரைத்திருந்தார். யாழ்ப்பாணத்தில் சேகரிக்கப்பட்ட பணமுடிச்சின் மிகப்பெரும் பகுதி மாணவர்களிடம் இருந்தே கிடைத்திருந்தது.[62] "உங்கள் பண முடிச்சு எனக்கு அசாதாரண மதிப்பு வாய்ந்தது. அறிவாளி கள் மற்றும் வயோதிபர்களிடம் இருந்து கிடைக்கப் பெற்றவையைக் காட்டிலும் உங்கள் பணமுடிச்சு எனக்கு பொன்னானவை. ஆண், பெண் பிள்ளைகளிடமிருந்து பெற்றுக் கொண்ட பணம் அதிக பலம் தரும் என யான் அறிந்திருக்கிறேன். கள்ளமோ, கபடமோ இல்லாத முத்திரையைத் தாங்கி வருகின்றது உங்கள் பணம். உங்களைப் போலவே ஒன்றுமறியாத கள்ளங் கபடமற்ற கோடிக்கணக்கான ஆட வர்கள் மற்றும் பெண்களில் சிலருக்கே அது செல்லுகின்றது" என்று யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்களை விழித்து உரை நிகழ்த்தும் போது அவர் குறிப்பிட்டிருந்தார்.[63]

யாழ்ப்பாணத்து இந்து மக்களை விழித்து காந்திஜீ உரையாற்றும் போது, இந்து - கிறிஸ்தவ மக்களுக்கு இடையே எழுந்திருக்கும் வேற்றுமைகள் தொடர்பாகப் பேசினார். ஏனைய ஒவ்வொரு மதத் திற்கும் சகிப்புத் தன்மையும், தாராள மனப்பாங்கும் காட்டுவது இந்து சமயம் என அவர் அழுத்தி உரைத்தார். ஏனைய மதங்களைச் சேர்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களைச் சகோதரர்களாக இந்து மக்கள் நடத்தினாலன்றி, வேண்டிய மெய்யான தேசிய உணர்வை ஒரு போதும் அடைய முடியாது எனவும், ஆகையால் அவசியமான இந்து மற்றும் மனிதாபிமான உணர்வையும் அடைய முடியாது எனவும் காந்திஜீ மேலும் தெரிவித்தார். அவர்களது சொந்தப் பிள்ளைகளின் கல்வியைக் கட்டுப்படுத்தும் உரிமை அவர்களுக்கு உண்டு என்றும் செம்மையான உணர்வுடன் இதனை அவர்கள் பலப்படுத்த வேண்டும் எனவும் கிறிஸ்தவ மிஷனரிமார்களின் நிறுவனங்களுடன் கசப்பான போட்டியாக அதனை அர்த்தப்படுத்திக் கொள்ளுதல் ஆகாது எனவும் இந்து மதத் தலைவர்களுக்கு அவர் எடுத்துரைத்திருந்தார். திறமையான ஆற்றல் நிறைந்த கல்விமான்கள், பணியாளர்கள் உங்கள் வசம் இருக்குமாயின், இந்துமத பிள்ளைகளுக்குத் தேவையான வசதி வாய்ப்புக்களை அளிக்கக் கூடுமாயின் இயல்பாகவே அனைத்து இந்துமத பிள்ளைகளும் உங்கள் நிறுவனங்களுக்கே வருவார்கள். கல்வி தொடர்பான விடயங்களிலான பரஸ்பரம், பொறாமை கொள்வதற்கு எந்தவொரு காரணமும் இருப்பதாக எனக்குத் தெரியப்படவில்லை. இது பற்றி எந்தவொரு காரணமும் இருப்பதாக எனக்கு புலப்படவில்லை. இது பற்றி நான் சற்று அறிந்து வைத்திருக்கிறேன்.

அதிகப் பெரும்பான்மையினராக நீங்கள் விளங்குவதால் முன்னேற்றங்களை அடைவதும், உங்கள் எல்லா பிணக்குகளைத் தீர்த்துக் கொள்வதும் உங்களைப் பொறுத்ததே. இந்து சமயத்தினுள் ஊடுருவியுள்ளதாகிய படு இழிவான சாதி உணர்வினை நீங்கள் அப்புறப்படுத்திவிடுவீர்களானால் சிரமங்கள் அனைத்தும் அகன்றுவிடும்.[64] 'இந்தியாவில் காந்திஜீயின் பயணங்களின் போது அடிக்கடி நிகழ்ந்தது போன்றே, தலைநகர் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் கிறிஸ்தவமதம் குறித்த அவரது மனோபாவத்தினை தெளிவுபடுத்தும்படி அவரிடம் கிறிஸ்தவ மிஷனரிமார் கேட்டுக்கொண்டனர். யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவ மிஷனரிமாருடனான சந்திப்பின்போது காந்திஜீ "தமது மந்தையைப் பெருக்கும் நிமித்தம் தீண்டத்தகாதவர்களைக் கவர்ந்து கொள்வதற்கு எத்தனிப்பது தன்னால் பொறுமை காத்துக் கொள்ளக்கூடிய விடயமல்ல" என மிஷனரிமார் மற்றும் முஸ்லிம்களிடம் காந்திஜீ வலியுறுத்தியிருந்ததாக தேசாய் கூறினார். மேலும், மைசூர் திவானைப் போன்றே அவர்களால் இயன்றால் தீண்டத்தகாதவர்களைச் சிறந்த இந்துக்களாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றுவதற்குப் பாடுபட்டு உழைக்கும்படி அவர்களிடம் தாம் கேட்டுக் கொள்வதற்கு விரும்புவதாகக் கூறியதாகத் தேசாய் தெரிவித்திருந்தார். "ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொள்வதன் மூலம் சிறந்த மக்களாக வருதலே அனைத்து மதங்களையும் சேர்ந்தவர்களது நோக்கம் என்றும், அவ்வாறு நிகழ்ந்தால் உலகம் வாழ்வதற்கு மிகவும் சிறந்த இடமாக விருக்கும்" என்றும் காந்திஜீ வலியுறுத்தியிருந்தார். "பரந்தளவு சகிப்புத் தன்மைக்காக நான் பரிந்து மன்றாடுகின்றேன் என்பதுடன் அந்த இலக்கை நோக்கமாகக் கொண்டே நான் உழைத்தும் வருகின்றேன். நான் கனவு காணும் இந்தியாவில் ஒரே மதமாக, அதாவது முழுமையும் இந்துவாக அல்லது முழுமையும் கிறிஸ்தவமாக அல்லது முழுமையாக இஸ்லாமியராக இருத்தல் வேண்டும் என நான் எதிர்பார்க்கவில்லை. ஆயின், அதனுடைய மதங்கள் யாவும் முழுமையான சகிப்புதன்மை மற்றும் சகவாழ்வைப் பேணிவருதலை யான் விரும்புவேன்" என்றார் காந்திஜீ.[65]

'குண்டுச் சட்டியில் குதிரையோட்டம்' போன்ற ஒன்றாக இந்து கிறிஸ்தவ வேறுபாடுகளைக் குறிப்பிட்ட காந்திஜீ இரு பிரிவுகளையும் ஒன்றுபடுத்துவதற்குத் தான் உழைப்பதற்கு விருப்பம் தெரிவித் திருந்தார். யாழ்ப்பாணத்தில் தோன்றியிருந்த போட்டி பூசல்களை ஓரளவேணும் தணிப்பதற்குக் காந்திஜீயினது வருகை உபயோகமான தாயிருந்தது. "முன்னர் பேதப்பட்டவர்களாக இருந்துவந்த இந்துக்களும் கிறிஸ்தவர்களும் மகாத்மாவைக் கௌரவிப்பதில் இணைந்து பணி யாற்றி இருந்தனர் என்பதே மகாத்மாவினது வருகையின் சிறந்த பெறுபேறுகளில் ஒன்று" என ' உதயதாரகை' கருத்து வெளியிட்டி ருந்தது.[66] காந்திஜீயின் வருகைக்கு சற்று முன்னதாக அவரது வருகையின் இந்துத்துவ முக்கியத்தை 'இந்து சாதனம்' வலியுறுத்தி இருந்தது. ஆயின், அவர் வந்து சேர்ந்ததன் பின்னரோ அவரது செய்தியின் பரந்து விரிந்த தன்மையை 'இந்து சாதனம்' அழுத்தி உரைத்திருந்தது. "1927 நவம்பர் 26ஆம் திகதி யாழ்ப்பாண வரலாற்றில் பொன்னெழுத் துக்களால் பொறிக்கப்படவேண்டிய தினமாகும். இத்தினத்தில்தான் தமது திருப்பாதத்தை மகாத்மா காந்தி யாழ்ப்பாணத்தின் மண்ணில் பதித்திருந்தார். தமிழ் மற்றும் சிங்கள, பௌத்த வரலாற்று இலக்கியத்தில் நீண்ட நெடுங்காலத்து பாரம்பரியமொன்று பொதிக்கப்பட்டிருக்கிறது. அதாவது, இந்திரனால் அருளப்பட்டிருந்த நவரத்தினங்கள் பதிந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்காசனத்துக்கு உருத்துக்கோரி நாக மன்னர் இருவர் போர்க்கொடி உயர்த்தியபோது நாட்டிற்கு வருகை தந்த கௌதம புத்தபிரான் அவர்களுக்கு உபதேசம் செய்திருந்தமை ஆகும். இருபத்தைந்து நூற்றாண்டுகள் கழிந்த பின்னர் அதே நாடு பாரத கண்டத்தில் உதித்த மற்றுமோர் அழியாவரம் பெற்ற தவப் புதல்வனை வரவேற்று ஆதி காலத்தில் நாக மன்னர்களுக்கு புத்தர்பிரான் அன்பும் வாய்மையும் குறித்து அருளியிருந்த அதே செய்தியைச் செவிமடுக்கும் பாக்கியத் தினை திரும்பவும் பெற்றிருந்தது" என்று அவரது வருகை குறித்து 'இந்து சாதனம்' ஆசிரியர் தலையங்கத்தில் வர்ணித்திருந்தது.[67]

மகாத்மா காந்தி தலைமன்னார் ஊடாக இந்தியாவுக்குத் திரும் பினார். தாம் புறப்படுவதற்குச் சற்று முன்னதாக பின்வரும் செய்தியை யாழ்ப்பாணத்தின் வரவேற்புக் குழுவிற்கு மகாத்மா காந்தி அனுப்பி யிருந்தார்.

> முழு இலங்கைக்கும் அதேபோல யாழ்ப்பாணத்திற்கும் நான் விட்டுச் செல்லும் செய்தியானது: "பார்வையில் அகன்றதும் மனதில் அகன்று விடக்கூடாது". பட்டினியால் வாடும் இலட்சோப இலட்சம் மக்கள் குறித்து யான் கூறிவைத்த துன்பியல் கதைகள் உங்கள் மனதில் நிழலாடிக்கொண்டிருக்கட்டும். அவர்களுடன் தொடர்பு பூண்டவர்களாக இருக்கச் செய்யட்டும். அதற்கப்பால் உங்கள் நலனுக்காக அல்லாவிடினும் குறைந்தபட்சம் அவர்களது நலனின் நிமித்தமாவது உங்களையும் எளிய வாழ்வு வாழ்பவர்களாகவும் மதுபானம் மற்றும் தீண்டாமையில் இருந்து விடுபட்டு புனிதர்களா கவும் வைத்துக் கொள்ளுங்கள்.[68]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

As at the Ashram,
Sabarmati,
3.2.27.

Dear friend,

I have your letter. During my visit to the South, I should love to respond to your invitation. But there are many difficulties in the way. If I go to Jaffna, I must go to other places in Ceylon which means quite a few days there. This year I want to devote purely to Khadi work and Khadi collection. If therefore I went to Ceylon, I would want to make Khadi collections. The best thing I can therefore do is to forward your letter to Sjt. C. Rajagopalachariar, who is organising the tour in the South and let him decide. Please correspond with him. His address is Gandhi Ashram, Tiruchengodu (South India).

Yours Sincerely,
M.K. Gandhi



I. P. Thurairatnam,
Joint Secretary,
Students' Conference,
Jaffna College,
Vaddukoddai
(Ceylon)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் கோயில் வீதியிலுள்ள முதலியார் இல்லத்தில் நேரு குடும்பம் (1931)



இருப்பவர்கள (இடமிருந்து வலம்): எஸ். சோமசுந்தரம், கமலா நேரு, மங்கையர்க்கரசி குமாரசுவாமி, ஜவர்லால் நேரு, அவரின் மகள் இந்திரா.
தரையில் (இடமிருந்து வலம்) : லிங்காம்பிகை சுந்தரலிங்கம், ஞானலிங்கம், சுந்தரி, சத்தி குமாரசுவாமி.
நிற்பவர்கள் (இடமிருந்து வலம்) : நேருவின் உதவியாளர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

## இன ஒற்றுமை

1928ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் கீரிமலை, வைத்திலிங்கம் மடத்தில் மாணவர் காங்கிரஸின் நான்காவது வருடாந்த அமர்வுகள் நடைபெற்றன. குடா நாட்டின் பலர் இந்த அமர்வில் கலந்து கொண்டிருந்தனர். இளவயதினர் மத்தியில் கங்கிரஸுக்கு இருந்த அபிமானத்துக்கு அதுவே சான்று. யாழ்ப்பாணத்தின் பொது வாழ்வில் கணிப்பில் கொள்ளப்பட வேண்டிய ஓர் அம்சம் இப்பொழுது வளர்ந்திருந்தது. அது இன்னமும் தன்னை அரசியல் ரீதியான அமைப்பாக நிலைநாட்டத் தலைப்பட்டிராத போதும் பொதுஜன அபிப்பிராயத்தை உருவாக்குவதில் முக்கிய பங்கை ஆற்றுவதற்கு காங்கிரஸ் ஆரம்பித்திருந்தது. பழைய தலைமுறையினர் அதனை ஒரு சக்தியாக ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. அவ்வளவு மகத்தான வெற்றியுடன் காந்திஜீயை இலங்கைக்கு வரவழைத்தமையையும், யாழ்ப்பாணத்தில் அவரது நிகழ்ச்சி நிரல் அநேகமாக முற்றிலும் காங்கிரஸின் பொறுப்பில் விடப்பட்டிருந்தமையும் அதற்கு பெருமதிப்பை எட்ட முடிந்தது. காங்கிரஸ் தலைவர்கள் தமது செல்வாக்கை நிலைநாட்டி தங்கள் கருத்துக்களை தயக்கமயக்கமின்றி வெளிப்படையாகவே உரைப்பதற்குத் தலைப்பட்டனர்.

மதப்பற்று, புலமை, தேசியம் மற்றும் கல்வி வளர்ச்சிக்கான குறிக்கோளில் பற்றுறுதி கொண்டிருந்தவராகிய சுவாமி விபுலானந்த அடிகளார் அமர்வுகளுக்கு தலைமை வகித்தார். சென்னையில் சுயராஜ்யக் கட்சியின் துணைத் தலைவர் ஸ்ரீ எஸ். சத்தியமூத்தி, நாலந்தா வித்தியாலய அதிபராயிருந்தவரான ஜி.கே. டபிள்யூ. பெரேரா, தொழிற் கட்சித் தலைவர் ஏ. ஈ. குணசிங்கா போன்ற பிரபல சிங்களப் பிரமுகர்களும் பேச்சாளர்களாகப் பங்கேற்றனர். மேலும் ஆர். சிறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்மநாதன் மற்றும் ஏ. கனகரத்தினம் ஆகியோராலும் விரிவுரைகள் நிகழ்த்தப்பட்டன. சமூக பொருளியல் மற்றும் அரசியல் விடயங்கள் அடங்கலாக பலதரப்பட்ட விரிவுரைகள் இடம்பெற்றிருந்தன.[69]

காந்திஜீயுடனும் ஏனைய இந்தியத் தலைவர்களுடனும் மாணவர் காங்கிரஸ் தொடர்ந்து தொடர்பு கொண்டு வந்திருந்தது. சத்தியமூர்த்தி என்பவர், தனது நாவன்மை மற்றும் அவரது உரையின் திறமை காரணமாக பெரும் ஜனத்திரளை ஈர்த்திருந்தார். காங்கிரஸின் வருடாந்த அமர்வுகள் நடைபெறுவதற்கு சற்று முன்னதாக காந்திஜீடமிருந்து கிடைத்திருந்த செய்தி வருமாறு:

> மாணவர் காங்கிரஸ் வெற்றிகரமாக நடைபெற யான் வாழ்த்துகின்றேன். தாய் நாட்டில் இலட்சோப இலட்சம் பட்டினியில் வாழும் மக்களை மாணவர்கள் மறந்துவிடமாட்டார்கள் என யான் எதிர் பார்க்கின்றேன். அத்தோடு கதர் உடையை பாவித்துப் பழகுவதன் மூலம் தங்களை அவர்களுடன் இனங்கண்டு கொள்வதே அவர்களுக்கு நல்கும் மிகப்பெரிய உதவியாகும்.[70]

காங்கிரஸின் இந்த வருடாந்த அமர்வுகள் தீவிரமான நிலைப் பாட்டை எடுத்துக் கொள்ளுவதற்கான மனோநிலையை அப்போது ஒரு சட்ட மாணவராக விருந்த எஸ். நடேசனே ஏற்படுத்தியிருந்தார். வரவேற்புக் குழுவின் தலைவராக செயற்பட்ட அவர் அக்காலகட்டத்தின் பிரதான அரசியல் பிரச்சினைகளை உள்ளடக்கியதானதொரு வரவேற்புரையை நிகழ்த்தியிருந்தார். டொனமூர் ஆணைக்குழு முன்பாக அளிக்கப் பட்டிருந்த சாட்சியங்கள் அவரது உரையின் பெரும்பகுதியாயிருந்தது. ஆலோசனைக்கான பின்வரும் விடயங்களை ஆராய்வதற்காக டொனமூர் பிரபுவின் தலைமையின் கீழ் விசேட விசாரணைக்குழு 1927 நவம்பரில் இலங்கை வந்தடைந்திருந்தது.

> இலங்கைக்கு விஜயம் செய்து தற்போதைய அரசியலமைப்புத் திட்டத்தின் செயற்பாடு குறித்தும், அதனோடு தொடர்புபட்டதாகத் தோற்றியிருக்கக்கூடிய ஏதும் நிர்வாகச் சிரமங்கள் குறித்தும் அறிக்கை சமர்ப்பிப்பது. முன்வைக்கப்படக்கூடிய அரசியலமைப்புத் திட்டத்தினை திருத்தியமைக்கும் முகமாக முன்வைக்கப்படும் யோசனைகள் எதனையும் பரிசீலித்தல், மற்றும் தற்போதைய நடைமுறையில் உள்ள (பிரித்தானியப் பாராளுமன்ற) சட்டத்தில் கழகத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> பணிப்பினால் செய்யப்படவேண்டிய திருத்தங்கள் யாதேனும் இருப்பின் அவற்றை அறிவித்தல்.[71]

1928ஜூலையில் பிரித்தானிய பாராளுமன்றத்தில் டொனமூர் ஆணைக்குழுவின் அறிக்கை முன்வைக்கப்பட்டது. ஆணைக்குழுவின் பிரதான பரிந்துரைகளைப் பின்னர் மாணவர் காங்கிரஸ் நிராகரித்தது. இந்நாட்களில் 1928 ஏப்றிலில் நான்காவது வருடாந்த அமர்வுகள் நடைபெற்றபொழுது ஆணைக்குழுவின் முன்பாக அளிக்கப்பட்ட சாட்சியத்தின் தன்மை குறித்து நடேசன் வர்ணித்திருந்தார். உறங்கிக் கொண்டிருந்த பிற்போக்காளர்களை துயில் எழச் செய்திருந்த காலமாகவும் இந்நாட்டினது வரலாற்றின் வெறுக்கத்தக்க ஒரு காலகட்டமாகவும் அதனை நடேசன் வர்ணித்திருந்தார். பல்வேறு சமூகங்கள், சமயங்கள் மற்றும் சாதிகள் எவ்வாறாக ஒன்றோடு ஒன்று மோதிக் கொண்டு தத்தம் சுயநலன்கள் மற்றும் தத்தம் குறிக்கோள்களை மட்டுமல்லாமல் நாடு சுயாட்சி அந்தஸ்தை அடைவதற்கு தகுதியற்றதாக கருதப்படுவதாகவும் பறைசாற்றியிருந்ததை அவர் குறிப்பிட்டிருந்தார். நடந்தவை பற்றி தேச பக்தர் ஒவ்வொருவருமே வெட்கமடைதல் வேண்டும் என்று அவர் தெரிவித்தார். சட்டவாக்க சபையில் விசேட பிரதிநிதித்துவம் மூலம் அவர்களது உரிமைகள் பாதுகாக்கப்படாவிட்டால், அவரவரது சாதிகள், சமயங்கள், மற்றும் சமூகங்கள் அழிந்து போகும் என்று மதிப்புக்குரிய பொது மனிதர்கள் அந்த விசேட ஆணைக்குழுவின் முன்பாகச் சென்று தெரிவித்துள்ளார்கள். வயது முதிர்ந்தவர்களை நடேசன் தாறுமாறாகச் சாடியிருந்தார். அரைவேக்காடானதும் அறிவிலித்தனமானதுமான சீர்திருத்தத் திட்டங்களை முன்வைத்ததன் மூலம் தீய சூழலை உருவாக்கிய பிரகிருதிகள் என நடேசன் அவர்களை வர்ணித்தார். சட்டவாக்க சபையின் உறுப்பினர்களும், உறுப்பினர்களாக வருவதற்கு எதிர்பார்த்திருந்தவர்களும் பித்துப் பிடித்த சமயவாதிகளாகிவிட்டதாக நடேசன் கருதினார். அவர்கள் ஒரு சில மேலதிக ஆசனங்கள் அவரவர் மதங்களை வலுப்படுத்தி பரப்புவதற்கு உதவும் என்று பிரசித்தம் செய்திருந்தனர். அத்தகைய பொறுப்பற்ற பிதற்றலை வயோதிபம் உண்டு பண்ணியிருக்குமாகில் எவ்வளவு விரைவாக அத்தகைய தலைவர்கள் அரசியல் அரங்கில் இருந்து அகலுகின்றார்களோ அவ்வளவு நல்லதென

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடேசன் வலியுறுத்தினார். பெரிய புத்தி படைத்த அத்தகைய மனிதர்கள் நீண்டகால அன்னிய ஆட்சிவாயிலான அடிமை மனப்பான்மையிலிருந்து தங்களை விடுவித்துக்கொள்ள முடியாவிட்டால் சுயாட்சியை எய்துவதற்கு மிக அதிகமாக உழைப்பதே அவசியம் என நடேசன் மேலும் கோடிட்டுக் காட்டினார்.

இனரீதியான பிரதிநிதித்துவம் போலி வைத்தியம் போன்றதாகும். அது கேடானது. ஆகையால் நிச்சயமாக அதனை ஏற்றுக் கொள்ள முடியாது என அவர் குறிப்பிட்டார். பல்வேறு சமூகங்களை ஓரளவேனும் ஐக்கியப்படுத்துவதற்கு மாறாக இனப்பூசல்கள் மோசமடைந்து முன் எப்போதுமில்லாதவாறான பிளவுகள் தற்போது ஏற்பட்டுள்ளன.[72] இந்தவகையில் டொனமோர் ஆணைக்குழு இனரீதியான பிரதிநிதித்துவ முறைமையை நிராகரித்தது. அது தொடர்பாக ஆணைக்குழு வெளியிட்டதும், தற்போது நன்கு அறியப்பட்டுள்ளதுமான கருத்துக்கள் அந்த வரவேற்புரையில் முன்கூட்டியே பிரதிபலிக்கப்பட்டதாகத் தோன்றியது.

டொனமோர் ஆணைக்குழு அறிக்கையில் கூறப்பட்டது வருமாறு: "இலங்கையில் நிலவும் நிலைமையை ஆராய்கையில் இனரீதியான பிரதிநிதித்துவம் மக்களுக்கு மிகவும் குந்தகமானது என்ற முடிவை நாம் எதுவித தயக்கமும் இன்றி மேற்கொண்டோம். அது மக்களின் அதி முக்கியமான மனித சக்தியை மோசமாக அழித்து விட வல்லது. மேலும், அது சுயநலம், சந்தேகம் மற்றும் பகைமையை வளர்த்து, அரசியல் உணர்வு புத்துயிர் பெறுவதை பாழாக்கி தேசிய உணர்வு வளர்ச்சி பெறுவதை நிச்சயமாக தடுக்கவல்லது." ஆணைக்குழு அறிக்கை மேலும் கூறியதாவது "தமது பொதுத் தலைமையை உணர்ந்து கொள்வதன் மூலமும் நாட்டின் பிரஜைகள் என்ற வகையில் தமது பொதுக் கடப்பாடுகளை ஏற்றுக் கொள்வதன் மூலமுமே, பல்வேறு மக்கட்பிரிவினரை ஒன்றுபடுத்தும் நம்பிக்கை பிறக்கும் என்பதால் அசியலமைப்பில் விசேடமான அம்சமாக நிலைத்திருக்க வேண்டும். ஏனென்றால் இனரீதியான பிரதிநித்துவ முறைமையானது சீரழிவு குணாம்சங்களை தன்னகத்தே கொண்டிருக்கின்றது."[73] நடேசன் தனதுரையில் காந்திஜி மேற்கொண்ட விஜயம் காங்கிரஸ் கொண்டுள்ள நோக்கங்களுக்கும் இலட்சியங்களுக்கும் மிகப்பெரிய உத்வேகத்தை அளித்துள்ளதாகவும், அத்தகைய ஒருவரின் கருத்துக்களுக்கு செவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடுக்க வேண்டுமாயின், நிச்சயமாக இன்றுதான் அதற்குரிய காலம் என்பதையும் வலியுறுத்தியிருந்தார். மகாத்மா காந்தியின் சர்வவியாபகச் செய்தியும் காலத்திற்கு மிகவும் உகந்ததாக அமைந்திருந்தது. குறுகிய மனப்பான்மை மற்றும் அரசியல் உள்ளறிவு இன்மையை மேலும் வெட்கக்கேடான விதத்தில் வெளிப்படுத்துவதைத் தடுப்பதற்கு காந்தியின் கருத்துக்கள் மிகச் சக்திவாய்ந்தவையாயிருந்தன.

சுயாட்சி அல்லது சுதந்திரம் கிடைத்த நிலையில் சிங்கள பெரும் பான்மையினர் ஆதிக்கம் செலுத்தி, மற்றைய இனத்தவர்களை புறந் தள்ளி தமது சொந்த நலன்களை வளர்ப்பதற்கு இடமுண்டு எனும் வாதம் எழுந்தபோது, நடேசன் அதற்கு பதிலிறுத்தார். நீண்ட நெடுங் காலமாக அந்நிய ஆட்சிக்கு ஆட்பட்டிருந்த நிலையில், சுதந்திரம் மலரும் வேளையில் அல்லது சந்தர்ப்பத்தில் பெரும்பான்மை சமூகம் தனது கைக்கெட்டியுள்ள அதிகாரத்தினை தனது குறுகிய, சுயநல தேவைகட்கு பயன்படுத்த முற்படும். ஆனால், அதிகளவு அதிகாரத் தினை அரசு தன்வசமாக்கிக் கொள்வதற்கு, அதிகளவு செயற்றிறன் மிக்கதாக ஒவ்வொரு சமூகமும் கட்டியெழுப்பப்படுவது நாட்டைப் பலப்படுத்துவதற்கு அவசியம் என்பது காலப்போக்கில் கிடைக்கும் அனுபவம் உணர்த்திவிடும் என்பதே நடேசன் அளித்த பதிலாகும். அவ்வாறாக, குறுகிய போக்குகள் அகன்று மக்கள் நாட்டை முதன்மைப் படுத்த முற்படுவர் என அவர் நம்பிக்கை வெளியிட்டார். அவர்களின் சஞ்சலங்கள் எல்லாவற்றிற்கும் சுதந்திரமே பரிகாரமாகும் எனக் கூறினார்.

வரவேற்புரையைத் தொடர்ந்து, சுவாமி விபுலானந்தர் தலைமை உரையை நிகழ்த்தினார். தனது அந்தஸ்திற்கு ஏற்றவாறு ஆற்றிய பரந்துபட்ட அந்த உரையில் விவேகம் நிறைந்த பொதுஜன அபிப் பிராயத்தை உருவாக்குவதற்கு மாணவர் காங்கிரஸ் அதி முக்கியமான பங்கு வகிக்க வேண்டுமென வலியுறுத்தினார். நாட்டு மக்கள் முகம் கொடுக்கும் சமூக, அரசியல், பொருளாதார மற்றும் கல்வி தொடர்பான பிரச்சினைகளை அவர் சுருக்கமாக எடுத்துரைத்தார். அதேநேரம், நாட்டின் வாழ்வு தொடர்பான இப்பிரச்சினையை இளைஞர் நன்கு அலசி ஆராய்ந்து கொள்ள வேண்டுமெனவும் அவர் அறைகூவல் விடுத்தார். மகாத்மா காந்தியின் இலங்கை விஜயத்தின் முக்கியத் துவத்தைக் குறிப்பிட்ட அவர், ஒரு ஞானியாகிய அந்த இந்தியத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவர் சரியான எண்ணத்தை சரியான செயலாக வாழ்ந்து காட்டிய வரென கூறிவைத்தார். இந்துக்கள், கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள், பௌத்தர்கள் வெவ்வேறு சமூகங்களைச் சாந்தவர்களாயினும் பொது நலனுக்கு ஒன்றிணைந்து உழைக்க வேண்டுமென அவர் விடுத்த செய்தியை அடிகளார் வலியுறுத்தினார். சுவாமி விபுலானந்தர் கல்விக்கே அதிக முக்கியத்துவம் அளித்தார். இலங்கை பல்கலைக்கழகம் ஸ்தாபிக்கப்படுவதற்கான திட்டத்தை அவர் வரவேற்றதோடு, அது தேசிய வாழ்வுக்கு வேகமளிக்குமெனக் கூறினார். எதிர்கால பல்கலைக் கழகத்தின் கீழைத்தேய பிரிவு தமிழ் கற்கைகளின் முக்கியத்துவத்தை அங்கீகரிக்க வேண்டுமெனவும் கருத்துத் தெரிவித்தார். பாடசாலை பாடத்திட்டத்தில் இந்திய வரலாறும் உள்ளடக்கப்பட வேண்டுமெனவும் அவர் பரிந்துரைத்தார். இலங்கையின் எதிர்கால பிரஜைகளுக்கு சிவில் மற்றும் அரசியல் பொறுப்புகளைப் பயிற்றுவிப்பதில் பல்கலைக் கழகம் அதி முக்கியமான பாத்திரத்தை வகிக்க வேண்டுமென அவர் ஆவல் கொண்டிருந்தார்.

சுவாமி விபுலானந்தர் பொருளாதாரச் சுதந்திரத்தை வலியுறுத்தியதன் மூலம் தனக்கே உரிய தீவிரமான சிந்தனைப் போக்கினை வெளிப் படுத்தினார். பொருளாதார முன்னேற்றம் இல்லாவிட்டால் பொறுப்பு வாய்ந்த அரசாங்கமானது சிலுசிலுப்பே தவிர பலகாரமாய் இருக்க முடியாது. நாட்டின் வங்கி, மற்றும் வணிகத்துறைகள் முற்று முழுதாக வெளியார் கைகளிலே உள்ளன. நாட்டின் செல்வத்தின் பெரும்பகுதி யும் அவ்வாறாகவே உள்ளது. அவர்கட்கு நாட்டு நலனில் நிரந்திர அக்கறை கிடையாது. சுரண்டலில் ஈடுபடும் ஐரோப்பியர் வருவார்கள், போவார்கள். அரசாங்கம் நாட்டைக் கட்டியெழுப்புமென எதிர்பார்த்து கைகட்டி நிற்கும் பழக்கத்தினை அவர் கடிந்தார். நீண்டகாலம் அந்நிய ஆட்சியிலிருந்து கிடைத்த அடிமை மனப்பான்மையே அதற்கான காரணமென அவர் இடித்துரைத்தார். ஒரு மனப்பான்மை மாற்றத்தினை கொண்டுவருமாறு இளைஞருக்கு அறைகூவல் விடுத்ததோடு, மக்களே தமது விடுதலைப் பாதையை செப்பனிட்டுக் கொள்ள வேண்டுமெனவும் சூளுரைத்தார்.

நாட்டில் நிலவும் படுமோசமான வறுமை, மற்றும் அதிர்ச்சியூட்டத் தக்க படிப்பறிவின்மை மீது அவர் கவனத்தை ஈர்த்தார். 50% மான பள்ளிப் பருவத்தினர் பாடசாலை செல்வதில்லை; பாடசாலை வசதிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றாக்குறையாக இருப்பதாகவும் அவர் கூறினார். நாட்டில் விதிக் கப்படும் அநேகமான வரிகள் மறைமுக வரிகளாகும். பெரும்பாலும் இறக்குமதி செய்யப்படும் உணவுப் பண்படங்கள் மீது விதிக்கப்படும் வரிகள் பணமுதலைகளுக்கும், பரிதவிக்கும் ஏழைகளுக்கும் ஒரே அளவானதாக உள்ளதென சுவாமி விபுலானந்தர் கோடிட்டுக் காட்டினார்.[74]

பாடசாலைகள் முகாமைத்துவம் தொடர்பாக இந்துக்களுக்கும் கிறிஸ்தவர்க்கும் இடையில் நிலவும் கசப்புணர்வு மீது நடேசனும் சுவாமி விபுலானந்தரும் கருத்துத் தெரிவித்தனர். இந்துக்களின் தேவை கள் கூடுதலானபடியால், அவர்கட்கு கிறிஸ்தவர்களைக் காட்டிலும் கூடுதலான அரச நன்கொடை கிட்டவேண்டுமென நடேசன் கூறினார். இந்துக்கள் தமது நியாயபூர்வமான அபிலாசைகளை எட்டுவதற்கு கிறிஸ்தவர்கள் உதவ வேண்டும். அதேநேரத்தில் இந்துக்கள் மதவிரோத அடிப்படையிலான சந்தேகம் எதுவும் கொள்வதற்கு எள்ளளவும் இடமளிக்கப்படாது எனவும் அவர் கூறினார். மேலும், குறிப்பாக இந்து பாடசாலைகளில் சிறுபான்மைத் தமிழ் பிள்ளைகள் புறக்கணிக் கப்பட்டு வருவதை அவர் கண்டித்தார். நாட்டின் எத்தனையோ இடங்களில் கல்வி வசதிகள் இல்லாதிருக்கையில், சில பகுதிகளில் ஒன்றின் மேல் ஒன்றாக பல பாடசாலைகள் இருப்பது ஏன்? என அவர் வினா எழுப்பியதோடு, இந்து, கிறிஸ்தவ நிறுவனங்கள் ஒட்டு மொத்தமான இப்பிரச்சினை மீது கவனம் செலுத்த வேண்டும் என்று கூறிவைத்தார். கொழும்பில் மட்டும் 10,000 மாணவர்கள் கல்வி வசதியின்றி தவிக்கின்றனர் என அவர் சுட்டிக் காட்டினார். தமிழ் தொழிலாளிகளின் பிள்ளைகள் அறியாமையில் வாடுகின்ற நிலையில் தமது முன்னோர் ஆளாக்கப்பட்டிருந்த அடிமை வாழ்க்கைக்கும், அடிமைத் தொழிலுக்கும் பழக்கப்பட்டு வருகின்றபடியால் இலங்கைத் தமிழர் அவ்வவ் மாவட்டங்கள் தோறும் அதிக பலனுள்ள கல்வி வசதிகளை ஏற்படுத்துவதற்கு உழைக்க வேண்டுமெனவும் வலியுறுத் தினார். சிறந்த கல்வியறிவை புகட்டுவதில் அமெரிக்க மற்றும் ஐரோப்பிய மிசனறிமார் ஆற்றி வரும் பங்களிப்பினை அவர் சுட்டிக் காட்டினார்.

செல்வந்த மேற்கு நாடுகள் விஞ்ஞான வளர்ச்சிக்கு அர்ப்பணிப் புடன் உழைப்பதற்காக கிழக்கு நோக்கி மிசனறிமாரை அனுப்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கலாமெனவும் அவர் மேலும் கூறினார். 'கல்வி கல்விக்காக' என்பதே அவர்களின் குறிக்கோளாய் இருக்கவேண்டும். மதமாற்ற முயற்சி மேற்கொள்ளப்படாது என அவர்கள் உறுதியளிக்க வேண்டும். அவர்களின் தன்னலமற்ற முயற்சி பெரிதும் வரவேற்கப்படுவதுடன், தற்போதைய கசப்புணர்வுகளும் நீங்கிவிடும். இந்துக்கள் சகிப்புத் தன்மையை கடைப்பிடிக்க வேண்டுமென வேண்டுகோள்விடுத்த அவர், கிறிஸ்தவர்கள் பழக்கப்பட்டவாறு மதமாற்ற செயற்பாட்டில் ஈடுபட்டாலும் கூட, இந்துக்கள் சற்று சகித்து, பொறுமைகாத்து தாம் செய்யவேண்டிய பணியை ஆரவாரமின்றி எல்லோருடனேயும் கூடியளவு சினேகபூர்வமாக ஈடுபடவேண்டும் என சுவாமி விபுலானந்தர் வேண்டுகோள் விடுத்தார்.

அவர் தனது உரையின் இறுதியில் மாணவர் காங்கிரஸின் தொனிப் பொருளாகிய இன ஒற்றுமை தொடர்பான வேண்டுகோள் ஒன்றையும் விடுத்தார். வெவ்வேறு மதங்களை, சமூகங்களைச் சார்ந்தவர்கள் அநாவசியமான பேதங்களை ஒதுக்கிவிட்டு நாட்டிற்கு ஆற்றவேண்டிய பணி மீது கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக தமிழ், சிங்கள மக்கள் தமது பொருளாதார மற்றும் பொது நலன் கருதி செயற்பட்டு தமது தாய்நாட்டின் முன்னேற்றத்திற்கு உழைக்க வேண்டும் என்பதே அந்த வேண்டுகோளாயிருந்தது.

1928 அமர்வுகளில் நடேசன் நிகழ்த்திய வரவேற்புரையும் சுவாமி விபுலாந்தர் ஆற்றிய தலைமையுரையும் முன்னைய அமர்வுகளை விட சற்றுவேறுபட்ட தன்மையை கொண்டிருந்தன. அவர்கள் நாடு எதிர்நோக்கும் குறிப்பான பிரச்சினைகள் பற்றி எடுத்துக்கூறினர். அவற்றின் மீதே தற்போது இளைஞர் கவனம் செலுத்தி வருகின்றனர். பழைய தலைமைகள் தன்னிச்சையாகவும் திறமையின்றியும் உள்ளனரென அவ்வுரைகள் மூலம் அறியக்கூடியதாக இருந்தது. 'டெய்லி நியூஸ்' தீட்டிய ஆசிரியர் தலையங்கமொன்றில் இளைஞர் விடுத்த செய்தி வலியுறுத்தப்பட்டிருந்தது. அதில் குறிப்பிடப்பட்டது வருமாறு: "விசேட ஆணைக்குழு முன் சமர்ப்பித்த சாட்சியத்தை அவதானித்த எவரும், வயது முதிர்ந்தவர் கையில் நாட்டின் எதிர்காலம் இருக்குமாயின் இலங்கையை கடலில் மூழ்கடிப்பதற்கு ஒப்பானதாகும் என்பதை உடனடியாக ஒப்புக் கொள்வர்." அறுபது வயதைத் தாண்டிய இலங்கையர்கள் இரண்டாவது பிள்ளை பருவத்தில் பிரவேசித்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்மூடித்தனமான, பொறுப்பற்ற செயல்களில் ஈடுபடுவர்.எழுபத் தைந்து வயது முதிர்ந்தவர்கள் முற்றிலும் இருள் சூழ்ந்த மனப்பான்மை கொண்டு தம்மையோ தமது சகபாடிகளையோ, நம்பமாட்டாதவர் களாகவும், தாம் வகிப்பதற்கு தகுதியற்ற பதவிகளில் இருந்து இறங்குவத்தற்கு விரும்பாதவர்களாகவும் விளங்குவர். அந்த நிலையில் இளைஞர் தமக்குரிய இடத்தைப்பிடிப்பதற்கு போராடுவதை ஒரு சவாலாகக் கொள்ளவேண்டியுள்ளது. அது இளைஞரின் இந்த முயற்சியைப் பாராட்டியதுடன் இளைஞரின் உற்சாகத்தின் இந்த மகத்தான வெளிப்பாட்டுக்கு வடக்கை விட வேறு பொருத்தமான இடம் கிடையாது எனக் குறிப்பிட்டிருந்தது. ஏனென்றால், குறிப்பாக அப்பகுதியில் தள்ளாத வயதிலுள்ள இரண்டு அல்லது மூன்று தலைவர்கள் பிறப்பிற்கும் உத்தரவுகளுக்கு ஏனையோர் தலைவணங்கி கீழ்ப்படியும் பாதகநிலை காணப்படுகிறது. நாட்டின் இதரபாகங்களைவிட இந்தியாவைப்பின்பற்றும் தன்மை வடக்கில் பலமாய் உள்ளது என 'டெயிலி நியூஸ்' சுட்டிக் காட்டியது. அவர்கள் இந்தியப் பிரச்சினைகளை ஆராய்வதன் மூலம், வெவ்வேறு சமூகங்களிற்கிடையில் நம்பிக்கை யீனமும் பொறாமையும் ஏற்படுத்தும் அசிங்கமான விளைவுகளை இளைஞர் புரிந்து கொள்ள முடிகிறது. அதனூடான படிப்பினையை இந்த நாட்டின் நன்மைக்கு பயன்படுத்தக்கூடிய அறிவாற்றல் யாழ்ப் பாண இளைஞர்களுக்கு உண்டு. நாட்டிற்கு சுதந்திரம் தொடர்பாக மாணவர் காங்கிரஸ் மேற்கொண்ட நிலைப்பாட்டினை முற்றாக ஏற்றுக் கொண்டு 'டெய்லி நியூஸ்' தெரிவித்த கருத்து வருமாறு:

> ஒரு தமிழ் அமைப்பே சுதந்திரம் தொடர்பாக மிக உறுதியான வாதத்தை விசேட ஆணைக்குழு முன்னிலையில் சமர்ப்பித்தது. கீரிமலையில் நடத்தப்பட்ட மாணவர் காங்கிரஸ் அமர்வுகளிலும் அதே அணுகுமுறையே மேற் கொள்ளப்பட்டது. அதுமட்டுமே நியாயத்திற்கு ஒத்திசைவானதாய் இருந்தது. சுதந்திரம் எனும்போது அது மக்கள் தம்மீது கொண்டுள்ள நம்பிக்கையின் பிரதிபலிப்பாகும். சமுதாயத்தில் வெவ்வேறு வர்க்கங்களும் சமூகங்களும் இருந்து வருவதால் எல்லா சமூகங்கள் மத்தியிலுமான அடிப்படையிலான நம்பிக்கை என்பது அவசியமாகும். இந்த உணர்வுதான் நாட்டின் எதிர்காலத்திற்கு தோள்கொடுப்பதற்கான துணிச்சலை இலங்கை இளைஞர்களுக்கு அளிக்கிறது. ஒருவரில் ஒருவர் நம்பிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்து ஒன்றுபட்டு செயல்படுவதற்கு அவர்கள் தயாராயுள்ளனர். அதுவே அவர்கள் முதியோருக்கு புகட்டும் பாடமாகும்.

இந்தியாவிலிருந்து அதிதியாகக் கலந்து கொண்டவராகிய ஸ்ரீ சத்திய மூர்த்தி, 'இனவாதம் பெரிய அபாயம்' எனும் விடயத்தின் மீது உரையாற்றினார். அவர் நாவன்மையும் அரசியல் ஞானமும் கொண்ட பிரபல்யம் வாய்ந்தவர். அமர்வுகளின் இரண்டாவது நாள் 'தேசியம் சர்வதேசியம்' மற்றும் 'இனவாதம்' என்னும் பொருளில் அவர் உரை நிகழ்த்தினார். ஏனைய மக்களின் விவகாரங்கள் தொடர்பில் வெள்ளைக் காரர் அவசர அவசரமாக தத்துவம் பேசமுற்படுவர் என அவர் கடிந்தார். தேசிய வாதம் குறுகியது, எனவே இந்தியர்கட்கும் இலங் கையர்கட்கும் சர்வதேசியமே சாலச்சிறந்தது என அவர்கள் போதனை செய்வர். சர்வதேசியம் மிகச் சிறந்தது என்பதில் சந்தேகம் இல்லை என்றார் சத்தியமூர்த்தி. ஆனால் ஒருவர் தானே பலவானாயிருந்தால் தான் மற்றவர்கட்கு ஆக்கபூர்வமாக உதவி நல்க முடியும். தேசியவாதமும், தாமே நாட்டின் எஜமானர்கள் எனும் கண்ணோட்டமும் தான் சர்வ தேசியத்தின் முதற்படியாகும். இனவாதம் என்பது முற்றிலும் சுயநலம் கொண்ட குறுகிய சிந்தனையாகும். நஞ்சு போன்று ஆபத்து நிறைந்த தாகும். அதன் இயல்பே அது தான். அது தேசியவாதத்திற்கு முற்றிலும் முரண்பாடானதாகும். இலங்கையிலும் இந்தியாவிலும் இனவாதப் பாதையை நாடுபவர்கள் ஆட்சியாளர்களின் வெட்கமில்லாத கருவிகள் அல்லது அவர்கள் பெரிய ஸ்தானங்களில் உள்ளவர்களின் பரிவின் மூலம் பட்டம் பதவிகளை விரும்பி நிற்பவர்கள் ஆவர்.

இந்திய அனுபவத்தினை மிகத் தெளிவாக உணர்ந்து கொண்ட நிலையில், இனவாதம் அரசியலுக்கு நஞ்சூட்ட வல்லதென்பதால், அதனை யாழ்ப்பாண இளைஞர்கள் நிராகரிக்க வேண்டும். அதே சமயம் இந்தியாவின் அனுபவத்தை படிப்பினையாகக் கொள்ளலாம் என்று அறிவுறுத்தினார். இந்தியாவில் சட்டவாக்க சபையில் இன ரீதியான பிரதிநிதித்துவத்தை பிரித்தானிய எஜமானர்கள் அறிமுகப் படுத்தி இந்திய மக்களைப் பிரித்தாளும் தமது தந்திரோபாயத்தில் வெற்றியீட்டியதை அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் ஒற்றுமை நிலவ வேண்டுமென இதய பூர்வமான வேண்டுகோளை விடுத்ததோடு, பெரும்பான்மையினர் இலங்கையில் சிறுபான்மையினர் மீது ஆதிக்கம் செலுத்துவர் என்று எதுவித அச்சமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளத் தேவையில்லை எனவும் அவர் எடுத்துக்கூறினார். இந்த பண்டைய நாட்டின் வரலாற்றில் அத்தகைய அச்சத்தினை நியாயப் படுத்துவதற்கு ஒன்றுமே இல்லையென அவர் மேலும் கூறினார். அத்தோடு அச்சந்தர்ப்பத்தில் பொருத்தமான கேள்வி ஒன்றையும் எழுப்பியிருந்தார். அதாவது, அந்நியரால் ஆளப்படுவதற்கு தயாரா யுள்ளவர்கள், மண்ணின் மைந்தர்களாகிய சகோதரர்களால் ஆளப்படு வதற்கு ஏன் அச்சம் கொள்ள வேண்டும் என்பதாகும்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் நிலவிவந்த நெருக்கமான, நீண்டகால தொடர்பினை சத்தியமூர்த்தி தனதுரையில் வலியுறுத்தினார். இலங்கையிலுள்ள இந்திய தொழிலாளர்களின் நிலைமைகள் பற்றியும் அவர் குறிப்பிட்டார். பெரிதும் எள்ளிநகை யாடப்படும் அத்தொழிலாளர்கள் ஒரு பெரிய கைங்கரியத்தைச் செய்து விட்டனர். அதாவது, தமது மத சொத்துரிமை போற்றிப் பேணப் பட்டிருந்த தேசமாகிய பாரதமாதாவே தாம் முதன் முதலாக உதித்தநாடு என்றபடியால் நீண்டகால தொடர்பு இருந்ததை இலங்கை மக்கள் ஏறத்தாழ மறந்து போயிருந்ததை அவர்கட்கு இந்தியத் தொழிலாளர்கள் நினைவூட்டியதாகும். ஆர்வமும் தேசப்பற்றும் கொண்ட இந்த நாட்டு இளைஞர்களோடு தொடர்பு கொள்வதற்கு சந்தர்ப்பம் அளித்ததற்கு அவர் நன்றிக்கடன் செலுத்தினார். அரசியல் சந்தர்ப்பவாதம், ஆன்மீக மற்ற கோழைத்தனம், பேராசை மற்றும் சுயநலம் கொண்ட மூத்தோரினால் வாய்ப்பூட்டுப் போடப்படுவதை யாழ்ப்பாண இளைஞர் மறுத்து வருவதை அவர் மெச்சினார். எந்தவொரு மனிதனும் தனது சொந்த நாட்டில் அச்சமின்றிச் சுதந்திரமாக வாழவே ஆவலுறுவான். நிதி வளங்களை நிர்வகிப்பதற்கும், நாட்டுமக்கள் அனைவரும் எஜமான் களாயிருப்பதற்கும் உரிமை கோருவர். நீதி பரிபாலித்துச் சட்டம், ஒழுங்கைப் பேணுவர். தங்கு தடைகள் இன்றி நாட்டின் கனிய வளங் களை அறுவடைசெய்து, புவியியல் ரீதியாக எட்டப்படும் வாணிப மற்றும் வர்த்தக நலன்களை நாட்டு நன்மைக்காக ஒன்று திரட்டிப் பேணுவர். உண்மையில், சுருங்கக் கூறின், எந்தவொரு நாட்டினதும் சுயமரியாதையுடையோர் போலவே இலங்கை மக்களும் அடிமைகள் அன்றி எஜமான்களாக வாழ்ந்து கொண்டிருப்பர்.

சந்தியமூர்த்தி கல்வி தொடர்பான அமர்விலும் பங்கு பற்றினார். 'தேசியக் கல்வி' பற்றி உரையாற்றிய அவர் கல்வியை 'சுவராஜ்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சுதந்திரம்) என்பதற்கு அடுத்ததாக மதித்ததாகவும், ஏறத்தாழ ஆங்கி லேயர்களை தோற்றுவிக்கும் தற்போதைய கல்வி முறைமையானது முற்றிலும் திருப்தியற்றதெனவும் அவர் கருத்து தெரிவித்தார். யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்று பொரளை YMBA யின் அனுசரணையின் கீழ் 'சுதந்திர இலங்கை' எனும் பொருளில் நடத்தப்பட்ட கூட்டமொன்றில் சத்தியமூர்த்தி உரையாற்றினார். அக் கூட்டத்திற்கு திரு D.B. ஜயத்திலக்க தலைமை வகித்தார். கீரிமலையில் நடத்தப்பட்ட மாணவர் காங்கிரஸின் 4வது அமர்வில் கீழே குறிக்கப்பட்டிருக்கும் உரைகள் நிகழ்த்தப்பட்டன: 'சுய ஆட்சிக்கான கல்வி'- ஜீ.கே.டபிள்யூ. பெரேரா, 'தொழிலாளரின் விமோசனம்'- ஏ.ஈ. குணசிங்க, 'எமது பொருளாதார சமூக பிரச்சினைகள்'- ஏ. கனகரத்தினம், 'மேற்கத்தைய கைத்தொழில்துறை - அதன் காரணிகளும் பரிகாரமும்'- ரி.என். சுப்பையா. இவ்வுரைகள் மீது திரு ஆர். சிறிபத்மநாதன் சில கருத்துக் களைக் கூறி வைத்தார்.

தமிழ் மாநாட்டில் சத்தியமூர்த்தி பிரதான பேச்சாளராகப் பங்கு பற்றினார். அவர் 'தமிழ் எமது தேசிய மரபுரிமை' எனும் பொருளிலும், எம்.எஸ். இளையதம்பி. 'தமிழ் மறுமலர்ச்சி' எனும் பொருளிலும் உரையாற்றினர். கண்டி மாநகர சபை உறுப்பினர் ஜோர்ஜ் ஈ.டி சில்வா 'இலங்கையின் அரசியல் எதிர்காலம்' எனும் பொருளில் உரையாற்ற அழைக்கப்பட்டிருந்தார். எனினும் அவர் வருகை தர முடியாமற் போனதால், 'நாடு பூராவும் கட்டாய இலவசக்கல்வி மற்றும் சாதி, மத வெறுப்புணர்வுகளை ஒழித்தல்' எனும் தொனிப்பொருளில் ஒரு மடலை அனுப்பி வைத்தார். அது சபையில் வாசிக்கப்பட்டது. ஜீ.கே.டபிள்யூ. பெரேரா தனதுரையில் அரசாங்கம் முதலியார்மார் மற்றும் தலைமைக்காரர்கட்கு (விதானை) பொறுப்புக்களை வழங்கியமை தவறென்று கூறினார். ஏனென்றால் அவர்கள் அவற்றை துஷ்ப்பிர யோகம் செய்வதாக அவர் குறிப்பிட்டார். மக்கள் சுயாட்சி அல்லது சுதந்திரத்திற்கு தகுதியற்றவர்களென அரசாங்கம் காரணம் கற்பிப்பதற்கு மேற்கூறிய துஷ்ப்பிரயோகம் வழிசமைத்தது. மேலும், ஒரு எதேச் சாதிகாரியாகச் செயற்படுபவராகிய அரசாங்க அதிபர், கிராம சபைகளின் அதிகாரங்களை கட்டுப்படுத்தி வந்தார் என்பதையும் அவர் (பெரேரா) சுட்டிக் காட்டினார். பிரித்தானியா சுய ஆட்சி நிறுவனங்களின்றி வரண்டிருந்த காலத்தில், இந்தியா பஞ்சாயத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைமை மூலம் தூய சுதந்திரக் காற்றைச் சுவாசித்ததாகவும், அதுவே ஒரு பிரதிநிதித்துவ அரசாங்கத்தின் சாராம்சமும் ஆணிவேரும் எனவும் திரு.ஸ்ரீ. பத்மநாதன் தனதுரையில் கூறினார்.

மாணவர் காங்கிரஸின் முன்னைய அமர்வுகளில் முக்கியத்துவம் வாய்ந்த விடயம் ஒன்றின் மீது ஏ.ஈ. குணசிங்க உரையாற்றினார். அந்த விடயமானது இலங்கை தொழிலாளர் பற்றியதாகும். நாகரிக மடைந்த எல்லா நாடுகளிலும் அனுபவிக்கப்படும் மிக சொற்ப உரிமைகள் கூட இலங்கைத் தொழிலாளர்கட்கு இன்னும் கிட்டவில்லையென அவர் கூறினார். நாட்டில் தொழிற் சட்டம் எதுவுமே இல்லையெனவும் தொழிலாளர்களின் நிலைமைகளை மேம்படுத்துவதற்கு சட்டவாக்க சபையில் ஒரு சட்டம் கூட இயற்றப்படவில்லையெனவும் அவர் கூறினார். இது விடயமாக மூத்தோர் தமது கடமையைச் செய்யத்தவறி விட்டதால், இளைஞர் முன்வந்து ஒரு புதிய ஜனநாயகத்தின் முன்னோடிகளாகச் செயற்பட்டுத்திகழ வேண்டுமென அவர் அறைகூவல் விடுத்தார்.[77]

மகாத்மா காந்திஜியின் விஜயம் அளித்த வெற்றியினால் புழகாங்கிதமடைந்து, தன்னம்பிக்கை ததும்பியிருந்த நிலையில் மாணவர் காங்கிரஸின் 4வது அமர்வின் போது முன்னர் தடை செய்யப்பட்டிருந்த விடயம் மீது கவனம் திரும்பியது. அது, அப்போதைய அரசியல் தலைமையை விமர்சனத்திற்கு ஆளாக்கப்பட்டமையாகும். சம்பந்தப் பட்டவர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருக்காமல் விட்டாலும் அவர்கள் யார் எவர் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளக் கூடியதாயிருந்தது. உண்மையில், இந்திய சுதந்திர இயக்கத்தினை அடியொற்றியவாறு, காங்கிரஸ் சுதந்திரத்திற்கான திட்டம் ஒன்றினைத் தயாரித்துக் கொண்டிருந்தது. ஆயினும் இன்னும்தான் காங்கிரஸ் நடவடிக்கை என்பதில் இறங்கவில்லை. விரிவுரைகள், கலந்துரையாடல்கள், பொது மக்கள் அபிப்பிராயத்தினை உருவாக்குதல் போன்ற விடயங்களிலேயே கவனம் செலுத்தப்பட்டது. இவ் விரிவுரைகள் நிறைந்த தரம் வாய்ந்தவையாகவும் பல பொதுவிடயங்கள் தொடர்பானவையாகவும் விளங்கின. 'சிலோன் பேற்றியற்' எனும் இதழில் அது பற்றி பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது:

> மாணவர்கள் சீலம் நிறைந்த நாட்டுப்பற்று மற்றும் தியாகத்துடன் எல்லா பிற்போக்கு சக்திகளுக்கும் எதிராக ஒரு ஐக்கிய முன்னணியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> அமைத்துள்ளதையிட்டு மகிழ்ச்சி அடைகிறோம். அது நாட்டை முன்னேற்றுமுகமாக சகல பொதுப்பிரச்சினைகளையும் சுதந்திரமாக அலசி ஆராய்தல் மட்டுமல்லாமல், முழுமையான கலந்துரையாடல்கள் மூலம் எட்டப்படும் கோட்பாடுகளை தமது வாழ்க்கையில் பின்பற்றும் பிரயத்தனம் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.[78]

இளைஞர்கள் நிதானமாகவும், மிக மிக சுதந்திரமாகவும் தமது கருத்துக்களை வெளிப்படுத்தியதற்கு பாராட்டுத் தெரிவிக்கையில் அந்த இதழில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது. 'காங்கிரஸ் தனது எல்லா அமர்வுகளையும் பெருவெற்றியாக நடத்தியமை அது எதிர் காலத்திலும் வெற்றிமேல் வெற்றியீட்டும் என்பதற்கு சான்று பகர்கிறது. காங்கிரஸை நாம் மனமார வாழ்த்துகிறோம் என்பதை சொல்லவும் வேண்டுமா?

'இந்து சாசனம்' தெரிவித்த கருத்து வருமாறு: 'எந்தவொரு இயக்கமும் வெற்றிகரமாகச் செயற்படுவதற்கு ஒற்றுமைதான் முதற் தேவையாகும். சிங்கள - தமிழ் ஒற்றுமைதான் சுதந்திரத்திற்கான அத்திவாரமாய் அமைய வேண்டும். இது மாணவர் காங்கிரஸில் உரையாற்றிய பலரால் வலியுறுத்தப்பட்டது. முழு அளவிலான ஆட்சி அதிகாரம் என்பதை தமிழர் அடங்கலான சிறுபான்மையினர் எதிர்க்கும் போது, அதனை வேண்டிநிற்கும் இலங்கை தேசிய காங்கிரஸ் ஒரு அதிதீவிரவாதிகள் கொண்ட அமைப்பென 22.03.1927இல் வெளியாகிய 'லண்டன் ரைம்ஸ்' ஆசிரியர் தலையங்கத்தில் கூறப்பட்டிருந்ததைப் பற்றி 'இந்து சாசனம்' கருத்து வெளியிட்டிருந்தது. 'லண்டன் ரைம்ஸ்' தெரிவித்த கருத்து எதுவித ஆதாரமும் அற்றது என 'இந்து சாசனம்' உறுதிப்படுத்தியது. ஏனென்றால் சுதந்திரத்துக்கான கோரிக்கைக்கு அழுத்தம் கொடுப்பதில் தமிழ் சமூகம் ஒருபோதும் சிங்கள சமூகத்திற்கு இரண்டாம் இடத்தில் இல்லை என்பதை 'இந்துசாசனம்' சுட்டிக் காட்டியது. அகில இலங்கை தமிழ் மாநாடு, யாழ்ப்பாண சங்கம் மற்றும் சைவ பரிபாலன சபை ஆகிய அமைப்புகள் ஒன்றிணைந்தே இக்கோரிக்கையை முன்வைத்தன.[79]

சிங்கள மேலாதிக்கம் என்ற அச்சத்தினை எப்போதுமே சில தமிழ் பிரமுகர்கள் முன்தள்ளிவிடுவது அல்லது வாதிட்டு வருவது உண்மைதான் என்பதை 'இந்து சாசனம்' ஏற்றுக்கொண்டது. இந்தப் பொதுவான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயகத்தில் சாந்தி சமாதானம் மற்றும் நல்லெண்ணத்துடன் தாம் வாழப்பிறந்துள்ளபடியால், சுதந்திரத்திற்கான போராட்டத்தின் மூலம் தமது சக்திகளை ஒன்று திரட்டுவதற்கு இது ஒரு அருமையான சந்தர்ப்பம் என்பதால் அதற்கு 'இந்து சாதனம்' முற்றுமுழுதான ஆதர வைத் தெரிவித்தது.

அவ்வருட பிற்பகுதியில் டொனமோர் ஆணைக்குழு அறிக்கை வெளியிடப்பட்டபோது நிறைவேற்றுக் குழு கூடி பின்வரும் பிரேரணை களை நிறைவேற்றியது:

1. டொனமோர் ஆணைக்குழு அறிக்கையானது காங்கிரஸுக்கு ஏற் புடையதல்ல. ஏனென்றால் இலங்கை சுதந்திரத்திற்கு உரித்து உடையது என்றே காங்கிரஸ் எப்போதுமே கருதியுள்ளது.

2. இனரீதியான பிரதிநிதித்துவ முறைமையை அகற்றி, சர்வஜன வாக்குரிமை விஸ்தரிப்பதை காங்கிரஸ் வரவேற்கிற அதே நேரத்தில்,

   அ) நியமன அங்கத்தவர்கள் என்ற வடிவத்தில் இனவாதம் நிலை நாட்டப்படுவதையும்,

   ஆ) 21க்கும் 30 க்கும் இடையிலான பெண்களுக்கு வாக்குரிமை வழங்காதிருப்பதையும், காங்கிரஸ் எதிர்த்து நிற்கிறது.

3. ஆளுனரின் பிரத்தியேக அதிகாரம் அதிகரிப்பதையிட்டும், அரச சேவை மீது சட்டவாக்கச்சபை இதுவரை கொண்டிருந்த அதிகாரம் மட்டுப்படுத்துவதையிட்டும் காங்கிரஸ் பெரிதும் கவலைய டைந்துள்ளது.

கண்டி, காலி மற்றும் கொழும்பில் இம்மாதிரியான ஸ்தாபனங்கள் அமைக்கப்பட வேண்டுமென மாணவர் காங்கிரஸின் இந்த நிறை வேற்றுக் குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. அதனால் ஓர் அகில இலங்கை மாணவர் காங்கிரஸ் தோற்றம் பெறுவதற்கு வழி பிறக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஒரு வெளியீட்டுக் கரும பீடத்தையும் அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது. கண்டியில் 'றொடிய' மக்களின் நலன்காக்கும் முகமாக ஒரு சங்கம் அமைக்கப்பட வேண்டும் எனவும் இவ்வருட பிற்பகுதியில் நடைபெறவுள்ள அகில இந்திய இளைஞர் மாநாட்டுக்கு ஒரு தூதுக் குழு அனுப்பப்பட வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது. காந்திஜி இலங்கையில் திரும்பத்திரும்ப வழங்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுறுத்தலை அடுத்து மாணவர் காங்கிரஸ் முழுமையான மது விலக்குச் சார்பான நிலைப்பாட்டினை வெளிப்படுத்தியதுடன் மது விலக்கு என்ற நற்காரியத் திற்காக எல்லா தொழிலாளர்கட்கும் தனது ஆதரவை நல்கியது.

1928இல் மாணவர் காங்கிரஸ் இந்தியாவில், காந்திய இயக்கத்துடன் நெருங்கி உழைப்பதற்கு முயற்சிகள் மேற்கொண்டது. யாழ்ப்பாணத் தில் 'கதர்' விற்பனை ஊக்குவிக்கப்பட்டது. தொண்டர்கள் குடாநாட்டில் பல பாகங்களுக்குச் சென்று 'கதர்' விற்பனையில் ஈடுபட்டனர். 'கதர்' பாவனையை பிரபல்யப்படுத்தி 'கதர்' நிதியத்திற்குக் கூடுதலான நிதி திரட்டுவதே அதன் நோக்கமாயிருந்தது. 'கதர்' கண்காட்சிகளை ஒழுங் கமைப்பதில் இராமநாதன் சீமாட்டியும் பங்கு பற்றியிருந்தார். அவற்றில் ஒரு கண்காட்சி வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெற்றது. அதில் இந்திய கைத்தறியாளர் சங்கப் பிரதிநிதி ஒருவரும் கலந்து கொண்டார்.

அதே வருடம் இந்தியாவில் பர்தொலி மாவட்டத்தில் விவசாயிகள் போராட்டம் ஒன்று இடம் பெற்றது. அநேகமாக தமது காணிநிலங்களை பறிகொடுத்த விவசாயிகளால் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் அதிகார வலுவுடன் செயற்பட்ட அதிகாரவாதிகட்கும் பொலிசாருக்கும் எதிராகவே அப்போராட்டம் நடத்தப்பட்டது. பரவலான அனுதாபத் தையும் அது ஈர்த்தது. அவ்வாறு போராடிய இந்திய விவசாயிகட்குத் தெரிவிக்கும் ஆதரவின் அடையாளமாக மாணவர் காங்கிரஸ் நிதி திரட்டல் நடவடிக்கையில் ஈடுபட்டது. மாணவர் காங்கிரஸின் நிறை வேற்றுக் குழு பின்வரும் பிரேரணையையும் நிறைவேற்றியது: "அதிகாரவாதிகளின் அடக்குமுறைக்கெதிராக பர்தொலி சத்தியாக் கிரகிகள் (விவசாயிகள்) நடத்தும் வீரதீரமான போராட்டத்திற்கு காங்கிரஸ் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றது. போராட்டம் வெற்றியீட்ட வேண்டுமெனவும் வாழ்த்துகிறது."[81]

மாணவர் காங்கிரஸ் முன்னர் மேற்கொண்டதொரு தீர்மானத்தின் பிரகாரம் கல்கத்தாவில் இடம்பெற்ற அகில இந்திய காங்கிரஸ் அமர் வுகளுக்கு 2 பேராளர்கள் அனுப்பிவைக்கப்பட்டனர். அவர்கள் எஸ். குலேந்திரன் மற்றும் என். குமாரசிங்கம் ஆகியோர் ஆவர். 1928 அமர்வுகளின்போது, தெரிவு செய்யப்பட்ட பதவியாளர்கள்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| சுவாமி விபுலானந்தர் | - | தலைவர் |
| என். குமாரசிங்கம் | | இணைச்செயலாளர்கள் |
| டப்ளியு. பி. கனகத்துங்கம் | - | |
| பி. சிறிஸ்கந்தராசா | - | பொருளாளர் |

1929 ஏப்றில் மாதம் அவர்களின் பதவிக்காலம் முடிவடைந்ததும், தாம் பதவி வகித்த ஒரு வருட காலத்தில் வளர்ச்சியும் முன்னேற்றமும் ஏற்பட்டிருந்ததாக அவர்கள் மதிப்பீடு செய்தனர். 1929இல் 5வது அமர்வுகளுக்கான அறிவித்தலில் அவர்கள் பின்வருவனவற்றை உறுப்பினர்கட்கு நினைவூட்டியிருந்தனர்.

> தற்போதைய ஒழுங்கு முறைகள் மீது நாட்டின் இளைஞர் கொண்டுள்ள ஆழ்ந்த அதிருப்தி காரணமாகவே 5 வருடங்களுக்கு முன் காங்கிரஸ் நிறுவப்பட்டது. ஏனென்றால், எமது சமூக மற்றும் அரசியல் முறைமைகளின் கீழ் நிலவிவரும் சமத்துவமின்மைகள் காரணமாக எமது தேசிய வலு குன்றி, கலாசார சீரழிவும் ஏற்பட்டு விட்டது. இத் தீவில் எமது முன்னோர் தலைசிறந்த நாகரிகம் ஒன்றினை உருவாக்கிவிட்டுச் சென்றுள்ளனர். அதனை நாம் புனரமைக்க வேண்டும், மீளக்கட்டியெழுப்ப வேண்டும். எமது சுயமரியாதையை புண்படுத்தி எமது சுயமுயற்சியை சாகடிக்க விழையும் அரசியல் ஆதிக்கமானது, எவ்வளவுதான் மென் போக்கானதாயினும், முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும். "எமது நாடு தலைநிமிர்ந்து நிற்பதற்கு சுதந்திரம் வேண்டுமென நாம் விரும்பும் அதேவேளை உலகளாவிய ரீதியில் சமாதானம் வேண்டுமென்பதையும் நாம் உணர்கின்றோம். தற்போதைய ஏகாதிபத்திய சுரண்டல் முறைமைக்கு முடிவு கட்டி, நீதி மற்றும் சமத்துவத்தின் அடிப்படையிலானதொரு புதிய உலக ஒழுங்கினை உருவாக்கும்வரை அது சாத்தியமற்றதாகவே இருக்கும்".

உலக சமாதானத்திற்காக உழைத்துக்கொண்டிருக்கும் இதர நாடுகளிலுள்ள இளைஞரோடு ஒத்துழைப்பதற்கு காங்கிரஸ் கொண்டிருக்கும் விருப்பத்தையே செயலாளர்கள் வெளிப்படுத்தினர்.[82]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

## காங்கேசன்துறை அமர்வுகள்

மாணவர் காங்கிரஸின் 5வது அமர்வுகள் 1929 ஏப்றில் மாதம் காங்கேசன்துறையில் இடம் பெற்றன. அதற்கென ஒரு விசேட பந்தல் அமைக்கப்பட்டிருந்தது. முந்திய ஆண்டு பட்டி தொட்டியெங்கும் மேற்கொள்ளப்பட்ட உயிரோட்டமான பிரசாரம் காரணமாக இவ்வருட அமர்வுகளில் அதிகளவு ஆர்வம் ஏற்பட்டது. காங்கிரஸ் முன்னெடுக்கும் கொள்கைகளை பிரபல்யப்படுத்துவதற்கு குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் 15க்கு மேற்பட்ட கூட்டங்கள் நடத்தப்பட்டன. அக் கூட்டங்களில் ஹண்டி பேரின்பநாயகம், எம். பாலசுந்தரம் மற்றும் எஸ்.நடேசன் ஆகியோரே பிரதம பேச்சாளர்களாக விளங்கினர். கொழும்பில் ஓர் இளைஞர் குழுவை அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அத்தகைய குழுக்களை கொழும்பு மற்றும் கண்டியில் அமைப்பதன் மூலம் அகில இலங்கை இளைஞர் காங்கிரஸ் ஒன்று அமைக்கப்பட வேண்டுமெனக் கொண்டிருந்த பெருவிருப்பம் நிறை வேறிவிடும். இனவாதம் மற்றும் சாதிபேதம் தொடர்பாக காங்கிரஸ் கொண்டிருந்த நிலைப்பாடு தலைவர்களால் வலியுறுத்தப்பட்டது. முந்திய ஆண்டு அமர்வுகள் போலவே காங்கேசந்துறை அமர்வு களிலும் ஏராளமான இளைஞர்கள் திரண்டிருந்தனர். கீரிமலை மடத்தில் மாணவர் காங்கிரஸ் அமர்வுகள் இடம்பெற்றபோது, பிரதான இலட் சியங்களில் ஒன்றான சாதி பேதமின்றி அனைவரும் சமம் எனும் விழுமியம் கடைப்பிடிக்க முடியாமற்போய்விட்டது. காங்கேசன் துறையில் விசேடபந்தல் அமைக்கப்பட்டமையால் எல்லா சாதியினரும் ஒன்று கலந்து ஒன்றாக உணவருந்த ஏதுவாயிருந்தது. இத்தகைய ஒன்றுகூடலில் எல்லா சாதியினரும் யாழ்ப்பாணத்தில் சமபந்தி போச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னம் அருந்தியது அதுவே முதல் தடவையாகும். 'டெயிலி நியூஸ்' இதழ் இது பற்றி வெளியிட்டிருந்த தலையங்க செய்தியில் "யாழ்ப்பாண இளைஞர் கிளர்ச்சி - சாதித்தடைகள் சாக்கடையில்" எனக் குறிப் பிட்டிருந்தது.[83]

1929 அமர்வுகளில் தமிழ் மொழி உபயோகத்திற்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டிருந்தது. ஹண்டி பேரின்பநாயகம் தனது வரவேற்புரையை தமிழில் நிகழ்த்தினார். தமிழ் நாட்டின் ஊடகத் துறையின் முன்னோடிகளில் ஒருவரான கல்யாணசுந்தர முதலியார் தலைமையுரையை நிகழ்த்தினார். நவீன அரசியல் மற்றும் சமூகக் கருத்துக்கள் மொழியை ஒரு வலுவான ஊடகமாக வளர்ச்சி பெறச் செய்ததில் இந்த நூற்றாண்டின் முதல் தசாப்தங்களில் ஈ.வீ. இராமசாமி நாயக்கர் (பெரியார்), டாக்டர் வரதராஜலு மற்றும் கல்யாணசுந்தர முதலியார் குறிப்பிடத்தக்களவு பங்களிப்பினைச் செய்தனர். அவர் களில் கல்யாணசுந்தர முதலியார் 'தமிழ் தென்றல்' என அழைக்கப் பட்டார். அந்தக் கனிவான காற்று தமிழ் மொழி வசன நடைக்கு வலுச் சேர்த்ததுடன், இயல் தமிழுக்கு வலுச்சேர்த்ததுடன் பரம்பரை பரம் பரையாக தமிழ் எழுத்தாளர்கள் மீது செல்வாக்கும் செலுத்தியுள்ளது. சாதாரண மக்களின் கல்வியறிவை மேம்படுத்துவதற்கு அவர் வெளி யிட்டுவந்த 'தேசபக்தன்' மற்றும் 'நவசக்தி' ஆகிய செய்தித்தாள்கள் மிகுந்த செல்வாக்கினைச் செலுத்தி வந்தன. அதே நேரம் சத்தியாக் கிரகம், அகிம்சை போன்ற கோட்பாடுகளைப் பரப்புவதற்கு தமிழ் மொழி ஒரு சக்தி வாய்ந்த கருவியாக ஆக்கப்பட்டது.

கல்யாணசுந்தர முதலியார் ஆற்றிய நீண்டதொரு உரையில் இருநாடுகளுக்கும் இடையில் குறிப்பாக மதரீதியான நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றுக்கும் மேலாக தேன் சுவை தமிழ் மொழி தொடர்பாக நிலவிவந்த தொப்புள்கொடி பிணைப்புப் பற்றி எடுத்துக் கூறினார். ஞானப்பிரகாச சுவாமிகள், ஆறுமுகநாவலர், சி.வை. தாமோதரம்பிள்ளை, சபாபதி நாவலர் போன்ற யாழ்ப்பாணத்து தலைசிறந்த சைவப்பெரியார்கள், தமிழ் மற்றும் இந்து கலாசாரம் இரு நாடுகளுக்கும் இடையில் உருவாக்கியிருந்த பழம்பெரும் பற்று நிலைக்கு புத்துயிரும் புதுப்பொலிவும் அளித்திருந்தனர் என அவர் நினைவு கூர்ந்தார். இளைஞரின் முற்போக்கான குணாம்சங்களை அவர் கோடிட்டுக் காட்டினார். மூத்தோர் இயல்பாகவே பிற்போக்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனம் மற்றும் மனிதவிசுவாசமின்மை கொண்டிருந்த அதே வேளை, உலகம் இருந்ததைவிட சிறந்ததாக்குவதற்கான தீவிரமும் பற்றுறுதியும் இளைஞர் தம்மகத்தே கொண்டிருந்தனர். மாணவர் காங்கிரஸின் நோக்கங்களை அடைவதற்கு இளைஞருக்கு உயர்ந்த சீலமான குணங் களும் இதயசுத்தியும் இருப்பது அவசியமென அவர் கூறினார்.

கடுமையாக உழைத்து தமது தலைசிறந்த கலாசாரத்தை முந்திய கால தொன்மை நிலைக்கு இட்டுச்செல்லவேண்டுமென அவர் இளைஞருக்கு அறைகூவல் விடுத்தார். கலாசாரம் என்றால் கற்றல் என்பதாகும். அதேபோல் தாய்மொழியில் கற்றல்தான் வலுவான தாயிருக்கும், பாடத்திட்டத்தில் தமிழ் மொழி கீழ்நிலைக்குத் தள்ளப் பட்டிருப்பதால் அது கற்பித்தலுக்கு அல்லது போதான மொழியாய் இருப்பதற்கு தகுதி குறைந்தது என அவ்வப்போது கூறப்பட்டு வந்துள்ளது. நூற்றாண்டுக்கணக்கான அந்திய ஆட்சியே இதற்கு காரணமென கல்யாணசுந்தர முதலியார் கூறினார். ஒரு சுதந்திரமான மக்கள் தமது சிறார்களின் கல்விக்கும் நிர்வாக விவகாரங்களுக்கும் அந்நிய மொழிப்பாவனைக்கான வரலாற்று ரீதியான முந்நிகழ்வு கிடையாது என்பதோடு, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகளை உதாரணமாக எடுத்துக் காட்டினார். எத்தகைய பழைய இலக்கியங்களை படிப்பதானாலும், மொழிபெயர்ப்புகள் அன்றி, அவ்வவ் மொழிகளில் படித்துக் கொள்ள வேண்டும். சேக்ஸ்பியரின் நூல்கள் ஆங்கிலத்தில், காளிதாசரின் நூல்கள் சமஸ்கிருதத்தில், மற்றும் பாரதி கூறியதுபோல நெஞ்சை நெகிழவைக்கும் இளங்கோவின் சிலப்பதிகாரத்தை தமிழில் படிக்க வேண்டும். சங்க இலக்கியம், தொல்காப்பியம், திருக்குறள் மற்றும் சைவ முனிவர்கள் நல்கியுள்ள உள்ளொளி பெருக்கும் தேவாரம், திருவாசகம் போன்ற தொன்மை வாய்ந்த தமிழ் பொக்கிஷங்கள் பற்றியும் அவர் கூறிவைத்தார். மேலும் கலை மற்றும் கட்டிடக்கலைத் துறையில் தமிழர் படைத்துள்ள சாதனைகளையும் அவர் குறிப் பிட்டுள்ளார். மகாபலிபுரம் சிற்பங்கள், சிதம்பரம் நடராஜர் நடனம், மதுரை, காஞ்சி, தஞ்சாவூர் கோவில்கள் யாவும் கலை மற்றும் கட்டி டக்கலை அதிசயங்களாகவும், இந்துகலாச்சாரத்தின் இரத்தினச் சுருக்க வடிவமாகவும் விளங்குவதாக அவர் எடுத்துக்கூறினார்.

இசை, நாடகம் மற்றும் உடற்கல்வி ஆகிய துறைகளில் தமிழர் படைத்த சாதனைகள் பற்றி அவர் கவனம் ஈர்த்தார். உண்மையான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விக்கும் மதத்திற்கும் இடையிலான தொடர்புபற்றி அவர் உரை யாற்றும் போது, திருவள்ளுவர் கூற்றின்படி எம்முள்ளிருக்கும் இறையை ஒளிபெறச் செய்வதே உண்மையான கல்வியாகும் என கூறினார். உண்மையான மதம் என்பது ஒரு குறிப்பிட்ட குலத்தினுள் அடங்கியுள்ளதோ, வேறு எந்த மதத்துடனும் முரண்பட வேண்டியதோ அல்ல என்று அவர் கூறினார். யாழ்ப்பாணத்தில் நிலவிவரும் மத வேறுபாடுகளை அறிந்துகொண்டவர் போல, உண்மையான பண்பாடு கொண்ட ஒருவர் மாணிக்கவாச சுவாமிகளின் திருவாசகத்திற்கும், யேசு கிறிஸ்துநாதர் உலகிற்கு வழங்கிய நற்செய்திக்கும் இடையில் வித்தியாசம் எதனையும் காணமுடியாது. 'அன்பே கடவுள்' என்றே அவர்கள் இருவரும் கூறும்போது பகைமை என்பதற்கு இடம் இருக்கமுடியுமா என அவர் வினவினார். கல்யாண சுந்தர முதலியார் தனது உரையின் இறுதியில், இளைஞர் அந்நிய ஆட்சியை ஒழித்துக் கட்டி, அரசியல் அடிமைத்தனத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து, தமது தலைவிதியை தமது கையில் எடுக்க வேண்டும் எனவும் அறைகூவல் விடுத்தார். இளைஞர் அரசியலில் துடிப்பாக ஈடுபடுவதுடன், உலக யுத்தத்தின் போது ஐரோப்பிய இளைஞர்கள் பெற்றுக்கொண்ட படிப் பினையை பாடமாகக் கொள்ள வேண்டும் என்று கூறினார். இன வாதத்தை ஒழித்தல், பெண்கள் விமோசனம் அடைதல், மூட நம்பிக்கை களையும் நடைமுறைகளையும் அகற்றுதல், உள்நாட்டு வாழ்க்கை முறையினை பின்பற்றுதல் போன்ற விடயங்களுக்கு அவர்கள் தமது வேலைத் திட்டத்தில் முக்கியத்துவம் அளிக்க வேண்டும். காந்திய இயக்கத்தின் கொள்கைகளையும் நோக்கங்களையும் மாணவர் காங்கிரஸ் ஏற்றுள்ளதையிட்டு அவர் மகிழ்ச்சி தெரிவித்ததுடன், நாளாந்த வாழ்க்கையில் அவர்களுடைய தீர்மானங்களை போதிப்பது இலகுவானது[84] ஆனால் நடைமுறைப்படுத்துவதுதான் சிரமம் என்பதை அவர் சுட்டிக்காட்டினார். கல்யாண சுந்தரமுதலியார் இந்த அமர்வுகளின் போது 'மனிதனும் அவனது உரிமைகளும்', 'சாதி' என்னும் வேறு இரு விடயங்கள் தொடர்பாகவும் உரையாற்றினார்.

வண.பிரான்சிஸ் (அழகசுந்தரம்) கிங்ஸ்பறி ஏனைய பேச்சாளர் களில் ஒருவராக விளங்கினார். அவர் ஒரு தமிழ் வித்துவானும் இலங்கை பல்கலைக்கழக விரிவுரையாளரும் ஆவார். 'யாழ்ப்பாணத்தில் சில சமூகப்பிரச்சினைகள்' எனும் விடயம் மீது அவர் உரையாற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அமர்வுகளின் போது உரையாற்றுவதற்கு திரு.ரி.பீ. ஜாயா அழைக்கப்பட்டிருந்தாராயினும் அவருக்கு வருகை தரமுடியவில்லை. அவருக்குப் பதிலாக வருகைத்தந்தவராகிய திரு. பெரிசுந்தரம் 'இளைஞரும் அரசியலும்' எனும் விடயம் பற்றி உரையாற்றினார். இந்த அமர்விற்கு திரு.ஈ.டபிள்யூ. பெரேரா தலைமை வகித்தார். சமூக சேவை, கல்வியறிவுப்பயிற்சி, ஒழுக்கம் மற்றும் ஆராய்ச்சி ஆகிய நெறிமுறைகள் மூலம் இளைஞர் அரசியல் செயற்பாட்டிற்கு தகைமை பெற வேண்டுமென பெரிசுந்தரம் அறைகூவல் விடுத்தார். இளைஞர் அரசியலில் துடிப்பாக ஈடுபடவேண்டுமா என்பது பற்றி கருத்து வேறுபாடு இருப்பதாக அவர் கூறினார். அவசியம் ஏற்படும் போதெல்லாம் மூத்தோரைத் திருத்துவதற்கு இளைஞருக்கு உரிமை உண்டு என இணைச் செயலாளர்கள் முன்வைத்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இதுவிடயம் தொடர்பாக திரு. பெரிசுந்தரம் கருத்துத் தெரிவிக்கையில் இளைஞர் மூத்தோரை திருத்தப் போவதாக எண்ணு வதைத் தவிர்த்து தம்மைத் தாமே திருத்திக் கொள்ள வேண்டுமென ஆலோசனை வழங்கினார். அவர்கள் மக்களிடம் சென்று அவர்கள் மத்தியில் காணப்படும் வேதனைகளையும் கேவலமான நிலைமை களையும் கண்ணுற்று, மக்கள் சேவைக்காகத் தம்மை அர்ப்பணிக்க வேண்டும். திரு.ஈ.டபிள்யூ. பெரேரா உரையாற்றுகையில் உண்மையில் சிங்கள, தமிழ் வேறுபாடுகள் கிடையாது என்று கூறினார். தான் 'குசுகுசு கூட்டங்களில்' பங்குபற்றுவது இல்லையெனவும், அத்தகைய கூட்டங்களில் எட்டப்படும் ஒப்பந்தங்களும் உடன்பாடுகளும் இறுதியில் வேறுபாடுகளாகிவிடுவதாகவும் அவர் கூறினார். யாழ்ப்பாணச் சங்கம் கடந்த காலத்தில் இன ரீதியாக சிந்திக்காததையிட்டு அவர் பாராட்டுத் தெரிவித்ததோடு, மாணவர் காங்கிரஸ் ஆற்றிவரும் பணிகளுக்காக தனது வாழ்த்துக்களையும் தெரிவித்தார். 'சோசலிசம்' எனும் விடயம் தொடர்பில் திரு. பாலசுந்தரம் உரையாற்றினார்.

1929இல் கீழே குறிப்பிட்டிருப்பவர்கள் அவ்வவ் பதவிகளுக்கு தெரிவு செய்யப்பட்டனர். இணைச்செயலாளர்கள் ஏ.ஈ.தம்பர், சி. சுப் பிரமணியம், பொருளாளர் பி.சிறீஸ்கந்தராஜா, செயற்குழு உறுப் பினர்கள்- கே.நேசையா, கே. நவரத்தினம், எம். சபாரத்தினசிங்க, எஸ்.எச்.பேரின்பநாயகம், எஸ்.பி. ராஜரட்ணம், எஸ். குலேந்திரன், வி.வன்னியசிங்கம், எஸ்.நடேசன், என். குமாரசிங்கம், டபிள்யூ.பீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனகதுங்கம், பி. நாகலிங்கம், எஸ்.ஆர்.கனகநாயகம், கே.வி.நடராஜா, வி.எம்.குமாரசாமி, ஜோயெல் போல், ஏ.எஸ். கனகரட்ணம், ரி. முத்துக்குமாரு, ஐ.பி.துரைரட்ணம், சி.நாகையா, ஏ.ராஜேந்திரம், எஸ்.ஜே.குணசேகரம், எஸ். மயில்வாகனம், டீ.ஜே.தம்பு. 1929 அமர்வு களின் போது நிறைவேற்றப்பட்ட பிரதான பிரேரணை 'சுயராஜ்' (சுதந்திரம்) பற்றியதாகும். சுயராஜ் இந்த நாட்டு மக்களின் பிறப் புரிமையென காங்கிரஸ் திடமாக நம்புவதாகவும், அதனை விரைந்து எட்டுவதற்கு உறுப்பினர்கள் தம்மை அர்ப்பணிக்க வேண்டும் எனவும் அறைகூவல் விடுத்திருந்தது. எஸ். நடேசன் முன்மொழிந்து, பி. நாகலிங்கம் வழிமொழிந்து ஹன்டி பேரின்பநாயகம் ஆதரித்த இப் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

சமபந்தி போசன முறைமையை அறிமுகம் செய்வதற்கு இளைஞர் கள் மேற்கொண்ட துணிச்சலான முயற்சி காரணமாக 1929 அமர்வுகள் நினைவு கூரப்படுகின்றன. அதனை செயற்படுத்து முகமாக ஒரு விசேட பந்தலை அமைப்பதற்கு ஏற்பாட்டாளர்கள் கணிசமான அளவு பணத்தொகையை (ரூ.242) செலவிட்டனர். அதற்கு முந்திய வருடம் காங்கிரஸிற்கு சந்தாப் பணமாகவும் நன்கொடையாகவும் ரூ.1079/- வருமானமாக கிடைத்தது. அதில் மொத்த செலவினம் ரூ.909 ஆகும்.[85] எல்லா சாதி மக்களும் ஒன்றாக இருந்து உணவருந்துவதற்கென காங்கிரஸ் ஒரு விசேட பந்தலை அமைப்பதற்கு முடிவு செய்தமை, பல வருடங்களாக மீண்டும் மீண்டும் முன்னெடுக்கப்பட்டு வந்த பிரதான இலட்சியங்களில் ஒன்றிற்கு செயல்வடிவம் கொடுக்கும் விருப்பத்தின் வெளிப்பாடாகும். பழமைவாத எதிரணிகள் காங்கிரஸின் இந்த செயல்பாட்டினை பலமாக எதிர்த்த போதிலும், இளைஞர் அதை நிறைவேற்றி வைத்தனர். இந்த எதிர்ப்பானது 1929இல் கணிசமானளவு அதிகரித்ததோடு அடுத்த வருடத்தில் குழப்பம் செய்யும் நடவடிக்கை களாகவும் வெளிக்கொணரப்பட்டன. ஆனால், குறிப்பாக இந்த வருடத் தில் (1929) எதிராளிகள் கசப்பான ஏமாற்றத்திற்கும் விரக்திக்கும் ஆளாகினர். ஒன்றுகூடி உணவருந்திய இந்நிகழ்விற்கு 1929 அமர்வுகள் தொடர்பாக வெளியிடப்பட்ட செய்தி அறிக்கைகளில் பெரிதும் முக்கியத்துவம் வழங்கப்பட்டிருந்தது. ஆக, இணைச் செயலாளர்கள் பல பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை ஒன்றில், சில பத்திரிகைகளில் குறிப்பிட்டு இருந்தது போல தாம் எல்லா சாதிகளையும் உள்ளடக்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போசன நிகழ்ச்சி ஒன்றை ஏற்பாடு செய்திருக்கவில்லையென மறுதலிக்க வேண்டியதாயிற்று. அவ்வறிக்கையில் உள்ளிட்டிருந்த பின்வரும் பகுதி மாணவர் காங்கிரஸின் நிலைப்பாட்டினை சற்று விளக்கிக் கூறியிருந்தது.

> காங்கிரஸ் என்பது உயர்ந்த மக்களுக்கான அமைப் பல்ல. அது 16 வயதிற்கு மேற்பட்டு, காங்கிரஸின் கொள்கையை ஏற்று, கிரம மாக சந்தாப்பணம் செலுத்தும் எல்லோருக்கும் பொதுவான அமைப் பாகும். பந்தல் ஒன்றினை அமைப்பதன் மூலம் நாம் எமது நிகழ்ச்சியில் எல்லா சாதியினரும் பங்கு பற்றுவதற்கு இடமளித் திருந்தோம். அதுபோலவே, காங்கிரஸினால் நடத்தப்பட்ட உணவ றையும் எந்த ஒரு காங்கிரஸ் உறுப்பினருக்கும், அமர்வுகளில் கலந்து கொள்வதற்கு வருகை தந்த ஏனையோருக்கும் திறந்து விடப்பட்டிருந்தது. அவர்களில் எவராவது உணவுக்கான பத்திரம் ஒன்றினை பணம்கொடுத்துப் பெற்று உணவு அருந்துவதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டிருந்தது. காங்கிரஸ் தனது விவகாரங் களில் சாதி, மத, இனபேதம் எதையும் கணக்கில் எடுப்பதில்லை. எந்தவொரு அங்கத்தவர் அல்லது வேறு எவரிடமிருந்தாவது அவர் எந்த சாதியைச் சேர்ந்தவர் என்பதை வினவுவது கிடையாது. சமபந்தி போசன முறை என்பது மிக வித்தியாசமான தொன்றாகும். அத்தகைய வைபவங்களில் பல்வேறு சாதிகளைச் சேர்ந்த ஆட்கள் தெரிவு செய்யப்பட்டு ஒன்றாய் இருந்து உணவருந்துவதற்கு ஏற் பாடு செய்யப்பட வேண்டும். எனவே காங்கிரஸ் உணவறையில் எல்லா சாதியினரும் சேர்ந்து உணவருந்துவது என்பது இலங்கை அரசாங்க புகையிரதத்தில் பயணம் செய்வது அல்லது ஒரு பகிரங்க உணவகத்தில் அல்லது ஒரு களியாட்டு விழாவில் உணவருந்துவது போன்றதாகும்."[86]

அரசியலில் மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் வகிபாகம் என்ன என்பது 1929 அமர்வுகளின் போது இடம் பெற்ற கலந்துரையாடல் களில் மிகமுக்கியமானதாக விளங்கிய விடயங்களில் ஒன்றாகும். இணைச் செயலாளர்கள் தமது அறிக்கையில் இந்த விடயத்தினை எழுப்பியிருந்தனர். தற்போது நிலவும் சமூக மற்றும் அரசியல் நிலைமைகள் மீது தாம் அதிருப்தி அடைந்திருப்பதால் பொதுமக்கள் மத்தியில் தமது கருத்துக்களையும் கொள்கைகளையும் எடுத்துச் செல்வதே காங்கிரஸ் செயற்படுவதன் பிரதான காரணம் என அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்கனவே கூறிவிட்டனர். அவசியம் ஏற்படும் போதெல்லாம் மூத்தோர்களைத் திருத்துவதற்கு தமக்கு உரிமையுண்டு என அவர்கள் கூறிவிட்டனர். "நடைமுறை அரசியல் களத்தினை ஆக்கிரமிக்க வேண்டுமென்று நாம் ஒரு கணமேனும் கூறவில்லை. அவ்வாறாக எமது நேரத்தையும் சக்தியையும் வீணடிக்காமல் எமது சொந்தக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு பிரயோசனமாக ஈடுபடுவோம்" என்று செயலாளர்கள் கூறினர். "ஆயினும் நாட்டின் நலனுக்குப் பங்கம் ஏற்படக் கூடுமென நாம் கருதும் வேளைகளில், எமது சேவைக்கு அழைப்பு வரும்போது நாம் எமது வழமையான சட்டபூர்வமான சொந்த அலுவல்களைத் துறந்து, நாட்டின் பற்றுள்ள மைந்தர்கள் என்ற வகையில் நாட்டுக்கு எம்மால் ஆனவற்றையெல்லாம் செய்வதற்கு தயாராய் உள்ளோம்"[87] எனவும் செயலாளர்கள் மேலும் கூறி வைத்தனர்.

அரசியல் நடவடிக்கைகளில் இளைஞரின் வகிபாகம் தொடர்பாக மூத்தோர் மத்தியில் கருத்து வேறுபாடு காணப்பட்டது. ஏற்கனவே கூறப்பட்டது போல, பெரிசுந்தரம் ஒரு எச்சரிக்கையினை விடுத் திருந்தார். இந்தியாவில் இளைஞர்கள் அரசியலில் துடிப்பாக ஈடுபட் டிருக்கும் நிலையில் இந்தியாவைச் சேர்ந்த கல்யாணசுந்தர முதலியார் யாழ்ப்பாண இளைஞர்களை அரசியலில் ஈடுபடுமாறு உற்சாகமூட்டி யிருந்தார். இளைஞர் சட்டவாக்க சபைக்கான தேர்தல் தொடர்பான அரசியலில் இருந்து விலகியிருக்க வேண்டும் என்பதே பொதுவாக மூத்தோர் விரும்பியிருக்கக் கூடியதாகும். ஆனால் இந்த விடயம் அந்த நேரத்தில் நடைமுறையில் எழுந்திருக்கவில்லை. அப்போது சாதிப்பிரச்சினைதான் மேலோங்கியிருந்த விடயமாயிருந்தது.

1929 அமர்வுகளுக்கு சற்று முன்னதாக இந்துசாதன (Hindu Organ) இதழில் புனைபெயரின் கீழ் எழுதப்பட்ட கடிதம் ஒன்று வெளியாகி யிருந்தது. இப்போது மூத்தோர் மத்தியில் இளைஞர்கள் உணர்ச்சி வசப்பட்டு இயங்குகின்றனர். அவ்வாறாக அளவுக்கதிகமாக மூத்தோரை அவமதிக்கத் தலைப்பட்டுள்ளனர் என வளர்ந்து வந்த சிந்தனை அக்கடிதத்தில் பதியப்பட்டிருந்தது. எனவே, காங்கிரஸ் தலைவர்கள் மூத்தோர்கள் சிலரின் அனுதாபத்தை இழந்து வருவதாகவும் மேலும் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தபடியால் அது ஒரு மூத்த பிரமுகர் ஒருவரால் தான் எழுதப்பட்டிருக்கும் என்பது தெளிவாய் தெரிந்தது. இளைஞர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறைச்சாத்தியமற்ற கொள்கைகளை கொண்டிருப்பதாக அக்கடிதத்தில் சாடப்பட்டிருந்தது. அதே நேரம் இளைஞர்கள் நிதானமாகவும் அடக்கமாகவும் படிப்படியாக மாற்றங்களை ஏற்படுத்த முயல வேண்டுமெனவும் கூறப்பட்டிருந்தது. அத்தோடு உணர்வுள்ள மக்களால் அனுமதிக்க முடியாத சில்லறைத் தனமான வழிமுறைகள் மூலம் பழம்பெரும் வழக்கங்களை திடீரென திசைதிருப்ப முயலக்கூடாதெனவும் எச்சரிக்கப்பட்டிருந்தது. இந்தப் பழம்பெரும் பழக்கங்கள் என கூறப்பட்டிருந்தது நிச்சயமாக சாதிப்பாகுபாடு பற்றியதாகும். யாழ்ப்பாணத்தில் பரவலாக நிலவிக் கொண்டிருந்த சாதிப்பாகுபாட்டினை அகற்றுவதற்கும், அல்லது ஒழித்துக் கட்டுவதற்கும் இளைஞர்கள் கங்கணம் கட்டி நின்றனர்.[88]

யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் விரைவில் ஒரு அகில இலங்கை இளைஞர் காங்கிரஸ் இயக்கமாக பரிணமிக்க வேண்டும் என்ற நம்பிக்கை 1929 அளவில் அதிகரித்திருந்தது. உண்மையில், அதே வருடம் மார்ச் மாதம் கொழும்பில் ஆனந்தாக் கல்லூரியில் திரு. டீ.பீ.ஜயதிலக தலைமையில் ஒரு சந்திப்பு இடம்பெற்றது. பல்கலைக் கழக, சட்ட மற்றும் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் கூட்டத்தில் பங்கு பற்றியிருந்தனர். ஆனந்தா கல்லூரியின் அன்றைய அதிபர் திரு.பி.டி.எஸ். குலரத்தின மற்றும் அன்றைய சாகிராக் கல்லூரி அதிபர் ரி.பி. ஜயா ஆகிய இருவருமே அக்கூட்டத்தில் பிரதான பேச்சாளர்களாக விளங்கினர். மாணவர் காங்கிரஸின் இணைச் செயலாளர்களில் ஒருவரான என். குமாரசிங்கம் எடுத்த முன் முயற்சியினாலேயே அக்கூட்டம் இடம்பெற்றது. 'கொழும்பு இளைஞர் கழகம்' ஒன்று அமைப்பதற்கு தீர்மானித்து, திருவாளர்கள் பி.டீ.எஸ்.குலரத்தின, ரி.பீ.ஜயா, எஸ்.ஆர்.கனகநாயகம், டி.எஸ்.எஸ். பீரிஸ், என். குமாரசிங்கம், ரொபின் ரட்னம், எம். இராஜசிங்கம், எப்.எஸ்.ஜே.கூரே, எம். சால்லி, பி.நடராஜா மற்றும் சி.ரணசிங்க ஆகியோர் கொண்ட ஒரு குழு தெரிவுசெய்யப்பட்டது.[89]

இதேபோன்ற அமைப்புகள் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் தோற்றம் பெற்று, அதன் பயனாக ஓர் அகில இலங்கை இளைஞர் காங்கிரஸ் அமைக்கப்பட்டு விடும் என்பதுதான் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸின் நம்பிக்கையாய் இருந்தது. ஆனால் இது விடயமாக முன்னேற்றம் குறைவாகவே இருந்தது. மாணவர் காங்கிரஸ் தலைவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கொள்கையை அல்லது குறிக்கோளை ஒரு போதும் மறந்து விடாமல் அதற்காக முயன்ற வண்ணமே இருந்தனர். அவர்களின் இயக்கத்தைப் பொறுத்தவரை அதனை ஒரு போதும் ஒரு குறுகிய வட்டமாக எண்ணாமல், ஓர் அகில இலங்கை அமைப்பினை உருவாக்க வேண்டும் என அவர்கள் கொண்டிருந்த குறிக்கோள் முந்தியோ, பிந்தியோ, என்றாவது எட்டப்படுமென அவர்கள் நிச்சயமாக நம்பி யிருந்தனர்.

பரந்த விடயமாகிய சுயாட்சி அல்லது சுதந்திரம் எனும் விடயம் தொடர்பில் 1929 அளவில் மாணவர் காங்கிரஸ் 'சுவராஜ்' அடைய வேண்டுமென பிரகடனம் செய்தது. அவர்களுடைய சிந்தனை மற்றும் உரைகளை பொறுத்தவரை இதுவொன்றும் புதிய விடயமல்ல. இந்தியாவிலும், ஏன் இலங்கையிலும் கூட, இடம்பெற்றுவந்த வேகமான வளர்ச்சிப் போக்குகள் மற்றும் டொனமோர் அறிக்கை வெளியாகி இருந்தமை காரணமாக அரசியல் களம் தீவிரமாக மாற்றமடைந்து விட்டது. பெரிய எதிர்பார்ப்புகள் தூண்டப்பட்டு விட்டன.

மாணவர் காங்கிரஸ் இந்தியாவில் இடம் பெற்று வந்த நிகழ்வுகளினால் பெரிதும் ஈர்க்கப்பட்டிருந்தது. அந்த நேரத்தில் இந்தியா தனது வரலாற்றில் புதியதோர் கட்டத்தில் காலடி வைத்தது. காந்தி இலங்கை விஜயம் மேற்கொள்வதற்கு சிறிது காலத்திற்கு முன்னதாக பிரித்தானிய ஆளுனர் எர்வின் பிரபுவால் ஆலோசனை கலப்பதற்கு அழைக்கப்பட்டிருந்தார். அந்த சந்திப்பின் போது 'மொன்ரேகு செம்ஸ்-போட்' சீர்திருத்தங்கள் செயற்படுத்துவதற்கும் சுயாட்சி நோக்கி முன்னேறுவதற்குமான சிபாரிசுகள் செய்வதற்கும் சைமன் என்பவரின் தலைமையிலான ஆணைக்குழு நியமிக்கப்பட்டதாக அறிவிக்கப் பட்டது. இந்த ஆணைக்குழுவிற்கு ஒரு இந்தியராவது நியமிக்கப்பட வில்லை. இது இந்தியாவில் பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியது மட்டுமல்லாமல், மிதவாத, தாராளவாதத் தலைவர்கள் கூட ஏமாற்ற மடைந்தனர். இந்தியர்கள் தம்மைத் தாமே ஆள்வதற்கு தகுதியுடையவர்களா என்பதை 'கடவுளின் வெள்ளையர்கள்' தீர்மானிப்பர் என்பது தெளிவாகியது. இந்திய தேசிய காங்கிரஸின் தலைமையின் கீழ் தமக்கு சுயநிர்ணய உரிமை வேண்டுமென கோரிக்கை சமர்ப்பித்திருந்தனர். 'சைமன் ஆணைக்குழு' பகிஷ்கரிக்கப்பட வேண்டுமென இந்திய தேசிய காங்கிரஸ் அறைகூவல் விடுத்தது. ஆணைக்குழு இந்தியாவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தடைந்த போது, நாடளாவிய ரீதியிலான ஹர்த்தால் போராட்டம் நடத்தப்பட்டதோடு, ஆர்ப்பாட்டக்காரர்கள் கறுப்புக் கொடிகளை ஏந்திய வண்ணம் "திரும்பிப்போ சைமன்" என கோசமிட்டனர். பொலிசார் தடியடிப் பிரயோகம் (லத்தி) மேற்கொண்டு கூட்டத்தினரைக் கலைத்தனர். ஜவஹர்லால் நேருவும் தாக்கப்பட்டார். காங்கிரஸிற்குள் ஜவஹர்லால் நேரு மற்றும் சுபாஸ் சந்திரபோஸ் இருவரும் இளைய தலைமுறையினரை அணி திரட்டியிருந்தனர். அந்த அணி காங்கிரஸினுள் சோசலிச அபிலாசைகள் கொண்ட இடது சாரிப் பிரிவாக கருதப்பட்டது. 1928இல் காங்கிரஸின் கல்கத்தா அமர்வுகளின்போது புரட்சிகர நிலையில் கைத்தொழில் துறைத் தொழிலாளர்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டம் ஒன்றினை காங்கிரஸ் எதிர்கொள்ளவேண்டியிருந்தது. பர்தோலி மாவட்டத்தில் வரிகள் செலுத்த மறுக்கும்முகமாக விவசாயிகள் அணிதிரட்டப்பட்டிருந்தனர். அரசாங்கம் பயங்கர அடக்குமுறை செயற்பாடுகளை அமுல் படுத்தியிருந்த போதும், சாத்வீகப் போராட்டம் தொடர்ந்து நடத்தப் பட்டது. இறுதியில் உத்தேசிக்கப்பட்டிருந்த வரி அதிகரிப்பினை குறைத்துவிடும் நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டது. வரி செலுத்த மறுத்தமை, போராட்டத்தை வெற்றியடையச் செய்வதில் ஒரு ஆயுதமாக அமைந்தது.

ஆக, பரந்துபட்ட மக்கள் அழுத்தம் காரணமாக முழுசுதந்திரம் வேண்டுமென பிரகடனம் செய்வதற்கு காங்கிரஸ் நிர்ப்பந்திக்கப் பட்டது. 1929 டிசம்பர் 31 நள்ளிரவு இந்திய சுதந்திரத்திற்கான கொடி லாகூரில் உயர்த்தப்பட்டது. அத்தோடு தமது குறிக்கோள் முழுமையான சுதந்திரம் என காங்கிரஸ் பிரகடனம் செய்தது. 1930 ஜனவரி 26ஆம் நாள் சுதந்திரதினமாகக் கொண்டாடப்பட்டது. வரிசெலுத்த மறுப்பு உள்ளிட்ட ஒத்துழையாமை இயக்கம் ஒன்றினை முன்னெடுப்பதற்கு இந்திய தேசிய காங்கிரஸ் உறுதியளித்தது. அந்தப்போராட்டத்தின் நோக்கம் 'பூரண சுவராஜ்' அல்லது 'முழுமையான சுதந்திரம்' என வரையறுக்கப் பட்டிருந்தது. உப்புவரிக்கெதிரான நேரடி நடவடிக்கைப் போராட்டம் 1930 மார்ச் மாதம் முடுக்கிவிடப்பட்டது. அப்போது காந்தி தனது புகழ் பெற்ற டண்டி யாத்திரையை மேற்கொண்டிருந்தார். இந்திய மக்கள் நாடு பூராவும் உப்புச்சட்டங்களை மீற வேண்டுமென்பதற்கு இது ஒரு சமிக்ஞையாய் இருந்தது. பரந்தளவிலான கைதுகள் செய்யப்பட்டன. காங்கிரஸ் தலைவராய் இருந்த ஜவஹர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லால் நேரு மற்றும் பல தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். 1930 மே 4 திகதி காந்தியுமே கைது செய்யப்பட்டார். ஆக, அந்த ஆண்டு இந்திய சுதந்திர வரலாற்றில் நீண்டதொரு குழப்பமும் போராட்டமும் கொண்ட காலப்பகுதியாக விளங்கியது.

இந்தியாவில் இடம்பெற்ற சம்பவங்கள் இலங்கையில் பத்திரிகை மூலம் பரந்தளவு விளம்பரத்தைப் பெற்றிருந்தன. இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர்கள் மீது அதிகளவு அனுதாபம் காணப்பட்டது. கூட்டங்கள் நடத்தப்பட்டு, இந்தியாவில் போராடிக் கொண்டிருப்ப வர்களுக்கு அனுதாபமும் ஆதரவும் தெரிவிக்கும் பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டன. இலங்கையில் ஏற்பட்ட பிரதிபலிப்பு, பிரேரணை கள் மற்றும் பேச்சுகள் என்பவற்றிற்கு அப்பாற் செல்லவில்லை. இந்தியாவில் நடந்தேறிய நிகழ்வுகள் காரணமாக யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் மிக ஆழமாக கவரப்பட்டதோடு, இந்தியாவில் நடந்த போராட்டத்தை தனது போராட்டத்தைப் போல் ஆதரித்தது. 1930 - 1931 வருடங்கள் மாணவர் காங்கிரஸின் வரலாற்றில் மிக முக்கியமான காலகட்டமாக விளங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7

## சாதியும் சரியாசனமும்

மாணவர் காங்கிரஸின் 6வது அமர்வுகள் 1930 ஏப்றில் மாதம் திருநெல் வேலி இந்து பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றன. அவ்வருடத்திற்குத் தலைவராக விக்ரோறியாக் கல்லூரி அதிபர் திரு.எஸ். சிவபாதசுந்தரம் தெரிவு செய்யப்பட்டார். அவர் ஒரு பெரிதும் மதிக்கப்பட்ட தொன்மை யான இந்து அறிவாளி. அவர் பின்னர் சைவப் பெரியார் என அழைக் கப்பட்டவர். மாணவர் காங்கிரஸ் பிரதானமாக கிறிஸ்தவ செல்வாக் கிற்கு உட்பட்டிருப்பதாக சில செல்வாக்குள்ள இந்துக்கள் மத்தியில் ஒரு உணர்வு வளர்ந்து வந்தது. ஹன்டி பேரின்பநாயகமும் சபாபதி குலேந்திரனும் அந்த நேரத்தில் இந்த இயக்கத்தின் முன்னணியில் திகழ்ந்தனர். முதலாவது இரண்டு அமர்வுகளிலும் பிரபல்யமான கிறிஸ்தவராகிய திரு.ஜே.வி. செல்லையா மற்றும் கலாநிதி ஐசக் தம்பையா தலைவர்களாக பதவி வகித்தனர். ஆரம்ப ஆண்டுகளில் காங்கிரஸின் தலைமை பெரும்பாலும் யாழ்ப்பாணக் கல்லூரியைச் சார்ந்ததாய் இருந்தது. அதிபர் பிக்னல் இதற்கு உற்சாகம் அளித்து வந்தவர். 1920 களிலும் 1930 முற்பகுதியிலும் இலங்கையிலும் இந்தியாவிலும் இருந்த பல கிறிஸ்தவர்கள் காந்தியின் செல்வாக்கினால் ஈர்க்கப்பட்டிருந்தனர். இந்தியாவில் கிறிஸ்தவர்களை காந்திய இயக் கத்தினுள் பிரவேசம் செய்வதற்கு திரு.சி.எப். அன்டறூஸ் பெரிய பங்களிப்பினைச் செய்திருந்தார். இந்தியாவில் தேசிய விழிப்புணர் வினால் ஈர்க்கப்பட்ட கிறிஸ்தவர்கள் மத்தியில் 'திருச்சபை இந்திய மயமாக்குதல்' எனும் விடயமாக அதிகளவு கலந்துரையாடல், விவா தங்கள் இடம்பெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்இந்தியாவில் திருப்பத்தூரில் கிறிஸ்துகுல ஆச்சிரமத்தினை ஸ்தாபித்தவராகிய டாக்டர். எஸ்.ஜேசுதாசன், F.R.C.S, 'கிறிஸ்தவத்தை இந்திய மயமாக்கல்' எனும் சொற்பதத்திற்குப் பதிலாக 'இந்தியாவில் கிறிஸ்தவத்தின் தேசிய வெளிப்பாடு' என்பதை தான் விரும்புவதாக ஒரு தடவை கூறியிருந்தார். உள்ளூர் வடிவங்களில் வணங்குதல் மற்றும் வாழ்க்கை முறை ஆகிய அம்சங்களை சில கிறிஸ்தவர்கள் மத்தியில் அறிமுகப்படுத்துவதில் டாக்டர் ஜேசுதாசனும் அவரது ஆச்சிரமும் பின்னர் பாரிய பங்களிப்பினை செய்திருந்தனர். சேவகர் செல்வரத்தினம் இலங்கையில் சுன்னாகத்தில் ஸ்தாபித்து வைத்த கிறிஸ்து தேவா ஆச்சிரமம் திருப்பத்தூர் ஆச்சிரமத்தினால் பெரிதும் போஷிக்கப்பட்டிருந்தது. 'விவிலிய அல்லது கிறிஸ்தவ மயமாக்கல்' எனும் பொருளில் 1925இல் எழுதியவராகிய வண.எஸ்.எஸ்.சோம சுந்தரம், சாது சுந்தர்சிங் தொடர்பாக பெற்றிருந்த அனுபவங்களையும் குறிப்பிட்டிருந்தார். ஒரு துறவியாகிய சாது சுந்தர் சிங் இலங்கைக்கு வருகை தருவது வழக்கம். இங்கு அவரைப் போற்றும் அபிமானிகளும் பலர் உளர். இந்தியாவில் தேவாலயம் எதிலும் அங்கத்தவர்களாய் இன்றி ஜேசுநாதரைப்பின்பற்றி சன்னியாசியாக இந்தியாவில் வாழ்ந்து வந்த பலரை சாது தரிசித்ததாக வண.சோமசுந்தரம் குறிப்பிட்டிருந்தார். அவர்கள் உண்மையான, அச்சொட்டான கிறிஸ்தவர்கள் என சாது சுந்தர்சிங் கூறியிருந்தார். கிறிஸ்தவமானது உள்நாட்டு போக்குக்கேற்ப வெளிப்படுத்தப்பட வேண்டுமென வலியுறுத்தியவராகிய வண. சோமசுந்தரம் கூறியதாவது: 'இந்தியாவிற்கு தேவையான பருத்தியை வழங்கி இந்தியா தனக்கு தேவையான சேலைகளை தனது விருப்பிற்கேற்ப தயாரிப்பதற்கு வழிசமைக்க வேண்டுமே தவிர, மேற்குலகில் பாவிக்கப்படும் ஒடுக்கமும் இறுக்கமும் கொண்ட ஆடை களை திணிக்கக்கூடாது. இந்தியாவிற்கு சுத்தமான பவுணைக் கொடுத்து தனது தலைக்குப் பொருத்தமான முடியை செய்வதற்கு இடமளிக்கப்பட வேண்டும், மாணவர் காங்கிரஸைச் சார்ந்த கிறிஸ்தவ இளைஞர்கள் உள்நாட்டில் நிலவும் வணக்கமுறைகளை அறிமுகப்படுத்துவதிலும், தமிழ் புது வருடத்தை ஒரு தேசிய விழாவாகக் கொண்டாடுவதிலும் முன்னணி பாத்திரம் வகித்தனர். 1927 ஏப்றில் புதுவருடம் சங்கானைத் தேவாலயத்தில் தேசியதினமாக கொண்டாடப்பட்டது. வழக்கமாக வைக்கப்படும் இருக்கைகளை அகற்றி கம்பளத்தில் அமரும் நடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறை அறிமுகப்படுத்தப்பட்டது. மரபுரீதியான குத்து விளக்குச் சுடர் ஏற்றப்பட்டதோடு தேவாரங்கள், பஜனைகள் போன்றவற்றோடு உள்ளூர் வணக்க முறைகள் மேற்கொள்ளப்பட்டன. யாழ்ப்பாணத்தில் சில கிறிஸ்தவ வட்டாரங்களில் இதற்கு பலத்த எதிர்ப்பு தெரிவிக்கப் பட்டது. வணக்கமுறையை பொறுத்தவரை இறக்குமதி செய்யப்பட்ட வடிவங்களை வெறுமனே பின்பற்றல், மற்றும் தேவாலய வாழ்க்கை முறை என்பவைப் பற்றி கிறிஸ்தவ இளைஞர்கள் கொண்டிருந்த சிந்தனையின் வெளிப்பாடாகவே அது காணப்பட்டது. அவர்களில் ஒருவர் பின்வருமாறு கூறியிருந்தார்: "இன்று அறியப்பட்டிருப்பதும் போதிக்கப்பட்டு வருவதுமான கிறிஸ்தவம் ஒருவகையில் குறுகிய தன்மையானதாக உள்ளது. மதம் என்னும் போது, அது இதைவிட மிக உயர்ந்தது. ஆன்மீக வாழ்வின் உண்மையான உச்சநிலையானது, ஒருவர் அழைக்கப்படுவது கிறிஸ்தவன் என்று அல்லாமல் உண்மையான பக்தன் என்று இருக்க வேண்டும்."[91]

மாணவர் காங்கிரஸைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் இந்துக்களுடனும் பொதுவாக பரந்துபட்ட சமூகத்துடனும் கூடுதலான ஒருமைப்பாட்டை உருவாக்குவதற்கே அத்தகைய முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். அதேவேளை பிறிதொரு கிறிஸ்தவப் பிரிவினர் 'கிறிஸ்தவ பிரஜைகள் கழகம்' எனும் அமைப்பொன்றினை உருவாக்கி, உத்தேசிக்கப்பட்ட அரசசபையில் தமக்குத் தனியான பிரதிநிதித்துவம் வேண்டுமென கோரிக்கை விடுத்தனர். இவ்வாறாக, இனரீதியான பிரதிநிதித்துவ கோட்பாடு விரிவடையும் நிலை உருவானது. 'கிறிஸ்தவ பிரஜைகள் குழு' முன்வைத்த கோரிக்கைகளுக்கு சார்பாகவும் எதிராகவும் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இனரீதியான பிரதிநிதித்துவம் மேலும் விசாலிக்கப்படுவதை மாணவர் காங்கிரஸை சேர்ந்த கிறிஸ்தவர்கள் முன் நின்று எதிர்த்தனர். மாணவர் காங்கிரஸ் எக்காரணம் கொண்டும் கிறிஸ்தவ ஆதிக்கம் கொண்டதென முத்திரை குத்த முடியாது.

ஆயினும் கிறிஸ்தவர்களுக்கும் இந்துக்களுக்கும் இடையில் குறிப்பாக பாடசாலைகள் பிரச்சினை தொடர்பாக மேலோங்கி வந்த விரிசல் காரணமாக மாணவர் காங்கிரஸ் கூடுதலாக கிறிஸ்தவ சார் பானது என்றொரு சந்தேகம் சில இந்துக்களின் மனதில் குடிகொண் டிருந்தது. சாதிப்பாகுபாடு தொடர்பாக மாணவர் காங்கிரஸ் விட்டுக் கொடுக்காத நிலைப்பாட்டினை கொண்டிருந்தபடியால் இந்துக்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில பிரிவினரின் பெரு வெறுப்பை சம்பாதிக்க வேண்டியிருந்தது. மாணவர் காங்கிரஸ் தொடர்பாக காணப்பட்ட எல்லாத் தப்பெண்ணங் களையும் அகற்றுவதற்காக 1930 அமர்வுகளுக்குத் தலைமை தாங்கு வதற்கு திரு.சிவபாதசந்தரம் அவர்களை அழைப்பதற்கு தீர்மானிக் கப்பட்டது. தொன்மை நெறிமுறைகள் கொண்ட தலைவராகிய அவர் இந்த அழைப்பினை ஏற்றுக் கொள்வாரா என்ற சந்தேசம் மாணவர் காங்கிரஸின் பல இந்து உறுப்பினர்களின் மனதில் இருந்தது. அவரை அழைப்பதற்கு கலைப்புலவர் நவரத்தினம், ஏ. ஈ. தாம்பர் மற்றும் சி.சுப்பிரமணியம் ஆகியோர் நேரடியாகச் சென்றிருந்தனர். சாதிப் பாகுபாடு, சரியாசனம் வழங்குதல், ஒன்றுசேர்ந்து உணவருந்தல் போன்ற விடயங்கள் தொடர்பாக மாணவர் காங்கிரஸ் மேற்கொண்டிருந்த முயற்சிகள் மீது திரு.சிவபாதசுந்தரம் அக்கறை காட்டினார். அவர் தலைவர் பதவி ஏற்றமை குறிப்பாக 1930இல் மிகுந்த பலமாய் இருந்தது. சி. சுப்பிரமணியம் தலைவரை வரவேற்று ஆற்றிய உரையில் பின்வருமாறு கூறினார்: 'நீங்கள் எங்களில் ஒருவராக வந்துள்ளதன் பயனாக எமக்குப் புதிதாகக் கிடைத்துள்ள ஆத்மீக உணர்வையும் பலத்தையும் அனுபவிக்கும் வாய்ப்புக் கிட்டியுள்ளது. உயர்ந்த விழுமி யங்களை நெறி தவறாமல் கடைப்பிடிப்பதே இதனை சாத்தியமாக்கி யுள்ளது.'[92]

அந்தக் காலகட்டத்தில் யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலைகளில் சரியாசனம் என்பது பாரிய பிரச்சினையாகியிருந்தது. பாடசாலைகளில் சரியாசன முறையினை அறிமுகம் செய்யும் முயற்சி காரணமாக இடம்பெற்றுக்கொண்டிருந்த குழப்பங்கள் மற்றும் தீவைத்தல் சம்ப வங்கள் திரு. சிவபாதசுந்தரம் போன்ற பிரபல்யம் வாய்ந்தவர்களை ஆழ்ந்த கவலைக்கு உள்ளாக்கிவிட்டன. தாராள இந்து தலைவர்கட்கு மாணவர் காங்கிரஸ் முன்னின்று மேற்கொண்ட சிந்தை கொண்ட முயற்சி ஏற்புடையதாயிருந்தது. மறுபுறத்தில், மிகப் பழைமை வாத, பிற்போக்கு வாத சக்திகள் திருநெல்வேலி அமர்வுகளை சந்தர்ப்பமாக பயன்படுத்தி மாணவர் காங்கிரஸ் மீது தமது வன்மங்களை வெளிப் படையாகக் காட்டின. வேதாகம சங்கத்தின் பற்றாளர்களே காங்கிரஸ் மீதான எதிர்ப்பினை ஏற்படுத்தியிருந்தனர். கல்விக்கான இந்துசபை யின் முகாமைத்துவத்தின் கீழ் உள்ள சைவப்பயிற்சி நிலையத்தில் காங்கிரஸின் அமர்வு நடத்துவதை அவர்கள் எதிர்த்தனர். சரியாசன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கையை எதிர்த்தவர்கள் திருநெல்வேலிக் கிராமத்தில் சுற்றித் திரிந்து பிரசாரம் செய்துள்ளனர். அதாவது, உட்காருதல், உணவருந்தல் போன்ற விடயங்களில் மாணவர் காங்கிரஸ் சிறுபான்மை தமிழர் களுக்கு சமவுரிமை தொடர்ந்து வழங்குவதற்கு இடமளித்தால், அது யாழ்ப்பாண சமூக ஒழுங்கு முழுவதையும் படிப்படியாய் பாதித்துவிடும் என்றே பிரசாரம் செய்யப்பட்டது. அடுத்து, முறுகல் நிலையொன்று தோன்றி காங்கிரஸ் அமர்வுகள் நடைபெறவுள்ள இடத்திற்கு செல்லும் வீதிகள் எல்லாவற்றிலும் மறியல் போராட்டங்கள் நடத்தி தடைகள் போடப்பட்டன. அயலில் உள்ள கிணறுகளிலிருந்து தண்ணீர் எடுக்கும் வழிவகைகளும் அகற்றப்பட்டன. அது மட்டுமல்லாமல் பயிற்சி நிலையத்தில் உள்ள கிணறும் மாசுபடுத்தப்பட்டிருந்தது. தலைவரின் வாகனமும் தடுக்கப்பட்டு கல்வீச்சிற்கு உள்ளாக்கப்பட்டது.

எவ்வாறாயினும், சற்று தாமதித்தாயினும் காந்திய கீதங்கள் இசைத்து அமர்வுகள் ஆரம்பமாகின. வரவேற்புக் குழு தலைவர் சி. சுப்பிரமணியம் அதன் பின் வரவேற்புரையை நிகழ்த்தினார். இந்தக் கட்டத்தில் அமர்வுகளை முறியடிப்பதற்கு கங்கணங்கட்டி நின்ற கூட்டம் கொந்தளிக்கத் தொடங்கியது. கூச்சலில் ஈடுபட்ட கூட்டம் கல்வீச்சிலும் காடைத்தனத்திலும் இறங்கியது. காங்கிரஸ் உறுப்பினர்கள் எதுவித நடவடிக்கையிலும் ஈடுபடாமல் அமைதி காத்தனர். ஆனால் மண்டபத்தை விட்டு வெளியேறினர். பின்னர் சற்று நிலைமை சீரானதும் வரவேற்புரையும் தலைமை உரையும் இடம்பெற்றன. அமர்வுகளின் எஞ்சிய நடவடிக்கைகளை யாழ்ப்பாண 'றிஜ்வே' மண்டபத்தில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. இந்து சபைக்குச் சொந்தமான கட்டிடங்களுக்கு மேலும் சேதம் எதனையும் ஏற்படுவதை தவிர்ப்ப தற்காகவே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது. ஆனால், அமர்வுகள் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டபோது ஏப்றில் 23ம் திகதி இரவு பாடசாலை மண்டபத்திற்கு தீவைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.[93] தலைவர் திரு. சிவபாதசுந்தரம் இச்சம்பவங்களால் சிறுதேனும் கலங்க வில்லை. இதற்கு முந்தின அமர்வின் போது மாணவர் காங்கிரஸ் உறுப்பினர்கள் பெற்ற கசப்பான அனுபவத்தினை நினைவூட்டியதோடு, தற்போது அவர்கள் சந்தித்த கல்லடி பொல்லடி ஆச்சரியத்திற்குரியது அல்ல என்று கூறிவைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி. சுப்பிரமணியம் தனது வரவேற்புரையில் மூன்று பிரதான பிரச்சினைகள் தொடர்பாக கருத்து வெளியிட்டார். அவையாவன: கலாசார மறுமலர்ச்சி, தீண்டாமையும் அது தொடர்பாக பாட சாலைகளில் சரியாசனமும், இளைஞரும் அரசியலும் ஆகும். பாட சாலை கற்பித்தல் திட்டத்தில் தாய்மொழிக்கு பிரதான இடமளிக்கப்பட வேண்டுமெனவும் தாய் மொழியை போதான மொழியாக்குவதற்கு காங்கிரஸ் எல்லா முயற்சிகளையும் எடுக்கவேண்டுமெனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார். வரவேற்புக்குழு தலைவர் தனது உரையில் மேலும் கூறியதாவது:

"ஒரு ஆசிரியர் என்ற வகையில் நான் சக ஆசிரியர்கட்கு கூறுவது என்னவென்றால் எமது மாணவர்களின் இரத்தத்தை உறிஞ்சுவதும், அறிவு வளர்ச்சியை மழுங்கடிக்கவல்ல கல்வி முறைமை ஒன்றினை நாம் விரும்பி ஏற்று உதவிக்கொண்டிருப்பதும் மிகக் கொடிய குற்றச் செயல் என்பதால் நாம் குற்றவாளிகள் ஆகிவருகின்றோம். இந்த முறைமை உதாரணமாக மாணவர்களின் நரம்பியல் சக்தி மோசமாக பாதிக்கப்பட்டு, அவர்களை மேன்மேலும் பலவீனமான நிலைக்கு இட்டுச் செல்கின்றோம். கிழக்குத்தேய முறைமைகள் எல்லாவற்றையும் மாணவர்கள் குறைத்துக் கணிக்கிறார்கள் என்றால் அது அவர்களின் தவறல்ல. நாங்கள் புகட்டும் கல்வியே அதற்குக் காரணமாகும்". பொதுப் பரீட்சைகளில் தாய்மொழி கட்டாய பாடமாக்கப்பட வேண்டு மென்றும் அதற்கான கேள்வித்தாள்களின் தரம் கணிசமானளவு உயர்த்தப்பட வேண்டு மெனவும் நடைமுறைச் சாத்தியமான ஆலோச னை ஒன்றை அவர் முன்வைத்தார். அவர் சாதி மற்றும் 'வர்ணாச்சிரமதர்ம' விடயமாக சற்று விரிவாகக் குறிப்பிட்டதோடு, சில பழமைவாத இந்துக்கள் சாதி முறைமைக்கு ஒரு மதரீதியான அங்கீகாரம் வழங்க எடுத்த முயற்சிகளை அவர் நிராகரித்தார். காங்கிரஸைப் பொறுத்தவரை, சமூகநீதி என்பதே முதற்பிரதானமானதாகும். அடக்கப்படும் வர்க்கத் தினரின் ஏற்றத் தாழ்வுகளை அகற்றிவிடுதல், அரசியல் ஐக்கியத்திற்கு மிக அவசியமானது என அவர் வலியுறுத்தினார். தற்போதைய நடை முறைகள் காரணமாக நாட்டில் ஒரு பகுதியினர் அடக்குமுறையாளர் களுக்கு எதிராக தமது பாதுகாப்பு நிமித்தம் அந்நிய அதிகாரவாதிகளை நாட வேண்டிய அதே வேளை, அதே அந்நிய அதிகாரவாதிகள் முழு நாட்டையும் அடிமைப்படுத்தி வைத்திருக்கின்றனர். சாதி அடக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையை ஒழிப்பதற்கு பாடுபட்டால் ஒழிய, மறுமலர்ச்சி, சுதந்திரம், ஆன்மீக விழிப்புணர்வு மற்றும் தேசிய மரபு என்பவற்றைப் பற்றிப் பேசுவதெல்லாம் விழலுக்கு இறைத்த நீர் எனலாம். பொது நிறுவனங்களில் சாதி, மத, இன பேதமின்றி சகலரையும் சமமாக நடத்துவதை அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் எடுத்த முயற்சிகளை சி.சுப்பிரமணியம் மாணவர் காங்கிரஸ் சார்பில் வரவேற்றுப் பேசினார்.

சி. சுப்பிரமணியம் 'இளைஞரும் அரசியலும்' எனும் விடயம் தொடர்பாக முன்வைத்த கருத்துக்களும், மூத்தோர் தொடர்பாக காங்கிரஸ் கொண்டிருந்த மனோபாவமும், 1931இல் தேர்தல் பகிஷ்கரிப்பு பற்றி எடுக்கப்பட்ட முடிவுக்கான எண்ணம் எத்தகையது என்பதைத் தெளிவாகக் காட்டியது. குறிப்பாக, நாடு, சுதந்திரத்தை அடையும் விடயமாக இளைஞருக்கு அரசியலில் பங்குபற்றும் உரிமையுண்டு என மாணவர் காங்கிரஸ் தனது நிலைப்பாடாக எடுத்தது. “அரசியல் என்பது வெறுமனே காய்நகர்த்தல்கள் மற்றும் சமரசங்கள் அல்லது விருப்புவெறுப்புக்கள் மீது விளையாடுதல், அடுத்த தேர்தலை மனதில் வைத்து பயணித்தல், அரசாங்கத்திடமிருந்து நல்லபெயரெடுத்தல் ஆகிய அம்சங்கள் அடங்கலானவை என்பதால் மாணவர் காங்கிரஸ் அதனை வெறுத்து நிற்கின்றது.” வரவேற்பு குழுக் கூட்டத்தில் தலைவர் மேலும் கூறியதாவது: “இனரீதியான பிரதிநிதித்துவம் ஒழிக்கப்பட வேண்டுமென மாணவர் காங்கிரஸ் மாத்திரமே உறுதியாய் இருந்தது. எனவே, புதிய அரச சபையில் வடக்கு எத்தனை ஆசனங்களை பெறப்போகிறது என்பதில் எமக்கு சிறிதும் அக்கறையில்லை. ஏனெனில் அறுபது அங்கத்தவர்கள் கொண்ட சபையில் வடக்கு பெற்றுக் கொள்வது மூன்று ஆசனங்களா அல்லது ஆறு ஆசனங்களா என்பது பெரிய விடயமில்லை. பரஸ்பர நம்பிக்கையும் நல்லெண்ணமும் மட்டுமே தேசிய ஒற்றுமைக்கு இட்டுச் செல்லுமே ஒழிய ஆசனங்களுக்கு ஏட்டிக்கு போட்டியாக நாம் நடந்து கொண்டால் இதனை எய்தமுடியாது. இந்தப் போராட்டமானது பொருளாதார, கலாசார மற்றும் அரசியல் ரீதியாக எம்மை அடிமைப்படுத்தி வைத்திருக்கும் அதிகாரவாதத்திற்கு எதிரானதாகும். எனவே, நாட்டின் ஒரு பிரிவினர் தமது சொந்த நலனுக்காக அரசாங்கத்தோடு ஒட்டி உறவாடிக் கொண்டிருந்தால் இந்தப் போராட்டத்தினை நாம் உறுதியாக முன்னெடுக்க முடியாது.”[94]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1930 அமர்வுகளில் சாதிப் பிரச்சினை ஒரு பிரதான இடத்தை வகித்தது. சீர்திருத்தம் கொண்டுவருவதற்கு உழைத்து வந்தவர்களை இலக்கு வைத்து ஒரு எதிர்ப்பு அலை உருவாக்கப்பட்டு வந்தது. 1930இல் பாடசாலைகளில் சரியாசன முறை ஒரு பெரிய பிரச்சினையாக உருவெடுத்தது. சரியாசன முறையை அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்து விட்டது. இரு மாத காலப்பகுதியில் ஒரு டசின் பாடசாலைகள் தீ வைத்து அழிக்கப்பட்டதாக அறிக்கைகள் வெளியாகின. அநேகமான தீ வைப்பு செயல்கள் உயர்சாதியினர் என்று கூறப்படுவர்களால் சரியாசனம் அமுல்படுத்தப்பட்ட இடங்களில் அவ்வப்போது நடத்தப்பட்டன. அதே நேரத்தில் சரியாசனம் அமுல்நடத்தப்படாத பாடசாலைகள் சிறுபான்மைத் தமிழர்களால் தீவைத்து சாம்பலாக்கப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றிருந்தன. பல பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன. 1930 மே மாதம் பாடசாலை முகாமையாளருக்கான கூட்டம் ஒன்றில் இப்பிரச்சினை சூடாக விவாதிக்கப்பட்டது. இந்தக் கூட்டத்திற்கு தலைமைவகித்தவராகிய திரு.வைத்திலிங்கம் துரைசுவாமி தான் தனிப்பட்ட முறையில் சரியாசனத்தை ஆதரிப்பவராயினும், மக்களுடன் ஆலோசனை கலந்து அதனை சமாதானமாக நிறைவேற்றுவதையே விரும்புவதாகக் கூறினார். ஏப்ரலில் நடைபெற்ற மாணவர் காங்கிரஸ் அமர்வுகள் சரியாசனம் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை முழுமையாக ஆதரித்திருந்தது. அதே நேரத்தில் அதனை சட்டபூர்வமாக அமுல்படுத்துவதற்கு பொதுமக்கள் அபிப்பிராயத்தைப் பெற்று ஒரு உகந்த சூழ்நிலை உருவாக்குவதன் மூலமே இத்தகைய சீர்திருத்தங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமென மூத்தோர் பரப்பி வந்த கருத்தை காங்கிரஸ் நிராகரித்திருந்தது. முகாமையாளர் கூட்டத்தில் பின்வரும் பிரேரணையை 18 பேர் ஆதரித்தும் 4 பேர் எதிர்த்தும் வாக்களித்து நிறைவேற்றப்பட்டது. "அரச உதவிபெறும், பாடசாலைகளுக்கான திட்டத்தின் கீழான 34வது பிரிவையும் அரச உதவிபெறும் இருமொழி மற்றும் தமிழ் மொழி பாடசாலைகளுக்கான 48வது பிரிவின் கீழ் இடமளிக்கப்பட்டிருப்பதாகிய சரியாசன முறைமையை, தாழ்த்தப்பட்ட வர்க்க மாணவர்கட்கு வேறான இருக்கைகள் வழங்கினாலும் கூட, கட்டாயமாக அமுல்படுத்தல் என்ற விடயத்தையும் யாழ்ப்பாணத்தில் பெரும்பான்மையான மக்கள் எதிர்க்கின்றனர்." இந்தக் கலந்துரையாடலின் போது 'கூட்டு அமர்வு' மற்றும் 'சம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தஸ்து அமர்வு' என்ற இரண்டிற்கும் இடையில் ஒரு வித்தியாசம் காணப்பட்டது. சிறுபான்மை தமிழ் சமூகப் பிள்ளைகள் அவர்களுக்கென வேறான வாங்குகளில் இருத்துவதன் மூலம் சம அந்தஸ்து வழங்கக் கூடியதையும் மேற்படி பிரேரணை நிராகரித்தது. இந்து சபை முதலில் முற்போக்கான நிலைப்பாட்டினை எடுத்திருந்த போதும், பழைமைவாத வட்டாரங்களில் இருந்து வந்த அழுத்தம் காரணமாக அது அடிபணிந்து விட்டது. எனவே, இராமநாதன் கல்லூரியில் சேர். பொன். இராமநாதன் தலைமையில் நடந்த கூட்டமொன்றில் ஏற்கனவே பாடசாலை முகாமையாளர்களால் மேற்கொள்ளப்பட்டது போன்ற தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. இந்துசபை பின்வரும் பிரேரணையை நிறைவேற்றியது: தாழ்த்தப்பட்ட சமூகத்தினரின் பிள்ளைகளுக்கு வாங்குகள் வழங்கப்பட்டால், எந்த ஒரு மாணவனையும் வித்தியாச மாக நடத்தக்கூடாது என விதிக்கப்பட்டுள்ள உத்தரவுகள் நடைமுறைப் படுத்தப்படுவதாக கொள்ளவேண்டும். அவ்வாறாக, பாடசாலை முகாமையாளரின் கடப்பாடு பூர்த்தி செய்யப்படுகிறது. எனவே, இந்தநிலையில் "தாழ்த்தப்பட்ட சமூகப் பிள்ளைகள் எவரும் அவர்களுக்கு வழங்கப்பட்ட ஆசனங்களில் அமர மறுக்கும் பட்சத்தில் அதனைக் காரணம் காட்டி நன்கொடை வழங்காமல், அல்லது வேறு ஏதாவது விதத்தில், எந்தவொரு பாடசாலை முகாமையாளரும் தண்டிக்கப்படக் கூடாது". பின்வரும் திருத்தத்துடன் மேற்படி பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. "பாடசாலை சொத்துக்கு தீவைத்தல் மூலமோ வேறு எந்த முறையிலோ அல்லது விதத்திலோ சேதம் உண்டாக்கப்படும் பட்சத்தில் நட்டஈடு வழங்கப்படுமென அரசாங்கம் உத்தரவாதம் அளித்தால் ஒழிய இந்தச்சபை சரியாசன முறைமையை அமுல்படுத்தக் கூடாது."[95]

கல்விக்கு பொறுப்பாய் உள்ளவர்கள், இவர்களில் சிலர் யாழ்ப் பாணத்தில் முன்னணிப் பிரஜைகள், பாடசாலைகளில் சரியாசன முறைமையை அமுல் செய்வதற்கு தம்மை ஈடுபடுத்திக் கொள்வதற்கு விருப்பமில்லாமல் தயக்கம் கொண்டவர்களாக இருந்தமை இப் பிரேரணைகளில் இருந்து தெளிவாகின்றது. கோப்பாய் பயிற்சி நிலை யத்தில் ஒன்று சேர்ந்து உணவருந்தல் பற்றி கிளம்பிய பிரச்சினைகள் தொடர்பாக ஆளுனரோடு கலந்துரையாடுவதற்கு சேர்.பொன். இராம நாதன் தலைமையில் ஒரு தூதுக் குழு அவரைச் சந்தித்தது. அங்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுபான்மை தமிழ் சமூகத்தைச் சேர்ந்த ஆசிரிய பயிற்சியாளர்கள் ஏனைய சாதியைச் சேர்ந்த பயிற்சியாளர்களுடன் இருந்து உணவருந்து வதற்கு கணிசமானளவு எதிர்ப்புத் தெரிவித்ததையடுத்து ஆளுனரு டனான சந்திப்பு மேற்கொள்ள நேரிட்டது. அந்தக் கூட்டத்தில் பாட சாலைகளில் சரியாசனம் என்ற பிரச்சினையும் பேச்சுவார்த்தைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. எல்லாப் பிள்ளைகளுக்கும் ஒரே வகையானதும், ஒரே உயரமானதுமான ஆசனங்கள் வழங்கப்படுமே ஒழிய 'தாழ்த்தப்பட்ட சமூகத்தைச்' சேர்ந்த பிள்ளைகளும் ஏனைய பிள்ளைகளும் ஒரே ஆசனத்தில் அமரவேண்டும் என்றொரு நிபந்தனை யில்லை என்றவாறாகவே சரியாசனம் என்பது கல்விப் பணிப்பாளரால் எப்போதும் கொள்ளப்பட்டுள்ளது என குடியேற்ற செயலாளர் இறுதியில் தனது முடிவை அறிவித்தார்.[96] 1930களில் யாழ்ப்பாணத்தில் இத்தகைய விடயங்கள் நடந்தேறிய சூழ்நிலையில், மாணவர் காங்கிரஸ் எடுத் திருந்த நிலைப்பாடு மிகுந்த முற்போக்கானதாகும். 1930இல் வருடாந்த அமர்வுகள் நடத்தப்படக் கூடாது என்றும் அதனை முறியடிப்பதற்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்ட போது, காங்கிரஸ் பின்வரும் பிரேரணையை நிறைவேற்றியது:

> பிறப்பு, தொழில், சொத்து போன்றவற்றின் அடிப்படையிலான சமூக ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிரான தனது பலத்த ஆட்சேபனையை காங்கிரஸ் மீள வலியுறுத்துகிறது.மேலும் எல்லோருக்கும் சம வாய்ப்பு வழங்கப்படவேண்டுமென்றும் இதே பணியில் ஈடுபட்டி ருக்கும் ஏனைய நிறுவனங்களுடனும் ஒத்துழைக்க வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. எல்லாப் பாடசாலைகளிலும் சரியாசன முறை மையை கடைப்பிடிக்கப்பட வேண்டுமெனவும் கல்வித்திணைக்களம் விடுத்த நீதியான உத்தரவினை காங்கிரஸ் வரவேற்கின்றது. அத்தோடு, எமது பாடசாலைகளில் நிலவும் இத்தகைய அநீதியான பாகுபாடுகளை இல்லாதொழிப்பதற்கு நாட்டு மக்கள் தம்மை ஈடுபடுத்த வேண்டுமென வேண்டுகோள் விடுக்கின்றது.

6வது வருடாந்த அமர்வுகளில் பின்வரும் பிரேரணைகளும் நிறை வேற்றப்பட்டன:

1. சுதந்திரப் பிரகடனம் தான் இந்தியாவின் உடனடி குறிக்கோள் என இந்திய தேசிய காங்கிரஸ் பகிரங்கப்படுத்தியதையிட்டு எமது காங்கிரஸ் தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியா சமாதான வழிமுறைகள் மூலம் விரைந்து வெற்றி கரமாக சுதந்திரத்தை அடைந்துவிட வேண்டுமென மகாத்மா காந்திக்கும் இந்திய மக்களுக்கும் தனது வாழ்த்துக்களையும் தெரிவித்து கொள்கின்றது.

2. இரண்டாவது பிரேரணை மேற்குறிப்பிட்ட சமூகக்குறைபாடு கள் தொடர்பானதாகும்.

3. இலங்கைத்தீவின் எல்லா இன மக்களினதும் அரசியல் பொரு ளாதார நலன்கள் ஒரே மாதிரியானவையென இக்காங்கிரஸ் கூறுகின்ற அதே வேளை, நாட்டின் பொதுநலனுக்காக அனைத்து சமூகங்களும் அன்னியோன்னியமாக உழைக்க வேண்டுமென வேண்டிநிற்கிறது.

4. வெறியூட்டவல்ல எந்தவித மதுபானத்தையும் முற்றாகத் தடை செய்ய வேண்டும் என்பதும், இதே நோக்கத்திற்காக உழைக்கும் அனைத்து ஸ்தாபனங்களுடனும் ஒத்துழைக்க வேண்டும் என்பதும் காங்கிரஸின் நிலைப்பாடாகும். ஆகையால் அனு மதிப்பத்திரத்தின்கீழ் ஒரு குறிப்பிட்ட குறைந்தளவு மது பானத்தை பாவனைக்கு வழங்குவது தவிர, கடினமான குடி வகைகள் உற்பத்தி செய்வதையும் இறக்குமதி செல்வதையும் முற்றாகத் தடைசெய்ய வேண்டுமென காங்கிரஸ் சிபாரிசு செய்கிறது.

5. நாட்டின் பொதுவாழ்க்கையில் பெண்கள் முன்னின்று பங்கு பற்றாதவரை எந்தவொரு நாடும் முழுமையான முன்னேற்றத்தை எட்டமுடியாது என இக்காங்கிரஸ் கருதுகின்றது. எனவே, நாட்டை கட்டியெழுப்பும் பொறுப்புக்களை ஆண்களோடு சேர்ந்து எமது நாட்டுப் பெண்களும் பகிர்ந்து கொள்ள வேண்டு மென வேண்டிநிற்கிறது.

6. எமது பாடசாலைகளில் நிலவும் கல்வி முறைமையானது எமது மக்களின் அறிவாற்றலுக்கு ஏற்றதாக இல்லையென இக் காங்கிரஸ் கருதுகின்றது. அந்நிய மொழி ஒன்றின் மூலம் கல்வி கற்பித்தல் காரணமாக மாணவர்களின் ஆளுமை அழிக் கப்படுவதோடு அந்நிய மொழி ஒன்றில் புலமைபெறுவதும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்கவேண்டிய விடயத்தைக் கிரகித்துக் கொள்வதுமாக இரட்டித்த சுமை மாணவர்கள் மீது திணிக்கப்படுகிறது. எனவே, தாய் மொழியை போதனா மொழியாக கொண்டுவருவதற்கு உழைக்க வேண்டுமென காங்கிரஸ் தீர்மானிக்கின்றது.

7. சுயராஜ் என்பது இந்த நாட்டின் எல்லா மக்களினதும் பாரதீனப் படுத்த முடியாத பிறப்புரிமை என்பதால் நாட்டின் சுதந்திரத்தை அடைவதற்காக இந்த நாட்டு இளைஞர்கள் தமது வாழ்க் கையை அர்ப்பணிக்க வேண்டுமென காங்கிரஸ் வேண்டி நிற்கின்றது.

என். குமாரசிங்கம், பி.நாகலிங்கம், ஜே.டபிள்யூ. ஏ. கதிர்காமர், கே. இரத்தினம், கே. சண்முகம் மற்றும் 6வது ஆண்டு அமர்வுகளுக்கு தலைமை வகித்தவராகிய எஸ். சிவபாதசுந்தரம் ஆகியோர் மேற்படி பிரேரணைகளை முன்வைத்து உரையாற்றினர்.[97] இந்தியாவில் இடம்பெற்று வந்த நிகழ்வுகள் யாழ்ப்பாண மாணவர்கள் மனதில் தொடர்ச்சியாக தாக்கத்தை ஏற்படுத்தி வந்தன. ஆண்டு தோறும் அரசனின் பிறந்த நாளைக் கொண்டாடுவது அங்கு வழக்கமாய் இருந்தது. யாழ்ப்பாணத்தில் பாடசாலைகளுக்கு இடையிலான போட்டி தான் பிரதான நிகழ்வாக இருந்தது. 1930 ஜூன் மாதத்தில் விளையாட்டுப் போட்டியிலும் கொண்டாட்டங்களிலும் பங்குபற்றுவதில்லை என வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரி மாணவர்கள் திடீரென்று முடிவெடுத்தனர்.

இந்தக் கொண்டாட்டங்கள் பகிஷ்கரிக்கப்பட வேண்டுமென்ற எண்ணம் முதலில் கல்லூரியின் சில இளைய ஆசிரியர்கட்கே ஏற் பட்டது. பொனி கனகதுங்கம், ஏ.எஸ். கனகரத்தினம், சி.ஜே.இளைய தம்பி ஆகியோர் அவர்களில் சிலர் ஆவர். இவர்கள் விளையாட்டு வீரர்களுடன் கலந்துரையாடி அவர்களின் ஆதரவையும் பெற்றனர். வியைாட்டுகளுக்கு பொறுப்பாயிருந்த அமெரிக்காவைச் சேர்ந்த ஆசிரியராகிய திரு. பெல்ப்ஸ் இந்த விடயத்தை பொருட்படுத்தவில்லை. அதே வேளை அதிபர் பிக்னல் யாழ்ப்பாணத்திற்கு வெளியே சென்றுள்ளார் போலிருந்தது. இப்பகிஷ்கரிப்பு சற்று ஆவேசமாக மேற் கொள்ளப்பட்ட வேறான தொரு விடயம் எனலாம். இதில் அரசியல் ஸ்தாபனங்கள் எதுவும் ஈடுபட்டிருக்கவில்லை. இதர பாடசாலைகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரவு நாடப்படவுமில்லை, கிடைக்கவுமில்லை. எவ்வாறாயினும், பிரித்தானிய ஆட்சிக்கு எதிராக எதுவித நடவடிக்கையும் இல்லாதவொரு நாட்டில் அரசியல் நோக்கங்கள் கொண்ட ஒரு நடவடிக்கையை மேற்கொண்டதையிட்டு யாழ்ப்பாண கல்லூரி மாணவர்கள் உண்மையில் அந்த நேரம் பெருமையடைந்தனர். ஹன்டி பேரின்பநாயகம் ஆசிரியராய் இருந்த போதும் கொண்டாட்டங்களை பகிஷ்கரிக்க வேண்டும் என்ற முடிவில் அவர் நேரடியாகத் தொடர்புபட்டிருக்கவில்லை. ஆனால் அவரின் கற்பித்தல் மற்றும் முன்னுதாரணம் மூலமும் மாணவர் காங்கிரஸின் செயற்பாடுகள் மூலமும் மாணவர்கள் மீது செல்வாக்கு ஏற்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. அது பயிர்நாட்டுவதற்கு நிலத்தை பண்படுத்தி வைத்திருந்தது போல் ஆகும். மகாத்மா காந்தி சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் வரை 'தாய் நாடு' தனது சுதந்திரத் திற்காக வருந்தி உழைத்துக் கொண்டிருக்கும் கால கட்டத்தில் அரசனை கௌரவிப்பதற்கான கொண்டாட்டத்தில் யாழ்ப்பாண மக்கள் பங்குபற்ற முடியாதென மாணவர்கள் தாமாக விரும்பி முடிவெடுத்தனர்.

திரு.பிக்கனல் மீது உத்தியோக பூர்வமான சில நெருக்குவாரங்கள் பிரயோகிக்கப்பட்டது போல் தெரிகின்றது. ஏனென்றால், தலையீடு எதுவும் இல்லாமல் இருந்திருந்தால் இந்தக் குறும்புத்தனம் சற்று பார தூரமானது என்றாலும் கூட, அதற்கு பொறுப்பானவர்களை அவர் கண்டிருந்திருக்க மாட்டார். ஆனால், அவர் இறுதியில் நடவடிக்கை எடுக்கும் நிலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டார். ஏ.எஸ். கனகரத்தினம் அச்சுவேலியில் ஒரு பாடசாலைக்கு மாற்றப்பட்டார். பொனி கனகத் துங்கம் படிப்பிற்கான விடுமுறையில் சென்றிருந்தார். ஆனால் அவர் திரும்ப சேர்த்துக் கொள்ளப்படவில்லை. அவர்கள் இருவரும் மாணவர் காங்கிரஸின் உயிர்நாடியாக இருந்தனர். தொடர்ந்தும் அவ்வாறு அவர்கள் செயற்பட்டனர்.[98]

1930இல் மாணவர் காங்கிரஸின் அமைப்புகளை மேம்படுத்து வதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன. காந்தியின் சிவில் ஒத்துழையாமை நிதியத்திற்கு நிதி சேகரிப்பதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்டது. குறிப்பாக, பாடசாலைகளில் சரியாசன முறைமை தொடர்பாக பொதுமக்கள் அபிப்பிராயத்தை உருவாக்குவதற்காக ஒரு பரப்புரைக்குழு நியமிக் கப்பட்டது. பாடசாலை செல்லும் பிள்ளைகள் சம்பந்தமாக புள்ளி விபரத்தைத் திரட்டி பாடசாலைக்கு அவர்கள் கிரமமாக சமூகமளிப்பதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி அதிகாரிகள் அமுல் செய்வதன் அவசியத்தை உணர்த்துவதற்கு இம் முயற்சி பயன்படுத்தப்பட்டது. அடுத்து, மானிப்பாய், சுன்னாகம், தெல்லிப்பளை, பருத்தித்துறை, வட்டுக்கோட்டை, காரைநகர், சாவகச்சேரி, உரும்பிராய், யாழ்ப்பாணம் நகரப்பகுதி ஆகிய இடங் களிலும் கல்லூரிகளிலும் மாணவர் காங்கிரஸின் உபகுழுக்கள் நியமிக் கப்பட்டன. இக் குழுக்களின் பணி அங்கத்தவர்களை திரட்டுதல், காங்கிரஸின் கொள்கைகளை பரப்புதல், நிதி சேகரித்தல் ஆகியவை யாகும். கொழும்பு, கண்டி, நாவலப்பிட்டி, மட்டக்களப்பு ஆகிய இடங்களிலும் மாணவர் காங்கிரஸின் ஆதரவாளர்களும் நண்பர்களும் இருந்தனர். சிங்கப்பூர், கோலாலம்பூர் மற்றும் மலேசியா நாட்டின் ரெயிப்பிங் நகரம் ஆகிய இடங்களில் உள்ள ஆதரவாளர்களுடனான தொடர்பை பலப் படுத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன. தனக்கென ஒரு பத்திரிகையை வெளியிடவேண்டுமென காங்கிரஸ் சிலகாலமாக சிந்தித்து வந்தது. காங்கிரஸ் பத்திரிகை என்றொன்றும் உதயமாகவில்லை. 1930இல் 'சிலோன் பேற்றியற்' இதழின் ஆசிரியர் அதனை கொண்டு நடத்துமாறு காங்கிரஸுக்கு அழைப்பு விடுத்தார். 'சிலோன் பேற்றியற்', உண்மையான நடைமுறையில், 1933இல் வெளியீடு கைவிடப்படும் வரை காங்கிரஸின் இதழாகவே திகழ்ந்தது. இந்த வார இதழை தொடர்ந்து நடத்துவதற்கு காங்கிரஸின் பல பிரமுகர்கள் கை கொடுத்ததோடு கட்டுரைகளும் எழுதி உதவினர்.[99] 1930இல் செல் வாக்குமிக்க தமிழ் வார இதழ் ஆகிய 'ஈழகேசரி' வெளியிடப்பட்டது. அந்த இதழ் ஆரம்பத்திலிருந்தே மாணவர் காங்கிரஸிற்கு பலத்த ஆதரவு அளித்து வந்தது. இந்த இதழினதும், திருமகள் அச்சகத்தினதும் உரிமையாளராகிய ஈழகேசரி பொன்னையா யாழ்ப்பாணத்தில் பிரபல்யம் வாய்ந்தவராக விளங்கினார். அவர் ஹன்டி பேரின்பநாயகம் மற்றும் மாணவர் காங்கிரஸின் துடிப்பான அங்கத்தவர்களின் நெருங்கிய நண்பராகவும் விளங்கினார். ஒரு கடுமையான தேசியவாதியும் தேச பக்தனுமாகிய அவர் வி. கல்யாணசுந்தர முதலியாரின் 'நவசக்தியை' அடியொற்றிச் செயற்பட்டார். 1930களில் காங்கிரஸின் செயற்பாடு களுக்கும் கொள்கைகளுக்கும் 'ஈழகேசரி' அதிகளவு பிரசாரம் செய்ததோடு, தேசிய விழிப்புணர்வை உருவாக்குவதற்கும் பங்களிப்பு செய்தது. காங்கிரஸின் துண்டுப்பிரசுரங்கள், தலைமை உரைகள், பின்னர் 'இனவாதமா? தேசியவாதமா?' எனும் தலைப்பிலான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீடுகள் அனைத்திற்கும் திருமகள் அச்சகமே பொறுப்பேற்றது. அநேகமாக காங்கிரஸ் இதற்கான கொடுப்பனவுகளை செய்ய முடியாமல் திரு.பொன்னையாவிற்கு கடன்பட்டிருந்தது. பின்னர் திரு. பொன்னை யாவையே இளைஞர் காங்கிரஸின் பொருளாளராக தெரிவு செய்ததின் மூலம் இப்பிரச்சினை தீர்க்கப்பட்டது. இந்திய நிகழ்வுகளை 'ஈழகேசரி' அதிகளவு பிரசுரித்தது. எனவே, இந்திய நிலைமைகளை தமிழ் வாச கர்கள் அறிந்துகொள்ளக்கூடிய முதன்மையான ஊடகமாக ஈழகேசரி விளங்கியது. திருமகள் அச்சகம் நாடு பூராகவும் பிரபல்யம் அடைந்தது. அன்று தேசியவாதப் புலவராக விளங்கிய சுப்பிரமணிய பாரதியின் கவிதைகளும் சுதந்திர கீதங்களும் இந்தியாவிலேயே பெரிதும் அறியப்படாமல் இருந்த காலத்தில், 1930இல் இலங்கையில் ஈழகேசரி பொன்னையா பாரதியின் அனைத்து கவிதைகளையும் இலங்கையில் தமிழ் வாசகர்கள் மத்தியில் முன்வைத்தார். 1940களில் 'கேசரி' எனும் ஆங்கில வார இதழ் வெளியீடு ஆரம்பிக்கப்பட்ட போதும் திரு. பொன்னையாவே ஹன்டி பேரின்பநாயகம் மற்றும் சம்பந்தப்பட்ட ஏனையோர் சார்பில் அதனை வெளியிடுவதற்கு முன்வந்தார்.[100]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8

## பகிஷ்கரிப்பு

1930 பகிஷ்கரிப்பு ஆண்டாயிருந்தது. அரச சபைக்காக நடத்தப்பட்ட முதலாவது தேர்தல்களை பகிஷ்கரித்தது தொடர்பாக இளைஞர் காங்கிரஸ் வகித்தபாத்திரம் அதிகளவு ஞாபகமாகவும், அதிகளவு தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டதாகவும் உள்ளது. 1931 வருடாந்த அமர்வுகளின் போது 'யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ்' என்ற பெயர் 'யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ்' என மாற்றப்பட்டது. பெரியளவில் மாணவர்களின் ஆதரவோடு இயங்கிவந்ததாலும், அதன் தலைவர்கள் பாடசாலை - பல்கலைக்கழக மாணவர்கள் என்ற கட்டத்தைத் தாண்டி சற்று நீண்டகாலம் சென்றுவிட்டது. இதன் பின்பு இந்நூலில் 'இளைஞர் காங்கிரஸ்' என்ற பெயரே தொடர்ந்து பாவிக்கப்படும். இது 1931ற்கு முன்னரும் பின்னருமாகிய காலப்பகுதிக்கு பொருந்துவதாய் இருக்கும்.

அரச சபைக்கான தேர்தலில் பங்குபற்ற வேண்டாமென அங்கத்தவர்கட்கு வேண்டுகோள் விடுக்கும் பிரேரணை ஒன்றினை 1930 செப்டம்பரில் காங்கிரஸ் நிறைவேற்றியிருந்தது. மற்றும் சமரச அரசியலில் ஈடுபடுவதோ, அடுத்த தேர்தலைக் குறிவைத்து காய்கள் நகர்த்துவதோ நிராகரிக்கப்பட வேண்டிய விடயங்களென வரவேற்புக் குழுத்தலைவர் 1930 அமர்வுகளின் போது நிகழ்த்திய வரவேற்புரையில் வலியுறுத்தியிருந்தார். 1928 டொனொமோர் ஆணைக்குழுவின் யோசனைகள் சுயஆட்சி அதிகாரம் அல்லது சுதந்திரத்தினை எட்டுவதற்கு போதுமானதாயில்லாதபடியால் இளைஞர் காங்கிரஸ் அவற்றையும் நிராகரித்துவிட்டது.

தேசியவாத சிந்தனை கொண்டவர்கள், குறிப்பாக தாராளவாதிகள் மற்றும் தீவிரவாதிகள் டொனமோர் திட்டத்தினைக் கண்டித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு கொழும்பிலுள்ள சில ஊடகங்களும் ஆதரவளித்தன. எனவே சுயாட்சி அல்லது சுதந்திரத்தை நோக்கிய அர்த்தமுள்ள மாற்றங்களை உள்ளடக்கினால் ஒழிய, டொனமோர் திட்டம் நிராகரிக்கப்பட வேண்டு மென்பதற்கு குறிப்பிடத்தக்களவு ஆதரவு உருவாகிவிட்டது. இளைஞர் காங்கிரஸைப் பொறுத்தவரை, நடவடிக்கையில் இறங்குவதற்கான சந்தர்ப்பம் 1931இல் ஏற்பட்டது. உத்தேசிக்கப்பட்டிருந்த சீர்திருத் தங்களை நிராகரிப்பதற்கு யாழ்ப்பாணம் வழிகாட்ட வேண்டுமென காங்கிரஸின் பல உறுப்பினர்கள் அபிப்பிராயப்பட்டனர். தெற்கிலுள்ள தீவிரவாத மற்றும் முற்போக்கு சக்திகளின் ஆதரவு கிடைக்குமென அவர்கள் நம்பியிருந்தனர்.

1924இல் அமைக்கப்பட்ட சட்டவாக்க சபை 1931 ஏப்றில் 17இல் கலைக்கப்பட்டது. புதிய அரசசபைக்கான பொதுத்தேர்தல்கள் நடத்தும் பொருட்டு மே 4இல் நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்வதற்கு ஆயத்தங்கள் செய்யப்பட்டன. ஏப்றில் 23ஆம் 24ஆம், 25ஆம் திகதிகளில் இடம்பெற்ற இளைஞர் காங்கிரஸின் 7வது அமர்வுகள், சட்டவாக்கச் சபை கலைப்பதற்கும் நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்படுவதற்கும் சரியாக இடைநடுவில் இடம்பெற்றன.

இதுதான் இளைஞர் காங்கிரஸ் அமைக்கப்பட்ட பின்னர் நடத்தப் படவிருந்த முதலாவது பொதுத் தேர்தல் ஆகும். முதல் தடவையாக சர்வஜன வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. எனவே, அபேட்சகர்களாக முன்வரவிருப்பவர்கள் மக்கள் மத்தியில் தமக்குள்ள பிரபல்யத்தைக் கணக்கில் எடுக்க வேண்டும். இளைஞர் காங்கிரஸ் மக்களைக் கவரக்கூடிய ஒரேயொரு அமைப்பானதாகையால், யாழ்ப் பாண இளைஞர் முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக விளங்கினர்.

7வது அமர்வுகளே ஒரு மகத்தான நிகழ்வாக விளங்கியது. யாழ்ப்பாண முற்றவெளியில் விசேடமாக அமைக்கப்பட்ட பந்தலிலேயே அமர்வுகள் நடைபெற்றன. 1931 அமர்வுகளுக்கு தலைவராகத் தெரிவு செய்யப்பட்டவராகிய ஸ்ரீமதி கமலாதேவி சட்டோப்பாத்தியாய மூன்று வெள்ளைக் குதிரைகள் பூட்டிய வண்டியொன்றில் தட்டார்தெரு சந்தி யிலிருந்து முற்றவெளி பந்தல்வரை ஊர்வலமாக அழைத்துவரப் பட்டார். பல இசைவாத்தியக் குழுக்களும், கதரும் காந்தித் தொப்பியும் அணிந்த காங்கிரஸ் தொண்டர்கள் ஊர்வலத்தின்முன் சென்று கொண்டிருந்தனர். காங்கிரஸின் பச்சை சிவப்பு-மஞ்சள் நிறக்கொடிகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டர்கள் ஏந்திச் சென்றனர். இரண்டாவது வருடாந்த அமர்வுகள் ஆரம்பமாவதற்கு முன் கொடியேற்ற வைபவம் இடம் பெற்றது. தொண்டர்படைக்குத் தலைமை தாங்கியவராகிய பீ.என்.திருநாவுக்கரசு பந்தல் முன்னால் கொடியேற்றும் கௌரவத்தினைப் பெற்றிருந்தார். கொடியை ஏற்றுகையில் அது இலங்கைத்தீவிலுள்ள எல்லா சமூகங் களினதும் ஒற்றுமையைப் பிரதிபலிப்பதாக அவர் கூறிவைத்தார். 7வது ஆண்டு அமர்வுகள் 'வந்தே மாதரம்' மற்றும் சுப்பிரமணிய பாரதியின் சுதந்திர கீதங்களை இசைத்து ஆரம்பிக்கப்பட்டன. எந்த வொரு அமர்வுகளும் காணாதளவு மிகப் பெருந்திரளான மக்கள் வருகை தந்திருந்தமையால் பந்தல் முழுவதும் நிரம்பியிருந்தது.[101]

வருடாந்த அமர்வுகளில் எப்போதுமே ஒரு சில பெண்கள் பங்கு பற்றுவதுண்டு. காங்கிரஸின் முன்னைய அமர்வுகளின் போது, நாட்டின் வாழ்வில் பெண்கள் தமக்கு உரித்தான பாகத்தை வகிப்பதற்கு முன்வரவேண்டுமென அறைகூவல் விடுக்கப்பட்டிருந்தது. 7வது அமர்வுகளில் மகளிர் ஒருவரை தலைமை தாங்க அழைத்தமை ஒரு புதிய திருப்பமாக அமைந்தது. சரோஜினி நாயுடுவின் மைத்துனியாகிய கமலாதேவி சட்டோப்பாத்தியாய தனக்கே உரித்தான முறையில் இந்திய சுதந்திரப் போராட்டத்தின் முன்னணியில் திகழ்ந்தவர். இளமையும் கவர்ச்சியும் அத்தோடு நாவன்மையும் கொண்ட அவர் இளைஞர் காங்கிரஸை ஏறத்தாழக் கைப்பற்றியே விட்டார் எனலாம். வரவேற்புரை நிகழ்த்தியவராகிய கே.நேசையா, ஸ்ரீமதி கமலாதேவி ஒரு சமூக சீர்த்திருத்தியவாதியாக நாட்டுப்பற்றும் துணிச்சலும் கொண்டு இந்திய பெண்களுக்கு நல்ல பெயரைச் சுவீகரித்தவராக வரவேற்கப்பட வேண்டியவரெனக் குறிப்பிட்டார். கமலாதேவி பெண்கள் கல்வியில் ஒரு சிறந்த அறிவாளி எனவும் மகாத்மாகாந்தியை பின்பற்றுபவர் எனவும் நேசையா மேலும் கூறினார். இலங்கையில் இத்தகையதொரு சந்திப்பில் தலைமை தாங்க ஒரு பெண் அழைக்கப்பட்டது இது தான் முதல் தடவையெனவும் நேசையா கூறிவைத்தார். இலங்கைப் பெண்கள் தமது இந்திய சகோதரிகள் செய்வது போல தமது நாட்டுக்குச் சேவை செய்வதற்கு கமலாதேவியின் பிரசன்னம் ஒரு சவாலாகவிருந்தது. பல இனங்களையும் மதங்களையும் தன்னகத்தே கொண்டுள்ள இலங்கை மகிமை நிறைந்ததெனவும் நேசையா தொட்டுத் காட்டினார். மதவிழுமியங்களை உருவாக்குவதிலும் பொருளாதார சுபிட்சத்திற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்களிப்புச் செய்வதிலும் மன்னர்களும் மத குருமார்களும் கணிச மானளவு சாதனை படைத்துள்ளதையும் அவர் விபரித்தார். மகாபராக் கிரமபாகு சிங்கள - தமிழ் ஒற்றுமையின் சின்னமாக விளங்கியவர். நாட்டின் பொருளாதார நிலைமை மற்றும் பிரித்தானிய ஆட்சி விளைவித்துள்ள சுரண்டல் நிலைமைகள் தொடர்பாகவும் அவர் சற்று விரிவாக எடுத்துரைத்தார். பிரித்தானிய ஆட்சியின் கீழ் ஒரு சில ஈடுசெய்யும் நன்மைகள் இருந்தனவாயினும், அது உருவாக்கிய பொருளாதார, ஆதிக்கம் ஒருவித நன்மையையும் கொண்டுவரவில்லை.

திரு.டி.எஸ். சேனநாயக்க வெளியிட்டிருந்த புள்ளி விபரங்களை மேற்கோள்காட்டி, தேசிய வருமானத்தில் 2/3 பங்கு வெளிநாட்டவர் வசம் சென்றதாகவும் 1/3 பங்கே இலங்கையருக்கு கிடைத்ததாகவும் வெளிநாட்டவர் வரி வருமானமாக ஏறத்தாழ 2/7 பங்கையும், மீதி 5/7 பங்கையும் இலங்கையர் செலுத்தியதாகவும் எடுத்துக்காட்டப் பட்டது. நேசையாவின் வரவேற்புரையில் பிரித்தானிய ஏகாதிபத் தியத்தின் சுரண்டல் தன்மை (இச்சொற்பதங்களை பாவிக்காமல்) வெளிக்கொணரப்பட்டது. குறிப்பிட்ட சொற்பதங்கள் பிந்திய காலப் பகுதியில் இடதுசாரி இயக்கம் தோற்றம் பெற்றதோடு, அரசியல் அகராதியில் இடம் பிடித்தப் பின்னரே புழக்கத்திற்கு வந்தது. அவர் மேலும் கூறியதாவது: உள்ளூர் கைத்தொழில்களை கட்டி வளர்ப்பதற்கு எம்மிடம் தேசியக் கொள்கை இல்லை. வரிகள் விதிப்பதற்கான நிதிக் கொள்கையும் இல்லை. இலங்கை மூலதனத்தின் உதவியோடு, இலங்கைத் தொழிலாளர்களை அமர்த்தி, இலங்கையரால் முகாமைத் துவம் செய்யும் உற்பத்திகள் இன்னும் எம்மால் சாதிக்கப்படவில்லை. இன்றைக்கும் பொருந்தக்கூடியதை ஐம்பது வருடங்களுக்கு முன் அவர் பின்வருமாறு கூறினார்: “தற்போதைய முறைமையின் கீழ் பணம் சம்பாதிப்பவர்கள் தமது செல்வச் செழிப்பானது மக்கள் மத்தியில் வளர்ந்து வரும் வறுமை எனும் மேட்டில் நின்று கட்டி எழுப்பப்பட்டு வருகின்றது என்பதை மறந்து விடுகின்றனர். பொருளாதார அடி மைத்தனம் எமது வயிற்றில் அடிக்கிறது. அரசியல் அடிமைத்தனம் எமது தன்மானத்தைக் காயப்படுத்துகிறது. ஆனால் மனதிலான அடிமைத்தனம் எமது இனத்தின் ஆத்மாவையே கொன்று விடுகிறது. மேலே கடைசியாக கூறிய நிலைமை உருவாகுவதற்கு எமது கல்வி முறைமையும் பெரியளவில் தாக்கம் செலுத்தி உள்ளது.” தேசிய கல்வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைமை ஒன்று தேவை என கருத்து வெளியிட்ட அவர் இளைஞர் காங்கிரஸின் நோக்கங் களையும் குறிக்கோள்களையும் வலியுறுத்திக் கூறி தமது உரையை முடிவு செய்தார்.[102]

உள்ளூர் கைத்தொழில் உற்பத்திப் பொருட்களை பாவிக்கும் அவசியத்தை உணர்த்தும் வகையில், வருடாந்த அமர்வுகளின் போது வரவேற்புக்குழு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் ஒரு கைப்பணிப் பொருட் கண்காட்சியையும் ஏற்பாடு செய்திருந்தது.

வருடாந்த அமர்வுகளில் ஸ்ரீமதி கமலாதேவி சட்டோபாத்தியாய வின் தலைமை உரைதான் பிரதான உரையாக விளங்கியது.

வருடாந்த அறிக்கைகளைப் படித்து, அவற்றிலிருந்து திரட்டிய புள்ளி விபரங்கள் அடங்கியதொரு தீவிரமானதும் தெளிவானதுமான உரையினை ஆற்றிய -அவர், இலங்கையில் இடம்பெற்றுக்கொண் டிருக்கும் ஏகாதிபத்தியச் சுரண்டலின் தன்மையை நன்கு விளக்கினார். நாட்டின் பொருளாதாரம் தொடர்பான ஆய்வுகள் அற்பமாயிருப்பதால், கட்டுரைகள், சிறு பிரசுரங்கள் மற்றும் புத்தகங்கள் முதலிய ஆவணங்கள் வெளியிடுவதன் அவசியத்தைச் சுட்டிக் காட்டினார். "விஞ்ஞான ரீதியாக இயங்கும் ஒரு எதிராளியுடன் விஞ்ஞான ரீதியாகப் போராட வேண்டும். அந்த வகையில் பொருளாதார ரீதியான மனக்குறைகள் மழுங்கடிக்கப்படக்கூடியதோ சவால் விடமுடியாதவையோ அல்ல" என அவர் சூளுரைத்தார்.

சுதந்திரப் போராட்டத்தில் இருவகையான குணாம்சங்கள் இருப்பதாக ஸ்ரீமதி கமலாதேவி சுட்டிக்காட்டினார். அரசியல் வானில் ஏகாதிபத்திய ஆட்சியாளர்களோடு போராடிக்கொண்டிருக்கும் குடியேற்றநாடுகள், தமக்குரிய ஆட்சியதிகாரத்திற்காக குரலெழுப்பும் சிறிய நாடுகள், மற்றும் பெரும்பான்மையினரின் அட்டகாசத்தை எதிர்த்துப் போராடும் சிறுபான்மையினர் ஆகிய சக்திகளைக் காண் கிறோம். பொருளாதார அரங்கில் போராட்டமானது பிரதானமாக முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடையிலானதாகும். அதாவது, ஒரு சிறிய எண்ணிக்கையினர் அதிகப்பெரிய எண்ணிக்கையிலான தொழிலாளர்களின் உற்பத்தி பலன்களை அனுபவித்துக் கொண்டு அவர்களை அடிமைத்தளையில் அமிழ்த்தி வைத்திருப்பதாகும் என்ப தையும் அவர் எடுத்துரைத்தார். இவ்விரு (அரசியல்/பொருளாதார) சக்திகளும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்திருப்பதாகவும் அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறிவைத்தார். அவ்வுரை முதலாளித்துவமும் ஏகாதிபத்தியமும் குடியேற்ற நாடுகளிலுள்ள மக்கள் மீது நடத்திவரும் சுரண்டல்கள் எத்தகையது என்பது தொடர்பாக புத்திஜீவிகள் மத்தியில் நிகழ்த்தக் கூடிய தரம் வாய்ந்த விரிவுரையாயிருந்தது. அந்த உரையில் ஏகாதி பத்திய சுரண்டல் கொண்டுள்ள பொருளாதார அம்சம் வலியுறுத்தப் பட்டிருந்தது. ஏழு வருடங்களாக செயற்பட்டு வந்த இளைஞர் காங்கிரஸ் இவ்வாறான ஆய்வு நிறைந்த உரையினை செவிமடுத்து அனுபவம் பெற்றது கிடையாது. காங்கிரஸ் அரசியல் மற்றும் சமூகப்பிரச்சினை களில் கவனம் செலுத்திக் கொண்டிருந்தது. ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்புப் பாணியிலான சோசலிச இயக்கம் நாட்டின் இதர பகுதிகளில் உருவாக் கப்பட்டிருக்கவில்லை. 1931 அமர்வுகள் யாழ்ப்பாணத்தில் தீவிரவாத இளைஞர் மத்தியில் ஒரு திருப்பு முனையாக தடம்பதித்தன. காலக் கிரமத்தில் அவர்கள் சோசலிச, ஏகாதிபத்திய விரோத அரசியலைத் தழுவிக் கொண்டனர்.

மாணவர்கள் அரசியலில் ஈடுபடக்கூடாது என்ற பழைய பல்லவியை ஸ்ரீமதி கமலாதேவி சட்டோப்பாத்தியாய நிராகரித்தார். அரசியல் என்பது வாழ்வா? சாவா? என்பது பற்றியதாகும். அது மட்டுமல்லாமல், பிரித்தானிய ஏகாதிபத்திய ஆதிக்கத்திற்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையில், ஆழமறியாமல் கால்வைக்கக்கூடாது என்பது போன்ற உபதேசங்களை நாம் செய்யமுடியாதெனவும் அவர் எடுத்துக்கூறினார். அவர் மேலும் கூறியதாவது: "நன்மை பயக்கும் ஆட்சியெனும் போர்வையில், ஏகாதிபத்திய பிரபுக்கள் வளமான நிலங்களை அபகரித்து தமது சொந்தபந்தங்கள் வசமாக்கி விடுகின் றனர். பிரித்தானிய நாட்டின் தேசிய கீதமான 'ஆண்டவன் அரசனைக் காக்கட்டும்' எனும் இனிய இராகத்தை இசைத்துப் பல நாடுகள் சூறையாடப்படுகின்றன. பிரித்தானிய சாம்ராஜ்யத்தின் புகழ்பூத்த கொடியில் கோடிக்கணக்கான மக்களின் செங்குருதி தோய்ந்திருக்கிறது. வணிகத்துறையில் பிரித்தானியா மிகப்பெரிய வளர்ச்சியடைந்துள்ள நிலையில் அதன் மூலதனத்தை முதலீடு செய்வதற்கு புதிய தளங் களைத் தேடும்போது எமது நாடுகளே அதற்கு கைகொடுக்க முன்வருகின்றன. எனவே, நவநாகரிகத்தின் மிசனரிமார் எனும் வடிவத்தில் நவீன கலாசாரத்தினைத் தோளிற்சுமந்து வரும் போதகர்கள் எமது நாடுகளுக்குள் நுழைந்து தமது சுரண்டல் கைங்கரியங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறங்குகின்றனர். ஏகாதிபத்திய ஆட்சியை 'சட்டம் மற்றும் ஒழுங்கு' ஊடாக ஸ்தாபிக்கும் போது, மக்கள் சம்மதத்தோடு அந்த ஏகாதிபத்திய முகவர்கள் உள்நாட்டு கைத்தொழில்கள் மற்றும் வணிகத்துறை நிறுவனங்களை ஈவிரக்கமின்றி அழித்துவிடுகின்றனர். அத்தோடு, சக்தி வாய்ந்த தமது சொந்த நிறுவனங்களை அமைத்துக் கொள்வதன் மூலம் தேசிய அபிவிருத்தி முயற்சிகள் மேற்கொள்வதற்கான நுழை வாயிலை அடைத்து விடுகின்றனர். ஆட்சியாளருக்கு முற்றிலும் சாதகமாக அமையும் இத்தகைய சமச்சீரற்ற போட்டியானது நாட்டுக்கும் மக்களுக்கும் பரிதாபமான வறுமை நிலையை ஏற்படுத்துகிறது. இந்த பொருளாதார அடிமைத்தளை ஒழுங்காக அமைக்கப்படுவதுடன் மக்களை நசுக்குவதாகவும் உள்ளது. இதற்கொரு பரிகாரத்தை தேடுவதற்கு நோயை இன்னதென்று தெளிவாக இனங்கண்டு கொள்வது அவசியமாகிறது."

பிரித்தானிய ஆட்சிக்கெதிராக கிளர்ந்தெழுமாறு அறைகூவல் விடுத்த அவர் கூறியதாவது: "பிரித்தானியர் இந்த நாட்டில் தமது கொடியை பறக்கவிட்டுக் கொண்டிருக்கும் வரை தீவிரமான அல்லது குறிப்பிடத்தக்களவு சாதனை எதையும் படைத்துவிட முடியாது. அவர்கள் உங்கள் மீது சொரியும் 'நன்மைகள்' ஒவ்வொன்றும் உங்களை அடக்கி அடிமைப்படுத்தும் மேலும் ஒரு கைவிலங்கு ஆகும். அவர் களின் தொழிற்சாலைகள், புகையிரத சாதனங்கள் மற்றும் நீர்ப்பாசனத் திட்டங்கள் யாவும் அவர்களின் உற்பத்தி துறைகளைப் போஷிப்பதற் காகவும் சொந்த பந்தங்களுக்கு உண்டு கொழுக்கவல்ல சம்பளங் களுடனான பதவிகளை வழங்கும் மையங்களாகவும் விளங்குகின்றன. அவர்கள் பரந்த கட்டமைப்புகள் மற்றும் விலைஉயர்ந்த கருவிகள் கொண்டுள்ள சில சீர்திருத்தங்களை வழங்க முற்படுவதென்பது வளர்ந்து வரும் உங்களது சக்தியை ஒடுக்கி விடுவதற்கான கைங் கரியமாகும். மிகப்பிரகாசமான வெளிப்பூச்சுக் கொண்ட அது ஒவ் வொன்றும் உங்களின் திறமையான எஜமான்கள் உங்களை மயக்கி வைத்திருப்பதற்கான அற்பவிளையாட்டுப்பொருளே ஒழிய வேறல்ல. அந்த சாயம் பூசப்பட்ட போர்வையை நீங்கள் கிழித்து விட்டால் உள்ளே இருப்பது ஆன்மா அற்ற உருவமொன்றையே காண முடியும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரம் என்பது வெள்ளையனை வெளியேற்றி, அதிகாரத்தினை சத்திவாய்ந்த ஒரு சிறு கும்பலிடமிருந்து அதற்கு சமனான கொடுங்கோல் கும்பல் ஒன்றின் கைக்கு மாற்றப்படும் விடயமல்ல என்பதை பேச்சாளர் (ஸ்ரீமதி கமலாதேவி) வெகுசாமர்த்தியமாகச் சுட்டிக் காட்டினார். எதிர்பார்க்கப்படும் நீதி நியாயமானதொரு சமுதாயத்தின் கீழ் ஒருவன் தனது ஆற்றல்கள் மூலம் உச்ச நிலையை எட்டுவதற்கு வேண்டிய வாய்ப்பினைப் பெற்றுக் கொள்வான். அவ்வாறாக, தனது உழைப்பின் பெறுமதிக்கு ஏற்றவாறு தனக்கும் தனது குடும்பத்திற்கும் உரித்துடையவற்றையெல்லாம் பெற்றுக் கொள்வான். அதே நேரத்தில் அரசு ஒவ்வொருவரினது உயர்ந்தபட்ச சேவையைப் பெற்றுக் கொள்ளும் இவ்வாறான நோக்கங்களுக்கு ஏற்றவாறு இலங்கையில் தொழிலாளர்கள் ஒழுங்கமைப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தினார். இலங்கையில் தொழிற் சட்டங்கள் பின்தங்கியுள்ளன. வழங்கப்பட்டுள்ள சர்வஜன வாக்குரிமையானது முன்னரை விட முற்போக்கானதாயினும், தொழிலாளரின் பொருளாதார நிலைமையில் மேம்பாடு ஏற்பட்டால் ஒழிய, வாக்குரிமை மட்டும் பெரிய பயனெதையும் தரப்போவதில்லை. ஆக, அடக்கியொடுக்கப்படும், ஏதுமற்ற மக்கட் பிரிவினர் சார்பாக போராட வேண்டுமென்பதே தலைமையுரையில் வலியுறுத்தப்பட்ட புதிய விடயமாகும். எனவே, நசுக்கப்படும் மக்களின் உண்மையான சுதந்திரத்திற்கானதொரு வேண்டுகோளை விடுத்து அவர் தனது தலைமையுரையை நிறுத்தினர். அது வருமாறு: "நீங்கள் மேற்கு நாட்டவரை சமபங்காளியாகக் கணித்து அழகைத் தேடப்புறப்பட்டு அழகை உணர்வதற்கு முற்பட்டால் மட்டும் இரு கலாசாரங்களுக்கும் இடையில் பிணைப்பு ஏற்படும். ஆனால், இன்று நீங்கள் திக்கற்று நிற்கின்றீர்கள். அன்று பொலநறுவை மற்றும் அனுராதபுரத்தில் அற்புதமான கலை ஓவியங்களைப் படைத்தவர்களின் பிள்ளைகள் இன்று தமது கலாசார ஆத்மிக அபிலாசைகளை நிறைவுசெய்வதற்கு கிராமங்களிலுள்ள தமது குடிசைச் சுவர்களை அலங்கரித்துக் கொண்டிருக்கும் 'டன்லப் ரயர்' போன்ற விளம்பரங்களில் தஞ்சம் புகுந்திருக்கின்றனர். மலையளவான இத்தகைய சாபக்கேடு சிறிதும் உணரப்படுவதில்லை. கலை என்பது ஒரு சில பணக்காரர்களின் சுக போகத்திற்குரியதோ விசேட உரிமையோ அல்ல. அது அன்றாடம் பாவனையிலுள்ள எல்லா சாதாரண விடயங்களையும் உள்ளடக்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராண சக்தியாகும். கலைதான் அதன் பலத்தினால் அவற்றுக்கெல்லாம் அப்பழுக்கற்ற இன்பநிலையைத் தோற்றுவிக்கிறது.[103]

1931 அமர்வுகளின் போது பகிஷ்கரிப்பு தொடர்பான பிரேரணை தான் முக்கி விடயமாயிருந்தது. வருடாந்த அமர்வுகள் இடம்பெறும் ஒவ்வொரு தடவையும் 'சுவராஜ்' மீது பிரேரணையொன்று காங்கிரஸினால் நிறைவேற்றப்படுவது வழக்கமாகிவிட்டது. என்.குமாரசிங்கம் முன்வைத்த பிரேரணை வருமாறு: "சுவராஜ் என்பது ஒவ்வொரு பிரஜையினதும் பாராதீனப்படுத்த முடியாத பிறப்புரிமை என காங்கிரஸ் எண்ணுவதால், நாட்டின் சுதந்திரத்தினை அடைவதற்கு இளைஞர்கள் தமது வாழ்க்கையை அர்ப்பணிக்க வேண்டும்". இந்தப் பிரேரணையை வழிமொழிவதற்கு ஒரு கணம் முன்னதாக அப்பிரேரணைக்கு ரீ.என். சுப்பையா பின்வரும் திருத்தத்தை முன்மொழிந்தார்: "அண்மையில் பிரித்தானிய பாராளுமன்றத்தில் நிறைவேற்றிய சட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும் டொனமோர் திட்டமானது 'சுயராஜ்' பெற்றுக் கொள்வதற்குத் தடையாயிருப்பதால் இத்திட்டம் பகிஷ்கரிக்கப்பட வேண்டும். பகிஷ்கரிப்பை அமுல்படுத்துவதற்கான வழிவகைகளை மேற்கொள்வதற்கு நிறைவேற்றுக் குழுவுக்கு காங்கிரஸ் உத்தரவிட வேண்டும்." இத்திருத்தத்தின் மீது உரையாற்றுகையில் காங்கிரஸின் எல்லாத் தலைவர்களும், (டொனமோர்) சீர்திருத்தங்கள் வாபஸ் பெறப்பட்டு எமது இயக்கத்தின் தலைவர்களோடு பேச்சுவார்த்தை நடத்த அதிகாரிகள் இறங்கிவரும் அளவுக்கு சக்திவாய்ந்த பிரசாரத்தை நடத்துவதற்கு தலைவர்கள் முன்வரவேண்டுமென அழைப்பு விடுத்தார். இத்திருத்தப்பிரேரணை ஹன்டி பேரின்பநாயகத்தால் வழிமொழியப்பட்டு சமூகமளித்திருந்த ஏறத்தாழ இருநூறு இளைஞர்களால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.[104]

பகிஷ்கரிப்பு தொடர்பான தீர்மானம் சரியா? தவறா? என முடிவு செய்யாமல் ஐயப்பாடு கொண்டிருந்தவர்கள், அந்தக் கூட்டத்தில் பரந்தளவு ஆதரவை பெற்றிருந்த அப்பிரேரணையை எதிர்க்க முடியாமல் இருந்தனர். பகிஷ்கரிப்பு நடவடிக்கையானது சுதந்திரக் கோரிக்கைக்கு சாதகமானதொன்றாக கருதப்பட்டது. அது சரியான மூலோபாயமா என்பது பற்றி அந்த நேரத்தில் கலந்துரையாடல் எதுவும் நடத்தப்பட்டதாகவோ, அதிகம் சிந்திக்கப்பட்டதாகவோ இல்லையென்றே கூறலாம். இளைஞர் காங்கிரஸ் மீண்டும் மீண்டும் உறுதிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தியது போல 'பூரண சுவராஜ்' என்பது மட்டுமே ஒரேயொரு குறிக்கோளாய் இருந்தது. யாராவது பகிஷ்கரிப்பை எதிர்த்திருந்தால், அவர் முழுமையான சுதந்திரத்தை அடைவதற்கு உறுதிகொண்டவரல்ல என சந்தேகிக்கப்பட்டிருக்கக் கூடும். இளைஞர் காங்கிரஸ் பிரபல்யம் அடைந்து கொண்டிருந்த காலப்பகுதியில் இந்தியாவில் இடம் பெற்றுக் கொண்டிருந்த போராட்டங்களை மையமாக வைத்தே யாழ்ப்பாணத்தில் பொதுமக்களின் அபிப்பிராயம் உருவாக்கப்பட்டது. இலங்கையின் இதரபகுதிகளில் சில தனி நபர்கள் இந்திய சுதந்திரப் போராட்டத்தினால் கவரப்பட்டிருக்கக்கூடும். யாழ்ப்பாணத்தில் மட்டும்தான், வேறு எந்த இடங்களையும் விட, இந்தியத் தேசிய காங்கிரஸின் வேலைத்திட்டம் மற்றும் கொள்கைகள் மீது முற்றாக பற்றுறுதி கொண்ட இயக்கம் வளர்ந்திருந்தது.

இளைஞர் காங்கிரஸ் உறுப்பினர்களின் சிந்தனையில் எந்த விதமான குறுகிய போக்குகளாவது இருக்கவில்லை. நாட்டில் கடுமை யான இனவாதம் தலைதூக்கியிருந்த இரு காலப்பகுதிகளுக்கு இடையிலேயே காங்கிரஸின் வளர்ச்சிக்காலம் அமைந்திருந்தது. 1921-1923 காலப்பகுதியில் சட்டவாக்கச் சபையில் ஆசனங்கள் ஒதுக்கீடு செய்தல் தொடர்பாக எழுந்த நீண்டதொரு சர்ச்சையில் தமிழ் மற்றும் சிங்கள மேட்டுக்குடியினர், அல்லது உயர் மட்டத்தினர், சிக்குண்டிருந்தனர். இளைஞர் காங்கிரஸ் பெற்றிருந்த வளர்ச்சி அரசியலில் இனரீதியான அணுகுமுறையினை முற்றாக ஒழித்து கட்டியிருக்கவில்லை. ஆனால் யாழ்ப்பாணத்தில் பொது மக்கள் அபிப்பிராயத்தின் மீது காங்கிரஸ் ஒரு பிடி வைத்திருந்தது. 1930களின் நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் இனவாதம் மீண்டுமொருமுறை மேலும் மோசமான வடிவத்தில் கிளம்பியிருந்தது. எனவே, யாழ்ப்பாண நிகழ்வுகளை அவதானித்தவர்கள் மத்தியில் அந்த பகிஷ்கரிப்பானது இனவாதத்தின் மேலுமொரு வெளிப்பாடு என்ற எண்ணம் பலமாக இடம்பிடித்திருந்தது. ஏனென்றால், குறிப்பாக டொனமோர் திட்டத்தின் கீழ் இனரீதியான பிரதிநிதித்துவம் ஒழிக்கப்பட்டிருந்தது. ஆனால், இது இளைஞர் காங்கிரஸைப் பொறுத்தவரை உண்மைக்கு முற்றிலும் புறம்பானதாகும். உண்மையில், அந்த நேரத்தில் யாழ்ப்பாண இளைஞர் சிறுபான்மையினருக்கான உரிமைகளைக் கோருவதை விடுத்து, அகில இலங்கை ரீதியான தேசியவாதத்தை சிரமேற்கொண்டு செயற்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறு என்று இதனால் காங்கிரஸின் பல உறுப்பினர்கள் 1956ற்கு பிந்திய காலத்தில் மிகவும் சலித்துப்போன நிலைமையே தோன்றியது என்றும் இன்று யாரும் சொல்லக்கூடும்.

ஏப்பிரல் 25 முதல் நியமன திகதியாகிய மே 4 வரை இளைஞர் காங்கிரஸ் தலைவர்கள் பகிஷ்கரிப்பு தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு முழுமனதோடு உழைத்தனர். பகிஷ்கரிப்பு பிரேரணையை நடைமுறைப் படுத்துவதற்கு வேண்டிய வழிவகைகளை ஏற்படுத்தும் பொறுப்பு நிறைவேற்றுக் குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டது. தேர்தலை பகிஷ்கரிக்க வேண்டுமென்ற முடிவு எடுக்கப்பட்டபோது பகிஷ்கரிப்பு என்பதற்கான அர்த்தம் தெளிவாக கூறப்படவில்லை. காங்கிரஸ் உறுப்பினர்கள் மக்கள் மத்தியில் சென்று வாக்களிப்பதை தடுப்பதே நோக்கமாயிருந்தது போல் தெரிகிறது. இதன் மூலம் சீர்திருத்தங்களிற்கு எதிராக பிரசாரம் செய்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்திருக்கும். அபேட்சகர்கள் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்வதைத் தவிர்த்து கொள்வார்கள் என இளைஞர் காங்கிரஸ் தலைவர்கள் எதிர்பார்க்கவில்லை. மேலும் அபேட்சகர்கள் அவ்வாறு செய்யவேண்டுமென்று அவர்கள் முதலில் கோரவுமில்லை. உண்மையில் சில அபேட்சகர்கள்தான் தாம் நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்யப் போவதில்லையென முதலில் ஆலோசனை வழங்கினர்.[105]

நியமனத்திற்குச் சற்று முன்னதாக இளைஞர் காங்கிரஸ் அமர்வுகள் ஏற்படுத்தியிருந்த உணர்ச்சிகள் போட்டியிட இருந்த அபேட்சகர்களை தடுமாற வைத்துவிட்டது. அவர்கள் சர்வஜன வாக்குரிமை வழங்கப் பட்ட நிலையில் தீவிர மாற்றத்திற்கு உள்ளான நிலைமைகளின் கீழ் தேர்தலில் போட்டியிட வேண்டியிருந்தது. பகிஷ்கரிப்பிற்குச் சாதகமாக இளைஞர் காங்கிரஸ் ஏகமனதாக பிரேரணை நிறைவேற்றிய நாள் முதல் குடாநாட்டில் ஒரு சூறாவளி பிரசாரம் நடத்தப்பட்டது. தாம் போட்டியிடப் போவதாக அறிவித்த பலர் யாழ்ப்பாணம் மற்றும் கொக்குவிலில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கூட்டங்களில் உரையாற்றி யிருந்தனர். அரச சபையில் பிரவேசிப்பதை பகிஷ்கரிக்க வேண்டு மென்பதற்கு தமது ஆதரவை வெளிப்படுத்தியிருந்தனர்.[106]

இறுதித்தீர்மானம் எடுக்கப்பட்ட முக்கியமான கூட்டம் மே 3ஆம் திகதி காலை இடம்பெற்றது. எதிர்வரும் தேர்தலில் போட்டியிடுவதற்கு தமது எண்ணத்தை வெளிப்படுத்திய எல்லா அபேட்சகர்களும் (மூன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேர் தவிர) இளைஞர் காங்கிரஸ் பிரதிநிதிகளை வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் சந்தித்தனர். அவர்களில் டபிள்யூ. துரைசுவாமி, கே. பாலசிங்கம், ஏ. மகாதேவா, எச்.ஏ.பி. சந்திரசேகர (KC), ஆர். சிறீ பத்மநாதன் மற்றும் ஏ. அப்பாத்துரை ஆகியோர் இடம் பெற்றனர். இவர்கள் யாவரும் கலைக்கப்பட்ட சட்டவாக்கச் சபையில் உறுப் பினர்களாக இருந்தவர்கள். கடைசியாகக் குறிப்பிட்ட மூவரும் கடந்த 2 வருடங்களுக்குள் நடைபெற்ற இடைத்தேர்தல்களில் தெரிவு செய்யப் பட்டவர்கள். ஏ. மகாதேவா மேல் மாகாணத்தில் தமிழ் தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தவர். அவர் இப்போது யாழ்ப்பாணத் தொகுதியில் போட்டியிடுவதற்கு குடாநாட்டிற்குள் நுழைந்து விட்டார்.

டொனமோர் அரசியலமைப்பின் கீழ் சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டதோடு, ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் வாக்காளர் எண்ணிக்கை 30 ஆயிரமாக உயர்ந்திருந்தது. முன்னைய அரசியல மைப்பின் கீழ் ஒவ்வொரு தொகுதிக்கும் ஏறத்தாழ ஐயாயிரம் வாக்காளர்களே இருந்தனர். 1931 தேர்தல்களில் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் இளவயதினர் தீர்க்கமான பாத்திரத்தினை வகிக்க வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. 1929லும், 1930லும் நடைபெற்ற இடைத்தேர்தல்களில் அவர்கள் வகித்த முக்கியமான பாத்திரத்தினை அபேட்சகர்களும் பொதுமக்களும் அறிந்திருந்தனர்.[107] எனவே, தூர்ந்துபோன சட்டவாக்க சபையில் அங்கத்தவர்களாய் இருந்தவர்கள் இளைஞரோடு ஒட்டி உறவாடுவதற்கு விருப்பம் காட்டினர். அவர்கட்கு பகிஷ்கரிப்பைப் பற்றி சில ஐயப்பாடுகள் இருந்த போதும், அவர்கள் அதனை கடைப்பிடிப்பதற்கு தயாராக இருந்தனர். அபேட்சகர்களாக முன்வரவிருந்த ஏனையோரும் இணக்கம் தெரிவித்தனர். ஆனால் இரண்டு பேர் மட்டும் தாம் நியமனப்பத்திரத்தை தாக்கல் செய்யப் போவதாக அச்சுறுத்தி ஒரு பரபரப்பை ஏற்படுத்தினர். வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் மேற்குறிப்பிட்ட அபேட்ச கர்கள் அல்லாத எஸ். நடேசபிள்ளை, ஜே.சி. அமரசிங்கம், ஆர். சிவகுருநாதன் மற்றும் முதலியார் காராளபிள்ளை ஆகியோரும் பிரசன்னமாய் இருந்தனர். எல்லா அபேட்சகர்களும் தத்தம் அபிப் பிராயங்களை தெரிவித்தனர். ஆயினும், இறுதியில் பெரும்பான்மை தீர்மானத்திற்கு அமைவாக செயற்படுவதற்கு ஒப்புக்கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கூட்டத்திலோ, அல்லது இதற்கு முன்பு இடம்பெற்ற கூட்டத்திலோ, இன ரீதியான பிரதிநிதித்துவம் ஒழிக்கப்படுவது பற்றி கூறப்படவுமில்லை; தமிழர்கட்கு விசேட பிரதிநிதித்துவம் கோரப்படவுமில்லை. பிரத்தியேகமாக நடத்தப்பட்ட ஒரு சிறிய சந்திப்பையடுத்து அடுத்த நாள் நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்வதில்லையென ஒரு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளதென வெளியிலே கூடியிருந்த மக்களுக்குத் துரைசுவாமி அறிவித்தார். மேலும் "பிரதான பிரச்சினையானது புதிய அரசியல் யாப்பு முன்னைய சபைக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரங்கள் மற்றும் வரப்பிரசாதங்கள் எல்லாவற்றையும் களைந்து, அவற்றை ஆளுனருக்கும் அவரின் நிரந்தர அதிகாரிகளுக்கும் மாற்றப்பட்டுள்ளதாகும். முழுமையான சுதந்திர அரசாங்கத்தினை அடைவதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென தீர்மானிப்பதுதான் தங்கள் பணியாகும்" என்றார்.[108] அவர்களின் பணியாக இருந்தது.[108]

நியமனப்பத்திரம் தாக்கல் செய்யும் தினத்தில் யாழ்ப்பாணக் கச்சேரிக்கு வெளியில் பெருந்திரளான மக்கள் கூடியிருந்தனர். நியமன நேரம் நெருங்கியதும் ஒரு பரபரப்பு காணப்பட்டது. நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்வதில்லையென முதல் நாள் இணங்கியிருந்த எல்லா அபேட்சகர்களும் வருகை தந்திருந்தனர். முதல் நாள் கூட்டத்தில் பங்கு பற்றாமல் அங்கே எடுக்கப்பட்ட முடிவுக்குக் கட்டுப்படாமல் இருந்தவர்களாகிய திரு.எஸ்.சரவணமுத்து மற்றும் திரு. ஏ.முத்துக்குமாரு ஆகியோர் அங்கே தோன்றியபோது சற்று முறுவல் நிலை காணப்பட்டது. ஒரு தொழில் வாய்ப்பற்ற வழக்கறிஞர் ஒரு போலி அபேட்சகராக நிறுத்தப்படுவதற்கு தயார்ப்படுத்தப்பட்டிருந்தார். ஆனால் ஒரு நியமனப்பத்திரம் கூட தாக்கல் செய்யப்படாமல் அரசாங்க அதிபர் திரு.டைசன் நியமனங்கள் ஏற்றுக்கொள்ளும் காலம் முடிந்துவிட்டது என அறிவித்ததும் அங்கு கூடியிருந்த எல்லோரும் நிம்மதி அடைந்தனர்.

நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்வதைத் தடுக்கும் முகமாக காங்கிரஸின் தூதுக்குழு ஒன்று வவுனியாவிற்கும் அனுப்பப்பட்டது. ஜி.ஜி.பொன்னம்பலம் முதலில் இவ்வேற்பாட்டிற்கு இணங்கினார். ஆயினும் பின்னர் அவருடைய எதிராளியான ஆனந்தம் வாபஸ் பெறாதபடியால் அவர் தேர்தலில் போட்டியிட்டார். எனினும் இளைஞர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காங்கிரஸை ஆதரிப்பதற்கு அவர் விருப்பம் தெரிவித்திருந்ததோடு, தான் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் மேற்கொண்டு என்ன செய்ய வேண்டும் என்பதற்கு வாக்காளர்களினதும் இளைஞர் காங்கிரஸினதும் ஆலோசனையை ஏற்றுச் செயற்படத் தயார் என அறிவித்தார். தான் வெற்றியீட்டினால் ஆசனத்தை வாபஸ் பெறப்போவதாக பொன்னம்பலம் திட்டவட்டமானதொரு வாக்குறுதியை அளித்ததாகப் பின்பு இளைஞர் காங்கிரஸ் பேச்சாளர் கூறியபடியால் - 1931 தேர்தல்களில் முல்லைத்தீவு - மன்னார் தொகுதிக்கு அவருக்கு இளைஞர் காங்கிரஸ் ஆதரவு அளித்தது.[109] ஆனால் பின்பு ஜீ.ஜீ. பொன்னம்பலம் பிறிதொரு நியமன தினம் வேண்டுமென்று கோரியவர்களில் மிகமுக்கியமான ஒருவராக விளங்கினார். இதன் காரணமாக 'பகிஷ்கரிப்பாளர்களுக்கும்', பகிஷ் கரிப்பை எதிர்த்தவர்களுக்கும் இடையில் மிகுந்த கசப்புணர்வு உண்டாகியது.

நீண்டகாலமாக இளைஞர் காங்கிரசை ஆதரித்தும் டொனமோர் சீர்திருத்தங்களை கடுமையாக எதிர்த்தும் வந்த 'டெயிலி நியூஸ்' யாழ்ப்பாணத்தில் மேற்கொண்ட பகிஷ்கரிப்பை வரவேற்றது. நாட்டின் இதர பகுதிகளில் உள்ள அபேட்சகர்கள் அரசியல் இலட்சியங்கள் அற்றவர்கள் என விமர்சித்து நியமன தினத்தில் தீட்டிய ஆசிரியர் தலையங்கத்தில் "இந்தக் கேவலமான செயற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் இருந்து கிடைக்கும் செய்தி மட்டுமே ஆறுதல் அளிக்கின்றது. யாழ்ப்பாணத்தில் பொதுமக்கள் அபிப்பிராயமானது சக்தி வாய்ந்ததாகும். அதனை எதிர்ப்பவர்கள் அழிந்து போவார்கள். என்றுமே பலமான அரசியலை தன்னகத்தே கொண்டுள்ளதாகிய யாழ்ப்பாணம் தனது பிரஜைகள் எந்தவொரு நெருக்கடியையும் எதிர்கொள்வதற்கான பொதுநல மனப்பாங்கு உள்ளவர்கள் என்பதை எடுத்துக் காட்டுவதற்கு உறுதி பூண்டு நிற்கின்றது". 1931 தேர்தல்களில் நாட்டின் இதர பகுதிகளில் இருந்து போட்டியிட்ட பல அபேட்சகர்கள் அரசியல் அமைப்பினை "திருத்த வேண்டும் அல்லது தொலைத்து விடவேண்டும்" என உறுதிபூண்டு செயற்பட்டனர். 'டெயிலி நியூஸ்' பத்திரிகை பின்பு கருத்து வெளியிடுகையில் கூறியதாவது: "சட்டவாக்க சபையில் இருந்தவர்கள் புதிய அரசியலமைப்பை ஏற்றுக் கொள்வதற்கு தீர் மானித்தபோது தாம் கூறியவற்றையே அச்சம் காரணமாக வாபஸ் பெறாமல் விட்டிருந்தால் போலியானதொரு அரசியலமைப்புக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிலாக உண்மையான பொறுப்பு வாய்ந்த அரசாங்கம் ஒன்றினை அமைப்பதற்கான அம்சங்கள் உள்ளிட்ட திட்டத்தினை தனதாக்கிக் கொள்ளக் கூடியதான அளப்பரிய பலத்தோடு இன்று இலங்கை விளங்கியிருக்கும்."[110]

நியமன தினம் கழிந்தபின் பல பத்திரிகைகளும் தனி நபர்களும் பகிஷ்கரிப்பு நடவடிக்கைக்கு பொறுப்பாய் இருந்த இளைஞர் காங்கிரஸ் மற்றும் ஏனையோருக்கு வாழ்த்து தெரிவித்ததே முதலாவது பிரதி பலிப்பு ஆகும். குறிப்பாக, அவர்கள் துணிச்சலாகவும் சவால்விடும் விதமாகவும் அந்தப் பகிஷ்கரிப்பை மிக நேர்த்தியாக நடத்தியது பாராட்டப்பட்டது. 'அகில இலங்கை லிபரல் லீக்' தனது ஆதரவைத் தெரிவித்தது. பிரான்சிஸ் டி சொய்சா (K.C.), ஈ.டபிள்யூ. பெரேரா மற்றும் ரி. பி. ஜெயா ஆகியோர் கூட்டாக அனுப்பி வைத்த தந்தி யொன்றில் கூறியதாவது "அற்புதமான சாதனை படைத்ததையிட்டு யாழ்ப்பாணத்தை மனமார வாழ்த்துகிறோம். இங்கே (தென்னிலங் கையில்) ஐக்கியமும் போதிய சக்திவாய்ந்த பொதுமக்கள் கருத்து இன்மையும் அவ்வாறு செய்யத் தவறியமை கண்டிக்கப்பட வேண்டிய தாகும். முடிந்தளவு எல்லா வகையிலும் பொதுகுறிக்கோளை அடை வதற்குப் பொதுமக்கள் கருத்தைத் திரட்டுவதற்கு முயன்று கொண்டிருக்கின்றோம். யாழ்ப்பாணத்திலிருந்து உதவியையும் ஒத்து ழைப்பையும் எதிர்பார்க்கின்றோம்" பத்திரிகைகளுக்கு சிங்கள பிர முகர்கள் எழுதிய கடிதங்களில், தென்னிலங்கைத் தலைவர்கள் யாழ்ப் பாணம் வெளிக்கொணர்ந்த வழிகாட்டலை பின்பற்ற வேண்டு மெனவும், அபேட்சகர்கள் ஒன்றில் வாபஸ் பெறவேண்டும், அல்லது வாக்களிக்காமல் விட வேண்டும் என்று மக்களை கேட்டுக்கொள்ள வேண்டுமென்றும் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.[111]

பிந்திய நிகழ்ச்சிகளில் குறிப்பாக நோக்கத்தக்கது பிலிப் குண வர்த்தன லண்டனில் இருந்து பத்திரிகைக்கு எழுதிய கடிதம் ஆகும். அவர் கூறியதாவது:

> பின்வருமாறு "சீனா, இந்தியா, இந்தோனிசியா, கொரியா, மற்றும் பிலிப்பைன் தீவுகளில்கூட பழம் பெரும் சக்திகளுக்கு, சமூகப் பிற்போக்குத் தளத்திற்கு மற்றும் ஏகாதிபத்திய ஒடுக்குமுறைக்கு எதிராக ஆக்க பூர்வமான புரட்சிகரப் போராட்டங்களில் குதித்திருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> இளம் ஆண்கள், பெண்கள் போன்று இலங்கை இளைஞர்களும் செயற்படும் நாளைக் காண்பதற்கு நான் ஆவலாய் உள்ளேன். கடந்த சில வருடங்களாக இலங்கையில் யாழ்ப்பாண காங்கிரஸ் மட்டுமே அரசியல் விவேகத்தை வெளிப்படுத்திய அமைப் பாகும்............. யாழ்ப்பாணம் இப்போது வழி காட்டியுள்ளது. நாட்டின் சுதந்திரத்திற்காக முழக்கம் செய்யுமாறு அவர்கள் தமது தலைவர்களுக்கு கடும் அழுத்தம் கொடுத்துள்ளனர். அது பிரித்தானிய ஏகாதிபத்தியத்தில் இருந்து உடனடியாக முழுமையான சுதந்திரத் திற்கான அழுத்தம் ஆகும். எப்போதும் உச்சமான துணிச்சலை வெளிப்படுத்தும் சிங்களவர்கள் அதனை புரிந்து கொண்டு பின்பற்றுவார்களா? ஒரு பிரமாண்டமான போராட்டத்தை நாம் எதிர்பார்க்கின்றோம். தேர்தல்களை பகிஷ்கரிப்பதென்பது ஒரு சமிஞ்சை மட்டுமே. எதிர்வரும் பாரிய போராட்டத்திற்கு பரந்து பட்ட மக்களை தயார்படுத்துவதே ஒவ்வொரு சிங்களவரினதும் கடமையாகும்."[112]

அந்த நேரத்தில் ஜவஹர்லால் நேரு இலங்கையில் விடுமுறையைக் கழித்துக் கொண்டிருந்தார். அவர் அரசியலில் கைவைக்க விரும்பி யிருக்காதபோதும் பல கூட்டங்களில் உரையாற்றுவதற்கு அவர் பெரிதும் வேண்டியவராக இருந்தார். யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸின் முன்முயற்சி காரணமாக அமைக்கப்பட்டிருந்த அகில இலங்கை இளைஞர் காங்கிரஸின் அங்குரார்ப்பணக்கூட்டம் வெள்ள வத்தை பிளாசா தியேட்டரில் 1931 மே மாதம் இடம் பெற்றது. பல பிரதிநிதிகள் இக் கூட்டத்தில் பங்குபற்றியிருந்தனர். நேரு பங்குபற்றிய இக்கூட்டத்தில் பெருந்திரளான மக்கள் பங்குபற்றியதோடு அரச சபைக் கான தேர்தல்களை யாழ்ப்பாணம் பகிஷ்கரிப்பதை ஆதரித்து ஒரு பிரேரணையும் நிறைவேற்றப்பட்டது. எவ்வாறாயினும் கடுமையான சொற்பதங்கள் கொண்ட பிரேரணைகள் நிறைவேற்றுவதற்கு எதிராக நேரு ஒரு எச்சரிக்கையை விடுத்திருந்தார். இந்த யாழ்ப்பாண பகிஷ்கரிப்பு இயக்கத்திற்கு பின்னணியில் நேரு மற்றும் கமலாதேவி சட்டோபாத்தியாய உள்ளளனர் என அடிபட்ட கதை தவறானது என எடுத்துக் கூறுவதற்கு அந்தக் கூட்டம் வழங்கிய சந்தர்ப்பத்தை நேரு பயன்படுத்திக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9

## சர்ச்சை

யாழ்ப்பாணத்தில் இளைஞர் காங்கிரஸின் வருடாந்த அமர்வுகளின் போது ஜவர்லால் நேருவை வரவேற்பதற்காக டபிள்யூ. துரைசுவாமி தலைவராகவும், என். குமாரசாமி மற்றும் ஈ.ரி. ஹிச்கொக் செயலாளர் களாகவும் ஆர்.ஆர். நல்லையா மற்றும் எஸ். மச்சாடோ பொருளாளர் களாகவும் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டது. நேரு 'இந்தியாவின் முடிசூடா மன்னன்' என அழைக்கப்பட்டவர். அவருக்கு மே மாதம் மூன்றாம் வாரத்தில் ஒரு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. பகிஷ்கரிப்பிற்கு சற்று பின்னரே அவருடைய விஜயம் இடம்பெற்றிருந் ததால் அந்த நடவடிக்கை தொடர்பாக நேரு என்ன எண்ணியிருப்பார் என்பதை அறிவதற்கு ஓர் உணர்வலையும் ஆவலும் காணப்பட்டது. நேரு நிகழ்த்திய நீண்டதொரு உரையில் தாம் இளைஞர் காங்கிரஸினால் சற்று கவரப்பட்டிருப்பதாக உணர்வதைத் தெரிவித்தார். யாழ்ப்பாணம் தான் தன்னை அழைத்துள்ளதால், யாழ்ப்பாணம் தான் எல்லாவற்றிலும் திருப்தியானதும் கவர்ச்சி கொண்ட பகுதி என எண்ணியே யாழ்ப் பாணத்துக்கு இறுதியாக விஜயத்தை மேற்கொண்டுள்ளதாகக் குறிப் பிட்டார்.

இளைஞர்கள் செயல் வீரர்களாய் இருந்தால் ஒழிய அவர்கள் வெறுமனே பேசிக் கொண்டிருப்பது பிரயோசனம் அற்றதாகிவிடும் என்று எச்சரித்திருந்தார். யாழ்ப்பாணத்தில் சில தலைவர்கள் தொழிலாளர் களுக்கு எதிராகவும் சர்வஜன வாக்குரிமைக்கு எதிராகவும், உள்ளனர் என நேருவிடம் கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்திருந்தன. எனவே, அவர் யாழ்ப்பாணத்தில் தொழிலாளர்கள் மீது குறிப்பாக இந்தியத் தொழிலாளர்களிடம் போதிய கவனம் செலுத்தப்படவில்லை என்பதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலியுறுத்தினார். தொழிலாளர்களின் சர்வதேச பரிமாணத்தினை நேரு வலியுறுத்தியதோடு, சமூக, பொருளாதார மற்றும் அரசியல் பிரச்சினைகள் தொடர்பாக இளைஞர் ஒரு தெளிவான வேலைத்திட்டத்தை கொண்டிருக்க வேண்டுமென அறைகூவல் விடுத்திருந்தார். இந்தக் காலப்பகுதியில்தான் நேரு இந்திய தேசிய காங்கிரஸின் இடது பிரிவைச் சேர்ந்த சமதர்மவாதியென கருதப்பட்டிருந்தார். மிகச் சரியாகவே, பொருளாதார காரணி மற்றும் தொழிலாளி வர்க்கத்தின் முக்கியத்துவத்தை தொட்டுப் பேசிய அவர் அந்த முறைமைதான் மாற்றப்பட வேண்டியதாகும் என விளக்கினார். தற்போதுள்ள முறைமையைச் சரியாகப் புரிந்து கொண்டு, அதன் வாயிலாக தீட்டப்படக் கூடியதொரு நடவடிக்கைத் திட்டம்தான் தற்போதைய தேவை என்பது அவரின் அபிப்பிராயமாய் இருந்தது.

பகிஷ்கரிப்பு பற்றி அவர் அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை. அவர் தான் பகிஷ்கரிப்புக்கு ஒன்றில் சாதகமா அல்லது எதிரா என்பதை வெளிக்காட்டாமல் அவதானமாக, பிடிகொடுக்காமலே தனது கருத்துக்களை வெளியிட்டார். ஆனால், அக பலமின்றி பகிஷ்கரிப்பு தொடர்பாக வெறுமனே குரல் எழுப்புவது பிரியோசனமற்றது என்று கூறினார். மேலும் எதிர்ப்பு, சச்சரவு, துன்பம் மற்றும் தியாகம் இவை இருந்தாலேயே உண்மையான போராட்டத்திற்கான பற்றுறுதி உண்டா என கணிக்கப்படும் என்று அவர் கூறினார்.[114]

நேரு தனது சகோதரி கிருஷ்ணா நேரு ஹூத்தீசிங் என்பவருக்கு யாழ்ப்பாண விஜயம் பற்றி எழுதிய கடிதத்தில் பின்வருமாறு கூறியிருந்தார்:

> வடமுனையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு நாம் புகையிரதம் மூலம் சென்றோம். அங்கு பிரமாண்டமான வரவேற்பு அளிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் தமிழரினதும் மிக ஆக்ரோசமான இளைஞர் குழுக்களினதும் மையமாக விளங்குகின்றது. அங்கே எங்களுக்கு நிறைய கருமங்கள் செய்யவிருந்தன. அயல் பிரதேசங்கள் எங்கும் மோட்டார் வாகனத்தில் சுற்றித்திரிந்து, கடலில் குளித்து இந்தியாவை நோக்கி நீந்தினோம். இந்தியா 16 மைல் தொலைவிலேயே உள்ளது.[115]

பகிஷ்கரிப்பு என்பது ஆரம்பத்திலிருந்தே சர்ச்சைக்கு வித்திட்டிருந்தது. பகிஷ்கரிப்பை எதிர்த்தவர்களுள் ஒருவர் காங்கிரஸின் முதலாவது தலைவராயிருந்த ஜே.வி.செல்லையா ஆவர். 'மோனிங் ஸ்ரார்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Morning Star) என்ற பத்திரிகையின் ஆசிரியராய் விளங்கிய அவர், அரச சபைக்கான தேர்தல்கள் பகிஷ்கரிப்பை அவ்விதழின் பத்திகளில் சாடியிருந்தார். பகிஷ்கரிப்பு நடைபெற்று ஒருவாரத்தின் பின் பல மூத்தோர்களை தான் சந்தித்ததாகவும், பகிஷ்கரிப்பு தொடர்பான தீர்மானம் மேற்கொள்வதை முற்றுமுழுதாக இளைஞர்கள் கையில் விட்டிருக்கக் கூடாதென அவர்கள் அபிப்பிராயப்பட்டதாகவும் செல் லையா கூறினார். அந்தப் பகிஷ்கரிப்பானது ஒரு 'முட்டாள்தனம்' அதாவது, இளைஞர்கள் அனுபவம் நிறைந்த பொதுமக்களின் ஆலோசனைகளை மதிக்கவில்லை. அது ஒரு தோல்வியை தழுவக் கூடிய 'குண்டு' என்றெல்லாம் 'மோனிங் ஸ்ரார்' குறிப்பிட்டதோடு 'அடுத்து என்ன நடக்கப்போகிறது?' என்ற கேள்வியை எழுப்பி யிருந்தது.[116] நேருவின் விஜயத்தின் அடுத்தநாள் திரு.செல்லையா தனது மாணவர்களுக்கு பின்வருமாறு கூறியதாக கூறப்படுகின்றது: "நேற்று பண்டிற் நேரு முற்றவெளியில் ஆற்றிய உரையானது வெப்பம் நிறைந்த பல நாட்களின் பின் பெய்த அற்புதமான மழையாக இருந்தது."

'சிலோன் பேற்றியற்' எனும் பத்திரிகை செல்லையாவை கண்டித்ததோடு, பகிஷ்கரிப்பிற்கு சில நாட்களுக்கு முன்பு அதுபற்றி அவரது என்ன அபிப்பிராயம் நிலவுகின்றது என அபேட்சகர்களில் ஒருவர் வினவிய போது தனது அயலில் உள்ள மக்கள் பகிஷ்கரிப்பை நிச்சயமாக ஆதரிப்பதாகவும் அவர்களிடமிருந்து ஒரு அபேட்சகராவது ஒரு வாக்கையாவது பெற்றுக்கொள்ள முடியாதென செல்லையா கூறியதாகக் குறிப்பிட்டது.[117] Free Press பத்திரிகை (ஆசிரியர் ஏ. வி. குலசிங்கம்) பகிஷ்கரிப்பை கண்டித்திருந்தது. 1931 முதல் 1934 நடுப்பகுதியில் தேர்தல்களுக்கான புதிய நியமனங்கள் கோரப்படும் வரை பகிஷ்கரிப்பிற்கு சாதகமாகவும் எதிராகவும் கூட்டங்கள் நடத்தப் பட்டன. பகிஷ்கரிப்பை ஆதரித்தவர்கள் அல்லது அமைதியாக ஏற்றுக் கொண்டவர்கள் படிப்படியாக தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு ஆளுனர் ஒரு புதிய நியமனத் திகதியை நியமிக்க வேண்டுமென்று நடத்தப்பட்ட பிரசாரத்திற்கு ஆதரவளித்தனர்.

1931இல் அரச சபையில் ஆளுனர் தனதுரையில் யாழ்ப்பாணத் திற்கான 4 தொகுதிகள் பிரதிநிதித்துவப்படாமல் இருந்ததையிட்டு கவலை தெரிவித்தார். "புதிய யாப்பின் தாற்பரியத்தினை நன்கு புரிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்க வேண்டியவர்கள் தமது ஆவேசம் காரணமாக அதற்கு தவறாக அர்த்தம் கற்பித்ததே இந்த நிலைக்கு முக்கிய காரணம்" என அவர் குறிப்பிட்டார். குடாநாட்டில் எந்தவொரு தொகுதியிலோ, அல்லது எல்லாத் தொகுதிகளிலுமோ உள்ள பெரும்பான்மையான மக்கள் பிரதிநிதித்துவத்தை உண்மையாக விரும்புகின்றனர் என்று தான் திருப்திப்பட்டால் ஒரு புதிய நியமனத் திகதியை நியமிப்பதற்கு தான் பெரிதும் மகிழ்ச்சியோடு இருப்பதாக உறுதியளித்தார். இவ்வாறாக, பகிஷ்கரிப்பு எதிராளிகள் ஒரு புதிய நியமனத்திகதியைக் கோருவதற்கு வழி திறக்கப்பட்டது.[118] தனக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதும், ஆளுனர் 1931 லும் 1932லும் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொள்வ தற்கு உத்தேசிக்கப் பட்டிருந்ததாயினும், அது இரத்துச் செய்யப்பட்டது. பகிஷ்கரிப்பு நடவடிக்கையை அனுமதிப்பதற்கு நேரு மறுத்ததையிட்டு அந்த நடவடிக்கைக்கு அவருடைய இதயபூர்வமான ஆதரவை எதிர் பார்த்தவர்கள் ஏமாற்றமடைந்துள்ளனர் என அரசாங்க அதிபரின் 1931ற்கான அறிக்கை வலியுறுத்தியது. மேலும் 'நடுநிலைமையான' தலைவர்கள் மற்றும் கிராமசபைத் தலைவர்கள் பகிஷ்கரிப்பு இயக்கத்தை கண்டிப்பதற்கு எவ்வளவு தூரம் முயற்சி எடுத்துக் கொண்டிருந்தனர் என்றும் தனதறிக்கையில் அவர் குறிப்பிட்டிருந்தார்.[119]

இளைஞர் காங்கிரஸ் தனது நிலைப்பாட்டினை ஒரு போதும் மாற்றியதில்லை. 1932 மற்றும் 1933 அமர்வுகளில் பகிஷ்கரிப்புத் தீர்மானம் பிரதான இடத்தினைப் பிடித்திருந்தது. 1931இல் சி.ஈ. கொரியா மற்றும் 1931இல் கே. பாலசிங்கம் ஆகியோர் தமது தலைமை உரைகளில் அதனை அறுதியிட்டு ஆதரித்து நின்றனர். 1934 அளவில் நியமனங்களை தடை எதுவுமின்றி பெற்றுக்கொள்ள முடியுமென ஆளுனர் திருப்தியடைந்தார். அந்த நேரத்தில் இளைஞர் காங்கிரஸ் 1931இல் கொண்டிருந்த செல்வாக்கினை தக்க வைத்துக் கொள்ள வில்லை. 1934 இல் தேர்தல்கள் நடைபெற்றன. இளைஞர் காங்கிரஸின் நோக்கங்கள் மற்றும் இலட்சியங்களில் பற்றுறுதி இல்லாவிடினும், பகிஷ்கரிப்பு இயக்கத்தில் பங்குபற்றியிருந்த சில அபேட்சகர்கள் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியும் ஈட்டினர். 1931இல் யாழ்ப் பாணத்திலிருந்த இரு சிரேஷ்ட அரசியல்வாதிகளும் பரந்தளவு மரியாதைக்கு பாத்திரமானவர்களுமான வைத்திலிங்கம் துரைசுவாமி மற்றும் கே. பாலசிங்கம் ஆகியோர் பகிஷ்கரிப்பு இயக்கத்தை மிக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதியாக ஆதரித்தவர்கள் என்ற வகையில் 1934 தேர்தலில் போட்டியிடவில்லை.

அரசசபைத் தேர்தல்களை பகிஷ்கரித்ததன் தொடர்ச்சியாக வெளிநாட்டுப் பண்டங்களையும் பகிஷ்கரிக்க வேண்டுமென முயற்சி மேற்கொள்ளப்பட்டது. கடைகளில் சீனி, இறக்குமதி செய்யப்படும் மண்ணெண்ணெய் மற்றும் சிகரெட் வகைகள் ஆகிய பண்டங்களை களஞ்சியப்படுத்தி வைத்திருக்கக் கூடாதென கோரிக்கை விடுக்கப்பட்டது. இவற்றுக்குப் பதிலாக பனங்கட்டி, தேங்காய் எண்ணெய் மற்றும் யாழ்ப்பாணச் சுருட்டு வகைகள் மாற்றுப் பண்டங்களாக பாவிக்க வேண்டுமென மக்களுக்கு அறிவூட்டப்பட்டது. ஒரு கட்டத்தில், களஞ்சியப்படுத்தி வைத்திருந்த சிகரெட் வகைகளை பகிஷ்கரிப்பாளர்கள் விலை கொடுத்து வாங்கி தீயிட்டு சாம்பராக்கு மளவிற்குச் செயற்பட்டனர். இறக்குமதி செய்த பண்டங்களுக்கு மாற்றீடாக உள்ளூர் உற்பத்திகளை பாவிப்பது நன்மையானது என மாகாணத்தில் வெளிவந்த வாரப்பத்திரிகைகளில் கட்டுரைகள் வெளியிடப்பட்டன. ஆனால் இந்த வெளிநாட்டுப் பண்டங்களை பகிஷ்கரிக்கும் நடவடிக்கையினைத் தொடர்ந்தும் செய்ய முடியாது, ஒருசில மாதங்களில் தோல்வியுற்றது.[120]

பிரபல கல்வியியலாளர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் அரசியல் வாதிகள் 1931 நிகழ்வுகளை தவறாக அர்த்தம் கற்பித்து, இளைஞர் காங்கிரஸை நீதியுடன் நோக்குவதற்கு தவறிவிட்டனர். இதுபற்றி ஹன்டி பேரின்பநாயகம் ஒன்றிற்கு மேற்பட்ட தடவைகள் குறிப்பிட்டிருந்தார். ஒரு தடவை அவர் பின்வருமாறு எழுத்தில் கருத்து வெளியிட்டிருந்தார்:

> பல பொறுப்புவாய்ந்த சிங்களத் தலைவர்கள் பகிஷ்கரிப்பு மற்றும் அதன் பொருட்டு எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு விடாப்பிடியாக இனவாத அர்த்தம் கற்பித்து வந்துள்ளனர். ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு மாநாட்டில் காலம் சென்ற எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவும் நானும் சந்தித்த சந்தர்ப்பத்தில், பகிஷ்கரிப்பு நடவடிக்கை இனவாத நோக்கங்களினால் உந்தப்பட்டது என அவர் கூறியபோது, அது அப்படியல்ல என நான் மறுதலித்தது ஞாபகமாக இருக்கிறது. அண்மையில் திரு. எச்.ஏ.ஜே. ஹுலுகல்ல எழுதிய டி.ஆர். விஜயவர்த்தன சரிதையில் அதே பழியை சுமத்தியுள்ளார். எமது வாழ்க்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> வரலாற்றையும் ஒரு ஐக்கியப்பட்ட சுதந்திரமான இலங்கை என்ற இலட்சியத்திற்கு நாங்கள் இடையறாது அர்ப்பணித்து நின்றதற்காக கொடுத்த விலையையும் கணக்கில் எடுத்தால் எவருமே அவ்வாறான கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. டொனமோர் சீர்திருத்தங்கள் முழுமையான சுதந்திரத்திற்கு மிகவும் குறைவாய் இருந்ததன் காரணமாகவே பகிஷ்கரிப்பு இயக்கம் முடுக்கிவிடப்பட்டது.[121]

ஏலவே குறிப்பிடப்பட்டுள்ளதுபோல, ஜி.ஜி. பொன்னம்பலமே பகிஷ்கரிப்பு நடவடிக்கையை ஆதரிப்பதற்கு விரும்பியிருந்தவர் போல் தோன்றியிருந்தது. ஆயினும் , 1931 பகிஷ்கரிப்பு தொடர்பாக எழுந்துள்ள குழப்பமானதும் திரிபுபடுத்தப்பட்டதுமான கருத்துக்கள் உருவாக்கப்படுவதற்கு அவரே பெரிதும் பங்களிப்பு செய்து விட்டார். சீர்திருத்தப் பொதி மீது 1939இல் ஜி.ஜி.பொன்னம்பலம் அரச சபையில் ஆற்றிய உரையின்போது இந்த பகிஷ்கரிப்பு நடவடிக்கையானது அரசியல் தற்கொலைக்கு ஒப்பானதொரு முட்டாள்தனம் எனக் குறிப் பிட்டு "அந்த நிகழ்வுகளின் பின் பகிஷ்கரிப்பு எவ்வாறு நியாயப் படுத்தப்பட்டது?, என்ற கேள்வியையும் எழுப்பியிருந்தார். பின்னர் அவர் யாழ்ப்பாண மக்கள் சார்பாக பதிலளிக்கும் வகையில் பின்வருமாறு கூறினார்:"குடாநாடு பூராகவும் சமூகத்தலைவர்கள் என்றழைக்கப்பட்டவர்கள் மீது முற்றுமுழுதான கையாலாகாத்தனம் எனும் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டபோது அதற்கு எதிராக அவர்கள் புரிந்தவாதம் என்னவென்றால் முப்பத்தேழு அங்கத்தவர்கள் கொண்ட சபையில் எமது ஒன்பது அங்கத்தவர்கள் இருந்தனர். இன்று ஐம்பது தெரிவு செய்யப் பட்ட உறுப்பினர்கள் உள்ள சபையில் நாங்கள் நாலு அல்லது ஐந்து பேர் என்ற நிலைக்கு பின்தள்ளப்பட்டுள்ளோம். இந்த சபைக்கு நாம் செல்வதில் என்ன பயன்? ஆகையாலேயே, நாங்கள் அதனை பகிஷ்கரித்தோம்"என்பதே. இந்தப் பகிஷ்கரிப்பு முடுக்கி விடப்பட்டதற்கான காரணத்தை கௌரவ அங்கத்தவர்கள் புரிந்து கொள்ள வேண்டுமென நான் விரும்புகின்றேன். தமிழ் சமூகத்திலிருந்து ஒரு சில அங்கத்தவர்கள் மட்டும் தெரிவு செய்யப்படுதல் முற்றிலும் தாக்கமற்றதாகிவிடும், அதனால் கடந்த காலத்தில் இருந்த அளவுக்கு அரசாங்கத்தில் தாம் குரலெழுப்ப வாய்ப்பு இருக்க முடியாது என திடமாக மக்கள் நம்பினர்".[122]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் நடைபெற்றதை இவ்வாறு வெளிப்படையாக திரிபு படுத்தி கூறியதற்கு சவால் விடாமல் இருக்க முடியவில்லை. திரு பொன்னம்பலம் 'சம பிரதிநிதித்துவம்' எனும் கோரிக்கையை முன் வைத்து மேற்கொண்டிருந்த பிரசாரத்திற்கு சவால் விடுவதற்காக இளைஞர் காங்கிரஸ் புனரமைக்கப்பட்டது. 'இனவாதமா? தேசிய வாதமா?' எனும் தலைப்பில் வெளியிடப்பட்ட கைநூல் பொன்னம்பலம் அரச சபையில் நிகழ்த்திய உரைக்குப் பதிலிறுப்பதாக ஏற்பாடு செய்யப் பட்டது. 1939 டிசம்பரில் வெளியிடப்பட்ட மேற்படி நூல் பகிஷ்கரிப்பு சம்மந்தமாக உண்மையான நிலைமையை எடுத்துக்காட்டியது.

'சம பிரதிநிதித்துவம்' என பொன்னம்பலம் முன்வைத்த நிலைப் பாட்டிற்கு நன்மை அளிக்கக்கூடிய விதத்தில் தனக்கே உரிய பாணியில் அவர் 1931 நிகழ்வுகளை பயன்படுத்தியமை புரிந்து கொள்ளக் கூடியதே. 1930களில் ஒரு புறத்தில் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டார நாயக்க தலைமையில் சிங்கள இனவாதமும் மறுபுறத்தில் திரு. ஜீ.ஜீ. பொன்னம்பலம் தலைமையில் தமிழ் இனவாதமும் புத்துயிர் பெற்றதை காணக்கூடியதாக இருந்தது. எனவே, முன்னர் இடம்பெற்ற நிகழ்வுகளில் இனவாதப் பாங்கு இருந்ததாக அவதானிகள் மத்தியில் பலமானதொரு எண்ணம் இருந்தது. இது பகிஷ்கரிப்பு இயக்கம் இடம் பெற்றதையடுத்து வந்த காலப்பகுதியில் உறுதியாக வளர்ச்சி பெற்ற தமிழ் இனவாதத் தினால் மெருகூட்டப்பட்டது அல்லது போஷிக்கப்பட்டது எனலாம்.

பகிஷ்கரிப்பு இயக்கத்தை ஏற்றுக் கொண்டிருந்த சில அபேட்ச கர்கள் அவசர அவசரமாக அதனை உதறிவிட்டு புதிய நியமனத்திகதி வேண்டுமென கோரியிருந்தமை பகிஷ்கரிப்பானது இனரீதியாக உந்தப்பட்டது என்ற கருத்திற்கு மேலும் வலுவூட்டியது.

1931 பகிஷ்கரிப்பிற்கு ஒரு இனவாத சாயம் பூசுவதற்கு ஆளுனர் சேர் கிறேம் தொம்சன் மற்றும் அதன்பின்னர் சோல்பரி ஆணைக் குழுவினர் ஓரளவு பொறுப்பாயிருந்தனர். 'வைற்ஹோல்' அலுவலகத் திற்கு 1931 மே 6ம் திகதி ஆளுனர் உத்தியோக பூர்வமாக அனுப்பி வைத்த தந்தியில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்: "பகிஷ்கரிப்பிற்கான வெளிப்படைக் காரணம் புதிய அரசியலமைப்பானது சுதந்திரத்தை எட்டுவதற்கு முன்னேற்றம் போதுமானதல்ல என்பதாகும். ஆனால் தமிழர் தமக்கு கிடைத்த பிரதிநிதித்துவம் போதுமானது அல்ல என்ற அதிருப்தியே உண்மையான காரணம் என்பதில் சந்தேகம் இல்லை",

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியில், குடியேற்ற அலுவலகம் புதிய நியமனத் திகதிகளைப்பற்றி ஆலோசித்தபோது அரச சபையில் உள்ள சிங்கள பெரும்பான்மையை எதிர் கொள்வதற்கு கூடுதலான 4 அங்கத்தவர்களுக்கு இடமளிப்பது பெறுமதியாய் இருக்குமென கருதும் நிலைக்கு இட்டுச் செல்லப் பட்டது.[123]

இந்தப் பகிஷ்கரிப்பானது சுதந்திரத்திற்கு வேண்டிய நகர்வு போதுமானதல்ல என்ற காரணத்திற்காகவே மேற்கொள்ளப்பட்டது என்பது 1945 இல் வெளியிடப்பட்ட சோல்பரி ஆணைக்குழு அறிக்கை போன்றதொரு முக்கியத்துவம் வாய்ந்த ஆவணத்தில் குறிப்பிட்டிருக் கப்படவில்லை. அந்த அறிக்கையில் முற்றிலும் தவறான முறையில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது: "இனரீதியான பிரதிநிதித்துவத்தை ஒழிப்பதற்கு எதிராக தேர்தலை பகிஷ்கரித்ததே இலங்கைத் தமிழரின் குறைந்த பிரதிநிதித்துவத்துவதற்கான காரணமாகும். யாழ்ப்பாண குடாநாட்டில் 4 தொகுதிகள் நிரப்பப்படவில்லை."[124] ஆக, இலங்கை மற்றும் வெளிநாட்டைச் சேர்ந்த கல்வியாளர்கள் முதலில் சோல்பரி ஆணைக் குழுவினர் கூறியதையே ஏறத்தாழ கிளிப்பிள்ளை போல் அடிக்கடி மேலோட்டமாக கூறிவந்தனர்.

1931 யூன் மாதம் இந்தக் கேள்விக்கு பிரித்தானியப் பாராளு மன்றத்தில் தெளிவாகவும் துல்லியமாகவும் பதிலளிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம் வருமாறு:

"திரு. ஓர்ம்ஸ்பி கோர் குடியேற்ற நாடுகளுக்கான பிரதிச் செயலாளரிடம் எழுப்பிய கேள்வி: புதிய அரசியல் அமைப்பின் கீழ் தேர்தல்களை பகிஷ்கரித்ததற்கு இலங்கையில் யாழ்ப்பாணத்திலும் வடமாகாணங்களிலும் உள்ள இந்தியர்களின் தலைவர்கள் தெரிவித்த காரணம் யாது? புதிய அரசியல் அமைப்பின் கீழ் சட்டவாக்கச் சபையில் இலங்கையிலுள்ள இந்திய சமூகத்திற்கு ஏதாவது பிரதி நிதித்துவம் வழங்குவதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படும்?

டொக்ரர் சீல்ஸ்: யாழ்ப்பாண குடாநாட்டில் உள்ள 4 தொகுதி களுக்கு உள்ள நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்படாத விடயத் தையே கௌரவ கனவான் குறிப்பிடுகிறார் என நான் எண்ணுகிறேன். அங்கே வாழ்பவர்கள் அதிகப் பெரும்பான்மையாக இலங்கைத் தமிழர்களே ஒழிய அவர்கள் இந்தியர்கள் எனக்கருதப்படுவதில்லை. புதிய அரசியலமைப்பு சுதந்திரத்தை நோக்கியதான முன்னேற்றத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கவில்லை என்பதே பகிஷ்கரிப்பிற்கு பொறுப்பானவர்கள் வழங்கிய காரணமாகும்.

திரு.ஒர்ம்ஸ்பி கோர்: இலங்கையில் வடபகுதி தமிழர்கள் தமக்கு இனரீதியான பிரதிநிதித்துவம் மறுக்கப்பட்டு ஏனைய இனங்களோடு பொது இடாப்பில் அல்லது பதிவில் சேர்க்கப்பட்டதே தேர்தல் பகிஷ்கரிப்பிற்கான பிரதான காரணம் அல்லவா?

டொக்ரர் சீல்ஸ்: இல்லை, ஐயா, அது சரியான கூற்று என்று நான் நினைக்கவில்லை உண்மையில் வேறு தமிழ் அபேட்சகர்கள் தற்போது போட்டியிடுகிறார்கள். அங்கே எல்லா இனங்களின் பிரதிநிதிகளும் போட்டியிடக் கூடியதாக 46 தொகுதிகள் உள்ளன."[125]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10

## இறுதி ஆண்டுகள்

இளைஞர் காங்கிரஸின் செல்வாக்கு 1931இல் உச்ச நிலையினை அடைந்திருந்தது. அதன் பின்பு காங்கிரஸின் தனது முதலாவது 7 வருட காலப்பகுதியில் கொண்டிருந்தளவு செல்வாக்கு அற்றுப்போய் விட்டது. இளைஞர் காங்கிரஸ் அனுபவித்துவந்த மதிப்பு படிப்படியாக இறங்கிவிட்டது. 1934இல் புதிய நியமனங்கள் கோரி வெற்றிகரமாக தேர்தல்களும் நடத்தப்பட்ட வேளையிலேயே காங்கிரஸின் செல்வாக்கில் பெரியளவிலான சரிவு ஏற்பட்டது. தேர்தல்கள் நடத்தப்பட்டமையே பகிஷ்கரிப்பு இயக்கத்திற்கு சார்பாக செயற்பட்டவர்கட்கு ஒரு தோல்வியாகக் கருதப்பட்டது. அதிலும் முக்கியமான தென்னவென்றால் இளைஞர் காங்கிரஸின் ஆதரவைக் கொண்டிருந்த அபேட்சகர்கள் தோல்வி அடைந்தமையாகும். ஆனால், காங்கிரஸ் ஒரு அமைப்பென்ற ரீதியில் தேர்தலில் உத்தியோகபூர்வமாக பங்குபற்றவில்லை.

எவ்வாறாயினும், இளைஞர் காங்கிரஸ் தொடர்ந்து ஓரளவு செல்வாக்கைச் செலுத்தி வந்தது. அது பெரியளவில் விமர்சிக்கப்பட்டும் வந்தது. விமர்சனம் முதலில் சற்று குறைந்தளவிலும், காலப்போக்கில் அதற்கெதிராக அதிகளவிலான குரல்கள் ஒலித்தும் வந்தன. இளைஞர் காங்கிரஸ் அதன் வருடாந்த அமர்வுகள், கூட்டங்கள், விரிவுரைகள் மூலம் பொதுமக்கள் அபிப்பிராயத்தை உருவாக்குவதற்கு செயற்பட்டதோடு நின்று விட்டதால், அது தலையீடு எதுவுமின்றி சகித்துக் கொள்ளப்பட்டது. மறுபுறத்தில், 1931இல் இருந்ததுபோல் அரசியலில் துடிப்பாக ஈடுபடத் தலைப்பட்டதும் பலத்த எதிர்ப்பு தோன்றியதோடு, அதன் பலமும் சோதனைக்குள்ளானது. பகிஷ்கரிப்பு இயக்க கால

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டம் முதல் இளைஞர் காங்கிரஸ் தற்காப்பு தந்திரோபாயத்தை கைக்கொள்ளவேண்டியிருந்தது.

1932 மற்றும் 1933 அமர்வுகளில் பெருந்திரளானோர் சமுக மளித்தனர். 1932 அமர்வுகளுக்கு தலைமையுரை நிகழ்த்துவதற்கு சி.ஈ. கொரியா அழைக்கப்பட்டிருந்தார். ஆனால் அவர் யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருக்கும்போது விபத்தில் சிக்கிக் கொண்டதால், அவருடைய உரை அவர் சார்பில் அமர்வுகளில் வாசிக்கப்பட்டது. அவர் யாழ்ப்பாண இளைஞரைப் பாராட்டியதோடு, சுதந்திரத்திற்கான தமது போராட்டத்தினை தொடருமாறு அறைகூவல் விடுத்திருந்தார். யாழ்ப்பாண இளைஞர்கள் அரசாங்கப் பதவிகளை பெற்றுக் கொள்ள மாட்டார்கள் என சிலர் இருள்மயமான வதந்திகளை பரப்பித் திரிவதை யிட்டு இளைஞர் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டுமென்று அவர் குறிப்பிட்டிருந்தார். திரு.கொரியாவின் உரையில் பகிஷ்கரிப்பு இயக்கம் நியாயப்படுத்தப்பட்டதோடு, யாழ்ப்பாணத் தமிழர் மூத்தோரின் கருத்துக்கு அதிகளவு முக்கியத்துவம் அளிப்பது யாழ்ப் பாண தமிழ் மக்களின் பலவீனங்களில் ஒன்று என இளைஞர்கட்கு நினைவூட்டினார். இளைஞர் மூத்தோரின் அபிப்பிராயத்திற்கு அதிகளவு மதிப்பளித்து அவர்கள் வெளிப்படுத்தும் அச்சங்கள் முதலியனவற்றால் பாதிப்படைந்துவிடக் கூடாதென சேர்.பொன்.அருணாசலம் சில வருடங்களிற்கு முன் அறைகூவல் விடுத்திருந்ததை திரு.கொரியா இளைஞர் காங்கிரஸிற்கு நினைவூட்டினார். பகிஷ்கரிப்பு இயக்கம் பொறுப்பற்ற இளைஞரால் ஆரம்பிக்கப்பட்டதொன்றல்ல. அதற்கு முதிர்ச்சியும் அனுபவமும் உள்ளவர்களின் ஆதரவு இருந்தது என அவர் தெரிவித்தார். வரவேற்புக் குழுவின் தலைவர் என்ற ரீதியில் வரவேற்புரை நிகழ்த்தியவராகிய ரி.என். சுப்பையா தனது வரவேற் புரையில் பகிஷ்கரிப்பு இயக்கம் மற்றும் அதற்குப் பிந்திய நிகழ்வுகள் தொடர்பாக கூடுதலாக கருத்து வெளியிட்டிருந்தார். அவர் நிச்சயமாக தற்காப்பு முறையிலேயே உரையாற்றினார். சிங்களவர்களை நம்பாததன் காரணமாகவே தமிழர் தேர்தல்களை பகிஷ்கரித்தனர் எனக் கூறப்படுவது முற்றிலும் விசமத்தனமானது எனக்குறிப்பிட்டார். இந்தியாவிலுள்ள நடுநிலையாளர்கள் இழைத்த தவறுகள் பற்றியும் அந்த உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒன்றன் பின் ஒன்றாக வந்த அரசியல் அமைப் புக்களை செயற்படுத்துவதற்கு வெவ்வேறு காலப்பகுதியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்தானியர்களுக்கு அவர்கள் தமது ஒத்துழைப்பினை நல்கி யிருந்தனர் என்றும், இந்தியாவின் இப்போதைய நிலை முன் எப் போதையும் விட மோசமாக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். நாட்டிற்கு சேவை செய்வதற்குத் தமக்குப் போதிய அதிகாரங்கள் இல்லையென அமைச்சர்களே ஒத்துக்கொள்ளும்போது, யாழ்ப்பாண மக்கள் அரச சபையில் பிரநிதித்துவம் வகிப்பதால் என்ன பிரயோசனம் உண்டாகும்? என அவர் கேள்வியெழுப்பினார்.[126]

எட்டாவது வருடாந்த அமர்வுகளில் நிறைவேற்றப்பட்ட பிரே ரணைகள் பகிஷ்கரிப்புத் தீர்மானம் சரியானது என்பதை மீள உறுதிப் படுத்தியது. அத்தோடு, புதிய அரசியல் அமைப்பிலான சீர்திருத்தங்கள் போதுமானவையல்ல என்பதை ஒரு வருட அனுபவம் உறுதிப் படுத்தியுள்ளது. 1933இல் 9வது வருடாந்த அமர்வுகள் நடத்தப்பட்ட போது இளைஞர் காங்கிரஸ் மீது உருவாக்கப்பட்டிருந்த எதிர்ப்பு மேலும் வலுப்பெற்றுவிட்டது. ஒரு புதிய நியமனத்திகதியை ஆளுனர் நியமிக்க வேண்டுமெனக் கோரும் விண்ணப்பம் ஒன்றிற்கு ஆதரவு திரட்டும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வந்தது. இத்தகைய செயற்பாட்டில் பகிஷ்கரிப்பு இயக்கத்தின் எதிராளிகள் இனவாதப் பூச்சாண்டியைப் பாவித்தனர். 1933 ஜனவரியில் 'றிஜ்வே' மண்டபத்தில் ஒரு கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் பல யாழ்ப்பாண முன்னணிப் பிரமுகர்கள் பங்குபற்றியிருந்தனர். அவர்கள் 1931 பகிஷ்கரிப்பு தொடர்பாக கவலை தெரிவித்திருந்ததோடு நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய் வதற்கு புதிய திகதி ஒன்றை நியமிக்குமாறு ஆளுனருக்கு விண்ணப்பம் செய்தனர். பகிஷ்கரிப்பு இயக்கத்தில் பிரதான பாத்திரம் வகித்த சிலர், மற்றும் 1931இல் தேர்தலில் போட்டியிட எண்ணியிருந்த சிலர் மேற்படி கூட்டத்தில் பங்குபற்றியவர்களில் அடங்குவர். இக்கூட்டத்தையடுத்து யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு தூதுக்குழு குடியேற்றச் செயலாளரை கொழும்பில் சந்தித்து தேர்தலை கூடியளவு விரைவாக நடத்துமாறு வேண்டியிருந்தனர். தமிழர்கட்கு இனரீதியான பாதுகாப்புத் தேவை யென்றும் அவர்கள் வேண்டியிருந்தனர்.[127]

இவ்வாறாக, இனவாதம் மேலோங்கி வந்த நிலையிலேயே இளைஞர் காங்கிரஸின் 9வது வருடாந்த அமர்வுகள் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்டன. அந்த அமர்வுகளில் பெருந்திரளானோர் பங்குபற்றி யிருந்தனர். எனவே, ஒருவகையில் காங்கிரஸ் யாழ்ப்பாணத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்று வந்த பரந்தளவு ஆதரவு முடிவுக்கு வந்துள்ள அறிகுறியும் அங்கே தென்பட்டது. திரு.எம். பாலசிங்கம் தலைமை உரையை நிகழ்த்தினார். வரவேற்பு குழுவின் தலைவராகிய சாம்.ஏ.சபாபதி வரவேற்புரை நிகழ்த்தினார். தென்னிலங்கையில் பிரபல்யம் வாய்ந்த வர்களாகிய பிரான்ஸிஸ் டி.சொய்சா (K.C), எஸ்.டபிள்யூ. தசநாயக்க, மற்றும் எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்க ஆகியோர் இந்த அமர்வின்போது உரையாற்றினர். காங்கிரஸ் என்றுமே தனது நடவடிக் கைகள் தொடர்பான இலக்கியத் துறையின் மீது கவனம் செலுத்த தவறியதில்லை. இந்த வகையில், பண்டைய தமிழ் இலக்கியத்தின் மகிமைகளை உள்ளடக்கி வழங்கிய தனது சொற்பொழிவுகள் மூலம் பண்டிதமணி கணபதிப்பிள்ளை என்றும் தலைசிறந்து விளங்கினார். நூற்றுக்கணக்கானோர் மத்தியில் அவர் உரையாற்றும் போது குண்டூசி விழுந்தாலும் சத்தம் கேட்கும் அளவிற்கு அமைதி காணப்பட்டது. திரு.மு.பாலசிங்கம் தனது உரையில் 1931இல் நடத்திய பகிஷ்கரிப்பு இயக்கத்தினை மிக ஆணித்தரமாக நியாயப்படுத்தியதோடு, யாழ்ப் பாணத்தில் அமைக்கப்பட்டுள்ள 'புதியகட்சி' பிரமுகர்கள் விதைத்து வந்த வாதங்களையும் முறியடித்திருந்தார். இந்தப் புதியகட்சி இளைஞர் காங்கிரஸ் முன்னெடுத்து வந்த இலட்சியங்களுக்கு சவால் விட்டுக் கொண்டிருந்ததை இங்கு குறிப்பிடவேண்டும். டொனமோர் அறிக்கை வெளியிடப்படுவதற்கு முன்பு, தான் தமிழருக்கு கூடுதலான பிரதி நிதித்துவம் வழங்குவதன் மூலம் இன ரீதியான பாதுகாப்புகள் தேவை யென வேறெந்தவொரு தமிழ் பிரமுகராவது அழுத்தியளவிற்கும் பலமாக தான் அழுத்தம் கொடுத்தாக திரு.மு. பாலசிங்கம் ஒப்புக் கொண்டார்.

பாலசிங்கம் தொடர்ந்து கூறுகையில் "ஆனால் இன்று மேலதிக பிரதிநிதித்துவம் தேவையென நான் பிரித்தானிய அரசாங்கத்தை அழுத்த விரும்பவில்லை. ஏனென்றால் சுதந்திரம் (Home Rule) வழங்குவதை மறுப்பதற்கு அது அவர்கட்கு ஒரு சந்தர்ப்பமாக அமைந்துவிடும். அரசாங்க சேவையில் தமிழர் தமது நலன்களைப் பாதுகாக்க ஆவலாயிருந்தால், அதற்காக இனவாத நிலைப்பாட்டை கடைப்பிடிப்பது மிகத் தீங்கானதாகும். பிளவுகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் சக்திகளை தோற்கடிப்பதற்கு மக்கள் கொண்டுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றல் மீது தனக்கு நம்பிக்கையும் விசுவாசமும் உண்டு" என அவர் தனது உரையின் இறுதியில் எடுத்துரைத்தார்.

தமிழரின் எதிர்காலம் அரசாங்க சேவையிலோ, அல்லது மலாயா விலோ இல்லை என அவர் எச்சரித்தார். அது இலங்கையின் கைத் தொழில்களை அபிவிருத்தி செய்வதிலேயே தங்கியிருக்கிறது எனவும் நாடு 'டவுனிங் ஸ்ரீற்' (Downing Street) லிருந்து, ஆளப்படும் வரை அதாவது நாட்டில் பிரித்தானிய ஆட்சியிருக்கும்வரை இது சாத்திய மற்றது எனவும் கூறியிருந்தார். தேசிய ஒற்றுமையை வலியுறுத்திய அவர் பின்வருமாறு கூறினார்: "சிங்கள, தமிழ், முஸ்லிம் மற்றும் பறங்கிய மக்களுக்கிடையிலான மொழி, மத வேறுபாடுகள் எதிர் காலத்தில் இல்லாமற் போகும் என்பதற்கில்லை. இவ்வாறான வேறு பாடுகள் இருந்தபோதும் ஒரு பொதுத் தேசிய முறைமையை உருவாக் குவதற்கு போதிய பலம் வாய்ந்த பொது சமூக நலன்கள் உண்டு. அந்நிய ஆட்சியாளர், பாதுகாப்புகள் தொடர்பாக வழங்கக் கூடிய உத்தரவாதம் மீது சட்டம் இயற்றுவது இலகுவானதாயினும், அதனை நடைமுறைப்படுத்துவது எளிதல்ல." இளைஞர் காங்கிரஸ் தனது குறிக்கோள்களில் வெற்றியீட்ட வேண்டுமாயின் அதற்கு சமாந்தரமான இயக்கங்கள் தென்னிலங்கையிலும் தோற்றம் பெற்றால் மட்டுமே அது சாத்தியப்படுமென வரவேற்புக்குழுவின் தலைவர் சாம் சபாபதி கூறினார். முழுநாட்டினதும் சார்பில் பேசவல்ல அகில இலங்கை ஸ்தாபமொன்று அமைக்கப்பட வேண்டுமென இளைஞர் காங்கிரஸின் 1933 அமர்வுகளின்போது மீண்டும் வலியுறுத்தப்பட்டது. நிறை வேற்றப்பட்ட பிரதான பிரேரணைகளில் ஒன்று பின்வருமாறு: "இனவாதம் தேசியவாதத்தை ஒழிக்கவல்லது என இந்த காங்கிரஸ் அபிப்பிராயப்படுகிறது. எனவே, இனங்களுக்கிடையில் வேற்றுமை களை உருவாக்கும் சக்திகளை அகற்றி விட்டு முழுநாடும் சுதந்திரம் அடைய வேண்டும் என்பதற்காக நாட்டு இளைஞர்கள் தம்மை ஈடு படுத்த வேண்டுமென காங்கிரஸ் தீர்மானிக்கிறது."[128]

பகிஷ்கரிப்பிற்கு எதிரான இயக்கம் பலமடைந்து வந்தபோது காங்கிரஸ் கணிசமானளவு பலவீனமடைந்து வந்தது. குறிப்பாக நியமனத்திற்கு ஒரு புதிய திகதியை நியமிக்க வேண்டுமெனக் கோரும் கூட்டத்தினர் பக்கம் ஆட்கள் திரும்பியதே இதற்கு காரணமாகும். தேர்தல்கள் நடத்தப்படும் பட்சத்தில் காங்கிரஸ் போட்டியிட வேண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென ஆலோசனை வழங்கப்பட்டது. அத்தகைய நடவடிக்கையானது குன்றியிருந்த மனவலிமையை பலப்படுத்துவதோடு, மக்கள் கூடுதலாக அரசியலில் அறிவடைவார்கள் எனவும் கூறப்பட்டது. இனவாதிகள் யாழ்ப்பாணத்திற்கு அபகீர்த்தியை ஏற்படுத்திக் கொண்டிருந்த அதே வேளை எதிரணியினர் மௌனம் சாதித்ததாக விமர்சனம் செய்யப் பட்டது. மேலும், இளைஞர் காங்கிரஸ் அமர்வுகளில் உரையாற்றிய சிங்களத் தலைவர்கள் தேசிய ஒற்றுமை மற்றும் சுதந்திரம் பற்றி வெறுமனே கவர்ச்சியான கருத்துக்களை கூறி வைத்தார்களே ஒழிய இக்குறிக்கோள்களை முன்னேற்றுவதற்கு ஒன்றுமே செய்ததில்லை யெனவும் குற்றம் சுமத்தப்பட்டது.[129]

யாழ்ப்பாணத்தின் அரசியல் மற்றும் சமூகவாழ்வில் ஏறத்தாழ ஒரு தசாப்தகாலமாக இளைஞர் காங்கிரஸ் ஆதிக்கம் செலுத்தியிருந்தது. நியமனத்திகதி நியமித்து, 1934இல் நடத்தப்பட்ட தேர்தல்களில் புதிய நியமனத்திகதி நியமிக்கப்பட வேண்டுமென முன்னர் பிரசாரம் செய்த அபேட்சகர்கள் வெற்றியீட்டியதும் இளைஞர் காங்கிரஸின் மேலோங்கி யிருந்த முன்னைய நிலை கிட்டத்தட்ட முற்றாக ஒழிக்கப்பட்டுவிட்டது. இளைஞர் காங்கிரஸ் தேர்தலில் போட்டியிடவில்லை. இளைஞர் காங்கிரஸினால் உத்தியோக பூர்வமற்ற முறையில் ஆதரிக்கப்பட்ட அபேட்சகர்கள் வெற்றி பெறவில்லை. உண்மையில் நான்கு ஆசனங் களுக்குமான போட்டி ‘தேசியவாதிகளுக்கும்’, ‘இனவாதிகளுக்கும்’ இடையிலான போட்டியென ஓர் அறிக்கையில் இனங்காணப்பட்டிருந்தது. இந்த வேறுபாடானது வலுவற்றதென பின்னைய நிகழ்வுகள் எடுத்துக் காட்டின. உண்மையான வேறுபாடானது பகிஷ்கரிப்பு இயக்கத்தை ஆணித்தரமாக எதிர்த்தவர்கட்கும், இளைஞர் காங்கிரஸ் மீது கூடுதலான அனுதாபம் கொண்டிருந்தவர்கட்கும் இடையிலானதாகும். இதில் முதல் கூறியவர்கள் எல்லா ஆசனங்களிலும் வெற்றியீட்டினர்.

அமைப்பு ரீதியில் ஏறத்தாழ நான்கு வருடங்களாக இளைஞர் காங்கிரஸ் தேய்பிறை நிலையில் இருந்தது, பின்னர் 1938இல் புத்துயிர் பெற்றது. 1938 மார்ச் மாதம் ஹன்டி பேரின்பநாயகம் தலைமையில் கீரிமலையில் ஒரு கூட்டம் நடத்தப்பட்டு, இளைஞர் காங்கிரஸிற்கு புத்துயிர் அளிக்கப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. ஏப்ரில் மாதம் டாக்டர் ஆர். சரவணமுத்து தலைமையில் யாழ்ப்பாண நகர மண்டபத்தில் வருடாந்த அமர்வுகள் நடத்தப்பட்டன. ஹன்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரின்பநாயகம் வரவேற்புரை நிகழ்த்தினார். அடுத்தவருடம் ஹன்டி பேரின்பநாயகமே தலைமையுரை நிகழ்த்தினார். 1940இல் எம்.பால சுந்தரம் தலைமையிலும், 1941இல் சி. சுந்தரலிங்கம் தலைமையிலும் நடத்தப்பட்ட அமர்வுகளில் அவர்களே பிரதான உரைகளையும் நிகழ்த்தினர்.[130]

1935இல் லங்கா சமசமாஜக்கட்சி ஸ்தாபிக்கப்பட்ட பின் இளைஞர் காங்கிரஸின் ஏற்பாட்டின் கீழ் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட கூட்டங்களில் உரையாற்றுவதற்கு இடதுசாரித்தலைவர்கள் அடிக்கடி விஜயம் செய்தனர். நாட்டின் இதர பகுதிகளில் இளைஞர் காங்கிரஸ் பிரமுகர்களும் இடதுசாரித் தலைவர்களுடன் ஒரே மேடையில் தோன்றியிருந்தனர். என்.எம். பெரேரா, பிலிப்குணவர்த்தன, கொல்வின் ஆர். டி. சில்வா, லெஸ்லி குணவர்த்தன, எஸ்.ஏ. விக்கிரமசிங்க மற்றும் டபிள்யூ. தகநாயக்க ஆகியோர் அடிக்கடி வடக்குக்கு விஜயம் செய்தனர். இளைஞர் காங்கிரஸின் மேடையில் உரையாற்றுவதற்கு அழைப்பு விடுக்கப்பட்டது நிச்சயமாக இடதுசாரி இயக்கத்தலைவர்களுக்கு மட்டுமல்ல. பங்குபற்றிய பிரபல்யமான பிரமுகர்களில் ஜே.ஆர். ஜெயவர்த்தன ஒருவர் ஆவர். அவர் 1939ஆம் ஆண்டு அமர்வுகளில் உரையாற்றினார். மற்றவர் டி.எஸ்.சேனநாயக்க. அவர் 1941 ஒக் டோபரில் இடம்பெற்ற இளைஞர் காங்கிரஸ் கூட்டத்தில் உரையாற் றினார். 1941 அமர்வுகளில் ஒரு பரபரப்பு ஏற்பட்டது. ஏனென்றால் திருமதி செலினா பெரேரா ஆற்றிய உரை குழப்பத்தை அல்லது கிளர்ச்சியை விளைவிக்கக் கூடியதென அவர்மீது வழக்கு தொடுக் கப்பட்டது. அவர் பின்னர் விடுதலை செய்யப்பட்டார். இந்தக் காலப்பகுதி பூராகவும் இனவாதத்திற்கு எதிராக போராடவேண்டுமென இளைஞர் காங்கிரஸ் அதிகம் வற்புறுத்தி வந்தது. ‘இனவாதமா அல்லது தேசியவாதமா’ எனும் தலைப்பிலான கைநூல் சீர்திருத்த திட்டம் மீது ஜி.ஜி.பொன்னம்பலம் அரச சபையில் ஆற்றிய உரைக்கு பதிலிறுக்கும் முகமாக இளைஞர் காங்கிரஸ் 1939இல் ஒரு பிரசுரத்தை வெளியிட்டது. எஸ்.எச். பேரின்பநாயகத்தின் முன்னுரை அடங்கிய இந்நூல் குறிப்பாக தமிழ்மக்கள் மத்தியிலும், பொதுவாக முழுநாட்டுமக்கள் மத்தியிலும் இனவாத, பிரிவினை சக்திகளுக்கு மாற்றீடாக தேசியவாதக் கண் ணோட்டத்தினை முன் வைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி வெளியீட்டில் பகிஷ்கரிப்பு இயக்கம் பெரிதும் வெற்றி யளிக்கவில்லையென ஒப்புக்கொள்ளப்பட்டதாயினும், அது நாட்டில் ஒரு விழிப்புணர்வு உருவாகுவதற்கு வழி சமைத்தது என எடுத்துக் கூறப்பட்டது. தென்னிலங்கையில் இளைஞர் சங்கங்கள் அமைக்கப் பட்டு அதன் பின்னர் சமசமாஜக்கட்சி அமைக்கப்பட்டமை அதன் கர்த்திரமான பெறுபேறாகுமென எடுத்துக் கூறப்பட்டது. "எனவே அந்தப் பகிஷ்கரிப்பு இயக்கமானது நாட்டின் அரசியலை செழுமைப் படுத்த உதவியதோடு இளைஞர் காங்கிரஸிற்கு ஒரு பெறுமதியான பாரம்பரியத்தை உருவாக்கியது".[131]

மேற்படி இளைஞர் காங்கிரஸ் வெளியீடு திரு. பொன்னம்பலத்தின் வாதங்களுக்கு ஒரு பதிலாகவே அமைந்தது. அவருடைய அரசியலின் பிற்போக்குத்தனம் அம்பலப்படுத்தப்பட்டது. திரு.பிறேஸ்கேடிலை நாடுகடத்துமாறு ஆளுனர் விடுத்த உத்தரவை இரத்துச் செய்ய வேண்டு மென முன்வைத்த பிரேரணை அரசசபையில் விவாதிக்கப்பட்டபோது திரு.பொன்னம்பலம் ஆளுனரின் நடவடிக்கையை ஆதரித்து உரை யாற்றி, பிரேரணைக்கு எதிராகவும் வாக்களித்தார். அதிக பெரும் பான்மையான சிங்கள, தமிழ் உறுப்பினர்கள் பிரேரணைக்கு சாதகமாக வாக்களித்தமை முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இன்னும் சொன்னால், ஆளுனரின் அதிகாரங்கள் அதிகரிக்கப்படும்முகமாக பேரவைச்சட்டம் சமர்ப்பிக்கப்பட்டபோது, திரு பொன்னம்பலம் அதனை வரவேற்று ஒரு மகஜரை அனுப்பியிருந்தார். அது சிறுபான்மையினருக்கு பாது காப்பானதும் பிரித்தானிய சாம்ராஜ்யத்தின் நலன் காக்கவல்லதும் என அவர் காரணம் கற்பித்திருந்தார். ஆனால் முப்பது தடவைகளுக்கு மேலாக இச்சட்டம் பிரயோகிக்கப்பட்டதாயினும், ஆளுனர் தனது விசேட அதிகாரங்களை சிறுபான்மையினர் நலன் கருதி ஒரு போதுமே பாவித்த தில்லை. எனவே, திரு. பொன்னம்பலத்தின் மகஜர் கொண்டி ருந்த பிற்போக்குத்தனத்தை இதன்மூலம் உணர்ந்து கொள்ள முடியுமென இளைஞர் காங்கிரஸ் எடுத்துக் காட்டியது. "அது எப்போதுமே நேரடி யாகவோ மறைமுகமாகவோ ஏகாதிபத்திய நலன்களை பாதுகாப்ப தற்கே அல்லது மேம்படுத்துவதற்கே, பாவிக்கப்பட்டது. ஒரு அப்பட்ட மான பழமைவாதி கூட அந்த மகஜரில் அடங்கியிருந்ததை விட மோசமான பிற்போக்குத்தனமான அறிக்கையை விடுத்திருக்க முடியாது".எனவும் காங்கிரஸ் குறிப்பிட்டது.[132]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1938 அமர்வுகளில் நிகழ்த்திய தனது வரவேற்புரையிலும், 1939 அமர்வுகளில் நிகழ்த்திய தனது தலைமை உரையிலும், ஹன்டி பேரின்பநாயகம் இளைஞர் காங்கிரஸின் சாதனைகளையும் தோல்விகளையும் ஆராய்ந்திருந்தார். காங்கிரஸின் ஆரம்பகால உறுப்பினர்களில் ஒருசிலர் மட்டுமே காங்கிரஸின் இலட்சியங்களை திடமாகக் கடைப்பிடித்து வருகின்றனர் என வருத்தம் தெரிவித்தார். சிலர் இளைஞர் காங்கிரஸிற்கு எதிராகவும் கூட திரும்பிவிட்டனர். இன்னும் சிலர் இளைஞர் காங்கிரஸின் கொள்கைகள் உடனடியான பெறுபேறுகளை கொண்டுவரமாட்டா என எண்ணி, அதிலிருந்து விலகியுள்ளனர். பகிஷ்கரிப்பு இயக்கத்தைப் பொறுத்தவரை, அவர் அதற்கான பொறுப்பை, வெளிப்படையாக ஏற்றுள்ளதுடன், தன்னோடு கூட செயற்பட்டவர்களும் அதற்கான பொறுப்பை ஏற்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார். அரச சபைக்குத் தெரிவாகி சென்றவர்கள் என்ன சாதனையை ஈட்டியுள்ளார்கள் என வினவினார்.

அவர்களில் ஒருவர் சிங்களவர்களோடு தொடர்ச்சியாக மல்லுக் கட்டி வருகிறார் என அவர் கூறினார். இளைஞர் காங்கிரஸ் உறுப்பினர்கள் அனுபவம் அற்றவர்கள் எனவும் அவர்கள் நிலைமையின் பாரதூரத் தன்மையை உணர்ந்துகொள்ளவில்லையெனவும் அவர் ஒப்புக்கொண்டார். அதன் விளைவாக அதிகாரத்தில் இருந்தவர்கள் யாழ்ப்பாணத்தில் நிர்வாக / அரசியல் சலுகைகளை நாடியவர்களோடு இணைந்து காங்கிரஸை நசுக்குவதற்கு தம்மாலான எல்லாவற்றையும் செய்தனர். யாழ்ப்பாணத்திலேயே, யாழ்ப்பாண மக்களுக்கு ஏற்பட்டுள்ள எல்லாப் பிரச்சினைகளுக்கும் பகிஸ்கரிப்பு இயக்கத்தின் மீது பழிசுமத்துவது வழக்கமாகியிருந்தது.[133]

1930களின் பிற்பகுதியில் சில பழைய விசுவாசிகளின் ஆதரவோடு இளைஞர் காங்கிரஸை புனரமைப்பதற்கு ஹன்டி பேரின்பநாயகம் முனைந்தார். அதற்காக அவர் காங்கிரஸ் தன்னகத்தே கொண்டிருந்த அடிப்படை இலட்சியங்களை யாழ்ப்பாண பொதுமக்கள் மத்தியில பரப்புவதற்கு சற்றும் சலிக்காமல் உழைத்து வந்தார். நாட்டிற்கான சுதந்திரம், சமூக ஏற்றத்தாழ்வுகள் நீக்கப்படுதல், தேசிய மொழிகளுக்கு உரிய அந்தஸ்தை மீள அளித்தல், அதிலும் குறிப்பாக பாடசாலைகளில் போதனா மொழிகளாக ஆக்குதல், சிங்கள மாணவர்களுக்கு தமிழ் மொழியும் தமிழ் மாணவர்கட்கு சிங்கள மொழியும் கற்பித்தல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனவாதத்தையும் இனவாத அரசியலையும் விட்டுக்கொடுப்பின்றி எதிர்த்தல் ஆகிய விடயங்களையே அவர் குறிப்பிட்டிருந்தார். ஹன்டி பேரின்பநாயகத்தின் குரல் இளைஞர் காங்கிரஸின் குரலாக கணிக்கப் பட்டது. இளைஞர் காங்கிரஸ் செயலிழந்துவிட்ட பின்பும் கூட யாழ்ப் பாணத்தின் அரசியல் வாழ்வில் அதன் செல்வாக்கு மேலோங்கி நின்றதாக உணரப்பட்டது. செயல் இழந்துள்ள அந்த அமைப்பின் அபிலாசைகளையும் நம்பிக்கைகளையும் ஹன்டி பேரின்பநாயகம் தனது உரைகளிலும் கட்டுரைகளிலும் உள்ளடக்கியிருந்தார். சமரசங்கள் செய்வதன் மூலம் அவர் வெகு இலகுவாக பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படக் கூடியவராய் இருந்தும், அவர் அதற்கெல்லாம் இடம் கொடுக்காமல், இலங்கை எப்படி இருக்க வேண்டுமென்று கனவு கண்டாரோ அதனை நனவாக்குவதற்கு தொடர்ந்து முயன்று கொண்டிருந்தார். 1941 முதல் 1948 வரை 'கேசரி' என்றழைக்கப்பட்ட ஆங்கில வார இதழ் ஒன்றினை அவர் வெளியிட்டு வந்தார். நாட்டின் அரசியல், சமூக, விவகாரங்களில் இளைஞர் காங்கிரஸின் பாரம்பரியம் 'கேசரி' மூலம் தொடரப்பட்டது.

ஹன்டி பேரின்பநாயகத்தின் ரசிகர்களில் ஒருவர் குறிப்பிட்டது போல, அவர் அடிப்படையில் மனிதர்களை ஆக்குபவர் எனலாம். வட்டுக்கோட்டையில் இருந்து சட்டத்துறை ஊடாக கொக்குவில் சென்றது நீண்டதொரு கதை. வழி நெடுகிலும் சர்ச்சைகள் முடிவே இல்லாமல் இருந்தன. அவர் சந்தித்த வெற்றிகள் தோல்விகள் அடிப் படையில் அவரின் பெறுமதியை மதிப்பீடு செய்யும் போலியான பொழுதுபோக்கில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு இது பெரிய வரப்பிரசாத மாக அமைந்தது. அதாவது, அவருடைய எதிராளிகளுக்கும் அதேபோல் அவரின் ரசிகர்களுக்கும் அது மகிழ்ச்சியூட்டும் காரியமாகியது.

ஆனால் ஒன்றிற்குமே கிறுங்காத இலட்சிய பற்றுடையவராக ஹன்டி விளங்கியவராகையால் எந்தவிதமான வசைபாடலையும் அவர் தாங்கிக் கொள்ளக் கூடியவராக இருந்தார். கீதா உபதேசத்திற் கிணங்க அவர் தனது மனச்சாட்சியின்படி நடந்து, விளைவுகளை படைத்தவன் கையில் விட்டுவிடுவார்.[134]

அவருக்கு எதிராளி ஒருவர் பாராளுமன்றத் தேர்தலின் போது அளித்த பாராட்டு மனதை தொடுவதாக இருந்தது. அதுதான் திரு.எம். கனகரத்தினம் பின்வருமாறு கூறியதாகும்: "அவர் முதலாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்வதற்கு என்னோடு மேலும் ஐந்து பேரோடு போட்டியிட்டு தோல்வியடைந்தார். அரசியல் அறிவையும் நீண்டகால பொதுச்சேவை அனுபவத்தையும் கொண்ட அவர்தான் எல்லோரையும் விட மிகுந்த தகைமை உடையவர் என்பதில் சந்தேகம் இல்லை என்பதை நான் இங்கே ஒப்புக்கொள்ள வேண்டும். ஆனால் கட்சிச் சுலோகங்கள் மற்றும் பகிரங்க விஷமத்தனமான ஆரவாரங்கள் அந்த ஆசனத்தை அவரிடமிருந்து பறித்துவிட்டது."[135]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11

## *பின்னோக்கிய பார்வை*

இந்தியாவின் காந்திய தேசியவாத இயக்கத்தின் பிரதிபலிப்பாகவே பிரதானமாக யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் தோற்றம் பெற்றது. இலங்கையில் யாழ்ப்பாணத்திலேயே இந்திய தேசிய எழுச்சியின் செல்வாக்கு மிகக்கூடுதலாகத தாக்கம் செலுத்தியது. யாழ்ப்பாணத்தில் பல பிரபல பாடசாலைகளில் கல்வி கற்ற இந்த இளைஞர் ஆங்கில மொழியில் அதிகளவு புலமை கொண்டிருந்தனர். பிந்திய தலை முறையைச் சேர்ந்த இளைஞர்கள் (1970கள்) போல் அல்லாமல், அவர்கள் ஆங்கிலத்தில் நிறைய வாசித்து இந்தியாவிலும் உலகின் ஏனைய பகுதிகளிலும் இடம் பெற்றுவரும் நிகழ்வுகளை நன்கு அறிந்து வைத்திருந்தனர். ஆங்கில நாளிதழ்களும் வார இதழ்களும் இந்தியாவில் நடக்கும் போராட்டங்கள் தொடர்பாக கணிசமானளவு செய்திகளை வெளியிட்டு வந்தன. 'மெட்ராஸ் இந்து', 'மாரதா', 'அம்பிற்சா பசார் பற்றிக்கா' மற்றும் 'யங் இந்தியா' போன்ற செய்தித்தாள்களும் சஞ்சி கைகளும் சிந்தனைக்கு விருந்தான விடயங்களை இந்த எழுச்சி கொண்ட இளைஞர்களுக்கு வழங்கின. இந்தியத் தேசிய இயக்கம் தொடர்பான ஆக்கங்களை, குறிப்பாக அதன் தலைவர்களின் உரை களை வாசிப்பது ஒரு நாகரிகமாக இருந்தது. காந்திய சிந்தனையிலும் விழுமியங்களிலும் மூழ்கியிருந்த இளைஞர் காங்கிரஸ் உறுப்பினர் களின் சொல்லும் செயலும் அவர்களை பரந்த இயக்கத்தின் ஒரு பகுதியினராக எண்ணச் செய்தது.

காந்திய செல்வாக்குக்கு அப்பால் மேற்குநாட்டு தாராளவாத, மற்றும் ஜனநாயக விழுமியங்களின் தாக்கங்களும் ஏற்பட்டிருந்தன. அமெரிக்க தாராளவாத சிந்தனை பாரம்பரியம் மற்றும் கருத்துச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரம் யாழ்ப்பாணத்தில் இடம்பிடித்திருந்தது. 1920 களிலும் 1930 களிலும் இவை தொடர்பாக அதிபர் பிக்னல் அளித்து வந்த உற்சாக மானது யாழ்ப்பாண இளைஞர் காந்திய இயக்கம் விடுத்த சவால்களை சுதந்திரமாக எதிர்கொள்வதற்கு ஒரு முக்கிய காரணியாக இருந்தது.

அவ்வாறான இரு முனை செல்வாக்குகளும் யாழ்ப்பாணத்தில் ஆங்கிலம் படித்த இளைஞர் மத்தியில் தாக்கம் செலுத்திக்கொண் டிருந்தன. இதன்காரணமாக ஒரு தீவிரம் நிறைந்த ஒரு குழு தோற்றம் பெற்றது. அது 1920 களிலும் 1930களிலும் யாழ்ப்பாணத்தின் அரசியல் மற்றும் அறிவியல் வாழ்க்கையில் மிகத் தீர்க்கமான முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. அன்று வெளிக்கொணரப்பட்ட இலட்சியப் பற்றும் தீவிரமான உந்தல்களும் ஒரு தேசியவாத ஜனநாயக, ஏகாதி பத்திய விரோத, நிலப்பிரபுத்துவ விரோத இயக்கம் உருவாகுவதற்கு வித்திட்டன. தீவிரம் நிறைந்த தாராளவாதிகள் கொண்ட அமைப்பாகவே இளைஞர் காங்கிரஸ் விளங்கியது. அன்று அரசியல், சாதிப்பிரச்சினை, கல்வி, தேசிய மொழிகள் மற்றும் கலாசாரம் தொடர்பாக நிலவியிருந்த மனப்பான்மைகளை நோக்குமிடத்து, இளைஞர் காங்கிரஸ் தீவிரம் நிறைந்ததாகவும், எதிர்காலத்தைப் பொறுத்து அதிகளவு முன்யோசனை கொண்டதாயுமிருந்தது.

20ஆம் நூற்றாண்டின், முதற்பாதியில் ஆசியாவில் இருந்த தேசிய வாதமானது பிரதானமாக மேற்கத்தைய ஏகாதிபத்தியத்திற்கெதிரான கிளர்ச்சியாகவே காணப்பட்டது. இலங்கையில் தெளிந்த ஏகாதிபத்திய விரோத இயக்கம் எதுவும் இல்லாத நிலையில், நாட்டுமக்கள் மத்தியில் ஏகாதிபத்திய விரோத உணர்வலைகளை ஏற்படுத்தும் பணியினை இளைஞர் காங்கிரஸ் தனது கையில் எடுத்துக்கொண்டது. பின்னோக்கிப் பார்க்குமிடத்து, இலங்கையின் குடியேற்றநிலை நீக்கத்திற்கு வித்திட்ட நிகழ்வுகளையும் கணக்கில் எடுத்தால், 'பூர்ண சுயராஜ்' அடைவதற்காக அறைகூவல் விடுத்தது வெறுமனே வெற்று வார்த்தைகள் என தோன்றக் கூடும். அதாவது, பகிஷ்கரிப்பு இயக்கம் தவிர, அதனை (பூரண சுயராஜ்) அடைவதற்கு காங்கிரஸ் வேறு எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை. ஆனால் சுதந்திரத்திற்கான கோரிக்கையை திரும்பத்திரும்ப முன்வைத்து, இந்திய சுதந்திரப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து வந்த நிலையில், ஆசியாவில் வளர்ந்து கொண்டிருந்த தேசியவாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்கங்களுடன் இலங்கையை இணைத்து கொள்வதற்கான முயற்சி முன்னெடுக்கப்பட்டு வந்தது.

இறுதியில், நாட்டின் முன்னணி ஏகாதிபத்திய விரோத இயக்கமாக லங்கா சமசமாஜக் கட்சி (ல.ச.ச.க) தோற்றம் பெற்ற போது, அக்கட்சி வடக்கில் இளைஞர் காங்கிரஸ் வட்டாரங்களிலிருந்து ஆதரவை ஈட்டிக் கொண்டது. ல.ச.ச.க. யின் ஆணிவேர்களாக தென்னிலங்கையில் 'சூரியமல்' இயக்கம் போல, அதே அளவில் வட இலங்கையில் இளைஞர் காங்கிரஸ் திகழ்ந்தது. 1920களில் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ்தான் தேசிய சுதந்திரப் போராட்டத்தின் முன்னணியில் திகழ்ந்தது.

ஓர் அகில இலங்கை தேசியவாதத்தையே காங்கிரஸ் தனது தாரகமந்திரமாகக் கொண்டிருந்தது. ஆனால், சிங்கள மற்றும் தமிழ் இனவாதம் தோற்றம் பெற்றதன் காரணமாக 'இலங்கை தேசியவாதம்' தோற்கடிக்கப்பட்டமை துர்ப்பாக்கியமானதாகும். இலங்கையின் அரசியல் அகராதியில் இனவாதம் என்பது ஒரு இழிச்சொல் ஆகும். இனவாதம் என்பது ஒரு சமூகத்தின் நலன்களை புறந்தள்ளிவிடுதல், அல்லது ஒரு சமூகம் தனது சொந்த நலன்களை, பிராந்தியம் பூராவு முள்ள மக்களின் நலன்களைக் காட்டிலும் முன்னிலைப்படுத்து வதற்குத் தலைப்படும் சந்திகளைக் குறிப்பதாகும். பிரதானமாக மேற்கத்தைய ஏகாதிபத்தியத்திற்கெதிராக போராட்டம் நடை பெற்றுக் கொண்டிருந்த காலகட்டத்திலேயே இத்தகைய போக்குகள் நிலவி யிருந்தன. அவ்வாறாக, இனவாதமானது ஏகாதிபத்திய ஆதிக்கத் தைப்பலப்படுத்தி தொடரச்செய்வதற்கு கை கொடுக்கும் பிரிவினை சக்தியாக விளங்கியது. 1930 களில் இலங்கையில் தோற்றம் பெற்ற இனவாதமானது சந்தர்ப்பவாதம் கொண்டதாயும் இருந்த்து. அதாவது, இனவாதிகள், ஒரு பிரிவினது அல்லது தமது சொந்த நலனுக்கும் நன்மைக்குமாக இலட்சியங்களைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டனர். 1930 களிலும் 1940 களிலும் நிலவிய இனவாதத்திற்கும், 1956இல் அல்லது அந்தக் காலகட்டத்தில் தோற்றம் பெற்ற சிங்கள மற்றும் தமிழ் தேசிய வாதங்களுக்கும் இடையிலான வேறுபாட்டை ஆராய்ந்து பார்க்க வேண்டியது அவசியமாகும். 1956இன் எழுச்சியானது முற் போக்கான சிங்கள தேசியவாதத்தோடு இறுக்கமான இனவாதமும், சிங்களப் பேரினவாத அம்சங்களும் கலந்து காணப்பட்டன. அது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிச்சயமாக ஒரு சந்தர்ப்பவாத நிலைமையாகும். 1930 களிலும் 1940 களிலும் சந்தர்ப்பவாதமாக நிலைபெற்றிருந்த தமிழ் இனவாதம், 1956இல் தனிச்சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்டு, 1958இல் தமிழருக் கெதிரான இனக்கலவரம் வெடித்தது. பின்பு தமிழரின் எதிர்ப்பு இயக்கமானது 1961இல் சத்தியாக்கிரகப் போராட்டத்தின் மூலம் உச்சக்கட்டத்தை அடைந்த காலகட்டத்தில் தமிழ் தேசிய வாதம் தோற்றம் பெற்றது. குடியேற்ற ஆட்சி வீழ்ந்துகொண்டிருந்த காலப் பகுதியில் இவ்வாறான தேசியவாதங்கள் தோற்றம் பெற்றமை சம காலத்திற்கு ஏற்றதாக அமைந்துள்ளன.

1930களில் இளைஞர் காங்கிரஸினாலும் தென்னிலங்கையில் தேசியவாதிகளாலும் நாட்டின் முன் சமர்ப்பித்த இலட்சியமானது சுதந்திரமானதும் ஐக்கியமானதுமான இலங்கை என்பதாகும். அந்த நேரத்தில், 1935இல் இடதுசாரி இயக்கம் தோற்றம் பெற்றதன் பின்பு கூட, தேசிய இனங்கள் பற்றிய பிரச்சினையில் போதிய கவனம் செலுத்தப்படவில்லை. இளைஞர் காங்கிரஸ் இலங்கைத் தேசிய வாதத்திற்கு முழுமையாக பற்றுறுதி கொண்டிருந்தது. 1956 உதயமா கியதும், வேறு எவரையும் விட, இளைஞர் காங்கிரஸில் ஒரு காலத்தில் இணைந்திருந்தவர்கட்கு ஒரு தோல்வி மற்றும் பெருவிரக்தி உணர் வினை ஏற்படுத்தியது. 1920 களையும் இளைஞர்காங்கிரஸின் ஆரம்ப விதைகளையும் ஹன்டி பேரின்பநாயகம் பின்னோக்கிப்பார்த்து, கவலை தோய்ந்தவராக, தாம் ஒரு "நல்லெண்ணமும் நல்லாசியும் நிறைந்த நாடொன்றை" காண எதிர்பார்த்திருந்தோம் என மனம்புழுங் கினார். அவர் மேலும் கூறியதாவது, "இன்று சர்ச்சைக்குரிய விடயமாகி யுள்ளதாகிய மொழிப்பிரச்சினை சிங்களவர்களாலும் தமிழர்களாலும் அன்று சமாதானமாகத் தீர்க்கப்பட்டிருந்தது. ஆனால் அதிக காலம் கழிய முன் இரத்தம் சிந்துதல், திட்டமிட்டுக் கொலை செய்தல் மற்றும் நாட்டைவிட்டு குடியகல்தல் போன்ற காரியங்கள் நாளாந்தம் நடை பெறும் வழக்கமாகி விட்டன. சுந்தரலிங்கம் போன்று இனஐக்கியத்திற்கு உழைத்து வாழ்ந்தவர்கள் இன்று தனித்தமிழ் நாடொன்றுக்காகப் போராடுகின்றனர். அகில இலங்கை இளைஞர் காங்கிரஸின் அங்கு ரார்ப்பணக் கூட்டம் 'பிளாசா' வில் நடைபெற்ற போது, காலஞ் சென்ற எம்.எஸ். இளையதம்பி தன்னைப்பொறுத்தவரை பிரித்தானிய ஆட்சியை விட சிங்கள ஆட்சியை விரும்புவதாக கருத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிட்டிருந்தார். இதெல்லாம் நேற்றைய உயர்ந்த சிந்தனையாளர் ஒருவரின் நோக்காயிருந்தது. நாளை என்ன நடக்கும்? இன்னும் கற்பனா உலகமொன்றைப்பற்றிக் கனவு கண்டுகொண்டிருப்பதை மறந்து, தற்போதைய வேதனைகளுக்கு ஒருமுடிவு கட்டுவதற்கு, ஒரு சமாதானமான இலங்கையே இன்றைய அவசரத் தேவையாகும்."[136]

1956இல் மொழிப்பிரச்சினை பற்றிய விவாதம் அதிகம் சூடுபிடித் திருந்தபோது, தமிழர் பிற்போக்குவாதிகள், சுதந்திரப் போராட்டத்தை எதிர்த்தவர்கள் என்றெல்லாம் சிங்களப் பேச்சாளர்கள் தமிழரைத் தாக்கிப்பேசுவது ஒரு சம்பிரதாயமாக வந்துகொண்டிருந்தபோது இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பீற்றர் கெனமன்தான் பாராளுமன்றத்தில் உண்மையான நிலைமையை எடுத்து விளக்கி யிருந்தார். முதலாளித்துவ மற்றும் இனவாதத் தலைவர்கள் இழைத்த தவறுகளுக்காக முழுச் சமூகத்தின் மீது பழிசுமத்துவது நியாயமற்றதென அவர் கூறினார். டொனொமோர் அரசியலமைப்பு அறிமுகப்படுத் தப்பட்டபோது, யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் வகித்த பாத்திரத்தை அவர் எடுத்துரைத்தார். அந்தப் புதிய அரசியலமைப்பின் பிரகாரம் அரசியல் அதிகாரம் சிங்களவர்கட்கு வழங்கப்படவுள்ளதென காரணம் கற்பித்தே பகிஷ்கரிப்பு நடத்தப்பட்டதென சுமத்தப்பட்டிருந்த குற்றச் சாட்டினை அவர் மறுதலித்திருந்தார். அவர் தொடர்ந்து பின்வருமாறு விளக்கியிருந்தார்:

> "மாறாக, இந்த அரசியலமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதோடு, தேர்தல்களைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்ற நிலைப் பாட்டினை அவர்கள் எடுத்தற்குக் காரணம் இந்த அரசியலமைப்பு நாடு முழு வற்கும் சுதந்திரம் வழங்குவதற்கான ஏற்பாட்டினைக் கொண்டிருக்க வில்லை என்பதாகும். யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் மேற் கொண்டிருந்த நிலைப்பாடு தென்னிலங்கை முற்போக்கு சக்திகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அப்போது இடதுசாரிக்கட்சிகள் ஆரம் பிக்கப்பட்டிருக்காத நிலையில் அகில இலங்கை இளைஞர் காங்கிரஸ்தான் தீவிரவாத, முற்போக்கு சக்திகளைப் பிரதிநிதிப் படுத்திய அமைப்பாக விளங்கியது"................... "அந்த நேரத்தில் தெற்கிலுள்ள இயக்கம் பலவீனப்பட்டிருந்து, தெற்கில் செல்வாக்கு எதனையும் செலுத்த இயலாமல், அரச சபைக்கான முதலாவது தேர்தலை வடக்கு பகிஷ்கரித்தபோது தெற்கு எதுவித ஒத்துழைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> நடவடிக்கையையாவது வழங்குவதற்கு வக்கற்ற நிலையிலிருந்தது. இது வடக்கில் வளர்ந்து வந்த தேசிய இயக்கம் முறிவடைந்ததற்கும், வடக்கில் இனவாதத் தலைவர்கள் பிரபல்யமடைவதற்குமான சோகமான காலப்பகுதி வந்து சேருவதற்கு பெரிதும் காரணமாயிருந்தது."[137]

இளைஞர் காங்கிரஸ் உயர்ந்த சிந்தனையாளர்களையும் தொலை நோக்காளர்களையும் கொண்ட இயக்கமாய் விளங்கியது. பிந்திய காலப்பகுதியாகிய 1969இல் ஸ்ரீ ஜயப்பிரகாஷ் நாராயணனுக்கு அளித்த வரவேற்பு வைபவத்தில் நிகழ்த்திய வரவேற்புரையில் ஹன்டி தனது பெயரை கனம்தங்கிய விருந்தாளியின் பெயருடன் இணைத்துக் கூறிய அர்த்தமற்ற செயலுக்கு மன்னிப்புக் கோரிவிட்டு பின்வருமாறு தெரிவித்தார்: "நாம் கனவுகள் கண்டோம். கண்ணோட்டங்களைப் பார்த்தோம். எமது கனவுகளும் கண்ணோட்டங்களும் எமது நாடுகளின் சுதந்திரம் மற்றும் அது எமது மக்களுக்கு வழங்கவல்ல செழுமை மிக்க நன்மைகள் மீது எண்ணம் கொண்டதாகவே இருந்தன."[138] ஒரு சந்தர்ப்பத்தில் ஹன்டி காங்கிரஸின் கற்பனா வாதக் கட்டம் பற்றிக் குறிப்பிட்டிருந்தார். ஒரு வகையில் இளைஞர் காங்கிரஸ் பிரமுகர்கள் கற்பனாவாதிகளாகவே (Utopians) விளங்கினர். நிலைமைகள் திருப்தி யற்றதாயிருந்ததை அவர்கள் உணர்ந்திருந்ததோடு, அவற்றை சரி செய்வதற்கும் அவர்கள் ஆழமான அக்கறை கொண்டிருந்தனர். ஆனால், அவர்களிடம் ஒரு வேலைத்திட்டமோ தமது நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களை அடையக்கூடிய ஆற்றலோ இருக்கவில்லை. ஆனால் காந்திய சிந்தனையில் பலமான கற்பனாவாதம் இருக்கத்தான் செய்தது. "எனது கனவுகளில் உள்ள 'சுயராஜ்' ஏழையின் 'சுயராஜ்'... இந்தியா தமது நாடு என்று ஏழையிலும் ஏழை மக்கள் உணர வேண்டும், இந்தியாவை நிமிர்த்துவதில் தமக்கு ஒரு உருப்படியான பங்கு உண்டு, இந்தியாவில் உயர்வகுப்பினரோ தாழ்வகுப்பினரோ இருக்கக்கூடாது. இந்தியாவில் எல்லா சமூகங்களும் மிக இனிதாக வாழ வேண்டும். இத்தகைய இந்தியா ஒன்றுக்காகவே நான் உழைப்பேன்" என காந்திஜீ கூறினார்.[139] அறுபது வருடங்களுக்கு மேலாக காந்திய இயக்கம் செயற்பட்டுள்ளதாயினும், காந்தியின் கனவுகள் நனவாகவில்லை. அரசியலில் காந்திய இலட்சியங்கள் மற்றும் அணுகு முறையினால் உந்தப்பட்ட இளைஞர் காங்கிரஸ் மத்தியில் குறைபாடுகள் இருக்கவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தன. காந்திஜியின் 25வது ஞாபகார்த்த கூட்டத்தில் ஹன்டி பேரின்ப நாயகம் பேசுகையில் பின்வருமாறு கூறினார்: "அன்று காந்தி அரசியலில் செயற்பட்டார். இலங்கையில் நாமும் அவ்வாறே இயங்கினோம். இன்று இந்தியாவும் இலங்கையும் அரசியலில் ஊறியிருக்கின்றன. ஆனால் அன்றைய அரசியலுக்கும் இன்றைய அரசியலுக்கும் இடையில் வித்தியாசம் உண்டு. அன்றைய அரசியல் அபிலாசைகளைக் கொண்டிருந்தது. அன்று கனவுகளும் கண்ணோட்டங்களும் நிரம்பியிருந்தன. இன்றைய அரசியலோ, பிளவுண்டதும் அவ்வப்போதைய நடைமுறைத் தேவைகளைப் பொறுத்ததாகவும் உள்ளது. அவை மிக, மிக தாக்கமானவையாகவும் வேதனை நிறைந்தவையாகவும் இருக்கின்றன. இரு நாடுகளினதும் சுதந்திரத்திற்குப்பிந்திய வரலாறு இந்த உண்மையை நிருபித்துக் காட்டுகிறது".[140]

சட்டவாக்கச் சபை மற்றும் அரச சபைக்குப் போட்டியிடும் தேர்தல் உள்ளிட்ட அரசியல் மீது இளைஞர் காங்கிரஸ் இலட்சியவாதிகள் அவமானம் கொண்டிருந்தனர். காங்கிரஸின் தலைவர்களைத் தெரிவு செய்வதில் வெறுமனே அரசியல்வாதி என்றிருப்பவர்களை விலக்க வேண்டுமென்பதில் காங்கிரஸ் கண்ணும் கருத்துமாயிருந்தது. தலைமையுரையை நிகழ்த்த அழைக்கப்படுபவர்கள் தலைசிறந்த புத்திஜீவிகளாகவும் கலாசார விழுமியங்களில் ஆழ்ந்த அக்கறையுடையவர்களாகவும் இருத்தல் வேண்டும். 1931 தேர்தல்களைப் பகிஷ்கரித்த பின்பு, கொழும்பில் அகில இலங்கை இளைஞர் காங்கிரஸ் ஒன்றினை அமைத்தல் தவிர வேறு எதுவித வேலைத்திட்டமும் காங்திரஸ் வசம் இருக்கவில்லை. யாழ்ப்பாணத்தில் கூட அவர்கள் தம்மை ஒரு அரசியல் கட்சியாக அமைப்பதற்கு எண்ணியிருக்கவில்லை. பகிஷ்கரிப்புக்கு எதிரான இயக்கம் பலமடைந்துவந்தபோது, குடாநாட்டுக்கான நான்கு ஆசனங்களுக்கும் 1934 தேர்தலில் போட்டியிட வேண்டுமென காங்கிரஸ் ஆதரவாளர்கள் காங்கிரஸிடம் சற்று அழுத்தம் கொடுத்தனர். காங்கிரஸ் அவ்வாறு செய்யவில்லை. பதிலாக, இளைஞர் காங்கிரஸ் உறுப்பினர்கள், தமது தனிப்பட்ட முறையில் இனவாத அபேட்சகர்கட்கு எதிராக தேசியவாத அபேட்சகர்களை ஆதரித்தனர். ஒரு அரசியல் கட்சியை அமைத்து நடத்துவதென்றால் வளங்கள் தேவை. அது மட்டுமல்லாமல் அமைப்புப் பணிகளுக்கென அதன் உறுப்பினர்கள் எவ்வளவோ நேரத்தினை முதலீடு செய்யவேண்டும். காங்கிரஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பட்டு வந்த காலம் பூராவும் ஒரு முழுநேர ஊழியராவது செயற்பட்டது கிடையாது. சிறிது காலம் ஒரு காரியாலயம் இருந்த தாயினும், மரபுரீதியான அரசியலில் பங்கு பற்றுவதற்கான அமைப் பினை அவர்கள் கட்டியெழுப்பவில்லை. காந்தியின் செய்தியை ஏற்றுக் கொண்டிருந்தும் அதனை அடியொற்றி காந்திய வெகுஜன இயக்க மொன்றினை உருவாக்குவதற்கு இளைஞர் காங்கிரஸ் தவறி விட்டது.

காந்தி இலட்சியத்தையே பற்றிக் கொண்டிருந்தபோதும், பரந்து பட்ட மக்களோடு நேரடியான தொடர்பு கொண்டிருந்த செயற் பாட்டாளர்கள் இருந்தனர். அவர்களே மக்களைப் போராட்டங்களுக்கு ஒழுங்கமைத்தனர். தனது இலட்சிய நோக்குக் காரணமாக இளைஞர் காங்கிரஸ் காந்தியின் அறைகூவலுக்குச் செவிமடுத்திருந்தபோதும், அந்த இலட்சியங்களை நடவடிக்கைத்திட்டங்களாக உருவாக்குவதற்கு அவர்களிடம் அமைப்பு வேலைக்கான நிபுணத்துவம் இருக்கவில்லை. உண்மையில் அந்தவகையில் இளைஞர் காங்கிரஸ் பிரமுகர்கள் அரசியலில் சிறந்து விளங்கக் கூடியவர்களாக இருக்கவில்லை. அவர்கள் கூட்டங்கள் நடத்துதல், அறிவியல் கலந்துரையாடல்களில் ஈடுபடுதல், வருடாந்தக் கூட்ட அமர்வுகள் நடத்துதல் போன்ற செயற்பாடுகள் மூலம் பொதுஜன அபிப்பிராயத்தை வளப்படுத்த வல்லவர்களாய் விளங்கினர். அவர்கள் யாழ்ப்பாண புத்திஜீவிகளுக்கு சிறப்பான பங்களிப்பினை வழங்கியதோடு, ஒரு முழுச்சந்ததியினதும் சிந்தனையை சீராக்குவதற்கு உழைத்தனர். இளைஞர் காங்கிரஸ் அழிக்க முடியாத முத்திரையைப் பதித்துவிட்டது என்பதை அதன் செல்வாக்குக்கு உட்பட்ட இன்றைய தலைமுறையினரிலிருந்தும் புலனாகின்றது. 1933இல் யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்கள் ஹன்டி பேரின்பநாயகத் துக்கு தமது பாராட்டினை தெரிவித்தனர். அது வருமாறு:

> உங்களை நேசித்து, உங்களைப் பின்பற்றிய, உங்களைக் கௌர வித்த, உன்னத மொழியைக் கற்ற, உங்கள் உரைநடையைப் பற்றிக் கொண்ட, இருப்பதற்கும் இறப்பதற்கும் உங்கள் உதாரணத்தையே தமதாக்கிக் கொண்ட, மனிதர்கள் இந்த நாட்டில் ஏற்கனவே எத்தனையோ இல்லங்களிலும், எத்தனையோ துறைகளிலும் நிறைந் திருக்கின்றனர். எதிர்காலச் சந்ததியினர் நல்வாழ்க்கை நடத்துவதற்கு நீங்கள் என்றும் உதாரணமாக விளங்குவீர்கள்[141]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டொனமோர் ஆணைக்குழு வழங்கிய சர்வஜன வாக்குரிமைத் திட்டத்தின் கீழ் எந்தவொரு தலைமையும் தமது பலத்தை நிலைநாட்டிக் கொள்வதற்கு தேர்தல்களில் பங்குபற்றுவது முற்றுமுழுதாக அவசியமாகி விட்டது. வீட்டுக்கு வீடு பிரசாரம் செய்தல், பணப்பலத்தின் அவசியம் மற்றும் மதுபானப் பிரயோகம் போன்ற புதிய பிரசார யுத்திகள் சர்வ சாதாரணமாகி விட்டன. ஹன்டிக்கும் அவரின் சகாக்களுக்கும் இவை யெல்லாம் வெறுப்பான விடயங்கள். அவர்களிடம் வளங்களோ இல்லை. அவர்களின் குடும்பங்கள் வசம் கஸ்டப்பட்டுச் சம்பாதிக்காத பணம் இருந்ததில்லை. இந்த விடயத்தில் யாழ்ப்பாணத்தில் ஆங்கிலக் கல்வி கற்ற மேட்டுக்குடியினர் கொழும்பிலும் நாட்டின் இதர பகுதி களிலும் உள்ளவர்களை விட முற்றிலும் வித்தியாசமானவர்களா யிருந்தனர். தென்னிலங்கையிலுள்ள குடும்பங்களுக்கு சொந்தமாயிருந் தளவு நிலம் அல்லது வேறு சொத்துக்கள் யாழ்ப்பாணத்து குடும்பங்கள் வசம் இருந்தது கிடையாது. இளைஞர் காங்கிரஸைச் சேர்ந்த பலர் பிரித்தானியாவில் கல்வி கற்பதற்கு மிகத் திறமைப் படைத்திருந்தவர்கள். ஆனால் யாழ்ப்பாணத்தில் ஒரு குடும்பத்திடமாவது இதற்கான பண வசதி இருக்கவில்லை, ஐக்கிய இராச்சியம் சென்று கல்வி பயின்றவர்கள் அநேகமாக எல்லோருமே அரசாங்க புலமைப்பரிசில்கள் பெற்றவர்கள் ஆவர். முதலாவது தலைமுறைசார்ந்த தொழிலறிஞர்களே, அதாவது தமது சொந்த வாழ்நாளில் செல்வம் சேர்த்தவர்களே பின்பு யாழ்ப்பாண அரசியலில் ஆதிக்கம் செலுத்தினர். யாழ்ப்பாணத்திலுள்ள ஏறத்தாழ 25 பாடசாலைகள் மற்றும் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் அரசாங்க சேவையில் அல்லது மலாயாவில் உத்தியோகங்களுக்காக தயார்படுத்தப்பட்டனர். காங்கிரஸின் 1931 அமர்வுகள் இடம் பெறுவதற்கு சற்று முன்னதாக, 'இந்து சாதனம்' பத்திரிகை (Hindu Organ) காங்கிரஸிடம் சாலப் பொருத்தமான விடயமொன்றினை முன்வைத்தது. அதாவது, "சேவை மனப்பான்மை அல்லது இலட்சி யத்தினால் ஈர்க்கப்பட்ட நாட்டின் இளைஞர் அரசாங்க சேவையில் இடம் பிடிக்க முனைவது ஏற்புடையதல்ல. அத்தகைய சேவையானது அவர்களின் சுயமரியாதைக்கு களங்கமானது என்பதாகும். இளைஞர் விவசாயம், வணிகம் போன்ற சுதந்திரமான துறைகளை நாடிச் செல்ல வேண்டும். அவ்வாறாக மட்டுமே அவர்கள் 'சுயராஜ்' பெற முடியுமென" 'இந்து சாதனம்' அறிவுரை வழங்கியிருந்தது. அதன் ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து பின்வருமாறு கூறிவைத்தார்: "இளைஞர் அரசாங்க சேவையை நாடப்போவதில்லையென தூய்மையானதொரு பிரகடனத்தைச் செய்து கொள்வதற்கு இளைஞர் காங்கிரஸ் இளைஞர்கட்கு அறைகூவல் விடுக்குமென நாம் நம்புகிறோம். இவ்வாறு செய்யத் தவறினால், தாய் நாட்டின் சேவைக்கு தாம் வாழ்க்கையை அர்ப்பணித்துள்ளதாகச் செய்துள்ள பிரகடனம் பேச்சுப்பல்லக்கு தம்பி கால்நடை என்ற நிலையாகியது போலாகிவிடும்"[142]

இது தான் பிரச்சினையின் அடிநாதமாகும். இளைஞர் காங்கிரஸ் அடிப்படையும் அது ஆதரவைப் பெற்றுக் கொண்டதுமான சமூகத் தளமானது அப்போதைய அபிலாசை அரசியல் என்றதற்கப்பால் செல்லக் கூடியதல்ல. தமது சமூகப் பூர்வீகம், வர்க்க பின்புலம் ஆகியவற்றின் வரையறைக்குட்பட்ட மனப்பாங்கினைக் கொண்டிருந்த ஆங்கிலம் கற்ற இளைஞரின் ஆதரவோடுதான் இளைஞர் காங்கிரஸ் இயங்கி வந்தது. அத்தகைய இளைஞர் சீவிப்பதற்கு மத்தியதர 'வையிற் கொலர்' அரசாங்க உத்தியோகங்கள் மற்றும் சட்டம், வைத்தியம், கற்பித்தல் (ஆசிரியர்), தொழிலறிஞர் பதவிகளை நாடிச் சென்றதால், இளைஞர் காங்கிரஸ் ஒரு வெகுஜன இயக்கமாக பரிணமிக்கத்தக்க பலத்தைக் கொண்டிருக்கவில்லை. அந்தக் காலத்தில் தென்னிலங்கையில் தீவிரவாதிகள் அமைத்து வந்த வாலிபர் சங்கங்கள் மற்றும் 'சூரியமல்' இயக்கத்தின் ஊடாக 1930 களில் ல.ச.ச.க.வை ஸ்தாபிப்பதற்கான வழிசமைக்கப்பட்டது. அதே காலகட்டத்தில், டொனமோர் சீர்திருத்தங்களின் கீழ் அரசியலில் வெற்றிவாகை சூடுவதற்குத் தேவையான குள்ளநரிக்குணத்தையும் தேர்தல் பிரசார தந்திரோபாயங்களையும் முடுக்கி விடுவதற்குத் தயாராயிருந்ததொரு தலைமையின் கீழ் தோற்றம் பெற்ற கீழ்த்தரமான இனவாதப் பிரசாரம் காரணமாக இளைஞர் காங்கிரஸின் புகழ் மங்கியது. பகிஷ்கரிப்பு இயக்கம் முடிவடைந்து, இளைஞர் காங்கிரஸ் தன்னை ஒரு மாற்றுரு (அரசியல்) சக்தியாக கட்டியெழுப்ப முடியாததால் பகிஷ்கரிப்பு இயக்கத்தை நீக்கவேண்டுமென அதிரடியாகப் பிரசாரம் செய்து, தமிழ் காங்கிரஸின் பேரில் வருடக்கணக்காக இனவாதத் தீ மூட்டி வந்தவராகிய திரு.ஜி.ஜி. பொன்னம்பலம் வெற்றியீட்டுவதற்கு வழிசமைத்தது.

1930களின் நடுப்பகுதியில் இளைஞர் காங்கிரஸ் உறுப்பினர்கள் வெவ்வேறு வழிகளைத் தெரிவு செய்தனர். சிலர் இடதுசாரி இயக்கத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைந்து கொண்டனர். அவர்களில் சிலர் .நாகலிங்கம் மற்றும் தர்மகுலசிங்கம், எஸ். கே. சிற்றம்பலம் மற்றும் எம். சச்சிதானந்தன் ஆவர். தர்மகுலசிங்கம் அகால மரணமடைந்ததன் காரணமாக, லங்கா சமசமாஜக்கட்சி வடபகுதியில் ஒரு ஆற்றல் நிறைந்த தலைவரை இழந்துவிட்டது. தென்னிலங்கையில் 'சூரியமல்' இயக்கத்தில் ஈடுபட்டிருந்தவராகிய ரீ. துரைசிங்கமும் ஏனையோரும் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுதியான ஆதாரவாளர்களாய் விளங்கினர். ஹன்டி பேரின்பநாயகம் கூட தான் 'இடதுசாரி' அரசியல் அனுதாபியாயிருந்ததோடு, உத்தியோகபூர்வமற்ற முறையில் பெரும்பாலும் ல.ச.ச.க. வின் அனுதாபியாயிருந்ததாகப் பின்னர் ஏற்றுக்கொண்டார்.[143] அவரும் இளைஞர் காங்கிரஸைச் சேர்ந்த பலரும் பல தடவைகள் இடதுசாரித் தலைவர்களுடன் ஒரே மேடையில் தோன்றினார்கள்.

என்.எம்.பெரேரா, பிலிப் குணவர்த்தன, கொல்வின் ஆர். டி. சில்வா மற்றும் லெஸ்லி குணவர்த்தன போன்ற இடதுசாரித் தலைவர்கள் அடிக்கடி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்ததோடு, ஒரு காலத்தில் இளைஞர் காங்கிரஸ் தலைவர்களாய் விளங்கியவர்களோடு நெருக்கமான தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தனர். இதர இளைஞர் காங்கிரஸ் உறுப்பினர்களாகிய ஏ.ஈ. தாம்பர், எஸ்.ஆர். கனகநாயகம், ஏ.எம். புறூடி மற்றும் ஏனையோரும், ஐக்கிய தேசியக் கட்சி ஒரு தேசிய வாதக்கட்சியென உண்மையாக நம்பிக்கை கொண்டு அக் கட்சியில் இணைந்து கொண்டனர். குறிப்பாக, 1947 தேர்தல்களின் போது ஐ.தே.க. வும் தமிழ் காங்கிரஸும் கடுமையான போட்டியில் ஈடுபட்டிருந்த கால கட்டத்தில்தான் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

அரசியல் கொள்கைகள் மற்றும் கருத்தியல் நிலைப்பாட்டினை நோக்குமிடத்து, இளைஞர் காங்கிரஸ் பெரும்பாலும் இடதுசாரி இயக்கத்துடன்தான் இணைந்திருக்க வேண்டும். ஆனால் காந்திய இலட்சியவாதத்திற்கும் மார்க்ஸிச சோசலிச வாதத்திற்கும் இடையிலான முரண்பாடுகள் அதற்குத் தடையாயிருந்தன. இந்தியாவில் காந்தியவாதிகளுக்கும் சோசலிசவாதிகளுக்கும் இடையிலான முறுகல்கள் 1930 களின் நடுப்பகுதியில் விருத்தியடைந்திருந்தன. ஜயப்பிரகாஷ்நாராயன் போன்றவர்கள் காந்தியின் ஆதிக்கத்திலிருந்த காங்கிரஸிலிருந்து இறுதியில் விலகிக்கொண்டனராயினும், பின்னர் மீண்டும் காந்திய வாதத்தையே தழுவிக் கொண்டனர். இந்த முரண்பாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கிய முறுகல் நிலைமைகள் உண்மையானவையென்ற வகையில் இளைஞர் காங்கிரஸின் கீழ் யாழ்ப்பாணத்தில் தோற்றம் பெற்றதாகிய தீவிரவாதப் பிரிவு மார்க்ஸிச இடதுசாரி இயக்கத்துடன் முழுமையாக இணைந்துகொள்வதற்கு முடியாமற்போனது. எவ்வாறாயினும், இளைஞர் காங்கிரஸின் ஒரு பிரிவினர் மத்தியிலிருந்தே இடதுசாரிக் கட்சிகள் யாழ்ப்பாணத்தில் தமது மிக உறுதியானதும் விசுவாசமான துமான ஆதரவாளர்களை ஈர்த்திருந்தன.

அரசியல் அரங்கில் மரபுவழியாக இறங்கி நாட்டின் தலைவிதியை வடிவமைக்க முடியாமற்போனாலும், இளைஞர் காங்கிரஸ் வெற்றிகளை ஈட்டாமலிருக்கவில்லை. கலாசாரம் மற்றும் கல்வித் துறைகளிலும் சமூக ஏற்றத்தாழ்வுகளை அகற்றுவதிலும்தான் அதன் சாதனைகள் காணப்பட்டன. யாழ்ப்பாணத்தில் தமிழ் மொழிக்கு ஒரு கௌரவமான இடம் 1920 களிலேயே எட்டப்பட்டது. இலக்கிய விடயங்கள் தொடர்பாக மட்டுமல்லாமல் மதசார்பற்ற மற்றும் அரசியல் விடயங்கள் தொடர்பாகவும்கூட, கூட்டங்களும் விரிவுரைகளும் இளைஞர் காங்கிரஸ் மையத்திலிருந்தே ஆரம்பிக்கப்பட்டன. யாழ்ப்பாண் இளைஞர் ஆங்கிலத்தில் கல்வி கற்றாலும் கூட, சமூகத்தில் சமூக வாழ்வில் தேசிய வழக்கங்கள், விழாக்கள் மற்றும் ஆடை அணிகளுக்கு உரிய கௌரவத்தினை மீள அளிப்பதில் ஈடுபட்டிருந்தனர். சாதியத் தினால் திணிக்கப்பட்டிருந்த அவமானங்களை அகற்றுவதில் காங்கிரஸ் கொண்டிருந்ததாகிய அசைக்க முடியாத நிலைப்பாடானது அதன் பாரிய சாதனைகளில் ஒன்று ஆகும்.

எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு பரம்பரையினது தலைசிறந்த ஆசிரியர்கள், அதிபர்கள், நிர்வாகிகள், பாடசாலை ஸ்தாபகர்கள் யாவரும் இளைஞர் காங்கிரஸ் ஊடாகவே தோற்றுவிக்கப்பட்டனர். இந்த (20ஆம்) நூற்றாண்டின் நடுப்பகுதி தசாப்தங்களில் அவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் தான் யாழ்ப்பாணம் தனிச்சிறப்பாக திகழ்ந் ததற்கு வழி சமைத்தது. நாட்டுக்குப் பெருமை சேர்க்கும் தரமான பாடசாலைகள் அங்கு காணப்படுகின்றன. 1940 களிலும் 1950 களிலும் கல்வித்தரம் அதிகம் பாதிக்கப்படாத விதத்தில், போதனா மொழியை ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மிகச் சுமுகமாக மாற்றப் பட்டதற்கு இந்த இளைஞர் கை கொடுத்தனர். இளைஞர் காங்கிரஸ் என்றுமே நாடிச் சென்று கொண்டிருந்த பாரிய மாற்றங்களில் இது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றாகும். உண்மையில், தேசிய இணக்கத்தை நோக்காகக் கொண்டு யாழ்ப்பாணப் பாடசாலைகளில் சிங்களம் கற்பிக்கப்பட்டது. ஆனால், இதனை ஏற்பாடு செய்திருந்த அதே கல்விமான்களே 1956இல் அதனை திடீரென நிறுத்தி விட்டனர். சிங்களம் தனி அரச கரும மொழியாகத் திணிக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் நடவடிக் கையாகவே அவ்வாறு செய்யப்பட்டது. வடமாகாண ஆசிரியர் சங்கம் மற்றும் இலங்கை ஆசிரியர் சங்கம் இரண்டினதும் ஊடாக இளைஞர் செல்வாக்கு அதிகம் நீடித்திருந்தது. இலவசக்கல்வி, தேசிய முறைமை யிலான பாடசாலைகள் மற்றும் 'சுயபாஷை' எனும் மூன்று விடயங்கள் நாட்டுக்குத் தேவையென காங்கிரஸின் முன்னாள் உறுப்பினர்கள் குரல் கொடுத்தனர். ஆசிரியர்களை அரசாங்கம் கட்டுப்படுத்துவதை இவர்கள் கடுமையாக எதிர்த்ததோடு, கல்வி என்பது அரசின் பொறுப்பு; ஆனால் ஏகபோகமல்ல என வற்புறுத்தினர். நாட்டின் சமூக முன் னேற்றத்தில் கல்வியின் பாத்திரம் மகத்தானது என்பதில் அவர்கள் உறுதியாயிருந்தனர். அவர்கள் அர்ப்பணிப்பு நிறைந்த ஆசிரியர்களாய் விளங்கியதோடு அவர்களின் தேசியவாதம் இரத்தத்தில் ஊறிய தாயிருந்தது.

ஆனால் நாட்டின் அரசியல் வாழ்வில் அவர்கள் படைகளற்ற ஜெனரல்கள் போலவே விளங்கினர். சுதந்திரத்திற்குப் பிந்திய தசாப்த காலங்களில் தோன்றிய பல தேசிய பிரச்சினைகள் தொடர்பாக ஹன்டி பேரின்பநாயகம் போன்றோரின் ஆலோசனைகள் நாடப்பட்டு, மிகப் பொறுமையாகவும், மதிப்பாகவும் செவிமடுக்கப்பட்டது. அப்பழுக் கற்ற வெள்ளை நிறத் தேசிய உடையை அணிந்து வந்த அவர்கள், யாழ்ப்பாணத்தில் எந்தவொரு பெரிய வைபவத்திலும் ஜாம்பவான் களாக மதிக்கப்பட்டனர். யாழ்ப்பாணத்தின் பொது வாழ்வுக்கு அவர்கள் வெகு சிறப்பாக மெருகூட்டி வந்தனர். பல பொது விடயங்கள் தொடர் பாக அவர்கள் மிக நிதானமாகவும் நேர்மையாகவும் தமது நேரத்தையும் ஆற்றல்களையும் அள்ளி வழங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிப்புகள்

### அத்தியாயம் 1

1. S. Handy Perinbanayagam hand-written undated manuscript written in the early seventies. Also interviews 1972— 73: collectively hereinafter referred to as *SHE Reminiscences.*
2. *Jaffna College Miscellany* 1920 to 1923.
3. *SHP Reminiscences.*
4. *Jaffna College Miscellany* December 1919, 'An Up-to Date Literature in Tamil': A Symposium.
5. *SHP Reminiscences.*
6. *Ibid.*
7. *Ibid.*
8. *Ibid.*
9. *Ibid.*
10. *Ceylon Patriot*, 5 Novembtr 1924.
11. *SHP Reminiscences.*
12. *Ceylon Patriot*, 5 November 1924.
13. *Ceylon Daily News,* 2 December 1924.
14. *Ibid.*

### அத்தியாயம் 2

15. *Morning Star*, 29 December 1921.
16. *Hindu Organ*, 5 January 1925.
17. *Ibid.*
18. *Ceylon Daily News*, 1 January 1925.
19. *SHP Reminiscences.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. V. Muttukumaru Esq., M.A., *A Lecture to the Students, Congress, Jaffna*. 31 December 1924, Navalar Press, Jaffna.
21. *SHP Reminiscences*.
22. *Ceylon Patriot*, 21 January 1925. See also *Hindu Organ*, 15 January 1925.
23. *SHP Reminiscences*.
24. *Ceylon Daily News*, I January 1925.
25. *Hindu Organ*, 25 December 1924.
26. *Morning Star*, 17 January 1925.
27. Reported in the *Morning Star*, 10 January 1925.

**அத்தியாயம் 3**

28. *Morning Star*, 2 May 1925.
29. *Hindu Organ*, 27 April 1925.
30. E.C. Dewick, 'Some Impressions of Jaffna', *Jaffna College Miscellany*, September 1924.
31. *Morning Star*, 30 May 1925.
32. *Hindu Organ*, 27 April 1925.
33. *Ceylon Patriot*, 29 December 1926.
34. Interview with Bishop Kulandran.
35. *Ceylon Patriot*, 12 January 1927.
36. *Hindu Organ*, 6 January 1927.
37. *Ibid*., 6 January 1927.
38. *Ibid*., 10 February 1927.

**அத்தியாயம் 4**

39. S. Handy Perinbanayagam, Presidential Address at the Gandhi Remembrance Meeting on his 25th Death Anniversary, Saraswathy Hall, Bambalapitiya, 30th January 1973. Typescript.
40. Mahatma Gandhi's letter to I.P. Thurairatnam, Joint Secretary of the Students' Congress. Original with Mr. I.P. Thurairatnam.
41. *Ceylon Patriot*, 21 September 1927.
42. *Morning Star*, 12 August 1927.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

43. *Hindu Organ*, 7 November 1927.
44. Mahadev Desai, *With Gandhiji in Ceylon*. S. Ganesan Publisher, Triplicane, Madras, 1928, pp. 22 & 128.
45. *Ibid.*, Gandhiji's Speeches.
46. *Ceylon Patriot*, 9 November 1927.
47. Mahadev Desai, *op. cit.,* pp. 1&2.
48. *Ibid.*, p. 12.
49. *Ibid.*, p. 11.
50. *Hindu Organ*, 20 October 1927.
51. *Ibid.*
52. *Ceylon Patriot*, 13 November 1927. Also interview with Mr. I. P. Thurairatnam.
53. *Hindu Organ* 28 November, 1927. Also interview with Messrs. C. Subramaniam and N. Sabaratnam.
54. Mahadev Desai, *op. cit.,* p. 117.
55. *Ibid.*, p. 122.
56. *Ibid.*. p. 22.
57. *Ibid.*
58. Interview with Mr. C. Subramaniam.
59. Mahadev Desai, *op. cit* , p 22.
60. *Ibid.*, p 31.
61. Interview with Mr. K. Nesiah_
62. Mahadev Desai, *op. cit.,* p. 23.
63. *Ibid*,, p. 150.
64 *Ibid.*, p. 140.
65. *Ibid*, p, 30
66. *Morning Star*, 2 December 1927.
67. *Hindu Organ*, 24th November 1927.
68. *Ceylon Patriot*, 7 December 1927.

***அத்தியாயம் 5***

69. *Hindu Organ*, 26 April 1928.
70. *Ceylon Daily News*, 19 April 1928.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

71. Ceylon—Report of the Special Commission on the Constitution, July 1928 London.

72. *Ceylon Daily News*, 19 April 1928.

73. Ceylon—Report of the Special Commission on the Constitution, July 1928. p. 39.

74 *Ceylon Daily News*. 20 April 1928.

75. *Ibid*.. 19 Aplil 1928.

76. *Ibid*., 21 April 1928.

77. *Ibid*., 23 April 1928.

78. *Ceylon Patriot*, 25 April 1928.

79. *Hindu Organ*, 26 April 1928.

80. *Ceylon Patriot*, 12 September 1928.

81. *Hindu Organ*, 2 August 1928.

82. The Students' Congress, Jaffna (Ceylon), 22 March 1929, Chunnakam. Printed letter signed by N. Kumarasingham and W. D. Kanagathungam Hony. Joint Secretaries.

***அத்தியாயம் 6***

83. *Ceylon Daily News,* 13 April 1929.

84. V. Kalyanasundaranar, *Sirtiruttam allatu llamai Viruntu,* (சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து) Madras, 1951. Jaffna Students' Congress, April 10. 11 and 12, 1929, Kankesanturai. pp 50-83.

85. *Hindu Organ*, 20 June 1929.

86. *Ibid*., 29 April 1929.

87. *Annual Report,* The Students' Congress, Jaffna. Congress Camp, Kankesanturai. 5 April 1929.

88. *Hindu Organ*, 11 April 1929.

89. Ibid., 11 March 1929.

***அத்தியாயம் 7***

90 Rev. S.S. Somasundram B.A. 'Evangelisation or Christianisation', *Morning Star*, 14, November 1925.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

91. J.W.A. Kadirgamar, 'Santiniketan'. *Morning Star*, 31 October 1925. For National Day Celebrations, see letter to the editor by J.W. A.K. and editorial comment in *Morning Star*, 30 March 1928.
92. C. Subramaniam, 'Thoughts on Saiva Periyar.' in *Pulolyoor Saiva Periyar S. Shivapmhasundaranar Centenary Number*, 1978. p. 108.
93. *Ceylon Daily News*, 22 April 1930.
94. C. Subramaniam, Chairman Reception Committee, Welcome Address, The Students' Congress, Jaffna, Sixth Annual Sessions. 21-4.30. The Ceylon Patriot Press, Manipay.
95. *Ceylon Daily News*, 26 May 1930.
96. *Ibid.*, 29 April 1930.
97. *Ceylon Patriot*, 3 May 1930.
98. Interview with Mr. A. S. Kanagaratnam.
99. *Ceylon Patriot*, 31 May 1930.
100. K. Senthinathan, *Eelam Tanta Kesari,* Thirumakal Press, 1968. See foreword by Handy Perinbanayagam.

**அத்தியாயம் 8**

101 *Hindu Organ,* 23 April 1931. See also *Morning Leader* 28 April 1931.
102. K. Nesiah, Chairman Reception Committee, *Address of Welcome,* Seventh Annual Sessions of the Students' Congress, Jaffna, April 1931. St. Joseph's Catholic Press, Jaffna.
103. Srimathi Kamaladevi Chattopadhyaya, *Presidential Address* The Students' Congress, Jaffna, Seventh Annual Sessions. 1931. The Saiva Prakasa Press, Jaffna.
104. Ceylon Daily News, 28 April 1931.
105. Handy Perinbanayagam, *Presidential Address*—Annual Sessions of the Youth Congress, Jaffna, 1939. See *Eelakesari* 30th April and 7th, 14th and 28th May 1939.
106. *Ceylon Daily News,* 4 May 1931.
107. *Ibid*, 5 May 1930.
108 *Ibid*, 4 May 1931.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அத்தியாயம் 9

109. *Morning Leader*, 6 May 1931. Also Handy Perinbanayagam Presidential Address 1939. *op cite.*

110. *Ceylon Daily News*, 4 May 1931 and 5 May 1931.

111. *Ibid.*, 6 May 1931.

112. *Searchlight*, 20—27th June 1931.

113. *Independent*, 18 May 1931.

114 *Hindu Organ*, 25 May 1931.

115. Krishna Nehru Hutheesing (ed.) *'Nehru's Letters to His Sister*, Faber & Faber 1963, p. 21.

116. *Morning Star*, 8 May 1931.

117. *Ceylon Patriot*, 20 July 1931.

118. Debates in the State Council of Ceylon. *Hansard* 10 July 1931.

119 *Administration Report of the Government Agent Northern Province for 1931*, Ceylon Government Press, Colombo 1932.

120. *Ibid.*

121. Handy Perinbanayagam, 'A tribute to C. Subramaniam',. *The Skanda* April 1966, p. 31. Thirumakal Press, Chunnakam.

122. G.G. Ponnambalam, Debates in the State Council of Ceylon on the Reform of the Constitution, 1939. See 21 March 1939.

123. K.M. de Silva, 'The History and Politics of the Transfer of Power', *University of Ceylon—History of Ceylon*, Vol. 3 p. 500.

124. *Report of the Commission on Constitutional Reforms,* London, 1946, p. 14, Paragraph 42.

125. Parliamentary Debates. House of Commons, *Hansard* Oral Answers, 24 June 1931.

### அத்தியாயம் 10

126. *Eelakesari*, 20 April 1932.

127. *Ibid.*, 8 January 1933.

128. *Ceylon Patriot*, 28 April 1933.

129. *Eelakesari*, 21 May 1933.

130. Annual sessions 1938 to 1941. See *Eelakesari* for detailed reports.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

131. *Communalism or Nationalism*, A Reply to the Speech Delivered in the State Council on the Reforms Despatch by G.G. Ponnambalam Esq. with a Foreword by S. H. Perinbanayagam. Youth Congress, Jaffna, Thirumakal Press. Chunnakam, December 1939., pp. 48 — 51.
132. *Ibid.*, pp. 93—94 and pp. 99—106.
133. Handy Perinbanayagam., *Presidential Address,* 1939. *Op. cit.*
134. N. Sabaratnam, 'A Maker of Men,: The Builder of Kokuvil Hindu', *Homage to a Guru: S. Handy Perinbanayagam*, Edited by S. Sivana yagam and S. Ratnapragasam., Ceylon Printers, Colombo, January 1978, p. 16.
135. K. Kanagaratnam in *S. Handy Perinbanayagam- A Valedictory Tribute*, Edited by S. Sivanayagam and S. Ratnapragasam, Ceylon Printers, Colombo, May 1960.

***அத்தியாயம் 11***

136. *SHP Reminiscences.*
137. Pieter Keuneman, House of Representatives, *Hansard* 14 June 1956.
138. Handy Perinbanayagam. Welcome Address at the Reception to Shri Jayaprakash Narayan in Jaffna, 1969. Typescript.
139. Mahatma Gandhi, *Young India* 10-9-1931 and 26-3-1931 quoted in *The Message of Mahatma Gandhi.,* Edited by U. S. Mohan Rao, New Delhi, 1969.
140. Handy Perinbanayagam, Address at the Gandhi's 25th Death Anniversary Meeting, *op. cit.*
141. See K. Nesiab, *S. Handy Perinbanayagam,: A Valedictory Tribute*, *op. cit.*
142. *Hindu Organ* 27 April 1931.
143. Co-operator 1 May 1966, See A Browser's Diary.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிற்குறிப்பு

'டொனமூர் யாப்பின் கீழ் இனவாத அரசியல்: 1931-1947' (Communal Politics under the Donoughmore Constitution 1931-47) எனும் தலைப்பில் ஜேன் ரசல் அவர்கள் ஆய்வொன்றினை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டார். இவ்வாய்வு பின்னர் நூல் வடிவில் வெளிவந்தது (*The Ceylon Historical Journal*, Volume Twenty Six, Tisara Prakasakayo Ltd., Sri Lanka, 1982). இந்நூலில் அக்காலத்தில் நிலவிய யாழ்ப்பாணத்தினுடைய, இலங்கையினுடைய, இந்தியாவினுடைய அரசியல் பண்பு பற்றிய தரவுகளிலும் வியாக்கியானங்களிலும் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் பற்றி குறிப்பிடப்படுகின்ற இடங்களில் எல்லாம், முழுமையான தவறுகளைக் கொண்டுள்ளது. எனவே இந்நூலை நாம் காத்திரமான ஒன்றாக கருதவேண்டிய தில்லை. மேலும், யாழ்ப்பாண இளைஞர் காங்கிரசின் முக்கிய பாத்திரமான ஹன்டி பேரின்பநாயகத்தின் பெயரினை 'பேரபநாயகம்' (Perapanayagam) என (அவரை தரம் தாழ்த்தவா?) நூல் முழுதும் பிழையாக குறிப்பிடுவதன் மூலமே இவரது புலமைத் தகுதியினை நாம் மதிப்பிட்டுக் கொள்ளலாம். அத்துடன் இவர் *Handbook of the Jaffna Youth Congress* எனும் நூலினை தான் தகவல் பெற்றதற்கான மூலமாக குறிப்பிடுகிறார். எனினும் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரசுடன் தொடர்பு கொண்ட எவரும் இந்நூலினை அறிந்திலர். அவரது நூல் வெளிவந்த காலத்தில் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரசுடன் தொடர்புற்றிருந்தவர்களை விசாரித்த போது அவர்கள் எவருமே இவ்வாறான எந்தவொரு ஆவணத்தைப் பற்றியும் குறிப்பிடவில்லை.

## புகைப்படங்கள் பற்றிய குறிப்பு

#### யாழ்ப்பாணத்தில் காந்தி

காந்தியினுடைய படம் யாழ்ப்பாணத்தில் பெரும்பாலும் மானிப்பாயில் எடுக்கப் பட்டது. மஹாதேவ் தேசாயின் 'இலங்கையில் காந்திஜியுடன்' (*With Gandhiji in Ceylon -1928*) நூல் யாழ்ப்பாணத்தில் காந்தி இருப்பதை வெளிக்கொணரும் எந்தப் படத்தையும் கொண்டிருக்கவில்லை. காந்தியின் படங்களைத் தேடும் பல முயற்சி களின் பின்னர், நெருங்கிய குடும்ப வட்டத்திடமிருந்து ஒரு படம் கிடைக்கப்பெற்றது. காந்தியின் பின்னே ஓரளவு மறைந்து நிற்கும் திரு ஜே.டபிள்யூ.ஏ. கதிர்காமரைத் தவிர 1927ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட இப்படத்திலுள்ள வேறு எவரையும் அடையாளம் காண முடியவில்லை. திரு கதிர்காமர் இளைஞர் காங்கிரசின் ஸ்தாபக உறுப்பினராவார். பின்னர் 'சிலோன் பேற்றியற்' (Ceylon Patriot) இன் ஆசிரியராகவும் பணியாற்றியவர். அவருடைய உறவினரான வணக்கத்துக்குரிய கே. ஜெயம் மில்ஸ் அவர்களின் சேகரிப்பிலிருந்து இப்படம் கிடைக்கப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தில் நேரு

ஜவர்கலால் நேரு, அவரின் மனைவி கமலா, மகள் இந்திரா ஆகியோர் யாழ்ப் பாணத்திற்கு ஒரு முறையே வந்திருந்தனர். எனினும், கொழும்பிற்கு நேருவும் இந்திராவும் பல முறை வந்திருந்தனர். யாழ்ப்பாணத்தில் 1931இல் வழக்கறிஞராகவும் இலங்கை சட்ட சங்கத்தின் தலைவராக இருந்தவருமான திரு எஸ். சோமசுந்தரம் அவர்களினால் வரவேற்கப்பட்டு அவரின் நல்லூர் கோயில் வீதியிலுள்ள முதலியார் இல்லத்தில் இவர்கள் தங்கவைக்கப்பட்டனர். அவருக்கு ஹன்டி பேரின்பநாயகமும் இளைஞர் காங்கிரசும் உதவியாக இருந்தனர்.

படத்தில் சோமசுந்தரத்தின் சகோதரியும் பிற்காலத்தில் இந்தியாவில் இலங்கை உயர்ஸ்தானிகராக கடமையாற்றிய செனட்டர் சி. குமாரசுவாமியின் மனைவியுமான மங்கையர்க்கரசி குமாரசுவாமி, பிற்காலத்தில் வவுனியா நாடாளுமன்ற உறுப்பினராக விருந்த பேராசிரியர் சி. சுந்தரலிங்கம் அவர்களின் மகளும் மகனுமான லிங்காம்பிகை, ஞானலிங்கம் மற்றும் குமாரசுவாமியின் மகளும் மகனுமான சுந்தரி, சத்தி ஆகியோர் காணப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ்

**சாந்தசீலன் கதிர்காமர்**

*யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் (1924-1934) பற்றிய இந்த வரலாறானது சாந்தசீலன் கதிர்காமரால் எழுதப்பட்டு 1980இல் வெளியிடப்பட்ட ஹன்டி பேரின்பநாயகத்தின் ஞாபகார்த்த நூலின் ஒரு பகுதியாகும். இது இந்த வருடம் மீள்பிரசுரம் செய்யப்பட்டதோடு யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் பற்றிய இந்தப் பகுதி சிங்களத்திலும் தமிழிலும் மொழிபெயர்த்தும் வெளியிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் 1924இல் ஸ்தாபிக்கப்பட்டது. சீலன் அவர்கள் இதன் தொடக்ககால அமர்வுகள், யாழ்ப்பாண இளைஞர் காங்கிரசின் நோக்கங்கள் மற்றும் செயல் அட்டவணைகள், காந்தியின் வருகை, சாதி மற்றும் இனத்துவ ஒற்றுமை பற்றிய பிரச்சினைகள், 1931இல் இடம்பெற்ற தேர்தலை யாழ்ப்பாணம் பகிஷ்கரித்தமை, அதைத் தொடர்ந்து வந்த வாதப் பிரதிவாதங்கள், வேண்டுமென்றே உண்மையாக நடந்தவை சிதைக்கப்பட்ட முறை ஆகியனப் பற்றி விளக்கிச் செல்கிறார். யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் விட்டுச் சென்றவை பற்றி மதிப்பீடு செய்கையில், அதனுடைய சாதனையானது ''பண்பாடு மற்றும் கல்வி ஆகிய துறைகளிலும் சமூக ஏற்றத்தாழ்வுகளை அகற்றியதிலும் உயர்ந்து நிற்கிறது.'' அத்தோடு, ''எந்தத் தேசமும் பெருமைப்படக்கூடிய விதத்தில் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரசில் இருந்தே, மேன்மை மிக்க ஆசிரியர்கள், அதிபர்கள், ஆட்சி நிர்வாகிகள், பாடசாலைகளை நிறுவியோர் என்று ஒரு பாரம்பரையே வெளிவந்தனர்.''*

*''அதன் பார்வைப் பரப்பானது முழுத் தீவையும் அடக்கியது. அதன் இலக்கு சுதந்திரம், தேசிய ஐக்கியம், மதச்சார்பின்மை, மற்றும் சாதித் தடைகள் அனைத்தையும் கடத்தல். நாட்டில் உண்மையான தேசியத்தின் முதலாவது வெளிப்பாடாக அது அமைந்தது.'' இளைஞர் காங்கிரஸ் பற்றி தனது 'தமிழ்த் தேசியமும் சிங்களவர்களும்' என்ற ஹன்டி பேரின்பநாயகம் ஞாபகார்த்த உரையில் ஹெக்ரர் அபயவர்தன கூறியது.*

*விஸ்வவர்ணபால 'லங்கா கார்டியன்' இதழில் ஏப்ரல் 1982இல் எழுதிய Jaffna – The Making of Political Opinion என்ற கட்டுரையில் பின்வருமாறு கூறுகிறார்: ''தமிழர்கள் மத்தியில் புலிகளைக் காண்பவர்கள், தமிழ்த் தேசப்பற்றாளர்கள் சிங்களவர் தமிழர் ஐக்கியத்திற்காகவும் பூரண அரசியல் சுதந்திரத்திற்காகவும் உக்கிரம் குன்றாது எவ்வாறு போராடினர் என்பதைக் கண்டறிய இந்நூலைப் படிக்க வேண்டும்.''*



*சீலன் கதிர்காமர்: யாழ்ப்பாணக் கல்லூரியின் கலைமாணிப் பட்டப்படிப்பு துறையிலும் பின்னர் கொழும்பு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகங்களிலும் (1959 -1983) நவீன வரலாறு மற்றும் சர்வதேச அரசியல் ஆகியவற்றைப் போதித்தவர். யப்பான் மன்றத்தின் கற்றோர் குழுவில் ஒருவராக இருந்ததுடன், ரோக்கியோ யோகோஹமா ஆகிய இடங்களிலுள்ள பல பல்கலைக்கழகங்களில் 1983-2000 வரை கற்பித்தவர். அவரது வெளியீடுகளாவன: 'இனத்துவம்: அடையாளம், மோதல் மற்றும் நெருக்கடிநிலை'* (Ethnicity: Identity, Conflict and Crisis) *குமார் டேவிட் என்பவரோடு (ஹொங்கொங் 1989) இணைந்து வெளியிட்டது. 'இலங்கைத் தமிழர்: கௌரவத்தோடான நீதிக்கும் சமத்துவத்துக்குமான அவர்களின் போராட்டம்'* (The Tamils of Lanka: Their Struggle for Justice and Equality with Dignity, Kanyakumari, South India, 2010) *மற்றும் 'இலங்கை தமிழர் அரசியலில் இடதுசாரிப் பாரம்பரியம்'* (The Left Tradition in Lankan Tamil Politics in Hector Abhayawardhana Felicitation Volume, Colombo, 2001)

ISBN 978-955-659-316-7

9 789556 593167

விலை ரூபா 400.00

குமரன் புத்தக இல்லம்

விடயம்: வரலாறு / அரசியல்

#502

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org